compose.kerala.gov.in
egazette.kerala.gov.in
printing.kerala.gov.in

Regn.No. KERBIL/2012/45073
dated 2012-09-05 with RNI
Reg No.KL/TV(N)/634/2021-2023

കേരള സർക്കാർ
GOVERNMENT OF KERALA

കേരള ഗസറ്റ്
KERALA GAZETTE

ആധികാരികമായി പ്രസിദ്ധപ്പെടുത്തുന്നത്
PUBLISHED BY AUTHORITY

ചൊവ്വ, 2026 ഓഗസ്റ്റ് 04
Tuesday, 04th August 2026

1201 കർക്കടകം 19
19th Karkadakam 1201

1948 ശ്രാവണം 13
13th Sravana 1948

വാല്യം 15
Vol. XV

നമ്പർ / No. 31

Part I -Section (iii)

Law Department

©
കേരള സർക്കാർ
GOVERNMENT OF KERALA
2026

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

கேரள அரசு

சட்ட (சட்டமியற்றல் -எச்) துறை

அறிக்கை

திருவனந்தபுரம், 2022 அக்டோபர் 15

எண்:354/ச.இ.எச் 1/2021/சட்டம். 1198 கன்னி 29

1944 அஸ்வினம் 23

2022-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 14-ஆம் தேதி கேரள ஆளுநரால் விளம்பர அறிக்கை செய்யப்பட்ட பின்வரும் அவசரச்சட்டம் பொதுத்தகவலுக்கென இதனால் பிரசுரம் செய்யப்படுகிறது.

ஆளுநரின் ஆணைப்படி

சாதிக் எம்.கெ.

சிறப்பு செயலாளர் (சட்டம்)

சட்டச்செயலாளர் (பொறுப்பு)

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

2022-ன் 15-வது எண் அவசரச்சட்டம்

2022-ன் கேரள பொது சுகாதார அவசரச்சட்டம்

இந்திய குடியரசின் எழுபத்து இரண்டாம் ஆண்டில் கேரள ஆளுநரால் வெளம்பர அறிக்கைச் செய்யப்பட்டது.

கேரள மாநிலத்தில் பொது சுகாதாரவுமாக தொடர்புடைய அமலில் உள்ள விதிகளை ஒருங்கிணைக்கவும் இணைக்கவும் பொதுசுகாதாரத்தின் நிர்வாகத்தை மேம்படுத்தவும் அதனுடன் தொடர்புடையதோ ஏற்றாற்போன்றதோ ஆன காரியங்களுக்காக உள்ள

ஒரு

அவசரச்சட்டம்

முன்னுரை.- 2021-ன் கேரள பொது சுகாதார அவசரச்சட்டம் (2021-ன் 44) 2021-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23-ஆம் தேதி கேரள ஆளுநரால் வெளம்பர அறிக்கைச் செய்யப்பட்டிருப்பதாலும்;

2021-ஆம் ஆண்டு மே மாதம் 24-ஆம் தேதி ஆரம்பித்து 2021-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10-ஆம் தேதி முடிவடைந்த கேரள மாநில சட்டப்பேரவையின் கூட்டத்தொடரில் மேற்கூறிய அவசரச்சட்டத்திற்கு பதிலாக மாநில சட்டப்பேரவையில் ஒரு சட்டம் கொண்டு வருவதற்குரிய ஒரு மசோதாவை கேரள சட்டப்பேரவையில் தாக்கல் செய்வதற்கும், நிறைவேற்றுவதற்கும் முடியாமல் போனதாலும்;

மேற்குறிப்பிட்ட அவசரச்சட்டத்தின் விதிமுறைகளை நிலைநாட்டுவத்காக 2021-ன் கேரள பொது சுகாதார அவசரச்சட்டம் (2021-ன் 63) 2021-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1-ஆம் தேதி கேரள ஆளுநரால் வெளம்பர அறிக்கைச் செய்யப்பட்டதாலும்;

2021-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22-ஆம் தேதி ஆரம்பித்து 2021-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13-ஆம் தேதி முடிவடைந்த கேரள மாநிலச் சட்டப்பேரவையின் கூட்டத்தொடரில் மேற்கூறிய அவசரச்சட்டத்திற்கு பதிலாக மாநிலச் சட்டப்பேரவையில் ஒரு சட்டம் கொண்டு வருவதற்குரிய ஒரு மசோதாவை கேரள சட்டப்பேரவையில் தாக்கல் செய்வதற்கும், நிறைவேற்றுவதற்கும் முடியாமல் போனதாலும்;

மேற்குறிப்பிட்ட அவசரச்சட்டத்தின் விதிமுறைகளை நிலைநாட்டுவதற்காக 2021-ன் கேரள பொதுசுகாதாரத அவசரச்சட்டம் (2021-ன் 116) 2021-ஆம் ஆண்டு ஆகஸட மாதம் 23-ஆம் தேதி கேரள ஆளுநரால் வெளம்பர அறிக்கை செய்யப்பட்டதாலும்;

2021-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 4-ஆம் தேதி தொடங்கி 2021-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ஆம் தேதி முடிவடைந்த கேரள சட்டப்பேரவையின் மூன்றாவது அமர்வில் அறிமுகப்படுத்தப்பட்டதும்மற்றும் பதினைந்தாவது கேரளச்

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

சட்டப்பேரவையில் மசோதா எண்:77 ஆக மேற்கூறிய அவசரச்சட்டத்திற்கு பதிலாக மாநில சட்டப்பேரவையில் ஒரு சட்டம் கொண்டு வருவதற்குரிய ஒரு மசோதா வெளியிடப்பட்டாலும், அது தேர்வு குழுவுக்கு பரிந்துரைக்கப்பட்டதால் மேற்கூறிய கூட்டத்தொடரில் மசோதாவை சட்டப்பேரவையில் நிறைவேற்ற முடியாமல் போனதாலும்;

மேற்குறிப்பிட்ட அவசரச்சட்டத்தின் விதிமுறைகளை நிலைநாட்டுவதற்காக 2021-ன் கேரள பொது சுகாதார அவசரச்சட்டம் (2021-ன் 144-வது எண் அவசரச்சட்டம்) 2021-ஆம் ஆண்டு ஆளுநரால் விளம்பர அறிக்கை செய்யப்பட்டதாலும்;

மேலும், தேர்வுக் குழுவின் அறிக்கை இன்னும் கேரள சட்டமன்றத்தில் வைக்கப்படாத காரணத்தால் 2022 பிப்ரவரி 18-ஆம் தேதி ஆரம்பித்து மார்ச் 18-ஆம் தேதி முடிவடைந்த அமர்வின் போது மசோதாவை சட்டப்பேரவையில் நிறைவேற்ற முடியாமல் போனதாலும்;

மேற்குறிப்பிட்ட அவசரச்சட்டத்தின் விதிமுறைகளை நிலைநாட்டுவதற்காக 2022-ன் கேரள பொது சுகாதார அவசரச்சட்டம் (2022-ன் 12-வது எண் அவசரச்சட்டம்) 2022-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31-ஆம் தேதி கேரள ஆளுநரால் விளம்பர அறிக்கை செய்யப்பட்டதாலும்;

மேலும், தேர்வுக் குழுவின் அறிக்கை இன்னும் கேரள சட்டமன்றத்தில் வைக்கப்படாத காரணத்தால் 2022 ஜூன் 27-ஆம் தேதி ஆரம்பித்து ஜூலை 21-ஆம் தேதி முடிவடைந்த அமர்வின் போது மசோதாவை சட்டப்பேரவையில் நிறைவேற்ற முடியாமல் போனதாலும்;

இந்திய அரசியலமைப்பின் 213-வது விதித்தொகுப்பின் உட்பிரிவு (2)-ல் துணை உட்பிரிவு (எ)-ன் கீழுள்ள 2022-ன் கேரள பொது சுகாதார அவசரச்சட்டம் (2022-ன் 12) 2022-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8-ஆம் தேதி அமலில் இருந்து நின்று விடுவதாலும்;

மேலும், தேர்வுக் குழுவின் அறிக்கை இன்னும் கேரள சட்டமன்றத்தில் வைக்கப்படாத காரணத்தால் 2022 ஆகஸ்ட் 22-ஆம் தேதி ஆரம்பித்து செப்டம்பர் 12-ஆம் தேதி முடிவடைந்த அமர்வின் போது மசோதாவை சரிபார்ப்பு விதியுடன் சட்டப்பேரவையில் நிறைவேற்ற முடியாமல் போனதாலும்;

மேற்கூறிய அவசரச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிலைநிறுத்தாவிடில் இடர்பாடுகள் ஏற்படும் என்பதாலும்;

கேரள மாநில சட்டப்பேரவைக் கூட்டத்தொடரில் இல்லாததாலும், தாம் துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை நிலவுவதாக கேரள நிலவுவதாக கேரள ஆளுநர் திருப்தியுறுவதாலும்;

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

தற்போது, அதனால் இந்திய அரசியலமைப்பின் 213-வது விதித்தொகுப்பின் உட்பிரிவு (1)-ன் படி வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி கேரள ஆளுநரால் பின்வரும் அவசரச்சட்டம் வினம்பர அறிக்கைச் செய்யப்படுகிறது.

அத்தியாயம் I

தொடக்கம்

1. சுருக்கப்பெயரும் தலைப்பும்.- (1) இந்த அவசரச்சட்டம் 2021-ன் கேரள பொது சுகாதார அவசரச்சட்டம் என்று அழைக்கப்படலாம்.

(2) இது 2021-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 1-ஆம் தேதி அமலுக்கு வந்ததாகக் கருதப்பட வேண்டும்.

2. விளக்கங்கள்.- இந்த அவசரச்சட்டத்தின், சந்தர்ப்பம் பிற வகையில் தேவைப்படாத பட்சம்,-

(எ) "கட்டிடம்" என்பதில் வீடு, அவுட்-ஹவுஸ், தொழுவம், கழிப்பறை, கொட்டகை, குடிசை, பெட்டிக்கடை மேலும் கல், செங்கல், சேறு, உலோகம் அல்லது பிற பொருட்கள் எதுவாக இருந்தாலும், அவற்றை போன்ற பிற பொருட்கள் ஆகியவை உட்படும்;

(பி) "தொற்று நோய்" என்றால் ஒரு நோய் தொற்றின் விளைவாக சிகிச்சை தேவைப்படும் மனிதனின் அல்லது மிருகத்தின் ஒரு நோய் எனப்பொருள்படும்.

(சி) "சமூகக் கூட்டம்" என்றால் உணவுப் பகிர்வதோ அல்லது வழங்குவதோ, அல்லது இல்லாததோ ஆன குடும்பம், சமூகம், கலாச்சாரம், அரசியல், ஆன்மீகம், இனம் சார்ந்த அல்லது திருவிழா நிகழ்வுகள் அல்லது விளையாட்டுகள், மதப்பிரார்த்தனைகள், திறமை நிகழ்ச்சிகள், சுற்றுலா ஆகியவற்றுக்காக அவர்களின் புவியியல் சார்ந்த சமூகத்துடன் மிகவும் நெருக்கமாகக் கூட்டம் சேருகின்ற அல்லது மாநாடு கூடுகின்ற மக்களின் கூட்டம் எனப்பொருள்படும்;

(டி) "வடிகால்" என்றால் கழிவு, கழிவு நீர், வடிகால் நீர், மழை நீர் அல்லது நிலத்தடி நீர் ஆகியவை எடுத்துச் செல்வதற்கான ஏதேனும் வகையான வடிகால் எனப்பொருள்படும்;

(இ) "வசிப்பு மனை" என்றால் மனித வாழ்விடத்திற்காகவோ அதனுடன் தொடர்புடையதோ, முழுமையாகவோ, பகுதியாகவோ, தயாரித்தோ பயன்படுத்துவதோ பயன்படுத்துவதற்காக எடுத்ததோ ஆன ஒரு கட்டிடம் எனப்பொருள்படும்;

(எஃப்) "கல்வி நிறுவனம்" என்றால் அறிவு அல்லது கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கும் ஒரு இடம் எனப்பொருள்படுவதும் பொதுவானதோ தனியார் மயமானதோ

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

ஆன பாலர் பள்ளிகள், குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள், தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்கள் பல்கலைக்கழகங்கள், பயிற்சியளிப்பு மையங்கள், தனிப்படிப்பு மையங்கள், பயிற்சி மையங்கள் ஆகியவை உட்படயுள்ளதுமாகும்

(ஜி) "பெருவாரியாகப் பரவும் தொற்று நோய்" என்றால் ஒரு நோய் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் திடீரென உள்ளதும் விரைவானதுமான அதிகரிப்பு அல்லது ஒரு மக்கட்தொகையின் பொதுசுகாதார முக்கியத்துவம் வாய்ந்த பிற நிலை எனப்பொருள்படும்;

(எச்) "தொழிற்சாலை" என்றால் மனிதர் அல்லது விலங்கு வாயிலாக தயாரிக்கப்படாமல், இயந்திரத்தனமாக செலுத்தப்படும், நீராவி, நீர், எண்ணெய், வாயு, மின்சாரம் அல்லது பிற ஏதேனும் ஆற்றல் அமைப்பின் உதவியுடன் இயந்திரமயமாக தொழில், உற்பத்தி, வணிக செயல்முறைகள் நடைபெறும் ஏதேனும் வளாகங்களும் அதன் சுற்றளவுப்பகுதிகளும் எனப்பொருள்படுவதும் 1948-ன் தொழிற்சாலைகள் சட்டம் (1948-ன் 63-வது மத்திய சட்டம்)-ல் வரையறுக்கப்பட்ட ஏதேனும் வளாகங்களும் உட்படுபவை ஆகும்;

(ஐ) "கழிவுப்பொருள்" என்பதில் கழிவு பொருட்கள் மலம், சிறுநீர் கழிவுகள், சாணம், துர்நாற்றமுடையதும் அழுகியதுமான பொருட்கள் ஆகியவையும் அகற்றப்படவில்லை என்றால் பொதுசுகாதாரத்திற்கு தீமை விளைவிக்கின்ற பிற அனைத்து பொருட்களும் உட்படும்;

(ஜெ) "உணவு" என்றால் மனிதப் பயன்பாட்டிற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள,பதப்படுத்தப்பட்டதோ, பகுதியாகப் பதப்படுத்தப்பட்டதோ, பதப்படுத்தப்படாததோ ஆன, விவசாயத்தின் தோட்டக்கலை பராமரிப்பின் காய்நடை பராமரிப்பின் பால் கொள்முதலின் மீன் விவசாயத்தின் இயற்கையான வடிவத்திலுள்ள தயாரிப்புகளான உணவுப்பொருட்கள் போன்ற முதன்மை உணவுப்பொருட்கள், ஒரு விவசாயி, அல்லது மீனவ தொழிலாளி அல்லாத ஒருவரின் வளர்ப்பு, வேளாண் செய்தல், பறித்து எடுத்தல், அறுவடை செய்தல், சேகரிப்பு அல்லது பிடித்தல் ஆகியவற்றின் பலனாகவோ மரபணு மாற்றம் ஏற்படுத்தியதோ இயந்திரத்தின் உதவியாலோ பாட்டில்களில் அடைக்கப்பட்ட குடிநீர், மதுபானங்கள், மெல்லும் கோந்து, அதன் தயாரிப்பு நேரத்தில் தயாரிக்கின்ற அல்லது கையாளும் நேரத்தில் உணவில் பயன்படுத்துகின்ற நீர் உட்படவுள்ள ஏதேனும் பொருள் ஆகியவையும் ஆனால் விலங்குகளின் தீவனமோ மனிதரின் நுகர்விற்காக பயன்படுத்த தயார் செய்யப்படாததோ பதப்படுத்தப்படாததோ ஆன உயிருள்ள விலங்குகள், அறுவடைக்கு முந்தைய செடிகள், மருந்துகள், மருத்துவ தயாரிப்புகள் அழகு சாதனப்பொருட்கள், போதைப்பொருட்கள்

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

அல்லது சைக்கோட்ரோபிக் பொருட்கள் உட்படாததும் ஆன பொருட்கள் எனப்பொருள்படும்;

(கெ) "உணவு வணிகம்" என்றால் இலாபத்திற்காகவோ அல்லாமலோ பொதுவான தனியார்மயமாக பொறுப்பேற்கும் கட்டுமானம், பதப்படுத்தல், போக்கேஜிங், சேமிப்பு, போக்குவரத்து, உணவு விநியோகம், இறக்குமதி ஆகியவற்றுடன் தொடர்புடைய ஏதேனும் செயல்பாடுகள் ஏதேனும் நிலையில் நடத்துவதற்கும், உணவு சேவைகள், கேட்டரிங் சேவைகள், உணவின் அல்லது உணவுப்பொருட்களின் விற்பனை ஆகியவை உட்படுவதும் எனப்பொருள்படும்;

(எல்) "அரசு" என்றால் கேரள அரசு எனப்பொருள்படும்;

(எம்) "சுகாதார பாதுகாப்பு நிறுவனம்" என்றால் உள்நோயாளி அல்லது வெளிநோயாளி சிகிச்சை, நோயறிதல் அல்லது சிகிச்சை தலையீடுகள், நர்சிங், மறுவாழ்வு, குணமடையும் ஆரோக்கியத்தை நிறுவுதல் நோய் தடுப்பு அல்லது பிற சுகாதார பாதுகாப்பு சேவைகள் அல்லது இவற்றில் ஏதேனும் வழங்குவதற்கான இலாபத்திற்கோ அல்லாமலோ உள்ள ஒரு பொது அல்லது தனியார் நிறுவனம் முழுமையோ அல்லது பகுதியோ எனப்பொருள்படுவதும், ஏதேனும் நோய்கள், காயம் அல்லது பலவீனம் காரணமாக துயரம் அனுபவிக்கும் நபர்களுக்காக பயன்படுத்தப்படுகின்ற ஏதேனும் வளாகங்கள், அவ்வாறுள்ள சிகிச்சை மையங்கள், மருத்துவமனைகள், மகப்பேறு இல்லங்கள் ஆகியவை உட்படும்;

(என்) "மருத்துவ சேவை வழங்குநர்" என்றால் மற்றொரு நபரின் ஆரோக்கியம் பராமரிக்கவோ மீட்பதற்காகவோ தொடர்புடைய வாழ்க்கை அல்லது தொழில் செய்கின்ற நபர் எனப்பொருள்படுவதும் மேலும் மருத்துவர், செவிலியர், மருத்துவர், உதவியாளர், ஆலோசகர், வெளிப்புற சுகாதார பாதுகாப்பு சேவைகளை வழங்குகின்ற மருத்துவ சேவை வழங்குநர் அல்லது மருத்துவம், செவிலியர், உளவியல் அல்லது ஏதேனும் வகையிலான பிற சுகாதார சேவைகள் வழங்குகின்ற நபர் உட்படுவதுமாகும்;

(ஒ) "சுகாதார பாதுகாப்பு சேவைகள்" என்றால் ஆலோசனை, நோய் கண்டறிதல், சிகிக்சை மேலும் வெளிப்புற சேவைகளும் பொதுகாதாரத்தை பராமரிப்பதற்கும் ஊக்கப்படுத்துவதற்குமான சேவைகளும் எனப்பொருள்படுவதுமாகும்;

(ப்பி) "சுகாதார ஆபத்து" என்றால் காயம் அல்லது நோய்க்கு காரணமாகின்ற ஏதேனும் உமிழினம், இராசயன நிலை அல்லது ஏதேனும் சூழல் எனப்பொருள்படுவதுமாகும்,

(க்யூ) "சுகாதார ஆய்வாளர்" என்றால் உள்ளாட்சி நிறுவனங்களுடன் தொடர்புடைய சுகாதார ஆய்வாளர் எனப்பொருள்படுவதுமாகும்,

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(ஆர்) "சுகாதார அதிகாரி" என்றால் சுகாதார அதிகாரியாக பணியாற்ற இந்தச் அவசரச்சட்டத்தின் கீழ் மாநில பொதுசுகாதார ஆணையம்/மாவட்ட பொது சுகாதார ஆணையம் ஒப்படைத்துள்ள அரசின் அல்லது உள்ளாட்சி நிறுவனங்களின் சுகாதார அதிகாரி அல்லது தன்னாட்சிப் பிரிவில் சுகாதார அதிகாரியாக நியமிக்கப்பட்ட மருத்துவ அதிகாரி எனப்பொருள்படுவதாகும்;

(எஸ்) "தொற்று" என்றால் ஒரு மனிதனின் மிருதத்தின் உடலில் ஒரு நோய் கிருமியின் சேர்க்கையும் வளர்ச்சியும் அல்லது பெருக்கமும் எனப்பொருள்படுவதாகும்;

(டி) "தனிமைப்படுத்துதல்" என்றால் தனிமைப்படுத்தப்படாமல் உள்ள நபர்களிடம் நோய் பரவுவதைத் தடுக்கவோ கட்டுப்படுத்தவோ என்ற இலக்குடன் தொற்று அல்லது தொற்று பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ள அல்லது தொற்று நோயுள்ள அல்லது தொற்று நோய் பாதிக்கப்பட்டதாக சந்தேதிக்கப்படும் நபரின் அல்லது ஒரு கூட்டம் நபர்களின் உடல் ரீதியாக பிரித்தலும் கட்டுப்படுத்தலும் எனப்பொருள்படுவதாகும்.

(யு) "கழிப்பறை" என்றால் மலம் கழிப்பதற்கோ சிறுநீர் கழிப்பதற்கோ அல்லது இரண்டிற்கும் சேர்த்தோ ஒதுக்கப்பட்டுள்ள ஒரு வசதி அல்லது இடம் எனப்பொருள்படுவதும் அதில் ஏதேனும் வகையான கழிப்பறையும் சிறுநீர் கழிப்பிடமும் உட்படுவதாகும்;

(வி) "உள்ளூர் பகுதி" என்றால் உள்ளாட்சி நிறுவனங்களின் அதிகார வரம்பிற்குள் வருவதோ அல்லது உள்ளூர் பொதுசுகாதார அதிகாரி காலாகாலங்களில் பரிந்துரைக்கப்படுவதோ ஆன பகுதி எனப்பொருள்படுவதாகும்.

(டபிள்யூ) "உள்ளூர் ஆணையம் அல்லது உள்ளாட்சி நிறுவனம்" என்றால் 1994-ன் கேரள முனிசிபாலிட்டி சட்டம் (1994-ன் 20) பிரிவு 4-ன் படி உருவாக்கப்பட்ட முனிசிபாலிட்டி அல்லது 1994-ன் கேரள பஞ்சாயத்து ராஜ் சட்டம் (1994-ன் 13) பிரிவு 4-ன் படி ஏதேனும் அளவில் உருவாக்கப்பட்ட பஞ்சாயத்து எனப் பொருள்படுவதாகும்.

(எக்ஸ்) "தங்கும் வீடு" என்றால் கட்டண அடிப்படையில் உணவுடன் கூடியோ அல்லாமலோ இரவு முழுவதும் தங்குமிட வசதி ஏற்பாடுகள் செய்வதும் தற்செயலான பார்வையாளர்களை வரவேற்பதற்கும் அரசோ உள்ளாட்சி நிறுவனங்களோ செயல்படுத்திக்கொண்டிருப்பது அல்லாததுமான ஹோட்டல், தங்கும் விடுதி, சத்திரம் தர்ம சாவடி அல்லது ஓய்வு இல்லம் அல்லது பிற ஏதேனும் இடம் எனப்பொருள்படும்;

(வை) "மார்க்கெட்" என்றால் தானியங்கள், பழங்கள், காய்கறிகள், இறைச்சி, மீன் அல்லது பிற விரைவில் அழுகுவதோ அழுகாததோ ஆன உணவுப்பொருட்களின் விற்பனைக்கும் வாங்குவதற்கும் அல்லது கால்நடைகளோ, கோழிகளோ அல்லது

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

ஏதேனும் வேளாண் அல்லது தொழில் சார்ந்த தயாரிப்புகள் அல்லது ஏதேனும் பதனிடப்படாத அல்லது பதனிடப்படும் தயாரிப்புகள், வாழ்க்கை வசதிக்குத் தேவையான பிற ஏதேனும் பொருட்கள் அல்லது பொருட்களின் விற்பனைக்கும் வாங்குவதற்குமான நபர்கள் ஒன்று சேர்வதற்காக சாதாரண அல்லது அவ்வப்போது உள்ள பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்ட ஷாப்பிங் மால்கள் உட்படுவதும், ஆனால் அதில் ஒரு கடையோ ஆறு எண்ணிக்கையின் கீழுள்ள கடைகளின் கூட்டமும் உட்படாததுமான எந்தவொரு இடம் எனப்பொருள்படுவதாகும்;

(இசட்) "மருத்துவ சிகிச்சை" என்றால் ஏதேனும் நோயைத் தடுப்பதற்கோ சிக்சை அளிப்பதற்கோ உள்ள முறையான நோய் அறிதலும் சிகிச்சையும் அல்லது அலோபதி வாயிலாகவோ அல்லது ஆயுர்வேதம், யுனானி, ஹோமியோபதி, யோகா, இயற்கை சிகிச்சை, சித்தா போன்ற ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சை முறை வாயிலாக ஏதேனும் நபரின் ஆரோக்கிய நிலையை மேம்படுத்தவும் எனப்பொருள்படுவதும் மேலும் அக்குபஞ்சர் சிகிச்சைகள் உட்படுவதுமாகும்;

(இசட்எ) "புலம் பெயர்ந்தோர்" என்றால் வாழ்வாதாரத்தை தேடி தங்களின் வாழ்விடங்களும் வீடுகளும் குறிப்பிட்ட காலகட்டங்களிலோ அல்லாமலோ சாதாரண அலலது துயர சூழ்நிலைகளில் விட்டு இறங்கும் அனைதது நபர்களும் எனப்பொருள்படுவதாகும்;

(இசட்பி) "புலம் பெயர்ந்த தொழிலாளி" என்றால் ஏதேனும் நிறுவனத்துடன் தொடர்புடைய ஒப்பந்தத்தின் வாயிலாக, பகிரங்கமானதோ, முரணானதோ ஆன வேலை நிபந்தனைகளுடனோ ஊதியத்திற்காக ஏதேனும் திறன் வாய்ந்த பகுதி திறன் வாய்ந்த அல்லது திறனற்ற, கைமுறை பணி, மேற்பார்வை, தொழில் நுட்ப, எழுத்தர் பணிகளை செய்வதற்கு அவ்வாறுள்ள நிறுவனத்தின் செயல்பாடுகளுடன் தொடர்புடைய தொழில் செய்கின்ற செய்யும் கேரள மாநிலத்திற்கு வெளியேயுள்ள ஒரு மாநிலத்தில் இருந்துள்ள நபர்கள் எனப்பொருள்படுவதுமாகும்;

(இசட் சி) "அறிவிப்பு செய்ய வேண்டிய தொற்று நோய்கள்" என்றால் இந்த அவசரச்சட்டத்தின் பிரிவு 33-ன் துணைப்பிரிவு (2)-ல் குறிப்பிட்டுள்ள நோய்கள் எனப்பொருள்படுவதாகும்;

(இசட் டி) "அறிவிப்பு" என்றால் கேரளாவின் அரசிதழில் பிரசுரம் செய்யும் ஒரு அறிவிப்பு எனப்பொருள்படுவதாகும்.

(இசட் இ) "தொல்லை" என்றால் பார்வை, வாசனை, கேட்டல் ஆகியவற்றுக்கு காயம், அபாயம், துன்பம் அல்லது இடையூறு ஏற்படுத்தவோ அல்லது ஓய்விற்கு, உறக்கத்திற்கு தடை உருவாக்குவது அல்லது உயிருக்கு ஆபத்து ஏற்படுத்துவது அல்லது

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

உடல் நலத்திற்கு தீங்கு விளைவிக்கவோ பொது மக்களின் சொத்திற்கு அல்லது அருகில் வசிக்கின்ற அல்லது சொத்து கைவசம் வைத்துள்ள பொதுமக்களுக்கு அல்லது ஏதேனும் பொது உரிமையை பயன்படுத்துவதற்கு வாய்ப்பு ஏற்படும் நபர்களின் ஆரோக்கியத்திற்கு அல்லது சொத்திற்கு தீங்கு விளைவிக்க காரணமாகின்ற அல்லது காரணமாக வாய்ப்புள்ள ஏதேனும் நடவடிக்கை, விலகி இருத்தல், இடம் அல்லது பொருள் எனப்பொருள்படுதாகும்;

(இசட் எஃப்) "குடியிருப்பவர்" என்பதில்,

(எ) வாடகை கொடுப்பதோ கொடுக்க முடிந்ததோ ஆன நிலத்தின் அல்லது கட்டிடத்தின் உரிமையாளருக்கு வாடகையோ வாடகையின் ஏதேனும் பகுதி தற்போதைக்கு கொடுப்பதோ கொடுக்கும் பொறுப்புடைய எந்தவொரு நபரும்;

(பி) சொத்தோ கட்டிடமோ கைவசம் வைத்திருக்கவோ பிற ஏதேனும் வகையில் பயன்படுத்தவோ செய்கின்ற அதன் ஏதேனும் உரிமையாளர்;

(சி) ஏதேனும் கட்டிடத்தில் அல்லது நிலத்தில் வாடகை இல்லாமல் குடியிருப்பவர்,

(டி) ஏதேனும் நிலம் அல்லது கட்டிடம் கைவசம் வைத்திருக்கும் ஒரு உரிமதாரர்; மேலும்

(இ) ஏதேனும் நிலம் அல்லது கட்டிடம் பயன்படுத்தியதற்காகவோ கைவசம் வைத்திருந்ததர்கோ உரிமையாளருக்கு இழப்பீடு வழங்கும் பொறுப்புள்ள எந்தவொரு நபரும் உட்படுவதாகும்;

(இசட் ஜி) "குற்றஞ்சார் வர்த்தகம்" என்றால் ஒரு தொந்தரவோ தொந்தரவு ஏற்பட வாய்ப்புள்ளதோ ஆன பொருட்கள் கையாளப்படுகின்ற ஏதேனும் வர்த்தகம் எனப் பொருள்படுவதாகும்;

(இசட் எச்) "உரிமையாளர்" என்றால் எந்த சொத்துடன் தொடர்புடைய சொல் பயன்படுத்தப்பட்டதோ அதன், வாடகையோ, இலாபமோ, தற்போதைக்கு, சொந்த கணக்கிற்கோ பிறரின் அல்லது எஸ்டேட்டின் மூகவர், அறங்காவலர், பாதுகாவலர், மேலாளர் அல்லது பெறுபவர் என்ற நிலையில் ஏதேனும் மதம் சார்ந்ததோ தொண்டு நோக்கத்திற்காகவோ வாங்குவதோ வாங்குவதற்கு உரிமையுள்ளதோ ஆன நபர் எனப்பொருள்படுவதும் அவர் உட்படுவதுமாகும்;

(இசட் ஐ) 'பரிந்துரைக்கப்பட்ட" என்றால் இந்த அவசரச்சட்டத்தின் கீழ் ஏற்படுகின்ற விதிகளில் அல்லது ஒழுங்குமுறைகளில் பரிந்துரைக்கப்பட்ட எனப்பொருள்படுதாகும்;

(இசட் ஜெ) "தனியார் சுகாதார நிறுவனங்கள்" என்றால் ஏதேனும் தனியார் நிறுவனம், நபர், அறக்கட்டளை, மாநகராட்சி அல்லது அரசு சாரா நிறுவனங்களுக்கு சொந்தமானதும் அங்கு பொதுமக்களுக்கு உள்நோயாளி வசதிகளுடன் கூடியோ

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

அல்லாமலோ, பரிசோதனை, நோய் அறிதல், நோய் தடுப்பு நடவடிக்கைகள், குணமடைவதற்கான மருத்துவ சிகிச்சை வசதிகள் ஆகியவைக்கு முக்கியத்துவம் வழங்கும் நோய் ஏதேனும் மருத்துவ கிளினிக்குகள் (உள்நோயாளியும் புற நோயாளியும் அல்லது உள்நோயாளியோ புற நோயாளி மட்டுமே) சுகாதார பாதுகாப்பு மையங்கள், மகப்பேறு மையங்கள், மருத்துவமனைகள், முதியோர் இல்லம், சிறார் பராமரிப்பு மையம், உடற்பயிற்சி நிறுவனம், ஆய்வுக்கூட சோதனை முறையில் கருவுறுதல் கிளினிக்குகள், மரபணு ஆய்வகங்கள், ஆலோசனை மையங்கள், மருத்துவ ஆய்வகம்/நோயறிதல் மையம், கதிரியக்கவியல் மற்றும் இமேஜிங் மையங்கள், ஸ்கேனிங் மையங்கள், பிசியோ தெரபி சென்டர் மருந்தகம் (படுக்கையுடன் கூடியது), மருத்துவ நிறுவனம்/சென்டர் ஆப் அனலோகஸ் எஸ்டாபிளிஷ்மென்ட் போன்றவை என்னப்பெயரில் அழைக்கப்பட்டாலும் எனப்பொருள்படுவதும் அதில் மனநல நிறுவனங்களும் உட்படுவதுமாகும். இவற்றில் அறக்கட்டளைகள் கைகாரியம் செய்வதோ பெரு நிறுவனங்கள் நடத்துவதோ ஆன மருத்துவமனைகளும் பாலி கிளினிக்குகளும் உட்படுவதாகும்.

(இசட் கெ) "பொதுக் கட்டிடம்" என்றால் ஒரு பொது வழிபாட்டு இடமோ ஒரு கல்விக்கூடமோ கல்லூரியோ பிற நிறுவனத்தின் இடமோ (அவ்வாறு பயன்படுத்துகின்ற வசிக்கும் வீட்டை சேர்ந்தது அல்ல) ஒரு மருத்துவமனையோ, தொழில் இடம், பொது தியேட்டர், பொது திரையரங்கம், பொது மண்டபம், பொது நூலகம் அல்லது பொது விரிவுரை அறை, பொது கச்சேரி அறை, பொது விரிவாக்க மண்டபம் ஆகவோ அல்லது பொது இடமோ பொதுவான தேவைகளுக்கான மாநாடு இடமோ அல்லது ஹோட்டல், உணவகம், தங்கும் வீடு, தங்குமிடம் ஆக பயன்படுத்துகின்ற அல்லது பயன்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள கட்டிடம் எனப் பொருள்படுவதாகும்.

(இசட் எல்) "பொது சுகாதாரம்" என்றால் பொதுமக்கள் ஆரோக்கியம் உள்ளவர்கள் என்ற நிலையை உறுதி செய்தல் எனப் பொருள்படும், மக்கட்தொகையின் அடிப்படையிலோ தனிநபர் முயற்சிகளினாலோ காயம், நோய், உடல் ஊனம், அகால மரணம் ஆகியவற்றை தடுப்பதற்கு முதன்மையாக நோக்கமிட்டுள்ள நடவடிக்கைகளும் உடல்நல தேவைகளும் பொதுசுகாதார கண்காணிப்பும் தொற்றுநோயியல் ஆராய்ச்சியும், பொதுசுகாதார கொள்கையை விரிவுபடுத்தல் ஆகியவற்றின் வாயிலாக சமூகத்தின் நிலையை மதிப்பிடுதலும் பொதுசுகாதார அவசியத்துடன் அவசர நிலைகளுக்கு பதிலளிப்பதும் இதில் உட்படுவதுமாகும்;

(இசட் எம்) "பொது சுகாதார ஆணையம்" என்றால் இந்த அவசரச்சட்டத்தின் கீழுள்ள விதிமுறைகளின்படி நடைமுறைக்கு வந்த, அதது சங்கதிபோல, மாநில பொது சுகாதார ஆணையம் அல்லது மாவட்ட பொதுசுகாதார ஆணையம் அல்லது உள்ளூர்

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

பொது சுகாதார ஆணையம் எனப் பொருள்படுவதாகும்;

(இசட் என்) "பொதுசுகாதார அவசர நிலை" என்றால் திடீரென உள்ள ஒரு நோய் அச்சுறுத்தலோ ஆரோக்கிய நிலையோ வெளிப்படுதலோ அது கீழ்காணும் ஏதேனும் அதிக வாய்ப்புள்ளதோ ஆன எனப்பொருள்படுவதாகும்:-

(எ) பாதிக்கப்பட்ட மக்கட்தொகையில் தீவிர பொதுசுகாதார முக்கியத்துவம் ஏற்படுகின்ற மரணமோ நோயோ;

(பி) பாதிக்கப்பட்ட மக்கட்தொகையில் கருவுனர்ச்சி உட்பட பாதிப்படைவதும் அதிக எண்ணிக்கையிலான நபர்களில் தீவிரமாகவோ நீண்ட காலத்திற்கோ ஏற்படுகின்ற ஊனம்;

(சி) தீவிரமான அபாயங்களுக்கோ உயிரியல் நச்சுத்தன்மையை ஏற்படுத்தும் நச்சுப்பொருட்களின் நோய் தொற்று விரைவாக பரவுதல்;

(டி) புதிதாக தோன்றியதோ முன்பு கட்டுபடுத்தப்பட்டதோ அழித்ததோ ஆன நோய் தொற்றின் பொருட்களின் உயிரியல் நச்சின் காரணமாக பாதிக்கப்பட்ட மக்கட்தொகையில் அதிக எண்ணிக்கையிலான நபர்களில் கணிசமாக எதிர்காலத்தில் தீங்கு ஏற்படுவது; மற்றும்

(இ) எந்த பேரழிவும், பெரிய விபத்துக்கள் உட்பட;

விளக்கம்.- தொற்று நோயோ, அதிக எண்ணிக்கையில் நபர்களைப் பாதிக்கின்ற நான்பட்டதும் தொற்று இல்லாததும் தொற்று நோய் அல்லாததுமான நோயின் நிலை, அறிக்கை செய்யப்பட்ட நோய்கள், பொதுசுகாதார நிலைக்கு முக்கியத்துவம், உள்ளூரில் ஏற்படும் நோய்கள் ஆகியவை பொது சுகாதார அவசரநிலைக்கு காரணமாவதாகும்;

(இசட் ஒ) "பொது இடம்" என்றால் தனியார் பயன்பாட்டிற்கு அல்லாததுமான ஒரு இடம் எனப் பொருள்படுவதாகும்;

(இசட் பி) "தனிமைப்படுத்தல்" என்றால் ஒரு தொற்று நோய் பாதித்த அல்லது ஒரு தொற்று நோய் தொற்றுக்கு வாய்ப்புள்ளதும் ஆனால் தொற்றுநோயின் அறிகுறிகள் உள்ளதோ அறிகுறிகள் தென்படாததுமான நபரை தனிமைப்படுத்தல் செய்த நபர்களில் இருந்து பிற நபர்களிடம் நோய் பரவுவதை தடை செய்வதற்கோ கட்டுப்படுத்துவதற்கோ உள்ள அல்லது நபர்களின் உடல் ரீதியான பிரித்தலும் இடம் மாற்றி தங்க வைத்தலும் எனப் பொருள்படுவதாகும்.

(இசட் க்யூ) "பதிவு செய்யப்பட்ட மருத்துவப் பயிற்சியாளர்" என்றால் 2021-ன் கேரள மாநில பதிவு செய்யப்பட்ட மருத்துவ பயிற்சியாளர் அவசரச்சட்டம் (2021-ன் அவசரச்சட்டம் எண் 115) அல்லது 1956-ன் இந்திய மருத்துவ ஆணையச் சட்டம் (1956-ன் மத்திய சட்டம் 102) அல்லது 1970-ன் இந்திய மருத்துவ மத்திய கவுன்சில் சட்டம் (1970-ன் மத்திய சட்டம் 48) அல்லது 1973-ன் ஹோமியோபதி மத்திய கவுன்சில்

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

சட்டம் (1973-ன் மத்திய சட்டம் 59)-ன் கீழ் பதிவு செய்யப்பட்ட மருத்துவப் பயிற்சியாளர் எனப்பொருள்படுவதாகும்;

(இசட் ஆர்) "சுகாதார வசதி" என்றால் ஒரு அறையில், அறைகளில், கட்டிடத்தில், ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியாக, தனியுரிமையுடன், சுத்தமாக இருக்கும் நிலையிலும் நோய் தொற்று அல்லது நோய் பரவுதல் இல்லாததுமான, போதுமான எண்ணிக்கையில் மலம் கழித்தல் மற்றும் சிறுநீர் கழிப்பதற்கான உறுதிப்படுத்தப்பட்ட வெளியேற்ற அமைப்புகள் எனப்பொருள்படுவதாகும்;

(இசட் எஸ்) "செயலாளர்" என்றால் உள்ளாட்சி நிறுவனங்களின் செயலாளர் எனப்பொருள்படுவதாகும்;

(இசட் டீ) "கழிவு நீர்" என்றால் கழிப்பறை கழிவுகள் மற்றும் கழிவுநீர் தொட்டிகள் அல்லது வடிகால் ஆகியவற்றில் உள்ள கழிவுகளும் வணிகக் கழிவுகளும் அனைத்து வகையான உற்பத்தி ஆலைகளில் இருந்து வெளியேறும் கழிவுகள் மற்றும் வெளியேற்றங்கள் எனப்பொருள்படுவதும் அதில் உட்படும்;

(இசட் யு) "ஷாப்பிங் மால்" என்றால் வணிகர்களை குறிக்கின்ற ஒன்றோ ஒன்றிற்கு மேற்பட்ட கட்டிடங்கள் சேர்ந்து விற்பனை வளாகங்கள் உருவாக்கி வாடிக்கையாளர்களுக்கு ஒரு கிளையிலிருந்து மற்றொரு கிளைக்கு கால்நடையாக கடக்க இயலும் ஒன்றுக்கொன்று இணைந்த நடைப்பாதைகளுடன் கூடிய விற்பனை மையங்களும் வளாகங்களும் எனப்பொருள்படுவதாகும்;

(இசட் வி) "மாதிரி" என்றால் குறிப்பிட்ட பரிசோதனைகளுக்குத் தேவையான இரத்தம், சளி, சிறுநீர், மலம் அல்லது பிற உடல் திரவங்கள், கழிவுகள், திசுக்கள் ஆகியவற்றின் மாதிரியும் கல்ச்சரும் எனப் பொருள்படுவதாகும்;

(இசட் டபிள்யூ) "தடுப்பூசி" என்றால் தொற்று நோயைத் தடுப்பதற்கு நிலையை மேம்படுத்துவதற்கு சிகிச்சை அளிப்பதற்காக நோய் கிருமிக்கு எதிராக ஆன்டிபாடி உற்பத்தி அல்லது செல்லுலார் நோய் எதிர்ப்பு சக்தியை தூண்டுவதற்காக பயன்படுத்துகின்ற ஆற்றலை குறைத்து அல்லது தொற்று இல்லாத நுண்ணுயிர்களின் டெரிவேடிவ் ஆன்டிஜென்களின் இடைநீக்கம் எனப் பொருள்படுவதாகும்;

(இசட் எக்ஸ்) "வெக்டார்" என்றால் வைத்திருப்பவரிடம் இருந்து பங்களிப்பாளருக்கு நோய்க்கிருமியை கடத்துகின்ற ஒரு நுண்ணியிரி பெரும்பாலும் ஒரு முதுகெலும்பில்லாத ஆர்த்ரோபாட் எனப் பொருள்படுவதாகும்;

(இசட் வை) "நீர் வழி" என்றால் வடிகால் தவிரவுள்ள இயற்கையானதோ செயற்கையானதோ ஆன ஏதேனும் ஆறு, அருவி, கால்வாய் அல்லது ஏரி, நீர் பூங்கா உட்படுவதாகும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(இசட் இசட்) "நீர் பூங்கா" என்றால் நீர் ஸ்லைடுகள், ஸ்பிளாஸ் பேட்கள், ஸ்ப்ரே மைதானங்கள் (நீர் விளையாட்டு மைதானங்கள்) லேசி ஆறுகள் அல்லது பிற பொழுதுபோக்கு குளியல்கள், நீச்சல், நீர் சிக்ஸ் இல்லாத விளையாட்டுகள், செயற்கை அலை உட்படுத்தியோ இல்லாமலோ, அலை குளம் அல்லது லோ ரைடர் போன்ற உடல் ஏறும் சுழல் போன்ற சிறந்த நீர் விளையாட்டு இடங்கள் உள்ள பொழுதுபோக்கு பூங்கா ஆகியவை எனப் பொருள்படுவதாகும்;

(இசட் இசட் ஏ) "வேலை இடம்" என்றால் ஊதியத்திற்காக பிற ஏதேனும் ஆதாயத்திற்காக ஐந்தில் குறையாத நபர்கள் பணி புரியும் தொழில்துறை, உற்பத்தி, வர்த்தக செயல்முறை நடைபெறும் வளாகம் அல்லது எல்லைப்பகுதி எனப் பொருள்படுவதும் ஆனால் ஒரு தொழிற்சாலை உட்படுவதில்லை.

(இசட் இசட் பி) "பணி மனை" என்றால் ஊதியத்திற்காகவும் பிற ஏதேனும் ஆதாயத்திற்கும் ஐந்தில் குறையாத நபர்கள் செய்கின்ற ஏதேனும் பொருட்கள் உருவாக்கவோ சரிசெய்யவோ வடிவ மாற்றம் ஏற்படுத்தவோ அலங்காரம் செய்யவோ பூர்த்தி செய்யவோ பிற விதத்தில் வணிக அடிப்படையிலான பயன்பாட்டிற்கு பொருந்துகின்ற சுற்றுச்சூழலோ அதன் எல்லைப் பகுதியோ எனப்பொருள்படுவதும் ஆனால் ஒரு தொழிற்சாலை உட்படுவது இல்லை.

அத்தியாயம் 2

பொதுசுகாதாரத்தார ஆணையங்களும் அவற்றின் அதிகாரங்களும்

3. மாநில பொதுசுகாதார ஆணையம், மாவட்ட பொது சுகாதார ஆணையங்கள், வட்டார பொது சுகாதார ஆணையங்கள்.- இந்த அவசரச்சட்டம் அமலுக்கு வந்தால் உடனே, இந்த அவசரச்சட்டத்தின் விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்காக 4,5,6 ஆகிய பிரிவுகளின்படி முறையாக மாநில அளவிலான பொது சுகாதார ஆணையம், மாவட்ட அளவிலான மாவட்ட பொது சுகாதார ஆணையங்கள், உள்ளாட்சி நிறுவனங்கள் அளவிலான வட்டார பொது சுகாதார அதிகாரிகள் ஆகியவை அமலில் வருவதாகும்.

4. மாநில பொது சுகாதார ஆணையம்.- (1) கேரள அரசின் சுகாதாரத் துறை இயக்குநர் மாநில பொது சுகாதார அதிகாரியாக இருப்பார்.

(2) மாநில சுகாதார அதிகாரிக்கு பொது சுகாதார அவசர சூழ்நிலைகளில் உதவி வழங்குவதற்கும் நிபுணரின் கருத்தை வழங்கவும் பிற துறைகளுடனான ஒருங்கிணைப்பதற்கும் தற்காலிக பொது சுகாதார பரிந்துரை குழுக்கள் அமைப்பதற்கான அதிகாரங்கள் கொண்டிருக்கும்

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(3) அத்தகைய தற்காலிக பரிந்துரை குழுவில், ஆலோசனை கேட்கும் தொடர்புடைய துறைகளின் பெயர் குறிப்பிடப்பட்டவர்கள் மட்டுமன்றி குழுவிற்கு உதவ தேவையெனக் கருதுகின்ற அத்தகைய பிற நிபுணர்களும் அடங்குவதாகும்.

5. மாவட்ட பொது சுகாதார அதிகாரி.- மாவட்ட மருத்துவ அதிகாரி (சுகாதாரம்) மாவட்ட பொது சுகாதார அதிகாரியாக இருப்பார்.

6. உள்ளூர் பொதுசுகாதார அதிகாரி.- உள்ளாட்சி நிறுவனங்களில் சுகாதார அதிகாரியாக நியமிக்கப்பட்ட சுகாதார அதிகாரி உள்ளூர் பொது சுகாதார அதிகாரியாக இருப்பார்.

7. பொதுசுகாதார அதிகாரிகளின் கடமைகள் மற்றும் பணிகள்.- (1) இந்த அவசரச்சட்டத்தின் விதிமுறைகள் மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் வட்டார அளவிலும் நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்பு முறையே மாநில பொது சுகாதார அதிகாரிக்கும் மாவட்ட பொது சுகாதார அதிகாரிக்கும் வட்டார பொது சுகாதார அதிகாரிக்கும் இருப்பதாகும்.

(2) 1994-ன் கேரள பஞ்சாயத்து ராஜ் சட்டம் (1994-ன் 13-வது சட்டம்), 1994-ன் கேரள முனிசிபாலிட்டி சட்டம் (1994-ன் 20-வது சட்டம்) ஆகியவற்றிற்கு ஏற்றவாறு, இந்த சட்டத்தின் கீழுள்ள செயல்பாடுகள் நடைமுறைப்படுத்துவதற்கு, தேவையென கருதுகின்ற எந்த பரிந்துரைகளும் பிறப்பிப்பதற்கான அதிகாரம் மாநில பொது சுகாதார அதிகாரிக்கு ஒப்படைப்பதற்கு அரசு அதிகாரம் கொண்டிருக்கும்.

(3) பொதுசுகாதார விஷயங்களில் அரசின் கீழுள்ள எந்தவொரு துறையும் பரிந்துரைகள் வழங்குவதற்கு மாநில பொது சுகாதார அதிகாரிக்கும் மாவட்ட பொது சுகாதார அதிகாரிக்கும் அதிகாரம் இருப்பதாகும். அத்தகைய பரிந்துரைகளை பின்பற்றாமல் இருப்பதற்கு அந்த துறைக்கு ஏதேனும் காரணம் இருந்தால், தொடர்புடைய அதிகாரி முன்பாக எழுத்துப்பூர்வமாக அறிவிக்க வேண்டும்.

(4) துணைப்பிரிவு (3)-ன் படி பிறப்பிக்கப்பட்ட ஏதேனும் பரிந்துரைகளின் அடிப்படையில் அதது சங்கதிபோல, உள்ளூர் பொதுசுகாதார அதிகாரி அல்லது அரசின் ஏதேனும் ஒரு துறைக்கு மாநில பொது சுகாதார அதிகாரி அல்லது மாவட்ட பொது சுகாதார அதிகாரியுடன் கருத்து வேறுபாடு இருந்தால் அது அரசுக்கு பரிந்துரை செய்ய வேண்டியதும் அதன் அடிப்படையில் அரசின் முடிவு இறுதியானதாக இருக்கும்.

(5) ஒவ்வொரு நிதி ஆண்டும் தொடங்குவதற்கு முன்பு, மாநில பொது சுகாதார அதிகாரியும் மாவட்ட பொது சுகாதார அதிகாரிகளும் வட்டார பொது சுகாதார அதிகாரிகளும் மாநில அரசு/தொடர்புடைய உள்ளாட்சி நிறுவனங்களுக்காக, அவர்களின் அதிகார வரம்பிற்குள் உள்ள வட்டாரத்தின் வருடாந்திர சுகாதார நிலையின் அறிக்கையின்

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

அடிப்படையில் பொது சுகாதாரத்திற்கான வருடாந்திர செயல்பாட்டுத் திட்டம் தயார் செய்யப்பட வேண்டும். அதில் பிற விஷயங்களுடன் அந்தப் பிரிவில் காலகட்டத்திற்கு ஏற்றாற்போல எதிர்பார்க்கப்படும் ஏதேனும் தொற்று நோயை தடுப்பதற்கு மேற்கொள்ள வேண்டி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை குறித்தும் தொற்றுநோய் ஆபத்திற்கான வாய்ப்பை பொதுமக்களுக்கு இடையே குறைப்பதற்கும் அவ்வகையிலுள்ள நோய்களின் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் உட்படுத்திட வேண்டும். அத்தகைய திட்டங்கள் தயார் செய்வதில் மாவட்ட பொது சுகாதார அதிகாரிகளும் உள்ளூர் பொது சுகாதார அதிகாரிகளும் பின்பற்ற வேண்டிய செயல்பாடு தொடர்பான வழிகாட்டுதல்களும் அதன் செயல்பாட்டு வடிவங்களும் மாநில பொது சுகாதார அதிகாரி பிறப்பிக்க வேண்டும். மாவட்ட திட்டக்குழு அவ்வப்போது வெளியிடும் வழிமுறைகளுடன் செயல்பாட்டு திட்டங்கள் தயார் செய்யும்போது கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

(6) மாநில பொது சுகாதார அதிகாரியும் மாவட்ட பொதுசுகாதார அதிகாரிகளும் உள்ளூர் பொதுசுகாதார அதிகாரிகளும் மூன்று மாதங்களுக்கு ஒரு முறையேனும் பொது சுகாதார திட்டத்தின் அமலாக்கம் மதிப்பிட வேண்டியதும் அதுமட்டுமல்லாமல் அவ்வகையிலுள்ள மதிப்பிடல் அறிக்கைகள் உள்ளூர் பொதுசுகாதார அதிகாரி மாவட்ட பொதுசுகாதார அதிகாரிக்கும், மாவட்ட பொது சுகாதார அதிகாரி மாநில பொது சுகாதார அதிகாரிக்கும், தொடர்ந்து மாநில பொது சுகாதார அதிகாரி அதன் அறிக்கை அரசுக்கும் சமர்ப்பிக்க வேண்டும்.

(7) மாநில பொது சுகாதார அதிகாரி பொது சுகாதார கொள்கைகள அடைவதற்காக வெக்டார் அடர்த்தி சோதனை, நோய் கண்காணிப்பு திட்டங்கள், குறிப்பிட்ட நோய்களுக்கு மக்களைப் பரிசோதித்தல், வழிமுறையும் கால இடைவெளி உட்படவுள்ள மருத்துவ மற்றும் இறப்பு தணிக்கைகள் அதுபோலவுள்ள நோய் தடுப்பு செயல்பாடுகள் நடத்துவது தொடர்பான வழிகாட்டுதல்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

(8) மாநில பொதுசுகாதார ஆணையத்திற்கு பொதுசுகாதார காரியங்களில் மாநிலத்தின் பொது தனியார் சுகாதார பராமரிப்பு நிறுவனங்களில் இருந்து ஆணையம் நிர்ணயம் செய்கின்ற வடிவத்தில் விபரங்கள் சேகரிப்பதற்கான அதிகாரமிருக்கும்.

(9) மாவட்ட பொதுசுகாதார ஆணையம், உள்ளூர் பொது சுகாதார ஆணையம், சுகாதார பாதுகாப்பு நிறுவனங்கள் போன்றவற்றில் இருந்து சேகரித்த விபரங்கள் பகுப்பாய்வு செய்வதற்கான முறைகள் மாநில பொதுசுகாதார அதிகாரி தயார் செய்ய வேண்டியதும் அப்படிப்பட்ட பகுப்பாய்வின் அடிப்படையில் பொது சுகாதாரத்தைக் குறித்த கொள்கை சார்ந்த காரியங்களில் அரசிற்கு ஆலோசனை கூறவும் பொதுசுகாதார

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

காரியங்களில் அது சார்ந்த நபர்களுக்கும் நிறுவனங்களுக்கும் அல்லது முகமைகளும் பரிந்துரைகள் வழங்கவும் செய்ய வேண்டும்.

(10) மாநிலத்திலோ மாவட்டத்திலோ பொதுசுகாதார அவசர நிலை அறிவிப்பதற்கான நிபந்தனைகளும் பொதுசுகாதார அவசர கால சூழலை கையாளும் போது தேவையான ஊழியர்களின் நியமனத்திற்கான விதிமுறைகளும் அப்படிப்பட்ட அவசரகாலம் சார்ந்த செலவுகள் ஏற்க வேண்டிய உறைவிடங்கள் போன்றவையும் மாநில பொதுசுகாதார அதிகாரி தீர்மானிக்க வேண்டும்.

(11) மாநில பொதுசுகாதார அதிகாரிக்கும் மாவட்ட பொதுசுகாததார அதிகாரிக்கும் மாநில அரசிடமோ/மாவட்ட நீதிபதியிடமோ மாநிலத்திலோ மாவட்டத்திலோ பொதுசுகாதார அவசர காலம் அறிக்கையிட பரிந்துரை செய்யக்கூடியதும் மட்டுமல்லாமல் அதது சங்கதிபோல எந்த ஊழியரும் அப்படிப்பட்ட அவசரகாலம் கையாளுவதற்கான அறிவுரை வழங்க வேண்டியதாகும்.

(12) மாநில பொதுசுகாதார அதிகாரியும் மாவட்ட பொதுசுகாதார அதிகாரியும் அவர்களின் அதிகார எல்லையில் பொதுசுகாதாரத்தை பாதுகாக்கவோ மேம்படுத்தவோ தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

(13) நிதி அல்லது பிற காரணங்களால் பொதுசுகாதாரம் பாதுகாக்கவோ மேம்படுத்தவோ மாநில பொதுசுகாதார அதிகாரியோ மாவட்ட பொதுசுகாதார அதிகாரியோ பரிந்துரை செய்த நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்த ஏதேனும் உள்ளாட்சி நிறுவனங்களுக்கு முடியவில்லை என்றாலோ அல்லது ஒரு உள்ளாட்சி நிறுவனமும் மாநில பொது சுகாதார அதிகாருக்கும் இடையே ஏதேனும் கருத்து மாறுபாடு இருந்தால் அப்படிப்பட்ட காரியங்கள் அரசிற்கு பரிந்துரை செய்ய வேண்டியதும் அரசின் முடிவு இறுதியானதாக இருக்கும்.

(14) தேசிய சுகாதார நிகழ்ச்சிகளும் இந்த அவசரச்சட்டத்தின் கீழ் அறிக்கை செய்யப்பட்ட நோய்களும் சார்ந்து பொது தனியார் சுகாதார பராமரிப்பு வழங்கியவர்களும் சுகாதார நிறுவனங்களும் பின்பற்ற வேண்டிய அங்கீகரிக்கப்பட்ட பெற்ற மருத்துவ சுகாதார நெறிமுறைகள் மாநில பொது சுகாதார அதிகாரி வெளியிட வேண்டும்.

(15) மாநில பொது சுகாதார அதிகாரி நோய்களின் கண்காணிப்பு, தொற்று நோய்களின் பரவலும் கட்டுப்பாடும் வாழ்க்கை முறை நோய்கள், காலாகாலங்களில் அரசு அறிக்கை செய்கின்ற பிற ஏதேனும் நோய்கள், சுகாதார விபத்துகள் போன்றவற்றிற்காக பொதுசுகாதார விதிமுறைகள் தீர்மானிக்க வேண்டும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

8. சுகாதார அதிகாரியின் நியமனம்.- (1) ஒவ்வொரு உள்ளாட்சி நிறுவனங்களிலும் உள்ளூர் பொதுசுகாதார அதிகாரியாக நியமனம் செய்யப்பட்டுள்ள ஒரு சுகாதார அதிகாரி இருக்க வேண்டும்.

ஆனால் தொடர்புடைய உள்ளாட்சி நிறுவனத்தின் கீழில் உள்ளூர் பொது சுகாதார அதிகாரியாக நியமிக்க எந்த ஒரு ஊழியரும் இல்லாத சூழ்நிலையில் மாவட்ட பொதுசுகாதார அதிகாரிக்கு உள்ளாட்சி நிறுவனத்தின் மருத்துவரின் பொறுப்பிலிருக்கின்ற மற்றொரு உள்ளாட்சி நிறுவனத்திலுள்ள மருத்துவரையோ அரசினுடையவோ ஒரு அதிகாரியை தொடர்புடைய உள்ளூர் பொது சுகாதார அலுவராக செயல்பட பெயர் பரிந்துரை செய்யப்படலாம்.

(2) இந்த சட்டத்தின் கீழுள்ள பொறுப்புகள் வகிக்க வட்டார பொதுசுகாதார குழுமத்திற்கு உதவுவதற்கு சுகாதார ஆய்வாளரும் பிற ஊழியர்களும் காணப்படுவார்கள்.

உள்ளாட்சி பொதுசுகாதார குழுமத்திற்கு சுகாதார ஆய்வாளர்க்கு தரத்திற்கும் குறையாத ஒரு ஊழியரை இந்த கூட்டத்தின் கீழுள்ள உள்ளாட்சி பொதுசுகாதார குழுமத்தின் அதிகாரங்கள் வகிக்க ஆவணப்படியான ஆணையின்படி அதிகாரம் வழங்கப்பட வேண்டியதும் அது அவரின் மேற்பார்வைக்கும் கட்டுப்பாட்டிற்கும் உட்பட்டு இருப்பதும் மட்டுமல்லாமல் குழுமம் பரிந்துரைச் செய்கின்ற படியான கட்டுப்பாட்டிற்கும் விதிமுறைகளுக்கும் வரையறைகளுக்கும் உட்பட்டு இருக்கும்.

9. அவசர காலங்களில் தற்காலிக சுகாதார அதிகாரிகளின் நியமனம்.- ஏதேனும் வட்டார பிரிவில் ஏதேனும் தொற்றுநோய் அறிக்கை செய்யப்பட்ட தொற்றுநோய் ஏற்படவோ அல்லாவிடில் திடீரென்று அச்சுறுத்தல் ஏற்படவோ, அல்லாவிடில் அங்கு அசாதாரமான மரணங்களோ பிற அவசர சூழ்நிலைகளோ ஏற்பட்டால் அல்லாவிடில் ஏதேனும் கண்காட்சிக்கோ விழாவிற்காகவோ அறிக்கை செய்யப்பட்டுள்ளதும் வட்டாரத்திற்கோ அரசிற்கோ மாநில பொதுசுகாதார குழுமத்திற்கோ அல்லது மாவட்ட பொதுசுகாதார அதிகாரிக்கோ, ஆணையின்படி அப்படிப்பட்ட தொற்றுநோய் அதது சங்கதிபோல, பரவுவது தடைசெய்யவோ எதிர்க்கவோ அதன் காரணம் விசாரிக்கவோ அல்லது அப்படிப்பட்ட மரணங்கள் தடைசெய்யவோ அல்லது ஒரு கண்காட்சியின் அல்லது விழாவின் சரியான நடத்துதலுக்காகவோ அதில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்கோ ஒன்றோ அதற்கு மேற்பட்டதோ மருத்துவ அதிகாரிகளை கூடுதல் சுகாதார அதிகாரியாக தற்காலிகமாக நியமனம் செய்யப்படலாம்.

10. பொதுசுகாதார நெருக்கடி காலங்களில் மாநில பொதுசுகாதார அதிகாரியின் அதிகாரங்கள்.- பரிந்துரைக்கும் படியான அத்தகை விதிமுறைகளுக்கு ஏற்ப மாநில பொதுசுகாதார அதிகாரிக்கு.-

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(எ) அவர்களின் கட்டுப்பாட்டிலுள்ள ஏதேனும் பொதுசுகாதார நிறுவனத்தில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஊழியர்களின் பிற ஏதேனும் பொது சுகாதார நிறுவனத்தின் பகுதியில் தற்காலிகமாக நியமனம் செய்வதற்கும்;

(பி) மாநிலத்தின் கண்காட்சிகளுடையவும் விழாக்களினுடையவும் நடத்துதலுக்காக பொதுசுகாதார விதிமுறைகளை குறித்த வழிமுறைகள் மேம்படுத்தவும் அவை நடைமுறைப்படுத்த தேவையான ஆணைகளை வெளியிட செய்வது மட்டுமல்லாமல் தொடர்புடைய

(சி) இடையூறு இல்லாமல் செய்தால், சுகாதார விபத்துக்கள் ஆகியவற்றுடன் தொடர்புடைய சட்டங்களும் ஒழுங்குமுறைகளும் வழிமுறைகளும் நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரமிருக்கும்.

11.மாவட்ட பொதுசுகாதார அதிகாரியின் அதிகாரங்கள்.- மாவட்ட பொதுசுகாதார அதிகாரிக்கு.-

(எ) மாவட்டத்திற்குள் பொதுசுகாதார செயல்பாடுகளுக்காக வழிமுறைகள் வழங்குவதற்கும் மேற்பார்வையும் கட்டுப்பாடும் நடைமுறைப்படுத்துவதற்கும்.

(பி) நோய்கள் தடைசெய்வதற்கும் பொதுசுகாதாரம் மேம்படுத்தவும் தேவையென்று தோன்றுகிற பட்சத்தில் பொதுசுகாதார விசாரணை காலாகாலங்களில் நடத்துவதற்கும்.

(சி) அனைத்து வகையிலான தொற்றுநோய்கள், அறிக்கையிட வேண்டிய தொற்றுநோய்கள், சுகாதார விபத்துகள் போன்றவை குறித்த விசாரணையும் பரிசோதனையும் நடத்தவும்; மேலும்

(டி) உள்ளூர் பொதுசுகாதார அதிகாரிக்கு தேவை என்று தோன்றுகிற பரிந்துரைகள் காலாகாலங்களில் வெளியிடவும் அதிகாரமிருக்கும்.

12. உள்ளூர் பொது சுகாதார அதிகாரியின் அதிகாரங்கள்.- (1) பொது சுகாதார விதிமுறைகளையோ சட்டங்களை குறித்து உள்ளூர் பொது சுகாதார அதிகாரி அதன் அதிகார வரம்பிலுள்ள பொது சுகாதார நிறுவனங்களிலுள்ள உறுப்பினர்களின் மேற்பார்வையும் கட்டுப்பாடும் நிர்வகிக்க வேண்டும்.

(2) உள்ளூர் பொது சுகாதார அதிகாரிக்கு ஆவணப்படி ஏதேனும் நபரிடமோ நிறுவனத்திடமோ குறிப்பிடப்பட்ட அந்த நேரத்திற்குள் ஏதேனும் செயல்பாடுகள் நடத்துவதற்கோ அல்லாவிடில் நிறுத்தி வைக்கவோ அல்லாவிடில் பொது சுகாதாரத்தை ஊக்குவிக்க குழுமம் தேவையென்று எண்ணுகின்ற எந்தவொரு நிலையும் மாற்றம் செய்வதற்கோ பரிந்துரை வழங்க அதிகாரமிருக்கும். ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்குள் அவர் அல்லது நிறுவனம் அவ்வாறு செய்வதில் தோல்வியடைந்து விட்டால் உள்ளாட்சி நிறுவனம் அந்த செயல்பாடுகள் நடத்த வேண்டியதும் அதற்கு ஆகின்ற

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

செலவுகள் சார்ந்த நபரில் இருந்தோ நிறுவனத்தில் இருந்தோ உள்ளாட்சி நிறுவனத்திற்கான வரி நிலுவை என்பதுபோல வசூலிக்க வேண்டியதாகும்.

(3) உள்ளூர் பொது சுகாதார அதிகாரி பொது சுகாதார காரியங்களில் இந்த சட்டத்தின் கீழ் விதிமுறைகளின்படி அவ்வாறு பொது சுகாதார அதிகாரிக்கு பாதகமான அப்படிப்பட்ட பொறுப்புகள் நிர்வகிக்கவும் அப்படிப்பட்ட காரியங்கள் நிறைவேற்றவும் வேண்டும். மேலும்

(i)இந்தச் சட்டப்படி அறிக்கையிட்ட ஏதேனும் ஆணையை கடைபிடிப்பதில் வீழ்ச்சி ஏற்பட்டால் அபராதம் சுமத்தவும், அல்லது

(ii) தீர்ப்பாக்குவதாக_ அறிவிக்கப்பட்டுள்ளதோ இந்த அவசரச்சட்டத்தின் கீழிலோ அதன் கீழ் உருவாக்கப்பட்டுள்ள விதிகளில் ஏதேனும் விதிமுறைகள் மீறலோ குற்றம் நடத்தலோ செய்தால் அதை தீர்ப்பாக்கவும்.

(iii)ஏதேனும் நிறுவனத்தில் ஏதேனும் உணவு பதார்த்தம் தயார் செய்யலோ உருவாக்கலோ சேகரிக்கலோ விற்பனை செய்யலோ செய்கின்ற வேலையில் ஏற்படுகின்ற எந்த ஒரு நபருக்கும் அது சார்ந்த உள்ளாட்சி நிறுவனங்கள் தீர்மானித்த நிபந்தனைப்படியான தகுதிச் சான்றிதழ் வழங்குவதற்கும் அதிகாரமிருக்கும்.

(4) உள்ளூர் பொதுசுகாதார அதிகாரியாக நியமனம் செய்யப்பட்டுள்ள சுகாதார அதிகாரி இந்த அவசரச்சட்டத்திலோ அதன் கீழ் சிறப்பாக வழங்கப்பட்டுள்ள எல்லா அதிகாரங்களும் பயன்படுத்த வேண்டியதும் எல்லா பொறுப்புகளும் நிறைவேற்ற வேண்டியதும் மட்டுமல்லாமல், இந்த அவசரச்சட்டத்தின் விதிமுறைகளுக்கும் அதன் கீழ் உருவாக்கப்பட்டுள்ள சட்டங்களுக்கும் உட்பட்டு, உள்ளூர் பொதுசுகாதார அதிகாரி என்ற நிலையில் தேவையான எல்லா செயல்பாடுகளும் நடைமுறையில் கொண்டு வர வேண்டும்.

(5) உள்ளூர் பொது சுகாதார அதிகாரியாக நியமனம் செய்யப்பட்டுள்ள சுகாதார அதிகாரி 1860-ன் இந்திய தண்டனைச் சட்டத்தில் (1860-ன் 45-வது சட்டம்) 21-ஆம் பிரிவின் பொருளில் வருகின்ற ஒரு பொது ஊழியராக கருதப்பட வேண்டும்.

(6) உள்ளூர் பொது சுகாதார அதிகாரியாக நியமனம் செய்யப்பட்டுள்ள சுகாதார அதிகாரி அல்லது அவரால் அதிகாரப்படுத்தப்பட்ட ஒரு அதிகாரிக்கு;

(எ) ஏதேனும் வகையிலான இடையூறு நடந்ததோ தொடர்வதான ஏதேனும் இடத்தில்,

(பி) குற்றம் நிறைந்த வணிகம் செய்கின்ற எந்த இடத்திலும்,

(சி) உணவு பதார்த்தங்கள் தயார் செய்யலோ உருவாக்கலோ சேகரிக்கலோ விற்பனை செய்யலோ அல்லது நீர் வினியோகத்தின் ஏதேனும் உறைவிடத்தில் உள்ள

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

மாசுபடுதலோ தொற்றுநோயோ உள்ள ஏதேனும் இடத்திலும்,

(டி) நோய் தொற்று பாதிக்கப்படுபவரின் நோய் அணுக்களினுடைய அதிகரிப்பு உட்பட ஏதேனும் தொற்றுநோய் பரவுவதற்கு உதவியான சூழ்நிலைகள் நிலைநிற்கின்ற எந்த இடத்திலும்.

(இ) உள்ளூர் பொது சுகாதார அதிகாரியின் அதிகார வரம்பிற்குள் அசுத்தமானதோ சுகாதாரத்திற்கு தீங்கு விளைவிக்கின்ற எந்த ஒரு இடத்திலும், நுழைந்து பரிசோதனைச் செய்யலாம்.

(7) உள்ளூர் பொதுசுகாதார அதிகாரியாக நியமனம் செய்யப்பட்ட சுகாதார அதிகாரி அல்லது அவரால் அதிகாரப்படுத்தப்பட்ட ஒரு அதிகாரிக்கு மாசுபட்டதோ அழுகியதோ என்று சந்தேகப்பட நியாயமான காரணமுள்ள ஏதேனும் உணவு பானங்கள் கண்டடைந்து கொண்டு போகவோ அழிக்கவோ அதிகாரமிருக்கும்.

ஆனால் உள்ளூர் பொது சுகாதார அதிகாரி அல்லது அவரால் அதிகாரப்படுத்தப்பட்ட அதிகாரி இந்த துணைப்பிரிவிற்கு கீழ் ஏதேனும் நடவடிக்கை எடுத்தால் அப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கும்போது அவர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சாட்சிகளை அழைத்து அவரின்/அவர்களின் கையொப்பம் பெற வேண்டும்.

(8) உள்ளூர் பொது சுகாதார அதிகாரியாக நியமனம் செய்யப்பட்ட சுகாதார அதிகாரி அல்லது அவரால் அதிகாரப்படுத்தப்பட்ட ஊழியருக்கு.-

(எ) ஏதேனும் இடமோ தொழிற்சாலையோ பட்டறையோ வேலையிடமோ அலுவலகமோ திரைச்சாலையோ மருத்துவமனை அல்லது அவருக்கு தேவையென்று தோன்றக்கூடிய பிற இடங்களும், தொற்றுநோய்கள் அறிக்கை செய்யப்பட்டுள்ள வாழ்விடங்கள் உட்பட அல்லது மாசு நிறைந்துள்ளதென்று சந்தேகப்படுகின்ற ஏதேனும் இடமோ, முன் அறிவிப்பு இல்லாமல் எப்போது வேண்டுமானாலும், எந்த ஒரு உதவியும் இல்லாமல் பரிசோதனைச் செய்யலாம்.

(பி) அப்படிப்பட்ட இடத்திற்கு மேல் அவ்வாறுள்ள நோய் பரவுவது தடைசெய்வதற்கான அப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படலாம். மேலும்

(சி) ஏதேனும் இடத்திலிருந்தோ கற்றுப்புறத்திலிருந்தோ நியாயமென்று தோன்றுகிற பட்சத்தில் உணவினுடையவோ தண்ணீரினுடையவோ ஏதேனும் பதார்த்தினுடையவோ மாதிரிகள் ஆய்வுக்காக எடுக்கப்படலாம்.

(9) உள்ளூர் பொது சுகாதார அதிகாரியாக நியமனம் செய்யப்பட்ட சுகாதார அதிகாரி அல்லது அதிகாரப்படுத்தப்பட்ட அதிகாரி (8)-வது துணைப்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கும்போது, நடவடிக்கை நிறைவடைந்த பிறகு சரியான நேரத்திற்குள் இருபத்து நான்கு மணி நேரத்திற்குள்

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

அவ்வாறு எடுத்த நடவடிக்கைகளைக் குறித்து ஒரு அறிக்கை அவரது மேலதிகாரிக்கு உள்ளாட்சி நிறுவனத்திற்கும் குறிப்பிட்ட வடிவத்தில் வழங்கவும் ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனில் உள்ளூர் உணவு பாதுகாப்பு அதிகாரிக்கு தெரியப்படுத்தவும் வேண்டும்.

(10) வட்டார பொது சுகாதார அதிகாரியாக நியமனம் செய்த சுகாதார அதிகாரி அல்லது அவரால் அதிகாரப்படுத்தப்பட்ட ஊழியருக்கு.

(எ) இந்த அவசரச்சட்டத்திலோ அதன் கீழ் உருவாக்கப்பட்டுள்ள விதிகளிலோ ஏதேனும் விதிமுறைகளை மீறிய நபருக்கோ நபர்களுக்கோ எதிராக நடவடிக்கை எடுக்கும்போதோ; அல்லது

(பி) இந்த அவசரச்சட்டத்திலோ அதன் கீழ் உருவாக்கப்பட்டுள்ள விதிகளிலோ ஏதேனும் விதிமுறைகள் மீறியதற்கு வழக்கு தொடரும் போதோ அல்லது

(சி) இந்த அவசரசட்டத்திலோ அதன் கீழ் உருவாக்கப்பட்டுள்ள விதிகளின்படி (2)-ம் பிரிவில் (இசட் இ) இனத்தின் படி குறிப்பிடப்பட்டுள்ள இடையூறு இல்லாமல் செய்வதற்கான ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கும்போதோ.

தொடர்புடைய உள்ளாட்சி நிறுவனத்திற்கு முன் வைப்பதற்காக உள்ளாட்சி நிறுவன செயலாளருக்கு எழுத்துப்பூர்வமான ஒரு அறிக்கை வழங்க வேண்டும்.

13. <u>உள்ளூர் பொதுசுகாதார அதிகாரிக்கு உதவுதல்-</u> (1) பொதுசுகாதார காரியங்களில் உதவுவதற்கோ நடவடிக்கைக்கு சாட்சியளிக்கவோ அல்லது விசாரணை நடவடிக்கைகளிலோ உள்ளூர் பொது சுகாதார அதிகாரி அணுகும் போதெல்லாம் அரசின் கீழுள்ள எஅனைத்து அரசு ஊழியர்களும், அனைத்து உதவியும் ஒத்துழைப்பும் வழங்க வேண்டும். அப்படிப்பட்ட ஊழியரிடமிருந்து ஏற்பட்டதாக காணப்படுகின்ற ஏதேனும் நிராகரிப்போ உதவியின்மையோ, ஒழுக்கிமின்மையோ ஒழுங்கு மீறலோ ஆக கருதப்படுவதும் அது தொடர்புடைய கட்டுப்பாட்டு அதிகாரிக்கு உகந்த தண்டனை நடவடிக்கைகள் எடுக்க காரணமாவதுமாகும்.

(2) உள்ளூர் பொது சுகாதார அதிகாரி இந்த அவசரச்சட்டத்தின் கீழிலோ அல்லது அதன் கீழிலோ உருவாக்கப்பட்ட விதிகள் அல்லது ஒழுங்குமுறைகளின்படி ஒப்படைக்கப்பட்டுள்ள ஏதேனும் அதிகாரம் சட்டப்படி பயன்படுத்த காவல்துறையின் எழுத்துபூர்வமாக அவரின் உதவி கோரினால் உள்ளூர் பொதுசுகாதார அதிகாரியை உதவ வேண்டும் என்பது ஒவ்வொரு காவலரின் பொறுப்பாகயிருக்கும்.

14. <u>சுகாதார அதிகாரிக்கு உள்ளாட்சி நிறுவனம் போதுமான வசதி வழங்க வேண்டும் என்று.-</u>

(1) ஒவ்வொரு உள்ளாட்சி நிறுவனமும் அதன் சுகாதார அதிகாரிக்கு அவரின்

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

சரியான அலுவல் செயல்பாட்டிற்கு தேவையான நிதி, எழுத்து சார் அலுவல் உதவி, அலுவல் இடம், மரச்சாமன்கள், எழுதுபொருட்கள், படிவங்கள் வாகன வசதி போன்றவை வழங்க வேண்டும்.

(2) இந்த அவசரச்சட்டத்தின் படி உள்ளூர் பகுதிகளில் தூய்மை வசதிக்காகவும் இடையூறு இல்லாமல் செய்யவும் போன்றவற்றிற்காகவும் நடத்தப்பட்ட ஏதேனும் வேலையினுடையவோ நடவடிக்கையினுடையவோ செயல்களால் சுகாதார அதிகாரிக்கு ஏற்படக்கூடிய எந்த செலவுகளும் நஷ்டங்களும் உள்ளாட்சி நிறுவனம் பொறுப்பேற்க வேண்டியதும் அப்படிப்பட்ட தொகை இந்த அவசரச்சட்டப்படி அறிக்கை வழங்கப்பட்ட நபரில் இருந்து இடத்தின் மீதான நில நிலுவை என்பது போன்று உள்ளாட்சி நிறுவனம் வசூலிக்கலாம்.

15.மாநிலத்தில் பொது சுகாதார விதிகளின் விதிமுறைகள் நடைமுறைப்படுத்துவதற்கான சுகாதார அதிகாரியின் அதிகாரம்.-மாநிலத்தின் பொதுசுகாதார சுற்றுச்சூழல் விதிகள் தொடர்பான விதிமுறைகளின் கீழ் சுகாதார அதிகாரிக்கு அதிகாரங்களை பயன்படுத்த வேண்டும்.

அத்தியாயம் 3

மனிதர்களின் பயன்பாட்டிற்கான தண்ணீரும் கழிவு நீர் அகற்றுதலும்

16. குடிநீரின் தரம்.- (1) குடிநீரின் தரத்தை நிர்ணயம் செய்வது குடிநீரின் இந்திய தரநிலையின் விவர குறிப்பின் படியாக இருக்க வேண்டியதும் மேலும் வினியோகம் செய்கின்ற குடிநீர் போதுமானது என்றும் அது 2006-ன் ஃபுட் சேஃப்ட்டி அன்ட் ஸ்டான்டேர்ட் ஆக்ட் கடைபிடித்துள்ளது என்றும் உறுதி செய்ய மனித உபயோகத்திற்கான நீர் வினியோகம் செய்கின்ற எல்லா வினியோஸ்தரின் பொறுப்பு உடையதாகும்.

(2) ஒவ்வொரு உள்ளூர் பொது சுகாதார அதிகாரியும்,-

(எ) அவ்வப்போதோ அல்லது நீர் மூலம் பரவும் நோய் இருக்கிறதென்ற சந்தேகம் இருக்கும்போதோ நிர்ணயம் செய்யப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டு குடிநீரின் தரம் பரிசோதனை செய்ய வேண்டியதும்; மேலும்

(பி) வினியோகம் செய்யப்படுகின்ற குடிநீரின் தரமும் அளவும் அதது சங்கதிபோல தரம் குறைந்தது என்றோ போதுமானது என்று கண்டடைந்தால் வினியோகஸ்தரின் துணையுடன் பரிகார நடவடிக்கைகள் ஆரம்பிக்க வேண்டியதுமாகும்.

(3) குடிக்கவும், குளிக்கவும் ஆடைகள் சலவை செய்யவும் அல்லது தண்ணீர் விளையாட்டிற்கும் சுற்றுலாவிற்கும் பயன்படுத்தப்படுகின்ற ஏதேனும் ஏரி, அருவி, நீருற்று,கிணறு, நீர்தொட்டி, நீர் தேக்கம், குளம், டேங்கர் லாரிகளிலுள்ள தண்ணீர் அல்லது

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

பிற நீர் வினியோக உறைவிடங்களின், அது தனிநபரின் சொத்தாகயிருந்தாலும் அல்லது உடைமையாளர் அல்லது அதன் மேல் கட்டுப்பாடுள்ள ஏதேனும் நபரிடம் உள்ளூர் பொதுசுகாதார அதிகாரிக்கு எப்போது வேண்டுமென்றாலும் எழுத்து பூர்வமாக அறிக்கை வழங்க வேண்டியதும் அறிக்கையில் விளக்கப்பட்டுள்ள நியாயமான நேரத்திற்குள் அல்லது (டி) உட்பிரிவின் கீழ் வருகின்ற காரியங்கள் என்றால், அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கை கிடைத்து முப்பத்தியாறு மணி நேரத்திற்கு குறையாத நேரத்திற்குள்ள அவர்,

(எ) உள்ளூர் பொதுசுகாதார அதிகாரி குறிப்பிடுகின்ற அப்படியுள்ள முறையில் நீர் வினியோக உறைவிடங்கள் நிலை நாட்டவும் பராமரிக்கவும், அல்லாவிடில்

(பி) சேறு கழிவுகள், மீன் போன்றவற்றில் இருந்து அப்படிப்பட்ட நீர் வினியோக உறைவிடங்கள் சுத்தம் செய்தும் அல்லாவிடில்,

(சி) உள்ளூர் பொது சுகாதார அதிகாரி குறிப்பிட்டது போல மேற்பரப்பு வடிகால் வழியான கழிவிலிருந்து அப்படிப்பட்ட நீர் வினியோக உறைவிடங்களை பாதுகாக்கவும், அல்லது,

(டி) பொது சுகாதார அதிகாரியின் கருத்தின்படி ஏதேனும் முறையிலுள்ள நீர் வினியோக உறைவிடம் போதுமான பழுதுபார்த்தல் வேலைகளோ பாதுகாப்போ அல்லது அடைத்து வைப்பு இல்லையெனில் அது உபயோகம் செய்ய வசதி செய்கின்ற அல்லது வழி செல்கின்ற நபருக்கோ பொதுமக்களுக்கோ சுகாதாரத்திற்கோ, பாதுகாப்பற்கோ தீங்கு விளைவிக்கும் என்றால், அவர்களின் அறிவுரைப்படி அவற்றை நிரப்பவோ சரிபார்க்கவோ பாதுகாக்கவோ அல்லது அடைத்து வைக்கவோ அல்லது,

(இ) உள்ளூர் பொது சுகாதார அதிகாரியின் கருத்தில், தண்ணீர் பருக உகந்தது இல்லை என்றால் குடிநீர் தேவைக்காக அப்படிப்பட்ட நீர் வினியோக உறைவிடங்கள் பயன்படுத்துவதில் இருந்து அதுபோல மற்றவர்களை பயன்படுத்த அனுமதிப்பதில் இருந்து தவிர்க்கவோ அல்லது,

(எஃப்) உள்ளூர் பொதுசுகாதார அதிகாரியின் கருத்துப்படி நீர் குடிக்க உகந்தது இல்லையென்றால் குடிநீர் தேவைக்காக அதை பயன்படுத்துவதிலிருந்து தடைசெய்ய போதுமான அளவில் அப்படிப்பட்ட நீர்வினியோக உறைவிடங்கள் தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ தடை செய்ய அல்லது அப்படிப்பட்ட முறையில் நிரப்பவோ கட்டவோ அல்லது தடுப்பு ஏற்படுத்தவோ இல்லையென்றால்,

(ஜி) சுகாதாரத்திற்கு தீங்கு விளைக்கிறதென்றோ சமீப பகுதிக்கு இடையூறு என்றோ உள்ளூர் பொது சுகாதார அதிகாரி கணக்கிடுகின்ற ஏதேனும் தேங்கி கிடக்கின்ற ஏதேனும் நீர் உறைவிடங்களில் இருந்தோ அல்லது ஏதேனும் பொருளில் இருந்தோ

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

சுற்றுப்புறத்திலிருந்தோ தேக்கங்களில் இருந்தோ நீர் தேக்கங்களில் இருந்தோ அகற்றப்படவோ செய்யப்பட வேண்டுமென்று கோரலாம்.

எனில் (எ), (டி) போன்ற உட்பிரிவுகளின் விதிமுறைகள் ஒரு ஒடைக்கு பொருந்தாதது.

அதுமட்டுமல்லாமல் உட்பிரிவு (இ)-ன் படி ஒரு அறிக்கை முதலில் வழங்காத பட்சத்தில் உட்பிரிவு (எஃப்)-ன் படி ஒரு அறிக்கை வழங்க முடியாததும் உட்பிரிவு (இ)-ன் படியான அறிக்கை வழங்கிய பிறகும் பிரச்சனையான நீர் வினியோகத்திற்கான உறைவிடம் குடிநீரின் தேவைக்காக தொடர்ச்சியாக பயன்படுத்த வேண்டுமென்றால் உள்ளூர் பொதுசுகாதார அதிகாரிக்கு அப்படிப்பட்ட உபயோகம் (எஃப்) உட்பிரிவின்படியாக அறிக்கை வழங்காமல் தடை செய்ய முடியாது என்று எண்ணுகிற பட்சத்தில் அப்படிப்பட்ட அறிக்கை வழங்கலாம்.

(4) மேலே கூறியிருப்பது போல உரிமையாளரோகட்டுப்பாடு உள்ள நபரோ (3)-ஆம் துணைப்பிரிவின் படி வழங்கிய அறிக்கை, அதில் குறிப்பிட்டுள்ள நோத்திற்குள் கடைபிடிப்பதில் வீழ்ச்சி ஏற்படுத்தவோ புறக்கணிக்கவோ செய்தால் உள்ளூர் பொதுசுகாதார குழுமத்திற்கு ஏதேனும் நபரினுடையவோ அல்லது நபரினுடையவோ சுகாதாரம் அல்லது பாதுகாப்பு உறுதி செய்ய அவசர நடவடிக்கை தேவையென்று வந்தால் அப்படிப்பட்ட அறிக்கையில் சொல்லப்பட்ட வேலைகள் உடனே செய்து முடிக்கவும் அப்படிப்பட்ட உள்ளூர் பொதுசுகாதார அதிகாரிக்கு வருகின்ற எல்லா செலவுகளும் உரிமையாளர் அல்லது அப்படிப்பட்ட நீர் வினியோக உறைவிடத்தின் கட்டுப்பாட்டிலுள்ள நபர் செலுத்த வேண்டியதும் செலுத்தாத பட்சத்தில் அது சார்ந்த உள்ளாட்சி நிறுவனங்களுக்கோ கிடைக்க வேண்டிய வரி நிலுவையென்ற பெயரில் அது வசூலிக்கப்படவும் செய்யலாம்.

ஆனால் ஏதேனும் தனியார் உறைவிடத்தில் நீர் பொதுமக்கள் அல்லது பொது மக்களின் ஒரு பிரிவு உரிமை என்ற நிலையில் உபயோகப்படுத்த வேண்டுமெனில் அவ்வாறுன்ன செலவுகள் உள்ளாட்சி நிறுவனங்களின் நிதிகளில் இருந்து வசூலிக்க வேண்டும்.

(5) எந்த ஒரு நபரும் பொதுவான அல்லது குறிப்பாக பரிந்துரைக்கப்பட்டது போன்று பாதுகாக்கவோ, எரியவோ, காலியாக்கவோ, திரும்பவோ, காலியாக்க செய்யவோ, திரும்ப செய்யவோ, கடந்து செல்வதோ ஆன, ஏதேனும் பொதுவான வடிகாலுக்கோ, அல்லது பொது வடிகாலுடன் இணைக்கின்ற ஏதேனும் வடிகாலுக்கோ அனுமதிக்கக்கூடாது.

(எ) வடிகாலுக்கு பாதிப்பு ஏற்படுத்துவதோ அதில் உட்பட்டு இருக்கின்ற

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

கழிவுப்பொருட்களின் சுதந்திரமான ஓட்டத்தை தடை ஏற்படுத்துவதோ அல்லது அப்படிப்பட்ட கழிவுப்பொருட்கள் சுத்தீகரிப்பு அகற்றுதல் பாதிக்கின்ற எந்த ஒரு கழிவுப்பொருட்கள் அல்லது

(பி) கழிவோ, நீராவியோ ஆன ஏதேனும் திராவகமோ அல்லது பிற ஏதேனும் திராவகம் மட்டுமோ அல்லது வடிகாலுக்குள் பிற திராவகங்கள் ஒன்றாகும்போதோ ஆபத்துக்கோ இடையூறுக்கு காரணமாகவோ அல்லது சுகாதாரத்திற்கு தீங்கு விளைவிக்கவோ செய்தல்

(சி) ஏதேனும் வெடிக்கும் பொருட்கள் அல்லது எரிபொருள், ஏதேனும் பொது வடிகாலிலோ அல்லது பொது வடிகாலில் இணைக்கின்ற வடிகாலிலோ எறியவோ எரிவதற்கான அனுமதி வழங்குவோ, ஊற்றவோ, கொட்டவோ, கடத்தி விடவோ செய்யக்கூடாததுமாகும்.

(6) பொதுவாக அல்லது சிறப்பாக நிர்ணயம் செய்யப்பட்டது தவிர எந்த ஒரு நபரும்

(எ) ஏதேனும் நீர் வழிப்பாதைக்கு,-

(i)ஏதேனும் திடக்கழிவு அல்லது திரவக்கழிவு அழுக்கு, மலக்கழிவு அல்லது

(ii) ஏதேனும் உற்பத்தியில் இருந்தோ உற்பத்தி செயலிருந்தோ உருவாகின்ற ஏதேனும் விஷமுள்ள, தீவிரமான அல்லது மாசுபடுத்தும் திரவம்போடவோ போடுவதற்கு காரணமாகவோ அல்லது கொட்ட காரணமாகவோ கடத்தி விடவோ கொண்டு போகவோ அல்லது தெரிந்துக்கொண்டு போடுவதற்கு, கொட்டவோ ஒழுக்க கொண்டு போக அனுமதிக்கவோ, அல்லது

(பி) நீர் பாதையில் ஏதேனும் குவிக்கவோ குவிக்க காரணமாகவோ, கொட்ட காரணமாகவோ, கொட்டவோ, ஒழுக்கவோ அல்லது மனப்பூர்வமாக ஏதேனும் வீழ்ச்செய்யவோ ஒழுக்கவோ அல்லது ஒரே போன்று அல்லது பிற ஏதேனும் நபரின் பிற சமமான செயல்களுடன் தனிப்பட்ட அல்லது இணைத்த நீர் பாதையின் சரியாள ஒழுக்கை தடை செய்யவோ அதன் நீர் மாசு அடையவோ ஏதேனும் தொழிற்சாலையில் இருந்தோ கட்டுமான செயல்பாட்டிலிருந்தோ கல்குவாரியில் இருந்தோ உள்ள திட கழிவுகள் ஏதேனும் குப்பைகள், சாம்பல்கள், பிற கழிவுகள், விற்பனை கழிவுகள், மாசுபட்ட திட கழிவுகள் போன்றவை உட்பட, அல்லது

(சி) நீர் பாதையிலோ, உள்ளூர் பகுதிகளில் ஏதேனுமோ இடையூறு ஏற்படுத்தவோ கூடாது.

(7) துணைப்பிரிவு 3-ன் படி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பரிந்துரைகள் யாரேனும் கடைபிடிக்கவில்லை என்றால் அவர் ஆயிரம் ரூபாய் அபராதத்திற்கு

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

தொடர்ச்சியாக கடைபிடிக்காமல் இருக்கின்ற நிலையில் ஒவ்வொரு நாளுக்கும் ஐந்நூறு ரூபாய் வரையாகின்ற அபராதத்திற்கும் பொறுப்புடையவர் ஆவார்.

(8) (5) அல்லது (6)-ஆம் உட்பிரிவுகளின் விதிமுறைகள் யாரேனும் மீறினால் அவர் ஆயிரம் ரூபாய்க்கு மிகாத அபராதத்திற்கும் தொடர்ச்சியான மீறலுக்கு ஒவ்வொரு நாளுக்கும் ஐந்நூறு ரூபாய் வரையாகின்ற அபராதத்திற்கும் பொறுப்புடையவர் ஆவார்.

17. நீர் வினியோகம் சார்ந்த மாவட்ட பொதுசுகாதார அதிகாரியின் அதிகாரங்கள்.- (1) ஏதேனும் உள்ளூர் பகுதிகளிலோ அதன் பகுதிகளிலோ நீர் வினியோக உறைவிடம் மாசுபட்டதோ இல்லையோ என்று கண்டடைய அப்படிப்பட்ட பகுதிகளிலோ அதன் பகுதிகளிலோ மாவட்ட பொதுசுகாதார அதிகாரி விசாரணை செய்யலாம்.

(2) மாவட்ட பொது சுகாதார அதிகாரி அல்லது முறையே அதிகாரப்படுத்தப்பட்டுள்ள எந்த ஒரு ஊழியரும் அப்படி விசாரணைகளின் முடிவுவை கருத்தில் கொண்டு, குறிப்பிட்ட காலத்திற்குள், நீர் வினியோக உறைவிடம் சுத்தப்படுத்தவோ மேம்படுத்தவோ சரி செய்யவோ மாசுபடுத்தலில் இருந்து பாதுகாக்கவோ குறிப்பிட்டு உரிமையாளர்களுக்கோ குடியிருப்பவருக்கோ அது சார்ந்த நிறுவனத்திற்கோ அதிகாரிக்கோ ஆணை வழங்கலாம்.

ஆனால் இந்த துணைப்பிரிவின் கீழ் ஒரு ஆணை வெளியிடுவதற்கு முன் மாவட்ட பொதுசுகாதார அதிகாரி அல்லது அதிகாரப்படுத்தப்பட்ட அதிகாரி, அதிகாரிகளுக்கோ சார்ந்த நபர்களுக்கோ சொல்ல வேண்டியது சொல்ல போதுமான வாய்ப்பு வழங்க வேண்டியதும் அது பரிசீலிக்கவும் வேண்டும்.

(3) துணைப்பிரிவின் படி (2)-ன் படி மாவட்ட பொது சுகாதார அதிகாரி அல்லது அதிகாரப்படுத்தப்பட்ட ஊழியர் அறிக்கை செய்த ஆணைக்கு எதிராக மாநில பொது சுகாதார அதிகாரி மேல்முறையீடு செய்யலாம் அப்படிப்பட்ட மேல்முறையீடு மாநில பொது சுகாதார அதிகாரி எடுக்கின்ற தீர்மானங்களுக்கு எதிராக அரசிற்கு ஒரு மறு ஆய்வு செய்யப்பட வேண்டியதும் அதன் தீர்மானம் இறுதியாகயிருக்கும்.

18. நீரின் தரம் மேம்படுத்துவதற்கான மாநில பொதுசுகாதார அதிகாரியினுடையவோ மாவட்ட பொது சுகாதார அதிகாரியிடையவோ அதிகாரங்கள்.- ஒரு உள்ளூர் பகுதியிலுள்ள பொது நீர் வினியோக உறைவிடம் மாசு அடைந்ததோ அல்லது மாசு காரணமாக உள்ள ஆபத்தோ என்றோ மாநில பொதுசுகாதார அதிகாரிக்கோ மாவட்ட பொது சுகாதார அதிகாரிக்கோ தோன்றுகிற பட்சத்தில் உள்ளூர் பொதுசுகாதார அதிகாரிக்கு, எழுத்து பூர்வம் அதில் கூறப்பட்டுள்ள அப்படிப்பட்ட நடவடிக்கைகள் கைகொள்ள தேவையான அறிவுரைகள் வழங்கலாம்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

அத்தியாயம் 4

தூய்மைப்படுத்தும் வசதிகள்

19. பொது சுகாதார வசதிகள் வழங்கவும் உறுதி செய்வதற்குமான உள்ளாட்சி நிறுவனங்களின் பொறுப்பு.- (1) ஒவ்வொரு உள்ளாட்சி நிறுவனமும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு தேவையான எண்ணிக்கையிலான சுத்தப்படுத்தல் வசதிகள் சரியானதும் வசதியானதுமான இடங்களில் தேவையானால் பெயரளவிலான பணம் வழங்குவதின் அடிப்படையில் தயார் செய்யவும் பராமரிக்கவும் பொது சுகாதாரத்திற்கு ஒரு இடையூறோ தீங்கோ விளைவிக்காத விதம் அப்படிப்பட்ட இடங்கள் போதுமான தூய்மை நிலையில் நிலைநிறுத்தவும் வேண்டும்.

(2) மனிதர் வாழ்வதற்கு -நோக்கமிட்டுள்ள ஏதேனும் கட்டிடம் எந்த ஒரு தூய்மைப்படுத்தல் வசதிகளும் இல்லையென்றால் அல்லது உள்ளூர் பொது சுகாதார அதிகாரியின் கருத்தின் அடிப்படையில் கட்டிடத்தில் வசிக்கின்ற நபர்களின் எண்ணிக்கையைப் பொறுத்த வரையில் அதில் வழங்கப்பட்டுள்ள தூய்மை வசதியோ வசதிகளோ போதுமானது இல்லை என்றாலோ அல்லது தூய்மை காரணங்களால் மாற்றுக்கருத்து இருக்குமானால் அறிக்கையில் விளக்கப்பட்டுள்ள தூய்மை வசதிகள் அல்லது அப்படிப்பட்ட அதிக தூய்மை வசதிகளும் தயார் செய்ய வேண்டுமென்ற அப்படிப்பட்ட கட்டிடங்களின் உரிமையாளரிடம் அவருக்கு எழுத்து பூர்வமாக அறிவிப்பு மூலம் கோரிக்கை செய்யலாம்.

(3) கட்டிடம் இருக்கும் இடத்தின் ஒவ்வொரு உரிமையாளரும் அப்படிப்பட்ட கட்டிடங்களில் குடியிருப்பவர்களின் உபயோகத்திற்காக தேவையான தூய்மைப்படுத்தல் வசதிகள் அப்படிப்பட்ட நிறுவனங்களிலும் நேரத்திற்குள்ளிலும் தயார் செய்ய வேண்டும் என்று உள்ளூர் பொதுசுகாதார அதிகாரிக்கு அறிக்கையால் கோரிக்கை செய்யலாம்.

(4) உள்ளூர் பொதுசுகாதார அதிகாரியின் அதிகார வரம்பிலுள்ள உள்ளூர் பகுதியிலுள்ள அனைத்து கல்வி நிறுவனங்களும் 1994-ன் கேரள பஞ்சாயத்து ராஜ் சட்டம் (1994-ன் 13-வது சட்டம்) கீழிலும் 1994-ன் கேரள முனிசிப்பாலிட்டி சட்டம் (1994-ன் 20-ஆம் சட்டம்)தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள கட்டிட கட்டுமான சட்டப்படி பரிந்துரைகள் ஏற்றார்போல் கழிப்பிடங்களும் வாட்டர் க்ளோசெட்டுகள் (மகளிர் மற்றும் ஆண்களுக்கும் தனித்தனியாக) வாஷ்பேசின்களும் தயார் செய்ய வேண்டியதும் அவை சுத்தமாகவும் சரியான முறையிலும் பராமரிக்கவும் வேண்டும். வேலை இடங்கள், வியாபார நிறுவனங்கள், வணிக வளாகங்கள் உட்பட அனைத்து நிறுவனங்களிலும், குழந்தைகள், பெண் குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள், முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள் போன்றவர்களுக்கு நல்லிணக்கமான கழிப்பறை போன்ற வசதிகள் உறுதி செய்ய

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

வேண்டும்.

(5) அவ்வாறு தயார் செய்கின்ற எல்லா கழிப்பிடங்கள்,-

(எ) பயன்படுத்துகின்ற நபர்களின் தனிப்பட்ட உரிமை பக்கத்து பகுதிகளில் வசிப்பவர்களுடையவோ கடந்து செல்பவர்களினுடையவோ பார்வையில் இருந்து பாதுகாக்கின்ற நிலையில் கட்டுமானம் செய்ய வேண்டியதும்.

(பி) வாட்டர் டைப்ளோசெட் அடைப்புடன் கூடின் லீச் பிட் அல்லது செப்டிக்டேங், வடிகால் வசதி, மாசுபட்ட வாயு வெளியே செல்வதற்கான எக்ஸ்-ஹோஸ்ட் (நெட் -டையிட்) போன்ற முறைகள் உள்ளதும்.

(சி) சுற்றுப்புறத்தில் சாக்கடை தண்ணீர், தேங்கிக் கிடக்காமலும் சுத்தமாகவும் சரியான முறையிலும் செப்பனிடல் வேலைகள் நடத்தியும் அவ்வாறுள்ள முறையில் மாறுதல்கள் செய்தும் பராமரிப்பும் செய்ய வேண்டும்.

(6) இந்த அவசரச்சட்டம் நடைமுறையில் வருவதற்கு முன்போ அல்லது அதற்கு பிறகோ கட்டுமானம் செய்ததும் ஒரு தெருவிற்கு திறப்பதுமான ஒரு கழிப்பிட அறை பொதுமக்களுக்கு எதிராகவோ இடையூறோ ஏற்படாத விதத்தில் நிறுவவோ கட்டுமானமோ செய்யப்பட்டால், உள்ளூர் பொதுசுகாதார அதிகாரிக்கு எழுத்துப்பூர்வமாக அறிக்கையானால் அதில் கூறியிருக்கின்ற அப்படிப்பட்ட நேரத்திற்குள்ளில், உள்ளாட்சி நிறுவனத்திற்கு தெரியப்படுத்திக்கொண்டு அது நீக்கம் செய்யவோ அப்படிப்பட்ட மேம்படுத்தல்கள் கொண்டு வரவோ உரிமையாளரிடம் கோரிக்கை செய்யப்படலாம்.

(7) துணைப்பிரிவு (2)-ல் கூறப்படுகின்ற பரிந்துரைகள் கட்டிடத்தின் உரிமையாளர் கடைபிடிக்கவில்லையெனில், இருநூற்று ஐம்பது ரூபாய்க்கு மிகாத அபராதத்திற்கும் தொடர்ச்சியாக கடைபிடிக்கவில்லையெனில் ஒவ்வொரு நாளுக்கு நூறு ரூபாய் வரையாகின்ற அபராத்திற்கும் பொறுப்புடையவராக இருப்பார்.

(8) கட்டிடம் இருக்கும் நிலத்தின் உரிமையாளர் (3)-ஆம் துணைப்பிரிவின் படியான விதிமுறைகள் கடைபிடிக்கவில்லை என்றால் இருநூற்று ஐம்பது ரூபாய்க்கு மிகாத அபராதத்திற்கும் பரிந்துரைகள் தொடர்ந்து கடைபிடிக்கவில்லையென்றால் ஒவ்வொரு நாளுக்கும் நூறு ரூபாய் வரையாகின்ற அபராதத்திற்கும் பொறுப்புடையவராகயிருப்பார்.

(9) துணைப்பிரிவு 4-ல் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் கல்வி நிறுவனங்களோ பிற நிறுவனமோ 4-ஆம் துணைப்பிரிவில் கூறப்பட்டதுபோல தேவையான தூய்மை வசதிகள் ஏற்படுத்துவதில் வீழ்ச்சியடைந்தால் ஐந்நூறு ரூபாய்க்கு மிகாத அபராத்திற்கும் பரிந்துரைகள் தொடர்ந்தும் கடைபிடிக்கவில்லையெனில் ஒவ்வொரு நாளுக்கும் நூறுரூபாய் வரையாகின்ற பிழைக்கும் பொறுப்புடையவராகயிருப்பார்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(10) துணைப்பிரிவு (5)-ன் விதிமுறைகள் மீறுகின்ற ஒவ்வொரு கட்டிட உரிமையாளரும் இருநூற்று ஐம்பது ரூபாயில் மிகாத அபராதத்திற்கும் தொடர்ச்சியான மீறுதலுக்குமாக ஒவ்வொரு நாளுக்கும் நூறு ரூபாய் வரையாகின்ற அபராதத்திற்கும் பொறுப்புடையவராக இருப்பார்.

(11) துணைப்பிரிவு 6-ன் விதிமுறைகள் மீறுகின்ற ஒவ்வொரு கட்டிட உரிமையாளரும் ஐந்நூறு ரூபாய்க்கு மிகாத அபராதத்திற்கும் தொடர்ச்சியான மீறுதலுக்கு ஒவ்வொரு நாளுக்கும் நூறு ரூபாய் வரையாகின்ற பிழைக்கும் பொறுப்புடையவராக இருப்பார்.

20. கல்வி நிறுவனங்களிலும் பிற பொது இடங்களிலும் தூய்மை வசதிகளுக்கான விதிமுறைகள்.- (1) கல்வி நிறுவனங்களிலும் பிற பொது இடங்களிலும் தூய்மை வசதி விதிமுறைகள் பரிந்துரை செய்ய வேண்டியது மாநில பொது சுகாதார அதிகாரியின் பொறுப்பாகும்.

(2) ஒவ்வொரு உள்ளூர் பொதுசுகாதார அதிகாரியும்.-

(எ) எல்லா கல்வி நிறுவனங்களிலும் பிற பொது இடங்களிலும் தேவையான தூய்மை வசதிகள் தயார் செய்யப்பட்டுள்ளது என்று உறுதி செய்யவும்;

(பி) வசதிகள் போதுமானது அல்லாமல் ஆகும்போது தீர்வு நடவடிக்கைகள் தொடங்கவும் வேண்டும்.

21. சுகாதார தகுதி சான்றிதழின் தேவை.- (1) தனியார் குடியிருப்புகளைத் தவிரவுள்ள அனைத்து நிறுவனங்களும் அதிகாரவரம்பிற்குட்பட்ட பகுதிகளில் உள்ளாட்சி நிறுவனங்களின் சுகாதார ஆய்வாளரிடமிருந்து உள்ளூர் பொதுசுகாதார அதிகாரியின் ஒப்புதலுடன் ஒவ்வொரு ஆண்டும் சுகாதாரத் தகுதித் சான்றிதழைப் பெற வேண்டும்.

(2) துணைப்பிரிவு (1)-ன் விதிமுறைகளை மீறும் எந்தவொரு நிறுவனமும் இருநூற்று ஐம்பது ரூபாய்க்கு மிகாமலுள்ள அபராதத்திற்கும் தொடர்ச்சியான மீறலுக்கு ஒவ்வொரு நாளுக்கும் நூறு ரூபாய் வரையிலான அபராதத்திற்கும் பொறுப்புடையவராவதாகும்.

22. தெருக்கள் மற்றும் பொது இடங்களில் கழிவுகள் மற்றும் குப்பைகள் போன்றவற்றை தள்ளுவதை தடை செய்தல்.- (1) எந்தவொரு நபரும் தெருக்கள் மற்றும் பொது இடங்களில் ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும் கழிவுகள் மற்றும் குப்பைகள் அல்லது அது போன்றவற்றை தள்ளக் கூடாது.

(2) 1994-ன் கேரள முனிசிபாலிட்டி சட்டம் (1994-ன் 20-வது சட்டம்) 1994-ன் கேரள பஞ்சாயத்து ராஜ் சட்டத்தின் (1994-ன் 13-வது சட்டம்) 219 எ முதல் 219 எஸ் வரையிலான பிரிவுகளிலும் அதன் கீழ் உருவாக்கியுள்ள விதிகளிலும் என்னதான்

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

அடங்கியிருந்தாலும், தெருக்கள் மற்றும் பொதுஇடங்களில் கழிவுகள், குப்பைகள் அல்லது பிற ஏதேனும் தள்ளுவதிலிருந்து எந்தவொரு சுகாதார பிரச்சனைகள் ஏற்படுவதில்லை என்று உள்ளூர் பொது சுகாதார அதிகாரி உறுதிசெய்ய வேண்டும்.

(3) துணைப்பிரிவு (1)-ன் விதிமுறைகளை மீறும் எந்தவொரு நபரும் இருநூற்று ஐம்பது ரூபாய்க்கு மிகாமலான அபராதத்திற்கும் தொடர்ச்சியான மீறலுக்கு ஒவ்வொரு நாளுக்கும் இருநூறு ரூபாய் வரையிலான அபராதத்திற்கும் பொறுப்புடையவராவதாகும்.

23. நுழைவு மற்றும் ஆய்வு செய்வதற்குமான அதிகாரம்.- இந்த அத்தியாயத்தில் அடங்கியிருக்கும் விதிமுறைகள் நடைமுறைப்படுத்தும் நோக்கத்திற்காக அரசின் சுகாதார துறை அல்லது உள்ளூர் பொதுசுகாதார ஆணையத்தின் கீழுள்ள சுகாதார ஆய்வாளர் பதவிக்கும் குறையாத எந்தவொரு அதிகாரியும் எந்தவொரு வளாகத்திலும் நுழைந்து ஆய்வு செய்யலாம். ஆனால்.-

(எ) சூரிய அஸ்தமனத்திற்கும் சூரிய உதயத்திற்கும் இடையில் வளாகத்தில் செய்வதோ செய்யாமல் இருப்பதோ ஆன ஏதேனும் ஒரு இடையூறு ஏற்படும்போது தவிர சூரிய அஸ்தமனத்திற்கும் சூரிய - உதயத்திற்கும் இடையே அத்தகைய இடங்களில் நுழைதல் கூடாது.

(பி) அத்தகைய நுழைவுக்கான நோக்கத்தை குறித்து குறைந்தபட்சம் இரண்டு மணிநேரம் முன்னதாக குடியிருப்பாளருக்கு அறிவிக்க வில்லையெனில் குடியிருப்பாளரின் அனுமதியின்றி ஒரு குடியிருப்பிலும் நுழைதல் கூடாது;

(சி) மகளிருக்காக ஒதுக்கப்பட்ட எந்தவொரு அடுக்குமாடியையும் தொடர்பாக குடியிருப்பவர்களுக்கு ஒவ்வொரு வழக்கிலும், அவர்களின் தனியுரிமை பாதுகாக்கப்படும் வகையில் வளாகத்தின் பிற பகுதிகளுக்கு மாற்றுவதற்கான போதுமான அறிவிப்பு கொடுக்க வேண்டியதும்.

(டி) அத்தகைய வளாகங்களில் குடியிருக்கும் மக்களின் சமூக மற்றும் மதம் சார்ந்த வழிபாடுகளுக்கு, நுழைவதின் நோக்கங்களுமாக இணங்கும் வரை உரிய முன்னுரிமை வழங்க வேண்டியதும்.

அத்தியாயம் 5
இடையூறை இல்லாமல் செய்தல்

24. தொந்தரவாகும் சில விஷயங்கள்.- பிரிவு 2-ல் தொந்தரவு என்ற சொல்லிற்கு வழங்கப்பட்டிருக்கும் வரையறையின் பொதுவான தன்மைக்கு பாதிப்பு வராமல் இந்த அத்தியாயத்தின் நோக்கத்திற்காக பின்வருபவை குறிப்பாக இடையூறாக கருதப்பட வேண்டும். அதாவது.-

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(i)சுகாதாரத்திற்கு தீங்கு விளைவிக்கும் முறையில் ஏதேனும் வளாகத்தை பாதுகாத்தல்;

(ii) ஏதேனும் குளம், ஏரி, வாய்க்கால், நீர்வழித்தடம், அருவி, நீர்த்தொட்டி, சாக்கடை, கழிவறை கழிவுநீர் வடிகால் அல்லது சாம்பல் குழி போன்றவை மிகவும் துர்நாற்றமாகவோ அல்லது சுகாதாரத்திற்கு தீங்கு விளைவிக்கும் நிலையில் வைத்திருப்பது;

(iii) சுகாதாரத்திற்கு தீங்கு விளைவிக்கும் முறையிலோ அதுபோன்ற இடத்திலோ ஏதேனும் விலங்குகளை பாதுகாத்தல்;

(iv)சுகாதாரத்திற்கு தீங்கு விளைவிக்கும் ஏதேனும் குப்பைகள், கட்டிட பொருட் கழிவுகள், வணிக கழிவுகள் அல்லது பிற பொருட்கள் போன்றவை குவித்தல் மற்றும் சேகரிப்பு செய்தல்;

(v) ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும் முறையில் ஏதேனும் தொழிற்சாலை, பட்டறை, வேலையிடம், கடைகள், உணவகங்கள் என்பவைக்கு போதுமான காற்றோட்ட வசதியை வழங்காமலும் அல்லது நச்சுக் கழிவுகளிலிருந்து சுத்தமாக வைத்திருக்காமலும் அல்லது பணிபுரியும் போது அதிக நெரிசல் ஏற்படுத்துவது;

(vi) தீ மூட்டும் இடமோ உலையோ அதில் பயன்படுத்தப்படும் தீ கனல்களிலிருந்து ஏற்படும் புகை முடிந்தளவு உள்ளிழுக்க இயலாத வகையில் பாதுகாப்பது;

(vii) ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும் வகையில் புகை வெளியேறும் விதத்திலான அளவிலும் உயரத்திலும் புகைபோக்கியை பராமரித்தல்;

(viii) ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கக்கூடிய ஏதேனும் சத்தம் மற்றும் கூச்சல், அதிர்வு, தூசி, சாம்பல் துர்நாற்றம் விரும்பத்தகாத வாசனை, நச்சு பொருட்கள் அல்லது அருவெறுப்பூட்டும் காட்சி ஆகியவற்றை ஏற்படுத்தல்;

(ix)ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும் நிலையில் முறையான முன்னெச்சரிக்கைகள் இல்லாமல் ஏதேனும் எக்ஸ்ரே பிரிவு, மருத்துவ ஆய்வகம் ஸ்கேன் மையம் அல்லது மருத்துவமனை போன்றவற்றை பராமரித்தல்;

(x) ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும் நிலையில் ஏதேனும் உணவகம் அல்லது உணவு கையாளும் நிறுவனம், இறைச்சிக்கூடம், இறைச்சி கடை, கோழிக்கடை, பால் கடை, சந்தை, ஐஸ் தொழிற்சாலை, தங்கும் விடுதிகள், அதுபோன்ற தங்கும் நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள் போன்றவை நடத்துதல் அல்லது பராமரிப்பு செய்தல்;

(xi) ஆரோக்கியத்திற்கும் தீங்கு விளைவிக்கும் நிலையில் ஏதேனும் புதை குழி, சுடுகாடு அல்லது கல்லறை போன்றவற்றை பராமரித்தல்;

(xii) ஏதேனும் மரம் அல்லது ஏதேனும் வகையிலான கட்டுமானம் போன்றவை

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

ஆரோக்கியத்திற்கு தீங்குவிளைவிக்ககூடிய நிலையில் வைத்திருப்பது;

(xiii) கொசுக்களின் இனப்பெருக்க உறைவிடமான தேங்கி நிற்கும் அல்லது ஒழுகின்றதான, ஏதேனும் நீர் தேக்கம் அல்லது ஈக்கள், கரப்பான் பூச்சிகள், நத்தைகள் ஆகியவற்றின் இனப்பெருக்க இடங்களும் உடல் நலத்திற்கு தீங்கு விளைவிக்கும் வகையில் வைத்திருப்பது;

(xiv)ஏதேனும் பன்றிக்கூடு, - கோழிப்பண்ணை, ஆட்டு பண்ணை, கால்நடை பணனை, குஞ்சு பொரிப்பகம் குதிரை தொழுவம் போன்றவை ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும் நிலையில் வைத்திருப்பது;

(xv)எலிகள், சுண்டெலிகள், செல்லுகள் போன்றவைக்கு தாவளமாகின்ற முறையில் ஏதேனும் குடோன்கள் கழிவுகளை குவித்தல் அதுபோன்ற ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும் முறையில் பராமரித்தல் அல்லது நிலைநிறுத்தவோ செய்தல்; மற்றும்

(xvi) ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும் முறையில் ஏதேனும் வகையிலான கழிவுகள் வாகனத்தில் கொண்டு செல்வதோ நீர் விநியோகம் வாகனத்தில் நடத்துவதோ செய்தல்;

25. இடையூறு சார்ந்த விவரங்கள் - ஏதேனும் பகுதிகளில் இடையூரால் துன்பப்படுகின்ற ஒரு நபருக்கும் அல்லது அதுபோன்ற தொல்லை நிலைநிற்கின்றது. என்றறிந்த எந்த ஒரு நபருக்கும் அதைக் குறித்து உள்ளூர் பொது சுகாதார அதிகாரிக்கு அல்லது தொடர்புடைய உள்ளாட்சி நிறுவன செயலாளர்க்கு விவரம் வழங்கவோ எழுத்து பூர்வமாக புகார் அளிக்கவோ செய்யலாம்.

26. இடையூறு இல்லாமல் செய்வதற்கான உள்ளூர் பொதுசுகாதார அதிகாரியின் அதிகாரம் - (1) ஒரு இடையூறு நிலைநிற்கின்றது என்று ஒரு விவரத்தின் அல்லது பிரிவு 25-ன் படியான புகாரின் அடிப்படையில் அல்லது பிற விதத்திலோ உள்ளூர் பொதுசுகாதார அதிகாரி உணர்ந்தால் அதிகாரி யாருடைய செயலினாலோ, தவறினாலோ இடையூறு ஏற்பட்டது அல்லது தொடர்ந்து ஏற்படுகிறதோ அவருக்கு அறிவிப்பு வழங்கியும், அவரை கண்டுபிடிக்க முடியவில்லை எனில் இடையூறு தொடர்வதான வளாகத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரிடமோ அதை இல்லாமல் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கோ அத்தகைய வேலைகள் செய்வதற்கோ பரிந்துரைக்கலாம்.

ஆனால்;-

(எ) ஏதேனும் தொழிலின் கட்டமைப்புக் குறைபாட்டால் இடையூறு ஏற்பட்டால், வளாகத்தின் உரிமையானருக்கு நோட்டீஸ் வழங்க வேண்டியதும்; மேலும்

(பி) இடையூறு ஏற்பட்டது அல்லது அது தொடர்வது வளாகத்தின் உரிமையாளர்

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

அல்லது குடியிருப்பாளரின் செயலோ, தவறுதலின் மூலமோ இல்லையெனில் உள்ளூர் பொதுசுகாதார அதிகாரி, இடையூறு தொடர்வதை தடுப்பதற்காக அதை இல்லாமல் செய்ய தேவையென்று அவர் கருதுகின்ற அது போன்ற நடவடிக்கைகள் உடனடி சுயமாக எடுக்க வேண்டியதாகும்.

அதுமட்டுமல்ல, உள்ளூர் பொது சுகாதார அதிகாரிக்கு காரணங்கள் பதிவு செய்தும், யாருக்கு அது போன்ற அறிவிப்பு வழங்கியது, அவரின் எழுத்துபூர்வமான விண்ணப்பத்தின் பேரில், வழக்கின் உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளின் அடிப்படையிலும், அத்தகைய அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள காலவரையை நீட்டிக்கலாம்.

(2) தற்போது அமலிலுள்ள ஏதேனும் சட்டத்திலோ வழக்கத்திலோ அல்லது ஏதேனும் சட்டங்களிலோ நடைமுறையில் உள்ளதோ வெளிப்படுத்தப்பட்ட அல்லது மறைமுகமாக செய்துள்ள ஏதேனும் உடன்படிக்கை அல்லது ஒப்பந்தத்தில் என்னதான் அடங்கியிருந்தாலும் இந்த பிரிவின் விதிகளுக்கு முரணாக இல்லாதது வரை துணைப்பிரிவு (1)-ன் படி அறிவிப்பில் உள்ள பரிந்துரைகள் அமலில் இருக்கும்.

(3) துணைப்பிரிவு (1)-ன் படி அறிவிப்பு வளாகத்தின் குடியிருப்பாளர் எனற நிலையில் ஒரு நபருக்கு வழங்குவது, அவர் இந்த வளாகத்தின் உரிமையாளராக இல்லாவிட்டால் மற்றும் அத்தகைய அறிவிப்பு இடையூறு இல்லாமல் செய்வதற்கான பொறுப்பை ஏற்படுத்தவோ ஏதேனும் பணியை நிறைவேற்றவோ அல்லது துணைப்பிரிவு (1)-ன் கீழில் பரிந்துரைக்கப்படும் அத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கோ மட்டுமெனில், அவருக்கு அந்த வளாகத்தை குறித்து எந்தவொரு சட்டபூர்வமான உரிமை, உடைமை உரிமையோ விருப்பமோ உருவாக்கப்படுவதில்லை.

(4) துணைப்பிரிவு (1)-ன் படி உள்ளூர் பொது சுகாதார அதிகாரிஅறிவிப்பு வழங்கிய ஏதேனும் நபர், உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் நீட்டித்த நேரத்திற்குள் அதில் வழங்கியுள்ள பரிந்துரைகள் பின்பற்ற தவறினால் உள்ளூர் பொதுசுகாதார அதிகாரி, இடையூறு இல்லாமல் செய்வதற்கும் அதன் தொடர்ச்சியை தடுப்பதற்கும் தேவையென்று அவர் கருதுகின்ற ஏதேனும் செயல்பாடுகள் சுயமாக செயல்படுத்தவோ அல்லது அத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளவோ வேண்டியதும், அதற்கான செலவுகள் அத்தகைய நபரிலிருந்தோ உரிமையாளரிடமிருக்கவோ குடியிருப்பாளரிடமிருந்தோ தொடர்புடைய உள்ளாட்சி நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய வரி நிலுவையாக வசூலிக்க வேண்டும்.

(5) உள்ளூர் பொதுசுகாதார ஆணையம் அவரால் உத்தரவிடப்பட்ட அல்லது எடுக்கப்படதோ ஆன நடவடிக்கைகள் குறித்து உள்ளாட்சி நிறுவனத்திற்கு அறிக்கை அளிக்க வேண்டும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

27. இடையூறின் காரணமாக குடியிருப்புக்கு தகுதியற்ற வகையிலான வீடு தொடர்பான ஏற்பாடு.- உள்ளூர் பொதுசுகாதார அதிகாரியின் கருத்துப்படி, ஒரு வீடு அல்லது பிற கட்டிடமோ அங்கு நிலைநிற்கும் ஒரு இடையூறால் குடியிருப்புக்கு தகுதியற்றதெனில் அத்தகைய வீடு அல்லது கட்டிடமோ குடியிருப்புக்கு தகுதியுடையதாகும் வரை, வசிப்பிடமாக பயன்படுத்துவதை அவர் தடை செய்ய வேண்டும்.

28.இடையூறுகள் அகற்றும்போது அகற்றப்பட்ட பொருட்களை அப்புறப்படுத்துதல்.-(1) இந்த அத்தியாயத்தின் கீழில் பணிகளை மேற்கொள்ளும்போதோ அல்லது பிற விதத்தில் அதன் விதிமுறைகள் நிறைவேற்றும்போதோ, ஏதேனும் வளாகத்திருந்நது (ஏதேனும் தெரு உட்பட) அகற்றப்பட்ட ஏதேனும் பொருட்கள் உள்ளூர் பொதுசுகாதார அதிகாரி அவை அகற்றப்பட்ட தேதி முதல் ஏழு நாட்கள் முடிவடைவதற்கு முன் உரிமையாளர் அத்தகைய பொருட்கள் உரிமை கோருவதும் அகற்றவும் செய்யாவிட்டால் உள்ளூர் பொதுசுகாதார அதிகாரிக்கு பொது ஏலத்தில் விற்கப்படலாம்.

(2) துணைப்பிரிவு (1)-ன் கீழில் ஏதேனும் பொருட்கள் விற்பது ஒரு உள்ளூர் பொதுசுகாதார அதிகாரி யார் பொருட்களின உரிமையாளரோ அவரிலிருந்து அத்தகைய அதிகாரிக்கு வசூலிக்கப்பட வேண்டிய செலவுகளின் தொகை கழித்த பிறகு விற்பனைத்தொகை அவருக்கு வழங்க வேண்டும்.

(3) விரைவில் அழிந்து போகக்கூடிய பொருட்கள், அத்தகைய பொருட்களின் உரிமையாளர் ஆறு மணி நேரத்திற்குள் கோரப்படாவிட்டால் உள்ளூர் பொதுசுகாதார அதிகாரிக்கு விற்கலோ பிற விதத்தில் அகற்றவோ செய்யலாம்.

(4) ஒரு உள்ளூர் பொது சுகாதார அதிகாரி அகற்றிய ஏதேனும் விரும்பத்தகாத விஷயத்திற்கும் அல்லது இளங்களுக்கு இந்த பிரிவின் விதிமுறைகள் பொருந்தாது.

29. நுழைவு மற்றும் ஆய்விற்கான அதிகாரம்.- இந்த அத்தியாயத்தில் உள்ள விதிகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அரசின் சுகாதார துறை அல்லது உள்ளூர் பொதுசுகாதார அதிகாரியின் கீழிலோ உள்ள ஜூனியர் சுகாதார ஆய்வாளர் பதவிக்கும் குறையாத எந்தவொரு அதிகாரியும் எந்தவொரு வளாகத்திலும் நுழைந்து ஆய்வு செய்யலாம்.

ஆனால்,-

(எ) சூரிய அஸ்தமனத்திற்கும் சூரிய உதயத்திற்கும் இடையே வளாகத்தில் செய்வதோ செய்யாமல் இருப்பதோ ஆன ஏதேனும் ஒரு இடையூறு ஏற்படும்போது தவிர சூரிய அஸ்தமனத்திற்கும், சூரிய உதயத்திற்கும் இடையே அத்தகைய இடங்களில் நுழைதல் கூடாது;

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(பி) அத்தகைய நுழைவுக்கான நோக்கத்தை குறித்து குறைந்தபட்சம் இரண்டு மணிநேரம் முன்னதாக குடியிருப்பாளருக்கு அறிவிக்க வில்லையெனில் குடியிருப்பாளரின் அனுமதியின்றி ஒரு குடியிருப்பிலும் நுழைதல் கூடாது.

(சி) மகளிருக்காக ஒதுக்கப்பட்ட எந்தவொரு அடுக்குமாடியும் தொடர்பாக குடியிருப்பவர்களுக்கு ஒவ்வொரு வழக்கிலும் அவர்களின் தனியுரிமை பாதுகாக்கப்படும் முறையில் வளாகத்தின் பிற பகுதிகளுக்கு மாற்றுவதற்காக போதுமான அறிவிப்பு கொடுக்க வேண்டியதும்;

(டி) அத்தகைய வளாகங்களில் குடியிருக்கும் மக்களின் சமூக மற்றும் மதம் சார்ந்த சடங்குகளுக்கு, நுழைவின் நோக்கங்களுமாக இணங்கும் வரை உரிய முன்னுரிமை வழங்க வேண்டும்.

30. உள்ளூர் பொதுகாதார ஆணையம் தவறும் பட்சத்தில் அரசின் அதிகாரம்.- இடையூறு இல்லாமல் செய்வதோ தடைவதோ தொடர்பாக இந்த அவசரச்சட்டத்தின் கீழிலுள்ள அதன் கடமையை நிறைவேற்றுவதில் உள்ளூர் பொது சுகாதார அதிகாரி தவறினால் அரசிற்கு அதன் ஏதேனும் அதிகாரிக்கு அத்தகைய கடமையை நிறைவேற்றவும் உள்ளூர் பொது சுகாதார அதிகாரியின் அல்லது இரண்டினுடையவும் ஏதேனும் குறிப்பிட்ட அதிகாரங்கள் பயன்படுத்தவும் அதிகாரப்படுத்தலாம். மேலும், உள்ளாட்சி நிறுவனத்திற்கு அதுபோன்ற ஏற்பாடு இல்லையெனில் அத்தகைய அதிகாரி செய்யும் செலவுகள் மாநில அரசு கண்டறிய வேண்டும்.

31. உள்ளூர் பகுதிக்கு வெளியே செயல் அல்லது வீழ்ச்சியின் மூலம் ஏற்படும் இடையூறு.- ஏதேனும் ஒரு உள்ளூர் பகுதியினுள் அதன் ஏதேனும் பகுதியை பாதிக்கின்ற, இந்த அவசரச்சட்டத்தின் கீழ் உள்ள ஒரு இடையூறு, அது அத்தகைய உள்ளூர் பகுதிக்கு வெளியே செய்ததோ நடக்கின்றதோ ஆன எந்தவொரு செயலிலோ வீழ்ச்சியிலோ முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ, ஏற்பட்டதானதென்று தோன்றினால், உள்ளூர் பொது சுகாதார அதிகாரிக்கு, இதுபோன்ற சங்கதிகளிலும் இது போன்ற சம்பவங்களிலும் வினைவுகளிலும் இடையூறுமாக தொடர்புடைய இந்த சட்டத்தின் படி அதிகாரப்படுத்தப்பட்ட எந்தவொரு நடவடிக்கைகளும், அத்தகைய செயலோ அல்லது வீழ்ச்சியோ அந்த உள் பகுதிக்குள் முழுமையாக செய்ததாகவோ நடந்ததாகவோ என்பதுபோல அத்தகைய செயலுமாக தொடர்புடைய எந்த ஒரு நபருக்கு எதிராகவும் எடுக்க அல்லது எடுக்க காரணமாகவோ செய்யலாம்.

ஆனால், மேற்கொண்ட நடவடிக்கை பகுதியினுடைய அதிகார வரம்பின் உள்ளூர் பொது சுகாதார அதிகாரிக்கு அறிவிக்கவும் உள்ளூர் பொது சுகாதார அதிகாரிகள் இடையே ஏதேனும் சர்ச்சை ஏற்படும் சந்தர்ப்பத்தில் அந்த சங்கதி மாவட்ட பொது சுகாதார

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

அதிகாரிக்கு அதன் முடிவிற்காக பரிந்துரை செய்ய வேண்டியதும் அவ்வாறான முடிவு தொடர்புடைய அனைத்து உள்ளூர் பொது சுகாதார அதிகாரிக்கும் உள்ளாட்சி நிறுவனங்களுக்கும் பொருந்துவதாக இருக்கும்.

அத்தியாயம் 6

இனப்பெருக்கம், தாய்க்குரிய, பிறந்த குழந்தை குழந்தை மற்றும் வாலிப ஆரோக்கியம்

32. உள்ளூர் பொது சுகாதார ஆணையம் இனப்பெருக்கம், தாய்க்குரிய, பிறந்த குழந்தை, குழந்தை மற்றும் வாலிப ஆரோக்கியம் (RMNCH) நிலையை நடைமுறைப் படுத்த வேண்டுமென்று.- (1) அரசு அவ்வப்போது வெளியிடப்படுகின்ற பரிந்துரையின் படி ஒவ்வொரு உள்ளூர் பொது சுகாதார ஆணையமும் இனப்பெருக்கம், தாய்க்குரிய, பிற குழந்தை, குழந்தை மற்றும் வாலிப ஆரோக்கியவும் (RMNCAH) சார்ந்த அத்தகைய நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்த வேண்டும்.

(2) துணைப்பிரிவு (1)-ல் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்துவதற்கு மாநில பொது சுகாதார ஆணையமும் மாவட்ட பொது சுகாதார ஆணையமும் உள்ளூர் பொது சுகாதார ஆணையங்களுக்கு தொழில்நுட்ப ஆதரவு வழங்க வேண்டும்.

(3) அவ்வப்போது அரசு அறிக்கை செய்கின்ற இனப்பெருக்கம், தாய்க்குரிய, பிறந்த குழந்தை, குழந்தை மற்றும் வாலிப ஆரோக்கியம் (RMNCAH) போன்றவையுமாக தொடர்பான தடுப்பு, ஊக்குவிப்பு மற்றும் மேலாண்மை என்பவை சார்ந்த அனைத்து நடவடிக்கைகளும் தேவையென்று கருதப்படும்பட்சம் பிற துறைகளுடன் இணைந்து செயல்படுத்துவது உள்ளூர் பொதுசுகாதார ஆணையத்தின் பொறுப்பாகும்.

(4) தாய் ஆரோக்கியம், குழந்தை நலம் போன்றவையை ஊக்குவிக்க தேவையென்று உள்ளூர் பொது சுகாதார ஆணையம் கருதப்படும் ஏதேனும் செயல்கள் குறிப்பிடப்பட்டுள்ள படியான நேரத்திற்குள் செய்யவோ அல்லது செய்வதை தவிர்க்கவோ அல்லது ஏதேனும் நிலையை மாற்றவோ, ஏதேனும் நபரையோ நிறுவனத்தினையோ எழுத்து பூர்வமாக பரிந்துரை வழங்க ஆணையத்திற்கு அதிகாரம் உள்ளது. ஆனால், மேற்குறிப்பிட்ட ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்குள் நபர் அல்லது நிறுவனம் அவ்வாறு செய்ய தவறினால், உள்ளூர் பொது சுகாதார அதிகாரி இந்த விஷயம் மாவட்ட பொது சுகாதார அதிகாரியை அறிவிக்க வேண்டியதும், அதனை தொடர்ந்து மாநில பொது சுகாதார அதிகாரிக்கும் அரசாங்கத்திற்கும் அறிவிக்க வேண்டியதும் ஆனதில் அரசினுடைய முடிவு இறுதியானதாகும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

அத்தியாயம் 7

தொற்றுநோய்கள் மற்றும் அறிக்கை செய்ய வேண்டிய தொற்று நோய்களின் தடுப்பும் அறிக்கையும் சிகிச்சையும்

33. தொற்றுநோய்கள் மற்றும் அறிக்கை செய்ய வேண்டிய தொற்றுநோய்களும் -

(1) இந்த அவசரச்சட்டத்தின் தேவைக்காக தொற்று நோய் என்பதில் பொருளாவது

(i)ஆந்தராக்ஸ்

(ii) சிக்கன் போக்ஸ்

(iii)சிக்கன் குனியா

(iv) காலரா

(v)செந்நிற கண்

(vi)டெங்கி காய்ச்சல்

(vii)டிஃப்தீரியா

(vii)வயிற்று போக்கு

(ix)என்டரிக் காய்ச்சல் (டைஃபோய்டு)

(x)எபோளா

(xi)பறவை காய்ச்சல் உட்பட தொற்றுநோயால் காய்ச்சல்

(xii)யானைக்கால் நோய்

(xiii)ஹியூமன் இம்மியுனோ, டெஃபிஷியன்ஸி வைரஸ்/அக்குவயர்ட் அம்மியூன் டெபிஷியன்ஸி (HIV/AIDS)

(xiv)இன்ஃபெக்டிவ் ஹெபடைடிஸ்

(xv)ஜப்பானிஸ் என்சஃபெலிட்டிஸ், அக்யுட் என்சஃபெலிட்டிஸ் சின்ரோம் (JE,AES)

(xvi)க்யாசனூர் ஃபாரஸ்ட் டிஸிஸ் (KFD)

(xvii)லிஷ்மானியாஸிஸ்

(xviii)தொழு நோய்

(xix)மஞ்சள் காமாலை

(xx)மலேரியா

(xxi)மீஸில்ஸ்

(xxii)மிடில் ஈஸ்ட் ரெஸ்பிரேட்டரி சின்ட்ரோம்

(xxiii)மெனின் ஜோ கோக்கல் மெனிஞ்ஜைடிஸ்,

(xiv)கழுத்தில் ஏற்படும் வீக்க வியாதி

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(xxv)ப்ளேக்

(xxvi)போலியோ மைலிட்டிஸ்

(xxvii)ரேபிஸ்

(xxviii)ஸ்க்ரப் டைஃபஸ்

(xxix)டெட்டனஸ்

(xxx)காச நோய் (TB)

(xxxi)டைபஸ் காய்ச்சல்

(xxxii)கக்குவான் இருமல், அல்லது

(xxxiii)அவ்வப்போது அரசு அறிக்கையின் வாயிலாக மாநிலம் முழுவதுமாகவோ அல்லது அறிக்கையில் அறிவிக்கப்படும் அத்தகைய பகுதிகளுக்கு ஒரு தொற்றுநோயாக அறிவிக்கப்படும் பிற ஏதேனும் நோய்

(2) இந்த அவசரச்சட்டத்தின் தேவைக்காக அறிக்கப்பட வேண்டிய தொற்றுநோய் என்பதில் பொருளாவது

(i)காசநோய்

(ii)மலேரியா

(iii)சிகா

(iv)ஆந்தராக்ஸ்

(v)பறவை காய்ச்சல்

(vi)செரிப்ரோஸ்பைனல் காய்ச்சல்

(vi)காலரா

(vii)டிஃப்தீரியா

(viii)ஜப்பானியா என்சஃபெலிடிஸ்

(ix)போலியோ மைலிடிஸ்

(x)டெட்டானஸ்

(xi)மஞ்சல் காய்ச்சல்

(xii)ரேபிஸ்

(xiii)நிபா

(xiv)கொரோனா வைரஸ் நோய் 2019 (கோவிட் 19) அல்லது

(xv)அவ்வப்போது அரசு அறிக்கையின் வாயிலாக மாநில முழுவதுமாகவோ அல்லது அறிக்கையால் அறிவிக்கப்பட கூடிய அத்தகைய பகுதிகளுக்கோ அறிக்கை செய்ய வேண்டிய தொற்று நோயாக அறிவிக்கப்படும் பிற ஏதேனும் நோய்.

(3) அரசு, விவரங்கள் சேகரிப்பது மற்றும் சிகிச்சை நிபந்தனைகளை பின்பற்றுவதோ

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

ஆன ஏதேனும் பரவுவதோ அல்லாததோ ஆன நோயை பொதுசுகாதார முக்கியத்துமான நோயாக அறிக்கை செய்யலாம்.

(4) அறிக்கை செய்யப்பட வேண்டிய ஏதேனும் தொற்று நோயின் ஒரு சம்பவமோ வெளிப்பாடோ, ஏதேனும் நபரோ, அரசு மருத்துவமனையோ, தனியார் மருத்துவமனையோ, கிளினிக்கோ அல்லது ஆய்வகமோ அவர்களின் கவனத்தில்படவோ தெரியவோ செய்தால், அவர்/அந்த விஷயத்தை உடனே பொதுசுகாதார அதிகாரிகளுக்கு அறிவிக்க வேண்டும். அத்தகைய விவரம் கிடைத்தவுடன், அத்தகைய நோய்களின் பரவலை கட்டுப்படுத்தவும் அதை இல்லாமல் செய்வதற்கு பொதுசுகாதார அதிகாரி உடனடியாக தலையிட வேண்டும்.

(5) துணைப்பிரிவு (4)-ல் குறிப்பிட்டுள்ள ஒரு சம்பவத்தை அறிவிக்க தவறிய ஏதேனும் நபர் அல்லது நிறுவனம் குற்றம் நிரூபிக்கப்படும் பட்சம் ஐயாயிரம் ரூபாய் வரையிலான அபராதத்துடன் தண்டிக்கப்பட வேண்டும்.

34. மாநில கண்காணிப்பு அதிகாரி மற்றும் மாவட்ட கண்காணிப்பு அதிகாரிகளும்.- (1) அரசு,சுகாதார துறையின், மருத்துவ அதிகாரிகளை மாநில கண்காணிப்பு அதிகாரியாகவும் மாவட்ட கண்காணிப்பு அதிகாரியுமாக பெயர் பரிந்துரை செய்ய வேண்டும்.

(2) மாவட்டத்திலுள்ள அனைத்து மருத்துவ அதிகாரிகளும் மாநில கண்காணிப்பு அதிகாரியின் பரிந்துரையின் படி தொற்று நோய்களையும் அறிவிக்க வேண்டிய தொற்று நோய்களையும் குறித்து உள்ளூர் பொது ககாதார அதிகாரிக்கு உடனடியாக அறிக்கை வழங்க வேண்டியதும், அவர் தொடர்ந்து மாவட்ட கண்காணிப்பு அதிகாரிக்கும் அங்கிருந்து மாநில கண்காணிப்பு அதிகாரிக்கும் அவ்வப்போது அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

(3) ஏதேனும் பகுதிகளில் ஏதேனும் தொற்றுநோய்களின் அல்லது அறிவிக்க வேண்டிய தொற்று நோய்களின் சம்பவம் திடீர் பரவுதல் என்ற அச்சுறுத்தலோ அல்லது அங்கு ஏதேனும் அசாதாரணமான இறப்பு விகிதமோ உள்ள பட்சம் உள்ளூர் பொது ககாதார அதிகாரிக்கு வளங்கள் திரட்டுவதில் வரம்புகள் இருந்தால் அதது காரியம் போல், மாவட்ட பொதுசுகாதார அதிகாரி அல்லது மாநில பொது சுகாதார அதிகாரி, அத்தகைய தொற்றுநோய்கள் மறறும அறிவிக்க கூடிய தொற்று நோய்களின் சிகிச்சைக்கு தேவைப்படும்படியான அவ்வாறான கூடுதல் ஊழியர்கள், மருந்துகள், கருவிகள், சிகிச்சைக்கு தேவைப்படலாமெனும்படியான பிற பொருட்களை அளிக்க வேண்டியதும் அதது காரியம் போல், அவை பரவுவதில் இருந்து தடை செய்ய வேண்டியதும் அவ்வகையிலான இறப்பு விகிதத்தின் காரணத்தை விசாரித்து அவற்றை தடுக்க வேண்டும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(4) ஏதேனும் மருத்துவ பயிற்சியாளர், துணைப்பிரிவு (2)-ல் விதிமுறைகளை பின்பற்றுவதில் தவறினால், அவர் இரண்டாயிரம் ரூபாய் வரையிலாகும் அபராதத்திற்கு பொறுப்புடையராவர்.

35. தனிமைப்படுத்தப்பட்ட மருத்துவமனைகள் மற்றும் வார்டுகளின் பராமரிப்பு.- (1) உள்ளூர் பொதுசுகாதார அதிகாரி, நோயின் தன்மை காரணமாக தேவைப்பட்டால்,-

(எ) தொற்றுநோய் மற்றும் அறிவிக்கக்கூடிய தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட நபர்களை ஏற்றுக்கொள்ளவும் சிகிச்சை அளிப்பதற்குமாக மருத்துவமனைகள், வார்டுகள் மற்றும் இடங்கள் வழங்கவோ வழங்க காரணமாகவோ செய்வதும்;

(பி) தொற்றுநோய் அல்லது அறிவிக்க வேண்டிய தொற்றுநோய் உள்ளவர்களை கொண்டு செல்வதற்கு தேவையான உதவியாளர்கள் மற்றும் உரிய வாகன வசதிகளை வழங்கவும் பராமரிக்கவும் செய்வதும்.

(சி) தொற்றுநோய் அல்லது அறிவிக்க வேண்டிய தொற்று நோய் பாதித்ததோ அல்லது பாதிக்கப்பட்டதாக சந்தேகப்படுவதோ ஆன நபர்களுக்கு இலவச நோயறிதல் மற்றும் மருத்துவ சிகிச்சைக்காக அதன் உள்ளூர் பகுதியில் அவ்வகையிலான ஏற்பாடுகளை செய்வது, மட்டுமல்லாமல்

(டி) உள்ளூர் பொது சுகாதார அதிகாரி தீர்மானித்துள்ள படி அத்தகைய கட்டணத்தை வழங்கி அல்லது இலவசமாகவோ, கிருமி நீக்கத்திற்கு உட்பட்ட வாகனங்கள், துணிகள், படுக்கைகள் அல்லது பிற பொருட்கள் போன்றவை கிருமி நீக்கம் செய்வதற்கான உரிய இடங்கள் கருவிகள் மற்றும் ஏற்பாடுகளை வழங்க வேண்டும்.

(2) ஒவ்வொரு சுகாதார பராமரிப்பு நிறுவனமும்,-

(எ) உள்ளூர் பகுதியில் தொற்றநோய் மற்றும் அறிவிக்க கூடிய தொற்று நோய் குறித்த விவரங்கள்,

(பி) தொற்று நோய் மற்றும் அறிவிக்கக்கூடிய தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட அல்லது பாதிக்கப்பட்டதாக சந்தேகப்படுபவர்களுக்கு நோயறிதல் மற்றும் மருத்துவ சிகிச்சைக்காக அதன் சார்பாக கிடைக்கும் சேவைகளின் விவரங்கள்,

(சி) அவ்வாறான நபர்களுக்கு தேவையான மருத்துவ சிகிச்சையும் அதன் விவரங்களும்;

ஆகியவை உள்ளூர் பொது சுகாதார அதிகாரி மற்றும் மாவட்ட பொதுசுகாதார அதிகாரிக்கு அறிக்கை செய்ய வேண்டும்.

36. மருத்துவ பயிற்சியாளர்கள் தொற்றுநோய் மற்றும் அறிவிக்கக்கூடிய தொற்று நோய்களின் விவரங்கள் அளிக்க வேண்டுமென்றும் குறிப்பிட்ட சிகிச்சை நிபந்தனைகளை பின்பற்ற வேண்டுமென்றும்.- (1) எந்த சிகிச்சை முறைகளிலும் ஒவ்வொரு மருத்துவ

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

பயிற்சியாளரும் தனது பயிற்சி நேரத்தில் ஏதேனும் தனிப்பட்ட அல்லது பொதுவானதோ ஆன வசிப்பிடத்தில் தொற்றுநோய் அல்லது அறிவிக்கக்கூடிய தொற்றுநோய் இருப்பதாக தெரிந்தால், ஏதேனும் பொதுவான அல்லது தனிப்பட்டதோ ஆன சுகாதார பராமரிப்பு நிறுவனத்தின் பொறுப்பில் உள்ள ஒவ்வொரு பணியாளரும் எந்தவொரு தொழில் நிறுவனத்தின் ஒவ்வொரு மேலாளரும் தற்காலிக வசிப்பிடத்தின் ஒவ்வொரு காப்பாளரும், ஒவ்வொரு குடும்ப தலைவனும், ஒவ்வொரு வீட்டின் குடியிருப்பாளரும், உரிமையாளரும் தனது நிர்வாகம் கட்டுப்பாட்டில் அல்லது குடியிருப்பில் உள்ள ஏதேனும் வளாகத்தில் ஏதேனும் நபருக்கு தொற்றுநோய் அல்லது அறிவிக்கக்கூடிய தொற்றுநோய் பாதிக்கப்பட்டிருப்பதாக அல்லது மரணமடைந்திருப்பதாக தெரியவோ நம்புவதற்கு காரணம் ஏற்படவோ செய்தால் அந்த விஷயம் முன்கூட்டியே அறிவிக்கப்படவில்லையெனில் மிகவும் குறைந்தபட்ச நேரத்திற்குள், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் 24 மணிநேரத்திற்குள், உள்ளூர் பொது சுகாதார அதிகாரிக்கும் மாவட்ட பாதுகாப்பு அதிகாரிக்கும் அல்லது இவைக்காக அரசு அறிக்கை செய்துள்ள பிற ஏதேனும் அதிகாரிக்கும் அதன் விவரத்தை அளிக்க வேண்டும்.

(2) மாநில பொது சுகாதார அதிகாரி ஒரு தொற்றுநோயை அறிவிக்கவும், மாதிரி சேகரிப்பு, நோயறிதல் மற்றும் -சிகிச்சை முறைகள் உட்பட அந்த நோயை கையாளுவதற்காக மட்டும் பின்பற்ற வேண்டிய, செயல்முறைகள் பரிந்துரைக்கப்பட்டுள்ள பட்சம், அத்தகைய நோயின் அறிகுறியுள்ள நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் அனைத்து மருத்துவ பயிற்சியாளர்களும் சுகாதார பராமரிப்பு நிறுவனங்களும் அத்தகைய செயல்முறைகளையும் நடவடிக்கை முறைகளையும் பின்பற்ற வேண்டும்.

(3) துணைப்பிரிவு (1)-ன் விதிமுறைகளை பின்பற்றுவதில் ஏதேனும் மருத்துவ பயிற்சியாளர் தவறினால், அவர் ஐநூறு ரூபாய் வரையாகின்ற அபராதத்திற்கு பொறுப்புடையவராவார்.

37. தொற்றுநோய் மற்றும் அறிக்கை செய்ய வேண்டிய தொற்றுநோயினுடையவும் பரவுதலை தடுக்கும் முறை குறித்து பரிந்துரை வழங்கப்பட வேண்டுமென்று.- ஒவ்வொரு மருத்துவரும் தொற்று நோயோ அல்லது அறிக்கை செய்ய வேண்டிய தொற்று நோயோ உள்ள ஒருவரை சிகிச்சை செய்யவோ சிகிச்சை செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் பரிசோதிக்கவோ செய்கின்ற எந்தவொருவரும், முதல் வருகையில்,-

(எ) நோய் குணமடையும் வரை சிகிச்சையின் அவசியத்தை குறித்து அத்தகைய நபருக்கு உணர்த்த வேண்டியதும்;

(பி) நோயின் பரவுதலை தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை குறித்து அவருக்கு பரிந்துரைக்க வேண்டியதும்;

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(சி) மாநில பொதுசுகாதார ஆணையம் கோரப்படும் நோய் குறித்துள்ள அவ்வாறான பிற விவரங்கள் அவருக்கு வழங்கிட வேண்டும்.

38. தொற்றுநோயிலிருந்தோ அறிவிக்கக்கூடிய தொற்றுநோயிலிருந்தோ ஒருவர் முழுமையாக குணமடைந்ததாக பதிவு செய்யப்பட்ட மருத்துவ பயிற்சியாளர்கள் சான்றளிக்க வேண்டுமென்று.- (1) நவீன மருத்துவத்தில் பயிற்சி புரியும் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு மருத்துவ பயிற்சியாளரும், இந்த பிரிவின் தேவைக்காக இந்த பிரிவின் கீழ் ஒரு சான்றிதழ் வேண்டும் என்று விரும்பும் ஒரு நபரின் தேவைக்கு அத்தகைய நபரை பரிசோதிக்க வேண்டியதும் அந்த நபர் தொற்றுநோயோ அறிவிக்கப்பட வேண்டிய தொற்று நோய்க்கு உள்ளாகவில்லை என்றோ அல்லது நோய் குணமடைந்துள்ளதாக கண்டறிந்தால், அவருக்கு அவசியமெனில் விசாரணை ஆதாரங்களுடன் நிச்சயிக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தில் அது தொடர்பான ஒரு சான்றிதழ் வழங்கப்பட வேண்டியதாகும்.

(2) துணைப்பிரிவு (1)-ல் நிர்ணயிக்கப்பட்டுள்ள படியான சான்றிதழ் அளிக்க ஏதேனும் பதிவு செய்யப்பட்ட மருத்துவ பயிற்சியாளர் மறுத்தால் அவர் ஐநூறு ரூபாய் வரையிலான அபராதத்திற்கு உள்ளாவர்.

39. சந்தேகத்திற்குரிய உறைவிடங்களில் இருந்துள்ள தண்ணீர், உணவு மற்றும் பானங்களுடைய பயன்பாட்டிற்கான தடை.- (1) சுகாதாரம் சுத்தத்தை பரிசோதித்த பிறகு, ஏதேனும் தண்ணீர், தொட்டி, கிணறு, கொள்கலன் அல்லது வேறு இடத்தினுடைய நீர் பயன்படுத்தினாலோ, பருக்கினாலோ அல்லது வேறு ஏதேனும் வீடு அல்லது வணிகமுறையிலான தேவைக்காகவோ, நோக்கத்திற்காகவோ பயன்படுத்தினால் ஏதேனும் தொற்றுநோய் அல்லது அறிவிக்கப்பட வேண்டிய தொற்று நோய் பரவுவதற்கு காரணமாக இருக்க சாத்தியமுள்ளதா உள்ளூர் பொதுசுகாதார அதிகாரிக்கு தெரிய வந்தால், மேற்கூறிய உறைவிடங்களில் நீர் பயன்படுத்துவரை தடை செய்யும் அவருக்கு தொடர்புடைய உள்ளாட்சி நிறுவனத்திடம் தெரிவிக்க வேண்டும்.

(2) சுகாதாரம் மற்றும் சுத்தம் பரிசோதித்த பிறகு பொது பயன்பாட்டிற்காக, வேறு ஏதேனும் வீடு அல்லது வணிகதரப்பிலான நோக்கத்திற்கான உணவு குளிர்பானமோ ஏதேனும் தொற்றுநோய் மற்றும் அறிக்கை செய்ய வேண்டிய தொற்றுநோய் பரவ காரணமாக சாத்தியமுள்ளது என்று உள்ளூர் பொதுசுகாதார அதிகாரிக்கு தெரிய வந்தால் அவருக்கு மேற்கூறிய உணவினுடையவோ குளிர்பானத்தினுடையவோ பொதுவான அல்லது ஏதெனும் குறிப்பிட்டு கூறியுள்ள வீடு மற்றும் வணிக தேவைக்காக பயன்படுத்துவதை தடை செய்ய தொடர்புடைய உள்ளாட்சி நிறுவனத்தை தெரிவிக்கலாம்.

(3) உள்ளூர் பொதுசுகாதாரர் அதிகாரியிடமிருந்து துணைப்பிரிவு (1) அல்லது

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

துணைப்பிரிவு (2)-ன் கீழிலான அறிக்கை கிடைத்தால் அது தொடர்பான அதிகாரி அத்தகைய நீர் உணவு அல்லது குளிர்பானம் ஆகியவற்றின் பயன்பாட்டை தடை செய்ய அவ்வகையான நீர் உணவு அல்லது குளிர்பானம் வைத்திருப்பவர்களுக்கு அறிவிப்பு வழங்க வேண்டும்.

(4) எந்தவொரு நபரும் அவ்வாறு வழங்கப்பட்டுள்ள அறிவிப்பின் விதிமுறைகளுக்கு எதிராக அது தொடர்பான ஏதேனும் குடிநீர், உணவு மற்றும் குளிர்பானம் பயன்படுத்தவோ வைத்திருக்கவோ கூடாது.

(5) இந்த பிரிவின் கீழ் தடை ஏற்படுத்தும் உள்ளூர் பொதுசுகாதார அதிகாரி அதனை இயன்ற அளவு விரைவான சூழலில், எந்த விஷயத்திலும் இருபத்தி நான்கு மணிநேரத்திற்குள், உள்ளாட்சி நிறுவனத்திடம் தெரிவிக்க வேண்டும்.

(6) துணைப்பிரிவு (3)-ஐ மீறும் எந்தவொரு நபரும் ஐநூறு ரூபாய் வரையிலான அபராதத்திற்கு மற்றும் தொடர்ச்சியான மீறலுக்கு நான் ஒன்றுக்கு நூறு ரூபாய் வரையிலான அபராதத்திற்கு உள்ளாவர்.

40. நோய் பாதித்துள்ளவரை மருத்துவமனைக்கு மாற்றுதல்.-(1) ஏதேனும் ஒரு நபர் தொற்றுநோய் அல்லது அறிக்கை செய்ய வேண்டிய தொற்று நோய் அனுபவித்து கொண்டிருக்கிறார் என்றும் அத்தகைய நபருக்கு போதுமான தங்குமிடம் அல்லது குடியிருப்பு இல்லை என்றும் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கும் ஒரு இடத்தில் தங்குவதாகவோ அல்லது நோய் பரவுவது நேரடியாக தடுக்கும் வகையில் சிகிச்சை மேற்பார்வை இல்லை என்ற ஒரு இடத்தில் அவர்கள் இருப்பது சுற்றுப்புறமுள்ள பொதுமக்களுக்கு ஆபத்து ஏற்படுத்தும் வகையிலோ மேலும் அவர் மருத்துவமனைக்கோ அத்தகைய நோய்வாய்ப்பட்டவர்களை ஏற்றுக்கொள்ளும் இடத்திற்கு மாற்றப்பட வேண்டும் என்று உள்ளூர் பொது சுகாதார அதிகாரி உணர்ந்தால் உள்ளூர் பொதுசுகாதார அதிகாரி அத்தகைய நபரை அத்தகைய மருத்துவமனை மற்றும் இடத்திற்கு மாற்றவோ மாற்றம் செய்யவோ வேண்டும்.

(2) வழக்கப்படி பொதுமக்களுக்கு இடையே வராத ஏதேனும் பெண்ணை அத்தகைய ஏதேனும் மருத்துவமனைக்கோ இடத்திற்கோ மாற்றினால் அவ்வாறு மாற்றப்படுவது அவரின் தனியுரிமையை பாதுகாக்கும் வகையில் நடத்த வேண்டியதும் மேலும் மேற்கூறிய வழக்கத்திற்கு ஏற்றாற்போன்ற தங்குமிடம் அத்தகைய மருத்துவமனையிலோ இடத்திலோ கொடுக்க வேண்டும்.

(3) எந்தவொரு நபரும் அத்தகைய மருத்துவமனை அல்லது இடத்தின் பொறுப்பிலுள்ள மருத்துவ அதிகாரியின் அனுமதி இல்லாமல் ஏதேனும் மருத்துவமனையில் இருந்தோ துணைப்பிரிவு (1)-ல் குறிப்பிட்டுள்ள வேறு

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

இடத்திலிருந்து விட்டு செல்லவோ அவரை கொண்டு போகவோ கூடாது.

(4) துணைப்பிரிவு (1)-ன் கீழ் மருத்துவமனைக்கோ இடத்திற்கோ அத்தகைய நபரை மாற்றப்படுவதை தடுக்கவோ அல்லது துணைப்பிரிவு (3)-க்கு எதிராக அத்தகைய மருத்துவமனையை விட்டு செல்லவோ யாரேனும் கொண்டு போகவோ செய்யும் எந்தவொரு நபரும் ஆயிரம் ரூபாய் அபராத தண்டனைக்கு உள்ளாவர்.

41. மக்கள் தொற்றுநோய்க்கு ஆளாவதை தடுக்க.- (1) இந்த அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொற்றுநோய் அல்லது அறிக்கை செய்ய வேண்டிய தொற்றுநோயால் பாதிக்கப்படுவதாக அறியப்பட்ட எந்தவொரு நபரும்,-

(எ) ஏதேனும் சந்தை, அரங்கு அல்லது பொழுதுபோக்கிற்கோ அல்லது கூட்டத்திற்கோ உள்ள பிற இடம், அல்லது

(பி) ஏதேனும் பள்ளி, கல்லூரி, நூலகம், விளையாட்டு மைதானம் அல்லது அதுபோன்ற பிற இடம், அல்லது

(சி) ஏதேனும் விடுதி, ஹோட்டல், சிற்றுண்டி சாலை, ரிசோர்ட், போர்டிங் ஹவுஸ், ஸ்டே ஹோம், சௌல்ட்ரி, ரெஸ்ட் ஹவுஸ், ஹவுஸ் போட் அல்லது கிளப் அல்லது வாட்டர் தீம் பார்க் அல்லது

(டி) ஏதேனும் தொழிற்சாலை, கடை, பணிமனை அல்லது பணியிடம், அல்லது

(இ) ஏதேனும் பொதுபோக்குவரத்து, அலலது

(எஃப்) ஏதேனும் பொது குளியல் அறை, அல்லது

(ஜி) வேறு ஏதேனும் பொது உல்லாச தங்குமிடம் ஆகிய இடங்களில் தான் மூலமாகவோ செயல் மூலமோ தொற்று நோய் பரவும ஆபத்தை தவிர்க்க வேண்டியதாகும்.

விளக்கம்.- (1) ஒரு நபருக்கு தொற்றுநோயோ அறிக்கை செய்யப்பட வேண்டிய தொற்றுநோய் இருப்பதாக ஏதேனும் ஒரு மருத்துவ பயிற்சியாளரோ உள்ளூர் பொது சுகாதார அதிகாரியோ அவருக்கு அறிவிப்பு விடுத்திருந்தால் அந்த நபர் அவ்வாறு துயருறுவது தெரிய வந்துள்ளதாக இந்த துணைப்பிரிவின் பொருளாக கருத வேண்டும்.

(2) தொற்றுநோயோ அறிக்கை செய்ய வேண்டிய தொற்றுநோயோ உள்ள நபர் அல்லது நபர்களை பராமரிக்கும் பொறுப்புள்ள எந்தவொரு நபரும் துணைப்பிரிவு (1)-ல் குறிப்பிடப்படும் இடங்களில் அத்தகைய நபர் மூலமோ செயல் காரணமோ பிறருக்கு ஆபத்து ஏற்படுத்த கூடாததாகும்.

(3) துணைப்பிரிவு (1) அல்லது துணைப்பிரிவு (2)-ல் உள்ள நிபந்தனைகளை மீறும் எந்தவொரு நபரும் ஐநூறு ரூபாய் வரையில அபராத்திற்கோ தொடர்ச்சியான மீறலுக்கு

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

நாள் ஒன்றுக்கு நூறு ரூபாய் வரையிலான அபராதத்திற்கும் உள்ளாவர்.

42. தொற்றுநோய் பாதித்துள்ளவர் குறிப்பிட்ட சில வணிகம் மற்றும் தொழிலில் ஈடுபடலாகாது.- (1) எந்தவொரு நபரும் அவர் தொற்று நோயோ அறிக்கை செய்ய வேண்டிய தொற்று நோயால் பாதிக்கப்பட்டிருக்கும் போது அவர் பரவுவதற்கு காரணமாக உள்ள சூழலிலும், -

(எ) மனித பயன்பாட்டிற்கான ஏதேனும் உணவு பொருட்களை தயாரிக்கவோ விற்பனைக்கு கொண்டு செல்லவோ வைக்கவோ விற்பனைக்காக தயாரிக்கவோ, வைக்கவோ கொண்டு செல்வதான வேலையில் பங்கேற்கவோ கூடாது;அல்லது

(பி) தொடர்புடைய உள்ளூர் சுகாதார அதிகாரியிடம் இருந்து சிறப்பு அனுமதி இல்லாமல் அதில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு ஏற்றவாறு அல்லாமல் பிற ஏதேனும் வேலையில் ஈடுபடலாகாது.

(2) துணைப்பிரிவு (1)-ன் நிபந்தனைகளை மீறும் எந்தவொரு நபரும் ஐநூறு ரூபாய் வரையிலான அபராதத்திற்கும் தொடர்ந்துள்ள மீறலுக்கு ஒவ்வொரு நாளுக்கும் நூறு ரூபாய் வரையிலான அபராதத்திற்கும் உள்ளாவர்.

43. தொற்றுநோய் பரவுவதை தடுப்பதற்காக வீடுகளை முற்றுகையிடல்.- (1) உள்ளூர் பொதுசுகாததார அதிகாரி, அவசர காலங்களில் மாவட்ட ஆட்சியாளரின் அனுமதியோடு கூடி எந்தவொரு கட்டத்திலோ இடத்திலோ நுழைந்து குடியிருப்பவர்களை காலிசெய்ய வைக்கவும் மேலும் தொற்றுநோய் பரவுவதை தடுப்பதற்கு தேவையான அத்தகைய நடவடிக்கைகள் எடுக்கலாம்.

ஆனால் கட்டடமோ இடமோ குடியிருக்கும் இடமாக இருந்தால் உள்ளே செல்வதற்கு குறைந்த பட்சம் இரண்டு மணிநேரத்திற்கு முன்னர் குடியிருப்பவர்களுக்கு எழுத்து மூலம் அறிக்கை அளிக்க வேண்டியதும் அல்லது அத்தகைய கட்டத்தில் அல்லது இடத்தில் அறிவிப்பை வெளிப்படையாக காணும் வகையில் ஒட்டப்பட வேண்டியதும், அறிவிப்பு கொடுத்த பனிரெண்டு மணிநேரத்திற்குள் இடத்தை காலிசெய்ய வேண்டுமென்று குடியிருப்பவர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட வேண்டும்.

(2) அத்தகைய கட்டத்தினுடையவோ இடத்தினுடையவோ உரிமையாளரோ அல்லது குத்தகைதாரரோ ஏதேனும் இழப்பிற்கோ செய்த செலவிற்கான இழப்பீட்டிற்கும் மேலும் இது கையில் இருந்த காலயளவிற்கு அல்லது துணைப்பிரிவு (1)-ல் கூறியுள்ள ஏதேனும் விஷயங்களுக்கு பயன்படுத்தியதற்கோ நியாயமான வாடகைக்கு தகுதியுடையதாகும். உள்ளாட்சி நிறுவனத்தின் விண்ணப்ப அடிப்படையிலான அத்தகைய இழப்பீடு மற்றும் வாடகை மாவட்ட ஆட்சியாளரால் தீர்மானிக்கப்பட வேண்டியதும் அது தொடர்புடைய உள்ளாட்சி நிறுவனம் வழங்க வேண்டியதாகும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(3) மேற்கூறிய அத்தகைய கட்டிடத்தின் அல்லது இடத்தின் குடியிருப்பு உரிமை முடிவுக்கு வரும்போது அல்லது தேவைகளின் பயன்பாடு முடிவுக்கு வரும்போதோ உள்ளூர் பொதுசுகாதார அதிகாரி அது முழுமையாக சிரமி நீக்கம் செய்து சுத்தம் செய்ய வேண்டும்.

44. தடுப்பு நடவடிக்கைகளை எடுக்க உள்ளூர் பொதுசுகாதார அதிகாரி நியமிக்கும் அதிகாரம்.- (1) உள்ளூர் பொது சுகாதார அதிகாரிக்கோ அல்லது இதற்காக அவர் அதிகாரப்படுத்தியுள்ள எந்தவொரு நபருக்கோ.-

(எ) எல்லா நியாயமான நேரங்களிலும் உதவியாளர்களுடனோ அல்லாமலோ தொற்றுநோய் அல்லது அறிக்கை செய்ய வேண்டிய தொற்று நோயோ பதிவு செய்ததோ சந்தேகத்திற்கு உரிதானதோ ஆன இடத்தில் தொழிற்சாலைகள், பணிமனை, பணி இடங்கள், அலுவலங்கள், வணிக இடங்கள் கல்வி நிறுவனங்கள் அது போன்ற இடங்களில் அறிவிப்பு மட்டமல்லாமல், குடியிருப்பு வீடுகள் உட்படயுள்ள பிற விஷயங்களில அவருக்கு நியாயமாக தோன்றும் படியான அறிவிப்பு அளித்த பிறகும் ஆய்வு நடத்தலாம், மேலும்

(பி) அத்தகைய இடத்திற்கு வெளியே அத்தகைய நோய் பரவுவதை தடுக்க அவருக்கு தேவை எனக்கருதும் படியான அத்தகைய நடவடிக்கை எடுக்கலாம்.

45. உணவு கையாளும் இடங்கள் மற்றும் தங்கும் விடுதிகளை மூடுதல்.- (1) ஒரு தங்கும் விடுதியிலோ உணவு பொருட்கள் விற்கவோ தயாரிக்கவோ வியாபாரத்திற்காகவோ விநியோகிக்கவோ உள்ள இடத்திலோ தொற்று நோய் அல்லது அறிக்கை செய்ய வேண்டிய தொற்று நோய் இருப்பதாலோ சமீபத்தில் இருந்திருந்தாலோ அத்தகைய தங்கும் விடுதி அல்லது இடம் பொதுசுகாதார நலனைக் கருதி மூடப்பட வேண்டும் என்று உள்ளூர் பொதுசுகாதார அதிகாரி உணரும் பொருட்டு தங்கும் இடமோ உணவு பொருட்களை விற்கவோ தயாரிக்கவோ விற்பனைக்காகவோ விநியோகத்திற்காக வைத்திருக்கும் இடம் உள்ளூர் பொது சுகாதார அதிகாரியின் ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடியான அத்தகைய காலயளவு முடிவடையும் வரையிலோ அல்லது நோயிலிருந்து குணமடைந்ததாக ஒரு மருத்துவ பயிற்சியாளர் சான்றளிக்கும் வரை மூடப்படுவதற்கு உத்தரவு மூலம் பரிந்துரைக்கப்படலாம்.

(2) தொற்றுநோய் அல்லது அறிக்கை செய்ய வேண்டிய தொற்றுநோய் பரவுவதற்கான காரணம் ஏதேனும் குடிநீர் உறைவிடம் என உள்ளூர் பொதுசுகாதார அதிகாரி உணரும் பட்சம் உள்ளாட்சி நிறுவனத்திற்கு அறிக்கை விடுத்து அதை மூடவும் அந்த உறைவிடத்தில் இருந்து நீர் பயன்படுத்துவதில் இருந்தோ விநியோகம் செய்வதில் இருந்தோ மக்களை தடுக்கலாம்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(3) துணைப்பிரிவு (1)-ன் கீழிலான பரிந்துரையை பின்பற்றாத எந்தவொரு நபரும் இருநூற்று ஐம்பது ரூபாய் வரையிலான அபராதம் மற்றும் தொடர்ந்துள்ள மீறலுக்கு நாள் ஒன்றுக்கு நூறு ரூபாய் வரையிலான அபராதத்திற்கு உள்ளாவர்.

46. தொற்றுநோய் பாதித்தவர் பயன்படுத்திய ஆடைகள் சலவைக்கு அனுப்பலாகாது.- (1) எந்தவொரு நபரும் ஏதேனும் தொற்றுநோய் அல்லது அறிக்கை செய்ய வேண்டிய தொற்றுநோய் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளதாக அவருக்கு தெரிந்த ஏதேனும் ஆடையோ மெத்தையோ மற்ற பொருட்களோ உள்ளூர் பொதுசுகாதார அதிகாரி அல்லது பதிவு செய்யப்பட்ட ஒரு மருத்துவ பயிற்சியாளரின் தீர்வின் படி கிருமி நீக்கம் செய்யாமலும், அத்தகைய ஒரு நபரின் பரிந்துரையின் படியல்லாமல் தொற்றுநோயால் பாதிக்கப்பட்டவர் என்ற அறிவிப்போடு கூடி கிருமி நீக்கம் செய்வதற்கு போதுமான முன்னெச்சரிக்கையோடு கூடியும் அல்லாமலும் ஏதேனும் சலவையிடத்திலோ பொது சலவையிடத்திலோ பொது நீர் தேக்கத்திலோ, நீர் தொட்டி கிணற்றில் அல்லது சலவைக்காக அனுப்பவோ எடுத்துச் செல்லவோ கத்தம் செய்வதற்காக ஏதேனும் இடத்திற்கு அனுப்பவோ எடுத்துச் செல்லவோ கூடாததாகும்.

(2) துணைப்பிரிவு (1)-ன் விதிமுறைகளை மீறும் எந்தவொரு நபரும் இருநூற்று ஐம்பது ரூபாய் வரையிலான அபராதத்திற்கு தண்டிக்கப்பட வேண்டும்.

47. மக்கள் கூட்டம் கூடுவதை கட்டுப்படுத்துவதற்கான மாவட்ட ஆட்சியரின் அதிகாரம்.- (1) ஏதேனும் உள்ளூர் பகுதியில் ஏதெனும் தொற்று நோயோ அறிக்கை செய்ய வேண்டிய தொற்று நோயோ தற்போது உள்ள சூழலில், மாவட்ட ஆட்சியரின் கருத்துப்படி அத்தகைய பகுதிகளில் அவ்வாறான தேவைக்கான கூட்டம் தொற்றுநோய் அல்லது அறிக்கை செய்ய வேண்டிய தொற்றுநோய் பரவ காரணமாகும் என்றோ நோய் மேலும் தீவிரமடையும் என்ற கருத்து உள்ள பட்சத்தில் உள்ளூர் பொது சுகாதார ஆணையத்தின் பரிந்துரையின் படியோ பிற வகையிலோ அதன் தேவைக்காக பொதுவானதோ தனியார்மயமானதோ ஆன எந்தவொரு இடத்திலும், தமது உத்தரவில் குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமான மக்களின் கூட்டம், ஏதேனும் தனிப்பட்ட காரியத்தில் சிறப்பு உத்தரவு மூலமோ அல்லது பொது உத்தரவு மூலமோ தடை செய்ய மாவட்ட ஆட்சியருக்கு அதிகாரம் உள்ளதாகும்.

(2)துணைப்பிரிவு (1)-ன் கீழ் ஏற்படுத்தப்பட்ட உத்தரவை மீறும் எந்தவொரு நபருக்கும் இருநூற்று ஐம்பது ரூபாய் வரையிலான அபராதத்திற்கு தண்டிக்கப்பட வேண்டும்.

48. தொற்று நோய்கள் அல்லது அறிக்கை செய்ய வேண்டிய தொற்றுநோய்களை கட்டுப்படுத்துவதற்காக அதிகாரிகளுக்கு சிறப்பு அதிகாரம் வழங்குவதற்கான அரசு

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

அதிகாரம்.- சூழ்நிலை அவ்வாறு தேவைபடும் பட்சத்தில், தொற்றுநோய்களோ அறிக்கை செய்ய வேண்டிய தொற்று நோய்களோ அல்லது இரண்டையும் சேர்த்து கட்டுப்படுத்துவதற்காக தொடர்புடைய அதிகாரிகளுக்கு சிறப்பு அதிகாரங்கள் வழங்க அரசுக்கு அதிகாரம் உள்ளது.

49. விலங்குகளிடமிருந்து பரவும் தொற்றுநோய் அல்லது அறிக்கை செய்ய வேண்டிய தொற்று நோய்களின் தடுப்பு.- ஏதேனும் பகுதிகளில் விலங்குகளில் இருந்து மனிதர்களுக்கு பரவும் தொற்றுநோய் அல்லது அறிக்கை செய்ய வேண்டிய தொற்று நோய் அல்லது தொற்று நோய் திடீரென உருவானாலோ அல்லது மாநில பொது சுகாதார அதிகாரி அல்லது மாவட்ட பொது சுகாதார அதிகாரியின் கருத்துப்படி கால்நடைகளுக்கு இடையே அல்லது வேறு விலங்குகளுக்கிடையே அத்தகைய நோய் திடீரென உருவாக வாய்ப்பு இருந்தாலோ, நோயை கட்டுப்படுத்தவோ குறைக்கவோ அரசின் அதது காரியம் போல், கால்நடை பராமரிப்பு துறை மற்றும் வனம், வனவிலங்கு துறையிலுள்ள அதிகாரிகளோடு கூடிய கலந்தாலோசனை மற்றும் ஒருங்கிணைப்புக்கு பிறகு அத்தகைய திடீர் பரவலோ திடீரென பரவும் அச்சுறுத்தலோ தடுப்பதற்கோ அல்லது நோயை கட்டுப்படுத்தவோ குறைக்கவோ தேவை என்று அவர் கருதும்படியான அத்தகைய நடவடிக்கை, தொடர் நடவடிக்கைகளுக்காக உள்ளாட்சி நிறுவனத்திற்கு அறிக்கை உட்பட வழங்க வேண்டியதும் அத்தகைய நடவடிக்கை எடுக்க உள்ளூர் பொது சுகாதார அதிகாரியின் கடமையாகும்.

50. தண்டெலி இனம், நாய்கள் மற்றும் பிற விலங்குகளின் அழிவு - (1) ஒவ்வொரு கட்டிடத்தில் குடியிருப்பவர் அல்லது குடியிருக்காத கட்டிடம், அதன் உரிமையாளர் சுண்டெலியின் இனம் நாய்கள் மற்றும் பிற விலங்குகளை ஈர்க்கும் வகையிலான கழிவுகளை தள்ளவோ புதர் போன்றவற்றை வளர அனுமதிக்கக்கூடாது ப்ளேக் மற்றும் எலிக்காய்ச்சலுக்கு காரணமாக உள்ள சுண்டெலி இனம் மட்டுமல்லாமல் வெறிநாய் கடி உள்ளதோ வெறிநாய் கடி உள்ளதாக சந்தேகப்படுவதோ ஆன நாய்கள் மற்றும் நோய்களுக்கு காரணமான பிற விலங்குகளை அழிப்பதற்கு நியாயமானதும் நடைமுறையில் உள்ளதுமான அத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஆனால் விலங்குகளின் அழிவு 1960-ன் விலங்குகள் மீதான கொடுமையை தடுத்தல் சட்டம் (1960-ன் 59-வது எண்) மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் ஏற்பாடுகளை மீறக்கூடாததாகும்.

(2) ஏதேனும் வளாகத்தில் குடியிருப்பவரோ உரிமையாளரோ துணைப்பிரிவு (1)-ன் படி கொடுக்கப்பட்டுள்ள கடமை நிறைவேற்றப்படவில்லை என உள்ளூர் பொது சுகாதார அதிகாரி கருதினால் அவருக்கு,-

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(எ) அறிக்கையில் குறிப்பிட்டுள்ள அத்தகைய நேரத்திற்குள் நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொண்டு அததகைய குடியிருப்பவருக்கோ அல்லது உரிமையாளருக்கோ அறிக்கை அளிக்க வேண்டியதும்; அல்லது

(பி) தேவைப்படும் அத்தகைய நேரத்திற்குள்ளாக தாமாக அத்தகைய நடவடிக்கைகள் எடுக்கலாம்.

(3) துணைப்பிரிவு (2)-ன் உட்பிரிவு (பி)-ன் கீழ் உள்ளூர் பொதுசுகாதார ஆணையம் நடவடிக்கை எடுப்பதானால் உள்ளாட்சி நிறுவனம் அதன் தேவைக்கு தேவையான நிதி வழங்க வேண்டும்.

(4) குடியிருப்பவரோ உரிமையாளருக்கோ உடனடி அறிவிப்பு அளித்த பிறகு துணைப்பிரிவு (1)-ன் படி அழிக்க வேண்டி சுன்டெலி இனம், நாய்கள், பிற விலங்குகள் போன்றவற்றை அழிப்பதற்கு தேவையான அத்தகைய நடவடிக்கைகள் உள்ளூர் பொது சுகாதார அதிகாரி மேற்கொள்ளலாம்.

(5) துணைப்பிரிவு (4)-ன் கீழ் ஏற்பட்டுள்ள எந்தவொரு செலவு மற்றும் தொடர்புடைய உள்ளாட்சி நிறுவனம் குடியிருப்பவர் அல்லது உரிமையாளரிடமிருந்து உள்ளாட்சி நிறுவனத்திற்கு அவரிடமிருந்துள்ள வரி நிலுவையாக வசூலிக்கலாம்.

(6) ஒவ்வொரு உள்ளாட்சி நிறுவனமும், பொது இடங்களில் தெரு நாய்கள் மற்றும் சுன்டெலி இனத்தில் உள்ளதும் பிற விலங்குகளும் சுதந்திரமாக அலையவில்லை என்பதை உறுதி செய்வதற்காக அத்தகைய நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதும் மேலும் சுன்டெலி இனம் சார்ந்தவற்றை அழிக்க தேவையானதும் சமுதாயத்தில் விலங்குகளால் ஏற்படும் நோய்கள் பரவுவதற்கு காரணமாக உள்ள தெரு நாய்கள் மற்றும் பிற விலங்ககளை கட்டுப்படுத்தவும் நியாயமானதும் நடைமுறைக்கு ஏற்றதுமான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியதுமாகும்.

ஆனால் தெரு நாய்கள் மற்றும் பிற விலங்குகளை கட்டுப்படுத்தவும் உள்ளாட்சி நிறுவனம் எடுக்கும் எந்தவொரு நடவடிக்கையும் 1960-ன் விலங்குகள் மீதான கொடுமையை தடுத்தல் சட்டம் (1960-ன் 59-வது எண்) மற்றும் அதன் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகள் மற்றும் ஏற்பாடுகளுக்கு ஏற்றாற் போன்றிருக்க வேண்டும்.

(7) துணைப்பிரிவு (1)-ன் விதிமுறைகளை மீறும் எந்தவொரு நபரும் ஐநூறு ரூபாய் வரையிலான அபராதத்திற்கும் தொடர்ந்துள்ள மீறலுக்கு நாள் ஒன்றுக்கு நூறு ரூபாய் வரையிலான அபராதத்திற்கும் உள்ளாவர்.

51. நோய் பாதித்துள்ளவர்களை தனிமைப்படுத்தல்.- உள்ளூர் பொது சுகாதார அதிகாரி தொற்று நோய் அல்லது அறிக்கை செய்ய வேண்டிய தொற்று நோய் பாதித்துள்ள நபர்களை தனிமைப்படுத்தவோ இடமாற்றம் செய்யவோ அதிகாரம் உள்ளதாகும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

52. இறந்த உடல்களைக் கையாளும் போதான முன்னெச்சரிக்கைகள்.- உள்ளூர் பொது சுகாதார அதிகாரி மாநில பொதுசுகாதார அதிகாரி பரிந்துரைத்துள்ள நிபந்தனைகளை பின்பற்றியுள்ளது என்பதை உறுதி செய்து தொற்று நோய் காரணமாகவோ அறிக்கை செய்ய வேண்டிய தொற்று நோய் காரணமாகவோ இறந்த நபர்களின் உடல்களை கையான அதிகாரம் உள்ளதுமாகும்.

53. நோய்களை தடுக்கவும் சிகிச்சை மற்றும் கட்டுப்படுத்துவதற்குமான வழிமுறைகள்.- (1) அரசு மற்றும் மாநில பொது சுகாதார அதிகாரியும் அங்கீகரித்துள்ள சிகிச்சை அறிவுறுத்தல்களுக்கு உட்பட்டு தொற்றுநோய் மற்றும் அறிக்கை செய்ய வேண்டிய தொற்றுநோய் உட்படயுள்ள ஏதேனும் நோய்கள் பாதித்துள்ள நபர்களின் சிகிச்சை மற்றும் நோயறிதல் மேலும் அத்தகைய நோய்கள் பரவுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகள், தடுப்பூசி, பிற நடவடிக்கைகள் ஆகியவற்றிற்கான வழிமுறைகளை வெளியிடுவதற்கும் அவை மாவட்ட பொது சுகாதார அதிகாரி மற்றும் உள்ளூர் பொது சுகாதார அதிகாரி வாயிலாக நடைமுறைக்கு கொண்டு வந்து செயல்படுத்தவும் அதிகாரமுள்ளதுமாகும்.

(2) தொற்று நோய் அல்லது அறிக்கை செய்ய வேண்டிய தொற்று நோயோ உட்படயுள்ள எந்த நோய்குமான சிகிச்சைக்கு துணைப்பிரிவு (1)-ன் கீழ் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் கூறப்பட்டுள்ள சிகிச்சை முறைகளை கடைபிடிக்க ஒவ்வொரு மருத்துவ பயிற்சியாளரும் பொது சுகாதார பராமரிப்பு நிறுவனமும் பொறுப்புடையதாகும்.

(3) மாவட்ட பொதுசுகாதார அதிகாரியின் வேண்டுகோள் படி, உள்ளூர் பொது சுகாதார முக்கியத்துவம் உள்ள ஏதேனும் நோய் சம்மந்தமான விவரங்கள் மாவட்ட பொது சுகாதார அதிகாரி அல்லது உள்ளூர் பொது சுகாதார அதிகாரிக்கோ வழங்க ஒவ்வொரு மருத்துவ பயிற்சியாளர் மற்றும் பொது தனியார் சுகாதார பராமரிப்பு நிறுவனத்திற்கும் பொறுப்புடையதாகும்.

(4) துணைப்பிரிவு (2)-ன் விதிமுறைகளை மீறும் எந்தவொரு மருத்துவ பயிற்சியாளரும் பொதுவானதோ தனியார்மயமானதோ ஆன சுகாதார பராமரிப்பு நிறுவனமும் ஐநூறு ரூபாய்க்கு மிகாத அபராதத்திற்கு உள்ளாவதும் துணைப்பிரிவு (3)-ன் விதிமுறைகளின் மீறலுக்கு இருநூறு ரூபாய்க்கு மிகாத அபராதத்திற்கும் மேலும் தொடர்ந்துள்ள மீறலுக்கு நாள் ஒன்றுக்கு இருநூறு ரூபாய் வரையிலாக அபராதத்திற்கும் பொறுப்பாவர்.

54. மாணவர்கள் விடுதி, தொழிலாளர் முகாம்கள் ஆகியவற்றை பரிசோதிக்க உள்ளூர் பொது சுகாதார அதிகாரியின் அதிகாரம்.- (1) சரியான சுகாதாரம், கழிவுகளை

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

பதனிடுதல், குடிநீர் விநியோகம் மேலும் பிற வசதிகள் ஏற்படுத்தாத எந்தவொரு நபரும் மாணவர்கள் விடுதி, தொழிலாளர் முகாம் அல்லது நிறைய பேர் தங்கும் பிற ஏதேனும் இடமோ உரிமை கொள்ளவோ நடத்தவோ கூடாததாகும்.

(2) உள்ளூர் பொது சுகாதார அதிகாரி கல்வி நிலையங்களில் உள்ள மாணவர்கள் விடுதி, தொழிலாளர் முகாம் அல்லது அதிக ஆட்கள் குடியிருக்கும் பிற கட்டிடங்கள் அல்லது இடங்களை சோதனையிடவும் அந்த கட்டடங்கள் அல்லது இடங்களில் நெரிச்சல் இல்லை என்றும் மேலும் உள்ளூர் பொது சுகாதார அதிகாரி உணரும் விதமாக அத்தைய கட்டிடங்கள் மற்றும் இடங்களில் சரியான சுகாதாரமும், கழிவுகளை பதனிடவும், குடிநீர் விநியோகத்திற்கும் மேலும் தீ பாதிப்பு மற்றும் பிற விபத்துகளின் போது தப்பிப்பதற்கு தேவையான மீட்பு வழிகள் உட்படயுள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என்பதை உறுதிபடுத்த வேண்டியதாகும்.

(3) துணைப்பிரிவு (1)-ல விதிமுறைகளை மீறும் எந்தவொரு நபரும் இரண்டாயிரம் ரூபாய்க்கு மிகாத அபராதத்திற்கும் தொடர்ந்துள்ள மீறலுக்கு நாள் ஒன்றுக்கு எந்தவொரு நபரும் இருநூறு ரூபாய் வரையிலான அபராதத்திற்கு தண்டிக்கப்படுவர்.

55. <u>உணவு மூலம் பரவும் நோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு.-</u> (1) எந்தவொரு நபரும், தொற்றுநோய் அல்லது அறிக்கை செய்ய வேண்டிய தொற்று நோய் பரவுவதற்கு காரணமாக உள்ளதோ ஆன சந்தேகத்திற்கு உரியதோ ஆன உணவு தமது சுய தேவைக்கோ அல்லது பிறரின் தேவைக்காக தயாரிக்கவோ கையானவோ கூடாததாகும்.

(2) உள்ளூர் பொது சுகாதார அதிகாரி உணவு மற்றும் அது தொடர்பான காரியங்களில் சுத்தம் மற்றும் பொது சுத்தத்தை பரிசோதிக்க அதிகாரம் உள்ளதும் மேலும் ஏதேனும் தொற்று நோய் அல்லது அறிக்கை செய்ய வேண்டிய தொற்று நோய்க்கான காரணமாக சந்தேகிக்கப்படும் எந்தவொரு உணவு பொருள் அல்லது உணவு நஞ்சாதலுக்கு காரணமாக வாய்ப்புகள் உணவு பொருளின் கலப்படம் உள்ளூர் உணவு பாதுகாப்பு அதிகாரியை தெரிவிக்க வேண்டும்.

(3) உணவு தொடர்பான ஒரு தொற்றுநோய் அல்லது அறிக்கை செய்ய வேண்டிய தொற்றுநோய் திடீரென உருவாகுவதில், அது அதிக அளவில் பரவுவதை தடுக்கவும் கட்டுப்படுத்தவும் நிலைபடுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்க உள்ளூர் பொது சுகாதார அதிகாரிக்கு அதிகாரமுள்ளதாகும்.

(4) துணைப்பிரிவு (1)-ன் கீழ், உணவுப்பொருட்களை விற்கவோ, தயாரிக்கவோ, விற்பனைக்காக வைத்திருப்பதோ விநியோகம் செய்யவோ உள்ள இடங்களின் உரிமையாளர்களிடமிருந்து, அங்கு குடியிருப்பவர்கள் இல்லையெனில் அத்தகைய இடத்தின் உரிமையாளரிடமிருந்தும், உள்ளாட்சி நிறுவனத்திற்கு அறிக்கை

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

அளித்துக்கொண்டு உள்ளூர் பொது சுகாதார அதிகாரி அத்தகைய இடங்களை சுத்தமாக்கவும் கிருமி நீக்கம் செய்யவும் தேவையான நியாயமான, நடைமுறையில் உள்ள நடவடிக்கைகள் எடுக்கவும் அதற்காக செலவு செய்த எந்த செலவும் அது காரியத்திற்கேற்றாற்போல், குடியிருப்பவரிடம் இருந்தோ உரிமையாளரிடம் இருந்தோ, உள்ளாட்சி நிறுவனத்திற்கு அவருக்கான வரி நிலுவை என்பது போன்று தொடர்புடைய உள்ளாட்சி நிறுவனம் வசூலிக்கலாம்.

56 மருத்துவ கழிவு மேலாண்மைகான வழிமுறைகள்.- (1) அரசு மற்றும் மாநில பொது சுகாதார அதிகாரிக்கு மருத்துவ கழிவு மேலாண்மைக்காகவும் அத்தகைய கழிவுகளில் இருந்து ஏதேனும் தொற்று நோய் பரவுவது தடுக்கவும் அத்தகைய கழிவை சரியான முறையில் அகற்றுவதற்காக அவர்களுக்கு தேவைப்படும், வழிமுறைகளை வெளியிட அதிகாரமுள்ளதும் மேலும் அவை மாவட்ட பொது சுகாதார அதிகாரி வாயிலாக செயல்படுத்தி நடைமுறைப்படுத்தவும் நிறைவேற்றவும் அதிகாரமுள்ளதுமாகும்.

(2) உயிரியல் மருத்துவ கழிவை கையாளுவதில் துணைப்பிரிவு (1)-ன் கீழ வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் குறிப்பிட்டுள்ள பயிற்சி முறைகளை பின்பற்ற ஒவ்வொரு மருத்துவ பயிற்சியாளரும் பொது மற்றும் தனியார் சுகாதார பாதுகாப்பு நிறுவனத்தினுடையவும் பொறுப்பாகும்.

ஆனால் இந்த பிரிவில் உள்ள எதுவும் 1986-ன் சுற்றுப்புற பாதுகாப்பு சட்டம் (1986-ன் 24-வது சட்டம்)-ன் பிரிவுகள் 6 மற்றும் 25-ன் விதிமுறைகளை மீறலாகாது.

(3) துணைப்பிரிவு (1)-ன் கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றாத எந்த மருத்துவ பயிற்சியாளரும் பொதுவானதோ தனியாருடையதோ ஆன மருத்துவ பராமரிப்பு நிறுவனமும் ஐயாயிரம் ரூபாய்க்கும் மிகாத அபராத்திற்கும் தொடர்ச்சியான மீறல்களுக்கு நாள் ஒன்றுக்கு ஐந்நூறு ரூபாய் வரையிலான அபராதத்திற்கும் தண்டிக்கப்பட வேண்டும்.

57 இரத்த வங்கிகளும் தொற்று நோய்களின் அறிவிக்கப்பட வேண்டிய தொற்று நோய்களின் கட்டுப்பாடும்.-(1) அரசோ மாநில பொதுசுகாதார அதிகாரிகளோ இரத்த வங்கிகளின் பராமரிப்பிற்காக அவர்களுக்கு உகந்ததென தோன்றும் வழிமுறைகளை வெளியிடுவதற்கும் மேலும் இரத்தத்தின் வாயிலாக தொற்று ஏற்படுகின்ற ஏதேனும் நோயின் பரவுதலை தடுக்கவும் நடவடிக்கை எடுப்பதற்கும், அவற்றை மாவட்ட பொதுசுகாதார ஆணையத்தின் வாயிலாகவோ உள்ளூர் பொதுசுகாதார ஆணையத்தின் வாயிலாகவோ நடைமுறைப்படுத்துவதற்கும் செய்வதற்கும் அதிகாரம் இருப்பதுமாகும்.

(2) இரத்த வங்கிகளின் செயல்பாட்டிற்கும் இரத்த தொற்றுக்காக துணைப்பிரிவு

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(1)-ன் கீழ் குறிப்பிட்டுள்ள நடைமுறை முறைகளை பின்பற்றுவதற்கு ஒவ்வொரு மருத்துவ பயிற்சியாளரும் இரத்த வங்கிகளும் வேறொரு நபருக்கு இரத்தம் தானம் செய்யும் ஒவ்வொரு பொதுவானதோ, தனியார்மயமானதோ ஆன சுகாதார பராமரிப்பு நிறுவனமும் பொறுப்புடையதாகும்.

(3) துணைப்பிரிவு (2)-ன் கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றாத ஒவ்வொரு மருத்துவ பயிற்சியாளரும் பொதுவோ தனியார்மயமானதோ ஆன சுகாதார பராமரிப்பு நிறுவனமும் பத்தாயிரம் ரூபாய்க்கும் மிகாத அபராதமும் தொடர்ச்சியான மீறல்களுக்கு நாள் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் வரையிலான அபராத்திற்கு பொறுப்பாகும்.

அத்தியாயம் 8
நோய்கிருமிக் கட்டுப்பாடு

58 பூச்சிகளையும் பிற நோய்கிருமிகளையும் கட்டுப்படுத்துவதற்கு உள்ளூர் பொது சாதார அதிகாரியின் கடமைகள்.-(1) இடத்தின் சுற்றுப்புறத்தின் ஒவ்வொரு உரிமையாளரோ குடியிருப்பவரோ பூச்சிகளின் இனப்பெருக்கத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதும், அறிவுரை வழங்கும்போது, வட்டார பொதுசுகாதார அதிகாரி குறிப்பிடும்படியான அத்தகைய நடவடிக்கைகளை செய்ய வேண்டியதுமாகும்.

விளக்கம்.- இந்தப் பிரிவின் தேவைக்காக "பூச்சிகள்" என்ற சொல்லில் கொசுக்கள், ஈக்கள், பேன், அரிசிப்பூச்சி, மணல் ஈ, தெள்ளு பூச்சிகள் ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும் பிற ஏதேனும் பூச்சிகள் ஆகியவை உட்படுவதாகும்.

(2) தன்னாட்சி நிறுவனங்கள் பூச்சிகளின் இனப்பெருக்கத்திற்கான காரணமோ காரணங்களையோ தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

(3) ஒவ்வொரு உள்ளூர் பொதுசுகாதார அதிகாரிகளும் பூச்சிகள் இனப்பெருக்கம் செய்வதோ செய்ய வாய்ப்புள்ள ஆன இடங்களை தூய்மைப்படுத்த வேண்டியதும் பூச்சிகளை கட்டுப்படுத்துவதற்கும் அழிப்பதற்குமாக துணைப்பிரிவுகள் (1)(2)-ன் படியான நடவடிக்கைகள் சேர்க்கப்பட வேண்டும்.

59. நீர்தேக்கங்களில் கொசுக்களின் இனப்பெருக்கம் கடுத்தல்.- (1) எந்தவொரு நபரோ தன்னாட்சி நிறுவனமோ,-

(எ) உள்ளூர் கொசுக்கள் இனப்பெருக்கம் செய்வதோ செய்ய வாய்ப்புள்ளதோ ஆன தேங்கி நிற்கும் நீரிலோ அல்லது ஓடு நீரின் சேமிப்பிற்கு காரணமாகவோ நிலை நிற்பதோ,

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

அல்லது

(பி) உள்ளூருக்குள் ஏதேனும் நீர் கொசுக்கள் இனப்பெருக்கம் செய்வதோ இனப்பெருக்கும் செய்ய வாய்ப்புள்ளதோ ஆன சேகரிப்பாக உருவாக காரணமாக இருப்பதோ அனுமதி வழங்கவோ அனுமதிக்கவோ செய்தல் கூடாததாகும்.

(2) தேங்கி நிற்பதோ ஓடுகின்றதோ ஆன நீரில் கொசுக்களின் இளம் உயிரிகளின் இயற்கையான இருப்பு அத்தகைய நீரில் கொசுக்களின் இனப்பெருக்கம் செய்யும் என்பதன் சான்றாகும்.

(3) ஏதேனும் நபரோ தன்னாட்சி நிறுவனமோ துணைப்பிரிவு (1)-ன் விதிமுறைகளை மீறினால் இரண்டாயிரம் ரூபாய்க்கும் அதிகரிக்காத அபராதமும் தொடர்ச்சியான மீறல்களுக்கு நாள் ஒன்றுக்கு ஐம்பது ரூபாய் வரையிலான அபராதத்திற்கும் பொறுப்புடையவராவர்.

(60) கொசுக்களின் இனப்பெருக்கம் செய்யும் இடங்களின் பராமரிப்பு.- (1) பொது சுகாதார அதிகாரி, கொசு இனப்பெருக்கம் செய்யவோ செய்ய வாய்ப்புள்ளதோ ஆன, தேங்கி நிற்பதோ ஓடுகின்றதோ ஆன நீர் தேக்கம் உள்ள ஏதேனும் இடத்தின் உரிமையானருடனோ குடியிருப்புவருடனோ, இருபத்து நான்கு மணி நேரத்திற்கும் அதிகரிக்காத்ததும் அறிவிப்பில் "குறிப்பிட்டுள்ளதுமான அத்தகைய நேரத்திற்குள், சூழலுக்கு ஏற்றது என உள்ளூர் பொது சுகாதார அதிகாரி கருதுகின்ற இரசாயன அல்லது உயிரியல் முறையிலான ஏற்பாடுகள் அல்லது மாநில பொது சுகாதார அதிகாரி அங்கீகரித்த நடவடிக்கைகளோ முறையோ பயன்படுத்தி கொசுக்களின் இனப்பெருக்க இடங்களை பராமரித்து அந்த இடத்தில் கொசுக்கள் அல்லது கொசுக்களின் இளம் உயிரிகளிடமிருந்து விடுபடுவதற்குக் கோரலாம்.

(2) துணைப்பிரிவு (1)-ன் படியான ஒரு அறிவிப்பு குடியிருப்பவரிடம் வழங்கப்பட்டிருந்தால், எதிராக வெளிப்படவோ உணர்த்துவதோ ஆன ஒரு ஒப்பந்தம் இல்லாத நிலையில், அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அல்லது பராமரிப்பை நாடுவதற்கு அவருக்கு ஏற்படுகின்ற நியாயமான செலவை உரிமையாளர்களிடமிருந்து பெறுவதற்கும் அல்லது அத்தகைய செலவிற்கான தொகையை உரிமையாளர் அவரிடமிருந்து அப்போதோ அதற்குப் பிறகோ கிடைக்க வேண்டிய வாடகையிலிருந்து குறைப்பதற்கோ தகுதி உடையதாகும்.

61. தவறும் பட்சத்தில் உள்ளூர் பொது சுகாதார அதிகாரியின் அதிகாரங்கள்.- (1) பிரிவு 60-ன் கீழ் அறிவிப்பு வழங்கிய நபர் அதில் குறிப்பிட்டுள்ள நேரத்திற்குள் அத்தகைய அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள நடவடிக்கை எடுக்கவோ, சிகிச்சை முறையை பின்பற்றவோ, தவறவோ, மறுக்கவோ செய்தால் உள்ளூர் பொது சுகாதார அதிகாரிக்கு,

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

பரிந்துரைக்கப்பட்டபடி அத்தகைய நடவடிக்கைகளை எடுக்கவோ அத்தகைய சிகிச்சை முறையை பின்பற்றவோ செய்யலாம்.

(2) அத்தகைய நடவடிக்கைக்கு தேவையான தொகை அந்த பகுதியின் வரம்பிற்குள் உள்ள உள்ளாட்சி நிறுவனம் வழங்க வேண்டியதும், அந்த செலவை உள்ளாட்சி நிறுவனத்திற்கு அதது காரியம்போல், இடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரிடமிருந்து உள்ளாட்சி நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய வரி நிலுவையாக வசூலிக்கப்படலாம்.

62. கொசு எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கான பாதுகாப்பு.- ஏதேனும் இடம் மற்றும் கட்டிடத்தில் உள்ளூர் பொதுசுகாதார அதிகாரியோ,உள்ளூர் பொது சுகாதார அதிகாரியின் பரிந்துரையில், அதன் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர், கொசுக்களின் இனப்பெருக்கத்தை தடுத்தல் என்ற நோக்கத்துடன் அத்தகைய இடம் மற்றும் கட்டிடத்தில் ஏதேனும் முறையிலான கட்டுமான பணிகள் நடத்தப்பட்டுள்ள இடத்தில், அத்தகைய இடத்தின் மற்றும் கட்டிடத்தின் தற்போதைய உரிமையாளர் அல்லது தற்போதைய குடியிருப்பாளர் அத்தகைய கட்டுமானங்களை சேதப்படுத்தவோ அல்லது அவற்றின் செயல்திறனை பாதிப்பிற்குள்ளாக்கவோ அல்லது பாதிப்பிற்குள்ளாக்க வாய்ப்புடையதோ ஆன ஏதேனும் வகையில் பயன்படுத்தப்படுவது தடுக்க வேண்டும்.

63. கொசு எதிர்ப்பு நடவடிக்கைகளில் தலையிடுவதை தடை செய்தல்.- (1) எந்த ஒரு நபரும் உள்ளூர் பொது சுகாதார அதிகாரியின் ஆணைகளால் ஏதேனும் இடம் அல்லது கட்டிடங்களின் மேல் அல்லது கீழ் அங்கு கொசுக்களின் இனப்பெருக்கத்தை தடுக்கும் நோக்கத்துடன் செயல்படுத்திய பணிகளை நிறுவப்பட்டுள்ள உபகரணங்களை, பொருட்களை தடை செய்யவோ, சேதப்படுத்தவோ, அழிக்கவோ அல்லது பயனற்றதாக்கவோ செய்யக்கூடாது.

(2) துணைப்பிரிவு (1)-ன் விதிமுறைகள் ஏதேனும் நபரால் மீறப்பட்டால், உள்ளூர் பொது சுகாதார அதிகாரி, அதது காரியம்போல், பணிகளை மீண்டும் செயல்படுத்தவோ, உபகரணங்கள் மற்றும் பொருட்களை புனரமைக்க செய்யலாம், அவ்வாறு செய்வதற்கான செலவு அத்தகைய நபரிடமிருந்து அது உள்ளாட்சி நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய வரி நிலுவையாக வசூலிக்கப்படலாம்.

64. பேரிடர் காரணமாக ஏற்பட்ட தொற்றுநோய்கள் மற்றும் அறிவிக்கக்கூடிய தொற்றுநோய்களை தடுத்தல் மற்றும் கையாளுதல்.- (1) இயற்கை பேரிடர்கள் அல்லது மனிதனால் உருவாக்கப்பட்ட பேரிடர்கள் மூலம் ஏற்படுகின்ற தொற்றுநோய்கள் மற்றும் அறிவிக்கக்கூடிய தொற்றுநோய்கள் உட்படவுள்ள நோய்களை தடுப்பதற்கும் கையாளுவதற்கும் தேவையான அனைத்து செயலாக்க நடவடிக்கைகளும் எடுப்பதற்கு

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

உள்ளூர் பொது சுகாதார அதிகாரிக்கு அதிகாரங்கள் இருக்கும்.

ஆனால் இந்த பிரிவிலுள்ள எதுவும் 2005-ன் பேரிடர் மேலாண்மை சட்டம் (2005-ன் எண் 53)-ன் விதிமுறைகளை மீறுவதாக இருக்கக்கூடாது.

65. சுகாதார ஊழியர்களுக்கு வளாகங்களில் நுழைவதற்கும் பரிசோதிப்பதற்குமான அதிகாரங்கள்.- இந்த அத்தியாயத்தில் உள்ள விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்காக உள்ளூர் பொதுசுகாதார அதிகரிக்கும் அல்லது அவர் அதிகாரப்படுத்திய எந்தவொரு அதிகாரியும், அவர் உகந்ததென கருதும் அத்தகைய அறிவிப்பை எழுத்துபூர்வமாக வழங்கிய பிறகு நியாயமான அனைத்து நேரங்களிலும் தனது அதிகார வரம்பிற்குள்ளான ஏதேனும் இடத்தில் அல்லது கட்டிடத்தில் நுழையவோ பரிசோதனை நடத்தவோ செய்வதும் அத்தகைய இடத்தின் அல்வது கட்டிடத்தின் அதது காரியம் போல், குடியிருப்பாளர் அல்லது உரிமையாளர் அத்தகைய நுழைவிற்கும் பரிசோதனைக்கும் தேவையான .வசதிகளை ஏற்படுத்தி கொடுக்க வேண்டியதும் மேற்குறிப்பிட்ட நோக்கத்திற்காக அவர் தேவைப்படும் அத்தகைய அனைத்து விவரங்களையும் வழங்க வேண்டும்.

அத்தியாயம் 9

கண்காட்சிகள், திருவிழாக்கள், பொது மற்றும் சமூக கூட்டங்கள்

66. கண்காட்சிகள், திருவிழாக்கள் பொது-சமூக கூட்டங்கள் ஆகியவை நடைபெறும் இடங்களில் சுகாதாரம் மற்றும் பிற ஏற்பாடுகள்.-எந்த உள்ளூர் பொது சுகாதார அதிகாரியின் அதிகார எல்லைக்குள் ஒரு கண்காட்சி அல்லது திருவிழா நடைபெறுகிறதோ அந்த அதிகாரி அல்லது அது நடைபெறுவது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உள்ளூர் பொது சுகாதார அதிகாரியின் அதிகார எல்லைக்குள் என்றால் அத்தகைய உள்ளூர் பொது சுகாதார அதிகாரிகள் ஒருங்கிணைந்து நியமிக்கப்பட்ட ஒரு குழு, 1994-ன் கேரள முனிசிபாலிட்டி சட்டம் (1994-ன் 20-வது சட்டம்), 1994-ன் கேரள பஞ்சாயத்து ராஜ் சட்டம் (1994-ன் 13-வது சட்டம்) போன்றவற்றின் படியான பின்வரும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும், அதாவது:-

(i)தொற்றுநோய்கள் அல்லது அறிவிக்கக்கூடிய தொற்று நோய்களின் எண்ணிக்கையை கண்டறிதல் மற்றும் பிரித்தல் அத்தகைய நோய்கள் பரவுவதை தடுக்கவும் செய்தல்;

(ii)தேவையான சுகாதார ஊழியர்களை நியமித்தல், மருத்துவ உதவி மற்றும் முதலுதவி பெட்டிகள் ஆகியவற்றிற்கான வழிமுறைகள், பொது மற்றும் தனிமைப்படுத்தல் உடைய மருத்துவமனை தங்கும் தேவைகளுக்காக வசதிகளை ஏற்படுத்தல்;

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(iii) பரிந்துரைக்கும் படியான அத்தகைய பிற தேவைகள்.

(2) அத்தகைய கண்காட்சி, திருவிழா அல்லது கூட்டங்களை ஏற்பாடு செய்யும் நபர் அல்லது அதிகாரி துணைப்பிரிவு (1)-ல் குறிப்பிட்டுள்ள விதிமுறைகளை பின்பற்ற வேண்டும்.

(3) அத்தகைய கண்காட்சி திருவிழா மற்றும் கூட்டங்களை ஏற்பாடு செய்யும் நபர் அல்லது அதிகார பதவி துணைப்பிரிவு (1)-ல் குறிப்பிட்டுள்ள விதிமுறைகளை பின்பற்றுவதில் தவறும்பட்சம் அவர் அதற்கு ஆயிரம் ரூபாய்க்கு மிகாத அபராதத்திற்கு பொறுப்பாவர்.

67. அசுத்தமான உணவு அல்லது நோய் பரப்ப வாய்ப்புடைய உணவுகளை கண்காட்சி, திருவிழா, தனியார் அல்லது பொது கூட்டங்கள் சேரும் இடத்தில் இருந்து பறிமுதல் செய்வதற்கான அதிகாரம்.- உள்ளூர் பொது சுகாதார அதிகாரியோ உள்ளூர் பொது சுகாதார ஆணையத்தின் பொது சுகாதார அதிகாரியோ தொடர்புடைய உள்ளூர் பொதுசுகாதார அதிகாரிகளோ,-

(எ) சமைக்கப்பட்டதோ, சேகரிக்கப்பட்டதோ, விளியோகிக்கப்படுவதோ ஆன உணவு நோய் பரவுவதற்கு உறைவிடமாகுமென்றோ உறைவிடமாக வாய்ப்புடையது என்றோ அவர் நம்புவதற்கு காரணமாகும் பொருட்டு கண்காட்சி அல்லது திருவிழா மையத்தில் உள்ள எந்த வளாகத்திலும் நுழைவதற்கும் பரிசோதனை செய்வதற்கும்,

(பி) பரிசோதனையின் நோக்கத்திற்காக, அத்தகைய மையத்தில் அல்லது அதிலிருந்து அத்தகைய தொலைவுக்குள் உள்ள நீர் விளியோக உறைவிடத்திற்கு அதிகாரி பொதுவாக அல்லது குறிப்பாக தீர்மானிக்கின்ற ஆணையால் நுழைவதற்கும், மேலும்

(சி) சமைக்கப்பட்ட அல்லது விற்பனைக்கு வைக்கப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட கண்காட்சி மற்றும் திருவிழா மையத்திற்கு கொண்டு செல்வதோ ஆன எந்த ஒரு உணவும், அவருக்கு அது ஆரோக்கியமற்றது, அல்லது ஏதேனும் நோயை ஏற்படுத்தவோ அல்லது பரப்பவோ வாய்ப்புள்ளது என்று கருதுவதற்கு உரிய காரணம் இருந்தால் பறிமுதல் செய்யவும் அத்தகைய உணவு மாசுபாட்டிற்கு காரணமானால் அதை அழிக்கவும் செய்யலாம்.

68. தனியார் நீர் விநியோகத்தின் உறைவிடங்களில் மீதான கட்டுப்பாடு.- உள்ளூர் பொதுசுகாதார அதிகாரியின் கருத்தில், கண்காட்சி, திருவிழா அல்லது கூட்டங்களுக்கு விநியோகம் செய்கின்ற நீர் ஆபத்தை ஏற்படுத்தவோ மற்றும் நோயை பரவ செய்யவோ வாய்ப்புடையதெனில் உள்ளூர் பொது சுகாதார அதிகாரி அதன் கட்டுப்பாட்டிலுள்ள உரிமையாளர் மற்றும் பிற நபரிடம், அத் தகைய நீர் வினியோகத்தை நிறுத்தவோ, கிருமி நீக்கம் செய்யவோ பரிந்துரை செய்யலாம்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

அத்தியாயம் 10

முதியோர் மற்றும் ஆதரவற்றோர் போன்றவர்களுக்கான சுகாதார பராமரிப்பு திட்டம்

69. உள்ளூர் பொது சுகாதார அதிகாரி மூதியோர், ஆதரவற்றோர் மற்றும் அதுபோன்றவர்களுக்கு சுகாதார பராமரிப்பு திட்டங்கள் நடைமுறைக்கு கொண்டு வர வேண்டும் என்று.- (1) அரசு கால்லாகாலங்களில் பரிந்துரைப்பது போல் முதியோர், ஆதரவற்றோர், மாற்றுத் திறனாளிகள் கொடிய நோய் வாய்ப்பட்டோர் மற்றும் அது போன்றோருக்கான சுகாதார பராமரிப்பு திட்டங்களைச் செயல்படுத்த ஒவ்வொரு பொது சுகாதார அதிகாரியும் பொறுப்புடையவராவர்.

(2) துணைப்பிரிவு (1)-ல் குறிப்பிட்டுள்ள திட்டங்களை நடைமுறைப்படுத்த மாநில பொது சுகாதார அதிகாரியும் மாவட்ட பொது சுகாதார அதிகாரியும் உள்ளூர் பொது சுகாதார அதிகாரியை அறிவுறுத்த வேண்டும்.

அத்தியாயம் II

தொற்றுநோய் அல்லாத நோய்களின் கட்டுப்பாடு

70. தொற்றுநோய் அல்லாத நோய்களின் கட்டுப்பாடு.- (1) இந்த அத்தியாயத்தின் தேவைக்காக "தொற்று நோய் அல்லாத நோய்" என்றால் தொற்றுநோய் அல்லாததும் நீண்டகாலம் நிலை நிற்பது பொதுவாக மெதுவாக அதிகரிப்பதுமான ஒரு நோய் அல்லது மருத்துவ நிலை என்று பொருள்படுவதாகும்.

(2) ஒரு நாள்பட்ட நோய் என்றால் சாதாரண முறையிலான குறைபாடுகள் அல்லது வேறுபாடுகளும் உள்ள தொற்றுநோய் அல்லாததும், கீழ்காணும் ஒன்றோ அதற்கு மேற்பட்ட குறைபாடுகள் அடங்கியதும் என பொருள்படுவதாகும். அதாவது,-

(i)நிரந்தர குறைபாடு;

(ii)அதிக அளவிலான பலவீனம்;

(iii) கண்டறிய இயலாத நோயியல் மாற்றத்தால் ஏற்படும் பலவீனம்;

(iv)மறுவாழ்வுக்காக நோயாளியின் சிறப்பு பயிற்சிக்கான தேவை; மேலும்

(v) குணமடைவதற்கு நீண்டகால மேற்பார்வை மற்றும் கண்காணிப்பை எதிர்பார்ப்பது;

(3) பின்வருபவை பொதுவாக தொற்றுநோய் அல்லாத நோய்களாக கருதப்படும். அதாவது.-

(i)கண்பார்வையற்ற;

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(ii)புற்றுநோய்;

(iii)நாள்பட்ட நுரையீரல் நோய்;

(iv)நாள்பட்ட சிறுநீரக நோய்;

(v) இரத்த குழாய் சார்ந்த தமனி நோய்;

(vi)மறதிநோய்;

(vii)நீரழிவு நோய்;

(viii) இரத்த அழுத்தம்;

((ix)விபத்துக்கள் காரணமாக ஏற்படுகின்ற காயங்கள்;

(x)தசை கூட்டு-மூட்டு வீக்கம்;

(xi)நரம்பியல் நோய்- அல்ஷிமேழ்ஸ் நோய் :

(xii)உடல்பருமன்

(xii) மனநோய்;

(xiv)வாத இதய நோய்; மற்றும்

(xv) பக்கவாதம்

(4) துணைப்பிரிவு (1) அல்லது துணைப்பிரிவு (2)-ல் குறிப்பிட்டுள்ள விதிமுறைகளுக்கு ஏற்றவாறு வேறு எந்த நோயையும் அரசு தொற்றுநோய் அல்லாத நோயாக அறிக்கை செய்யலாம்.

(5) அரசு, தொற்றுநோய் அல்லாத நோய்களை கட்டுப்படுத்துவதற்கான நோய் தடுப்பு, ஊக்குவிப்பு, நோய் தீர்க்கும் மறுவாழ்வு மற்றும் நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்கான வழிமுறைகளை கொண்டு வரவும் அந்த வழிமுறைகளை உள்ளூர் பொது சுகாதார அதிகாரிகள் மற்றும் மருத்துவ சேவை வழங்குவோர் பின்பற்றுகின்றனர் என்பதை உறுதிபடுத்த வேண்டும். மேலும் அரசு தொற்று நோய் அல்லாத நோய்களை தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான கொள்கைகளை திட்டமிட்டு உருவாக்கவும் அத்தகைய கொள்கைகளை செயல்படுத்த உள்ளூர் பொதுசுகாதார அதிகாரிகள் மூலம் மருத்துவ சேவை வழங்குவோருக்கு பயிற்சி அளிக்க வேண்டும்.

(6) உள்ளூர் பொதுமக்களின் தற்போதைய சுகாதார நிலைமைகளுக்கு உட்பட்டு உள்ளூர் பொதுசுகாதார அதிகாரிகள் தொற்றுநோய் அல்லாத நோய்களை தடுக்கவும் கட்டுப்படுத்தவும் அரசு உருவாக்கிய கொள்கைகள் மற்றும் வழிமுறைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். ஆரோக்கியமான பழக்கவழக்கங்களை வளர்ப்பதற்கான சூழ்நிலையை உருவாக்கப்பட்டுள்ளது என்பதும் அப்பகுதியின் பொதுமக்களின் அத்தகைய வாழ்க்கை முறைக்கான அடிப்படை சூழ்நிலை நிலைநிறுத்தப்படுகிறது என்பதும் சுகாதார அதிகாரிகள் உறுதிசெய்திட வேண்டும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(7) துணைப்பிரிவு (8)-ல் விளக்கியுள்ள படி பிற உள்ளூர் பொதுசுகாதார அதிகாரிகள் முதல்நிலை நோய் தடுப்பு, இரண்டாம் நிலை நோய் தடுப்பு மற்றும் மூன்றாம் நிலை நோய் தடுப்பு ஆகியவற்றின் மூலம் தொற்று நோய் அல்லாத நோய்களை தடுக்கவும் கட்டுப்படுத்தவும் ஊக்கப்படுத்த வேண்டும்.

(8) முதல்நிலை நோய் தடுப்பில் வீட்டின் உள்ளேயும் வெளியேயும் உள்ள காற்று மாசுபாட்டைக் கட்டுப்படுத்தல், உடற்பயிற்சி மற்றும் பொழுதுபோக்கை ஊக்குவித்தல், சாதாரண உடற்பயிற்சிக்கு இடத்தை உருவாக்குதல் ஆரோக்கியமான சமையல் முறைகளை ஊக்குவித்தல், ஆரோக்கியமான உணவிற்கான உள்ளூர் இயற்கை விவசாய நடைமுறைகளை மேம்படுத்துதல், பொதுமக்களிடம் விழிப்புணர்வை உருவாக்குதல், சமூகம் சார்ந்த மற்றும் பணியிட அடிப்படையிலான மற்றும் கல்வி நிறுவனங்களின் அடிப்படையிலான தனிநபர், சமூக குழுக்களின் ஒழுக்கம் மக்கள் ஊடகங்களின் வாயிலாக சீர்திருத்தல் போன்ற நோய் தடுப்பு ஊக்குவிப்பு நடைமுறைகள் உட்படுகின்றன. இரண்டாம் நிலை நோய் தடுப்பில் முன்னராகவே நோய்களை கண்டறிதல் மற்றும் கண்டறியப்பட்ட நோயாளிகளின் சிகிச்சையும், ஏழை மற்றும் செலவு கட்டுப்படியாகாதவர்களுக்கு ஏற்றுக்கொள்ளும் விகிதத்தில் அல்லது இலவசமாக நல்ல தரமான மருந்துகளை தொடர்ந்து வழங்குதல், ஆய்வக வசதிகள், சிக்கல்களை தடுக்க வழக்கமான பரிசோதனைகள் போன்ற நோய் தீர்க்கும் நடவடிக்கைகள் உட்படும். மூன்றாம் நிலை நோய் தடுப்பில் நோய் தடுப்பு சிகிச்சை, தொழில் அல்லது நிதி உதவி அல்லது இரண்டையும் வழங்குதல் போன்றவையான மறுவாழ்வு நடவடிக்கைகள் உட்படும்.

(9) உள்ளூர் பொதுசுகாதார அதிகாரிகள் பின்வருபவனற்றையும் ஊக்கப்படுத்த வேண்டும், அதாவது:-

(i)அதிக ஆபத்திற்கு வாய்ப்புடைய ஸ்கிரீனிங், அதாவது மருத்துவ ரீதியாக வெளிப்படையாக இதய நோய் அறிய இயலாத நபர்களின் இதயத்திற்குள் உள்ள ஆபாய வாய்ப்புகளை மதிப்பிடவும் கட்டுப்படுத்தவும் (முதற்கட்ட நோய் எதிர்ப்பு)

(ii) இருதய நோய் ஏற்பட வாய்ப்புடைய நபர்களில் உணவுமுறை மாற்றங்கள், உடல்பயிற்சி, உடல் எடைக்கட்டுப்பாடு, புகைப்பிடித்தல் மற்றும் மது அருந்துவதை நிறுத்துவதற்கான பிரச்சாரம் ஆகியவற்றின் மூலமாக இருதய நோயை தடுத்தல்;

(iii)பெரிஃபெரல் வாஸ்குலர் நோய் பாதித்த நபர்களின் பராமரிப்பு (இரண்டாம் நிலை நோய் தடுப்பு)

(iv)உணவு முறையில் மாற்றங்கள் ஏற்படுத்தல், மருந்தியல் சிகிச்சை, புகைபிடித்தல் மற்றும் மரு அருந்துவதை நிறுத்துவதற்கான பிரச்சாரம் ஆகியவற்றிற்கான தீவிரமான வாழ்க்கை முறை ஆலோசனை;

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(v)உயர்ந்த ஆபாய வாய்ப்பிற்கான விஷயங்களை எளிதில் கண்டுபிடிக்கவும் அத்தகைய நபர்களுக்கு முன்கூட்டி நோய் கண்டறிதலுக்கும் பரிந்துரைகும் சுகாதார ஊழியர்களுக்கான பயிற்சி;

(vi) தகவல்;கல்வி மற்றும் தகவல் தொடர்பு நடவடிக்கைகளை வலுப்படுத்தல்;

(vii) கீரை காய்கறிகள் மற்றும் சுத்தமான பழங்களை அதிக அளவில் உண்ணுதல் உப்பின் பயன்பாட்டை குறைத்தல், உப்பு அதிகமான ஊறுகாய், சட்டினிகள், சாஸ்கள், கெட்ச் அப்கள், சிப்ஸ், உப்பிலிட்ட பிஸ்கட், உப்பு சேர்க்கப்பட்ட வெண்ணெய், உப்பினால் உலர்த்தப்பட்ட மீன் போன்ற தயாரிப்புகளை தவிர்த்தல், அனைத்து வகையான சுத்தீகரிக்கப்பட்ட கார்போ ஹைட்ரேட்டுகளின் கட்டுப்பாடு, வறுத்த உணவுகளை விட ஆவியில் வேக வைத்த உணவிற்கு முன்னுரிமை, கத்தமான பழச்சாறுகளை குடித்தல், கார்பனேட் பானங்களுக்கு பதிலாக இளநீர், ஃபாஸ்ட்/ஜங் உணவுகள், எய்ரேடட் பானங்கள் ஆகியவற்றை தவிர்த்தல், நிலக்கடலை எண்ணெய், சோயாபீன் எண்ணெய் கடுகு எண்ணெய், சூர்ய காந்தி எண்ணெய், தேங்காய் எண்ணெய் என்ற எண்ணெய்களின் பயன்பாடு, தீங்கு விளைவிக்கும் எண்ணெய்களுக்கு பதிலாக நெய், எண்ணெய் போன்றவற்றின் மிதமான பயன்பாடு, வறுத்த மீன் வறுத்த இறைச்சி மற்றும் சிவப்பு இறைச்சி போன்றவையின் குறைந்த பயன்பாடு போன்ற உணவு கட்டுப்பாடு;

(viii) ஆரோக்கியத்திற்காக வழக்கமான உடற்பயிற்சி, உடல் எடை கட்டுப்பாடு அல்லது உடல் எடையை குறைத்தல், மட்டுமல்லாமல் சைக்கிள் ஓட்டுதல், தோட்டப்பராமரிப்பு போன்ற வெளிப்புற செயல்பாடுகள் போன்ற உடற்பயிற்சிகள்; மற்றும்

(ix) யோகா பயிற்சி,

(10) உள்ளூர் பகுதியில் தொற்றுநோய் அல்லாத நோய்கள் பரவுதல் மற்றும் ஆபத்து ஏற்படும் வாய்ப்பையும் அடிப்படையாக்கி பிரிவுகள் (6),(7),(8) மற்றும் (9)-ன் படியுள்ள திட்டங்களை திட்டமிடுவதற்கும் உள்ளாட்சி நிறுவனங்கள் சுகாதார பட்ஜெட்டில் ஒரு பகுதி ஒதுக்கப்பட வேண்டும்.

(11) உள்ளூர் பொது சுகாதார அதிகாரிகள், தொற்று நோய்கள் உள்ளதாக கருதுவதோ வாய்ப்புடையதோ ஆன நபர்களுக்காக ஆரோக்கியமான உணவுகளை வழங்குதல், அதாவது முக்கியமான ஊட்டச்சத்து அடங்கிய பூரித கொழுப்பு, சர்க்கரை ஆகியவை குறைந்த, சோடியம் குறைந்த அளவில் கொண்ட நிறங்கள், சுவைகள், பதனப்பொருட்கள் சேர்க்காத உணவு பொருட்கள் வழங்குவதற்கு முன்னுரிமை பட்டியலாக இருக்க வேண்டும்.

(12) உள்ளூர் பொதுசுகாதார அதிகாரிகளுக்கு உணவு நிறுவனத்தின் உரிமையாளர்

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் பிற நபரோடு துணைப்பிரிவு (II)-ன் படியான உணவு பொருட்களையும் விற்க பரிந்துரை செய்யலாம்.

(13) துணைப்பிரிவு (9)-ன் இனங்கள் (viii)-ம் மற்றும் (ix)-ம் படியான செயல்பாடுகளை செய்வதற்கு தகுந்த இடங்களை கண்டடையவும் உள்ளாட்சி நிறுவனம் அது பயனுடைதெனில் அவற்றை பொதுமக்களுக்கு திறக்கவும் பரிந்துரை செய்வதற்கும் அதிகாரம் இருப்பதாகும்.

அத்தியாயம் 12

பலவகை

71. அறிவிப்புகள் மற்றும் ஆணைகளை வழங்கும் முறை.-இந்த அவசரச்சட்டத்தின் படியோ அதன் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் விதி, ஒழுங்குமுறைகள் அல்லது ஆணைகள் படியோ ஏதேனும் அறிவிப்பு வழங்க வேண்டிய சூழலில் அத்தகைய அறிவிப்பு அல்லது ஆணை எழுத்துபூர்வமாக இருக்க வேண்டியதும் அது,-

(எ) அத்தகைய நபருக்கு வழங்கவோ ஒப்படைக்கவோ செய்தும், அல்லது

(பி) அத்தகைய நபரை கண்டுபிடிக்கவில்லையெனில், அவரை இறுதியாக அறியப்பட்ட வசிப்பிடம் அல்லது தொழில் இடத்தில் அளித்தும் அல்லது அந்த நபரின் குடும்பத்தின் முதியவரான உறுப்பினரிடம் வழங்கியும் ஒப்படைத்தும், அல்லது

(சி) அத்தகைய நபர் இந்த பகுதியில் வசிக்கவில்லை என்றாலும் அந்த நபரின் வேறு எங்காவது உள்ள முகவரி தெரிந்தால் அதை பதிவு அஞ்சல் மூலம் அவருக்கு அனுப்பி கொடுத்தும்; அல்லது

(டி)மேற்குறிப்பிட்ட வழிமுறைகள் ஒன்றும் கிடைக்கவில்லையெனில் அத்தகைய வசிப்பிடத்தில் அல்லது தொழிலிடத்தின் வெளிப்படையாக காண்கின்ற ஏதேனும் பகுதியில் ஒட்டவோ, செய்து,

வழங்க வேண்டும்.

(2) ஒருவர் ஏதேனும் கட்டிடத்தின் உரிமையாளர் மற்றும் குடியிருப்பாளராக இருக்கும் பட்சம் அந்த அறிவிப்பின் உரிமையாளர் மற்றும் குடியிருப்பாளரின் பெயர் கூற வேண்டிய தேவை உள்ளதும் கூட்டு உரிமையாளர்கள் மற்றும் கூட்டு குடியிருப்பாளர்களின் காரியத்தில் அவ்வகையிலான உரிமையாளர் மற்றும் குடியிருப்பாளர் ஒருவருக்கு அதை வழங்கினால் போதுமானதாகும்.

72. மேல்முறையீடுகள் - இந்த சட்டத்தில் குறிப்பிட்டுள்ள விஷயத்தில் உள்ளூர் பொதுசுகாதார அதிகாரியின் தீர்மானத்தின் மீதான மேல்முறையீடு உள்ளாட்சி நிறுவனத்திலும், உள்ளாட்சி நிறுவனத்தின் தீர்மானத்தின் மீதான மேல்முறையீடு மாவட்ட

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

பொது சுகாதார அதிகாரிக்கும் பொருந்துவதாகும்.

73. மறுபரிசீலனை.- மாவட்ட பொதுசுகாதார அதிகாரியின் பிரிவு 71-ன் கீழான தீர்மானத்தால் பாதிக்கப்பட்ட எந்த ஒரு நபருக்கும் மாநில பொது சுகாதார அதிகாரி முன்பாக மறு பரிசீலனையை தாக்கல் செய்யலாம்.

74. சில விஷயங்களில் வழக்குகள் வழக்கு தொடர்தலுக்கு தடை.- (1) இந்த அவசரச்சட்டத்தின் கீழ் செயததோ செய்ய எண்ணுவதோ ஆன ஏதேனும் செயல்பாட்டிற்கும் எந்தவொரு உள்ளூர் பொதுசுகாதார அதிகாரிக்கோ உள்ளாட்சி நிறுவனத்தின் செயலாளருக்கோ, அரசுக்கோ அரசினுடையவோ உள்ளூர் பொதுசுகாதார அதிகாரியினுடைய ஏதேனும் அதிகாரிக்கோ ஊழியருக்கோ எதிராக எந்தவொரு வழக்கோ வழக்கு தொடர்வதோ பிற நடவடிக்கைகளோ அரசின் முந்தைய அனுமதி இல்லாமல் நிலைநிற்பதில்லை.

(2) உள்ளூர் பொதுசுகாதார அதிகாரியோ உள்ளாட்சி நிறுவனத்தின் செயலாளரோ உள்ளூர் பொதுசுகாதார அதிகாரியினுடையவோ, அரசினுடையவோ ஏதேனும் அதிகாரியோ ஊழியரோ இந்த சட்டத்தினாலோ அதன் கீழில் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகளை நிறைவேற்றும்போதோ செயல்களை செய்யும்போதோ அந்த செயல் நன்நம்பிக்கையில் செய்யப்பட்டதெனில், அத்தகைய செயல் தொடர்பாக ஏதேனும் சிவில் அல்லது கிருமினல் ஆன நடவடிக்கைகளுக்கு வழக்கு தொடர பொறுப்புடையரல்லாதவராவர்.

75. தவறான நோக்கத்துடன் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தியதற்கான முறைகேட்டிற்கான தண்டனை.- (1) உள்ளூர் பொதுசுகாதார அதிகாரியோ உள்ளாட்சி நிறுவனத்தின் செயலாளரோ உள்ளூர் பொதுகசுகாதார அதிகாரியினுடையவோ அரசினுடையவோ அதிகாரியோ ஊழியரோ இந்த சட்டத்தில் அல்லது அதன் கீழ் அவருக்கு வழங்கப்பட்டுள்ள ஏதேனும் அதிகாரத்தை தவறான நோக்கத்துடன் முறைகேடு செய்தால் பத்தாயிரம் ரூபாய் வரையிலான அபராதத்திற்கு தண்டிக்கப்பட வேண்டும்.

(2) இந்த பிரிவின் கீழுள்ள எந்தவொரு வழக்கு தொடர்தலும் அரசின் முன் அனுமதியில்லாமல் நிறுவப்படக்கூடாது.

76. அவசரச்சட்டத்திற்கு எதிரான குற்றங்களுக்கு நடவடிக்கை எடுத்தல்.- குற்றம் புரிந்த மூன்று மாதங்களுக்குள் அதது காரியம் போல், உள்ளூர் பொது சுகாதார அதிகாரியோ உள்ளாட்சி நிறுவனத்தின் செயலாளரோ அல்லது உள்ளூர் பொது சுகாதார அதிகாரி, உள்ளாட்சி நிறுவனத்தின் செயலாளர் இதற்காக வெளிப்படையாக அதிகாரப்படுத்தப்பட்ட ஒரு நபரோ எழுத்துபூர்வமான புகார் அளிக்கவில்லையெனில் எந்த ஒரு நீதிமன்றமும் இந்த அவசரச்சட்டத்தின் விதிமுறைகளிலோ அதன் கீழ்

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

ஏற்படுத்தப்பட்ட ஏதேனும் விதியிலோ அல்லது ஒழுங்குமுறைகளின் எழுத்துபூர்வமான புகார் அளிக்கவில்லையெனில் எந்த ஒரு நீதிமன்றமும் இந்த அவசரச்சட்டத்தின் விதிகளிலோ அல்லது ஒழுங்குமுறைகளின் விதிமுறைகளுக்கு கீழுள்ள ஒரு குற்றம் விசாரணைக்கு எடுக்கக்கூடாது.

(2) இந்த அவசரச்சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படும்படியான குற்றங்கள் அறியப்பட முடியாதவை முதல் வகுப்பு நீதித்துறை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தால் விசாரணை செய்யப்பட வேண்டும்.

77. குற்றங்களை தீர்ப்பாக்குதல்.- (1) இந்த அவசரச்சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படும்படியான குற்றங்கள், இந்த அவசரச்சட்டத்தின் கீழிலோ, அதன் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளிலோ ஒழுங்குமுறைகளிலோ உள்ள குற்றம் செய்ததாக கூறப்படுகின்ற ஏதேனும் நபரின் மனுவின் அடிப்படையில், வழக்கு தொடங்குவதற்கு முன்போ, வழக்கு ஆரம்பித்த பிறகு தொடர்புடைய நீதிமன்றத்தின் அனுமதியுடனோ உள்ளூர் பொதுசுகாதார அதிகாரிக்கு மாநில பொதுசுகாதார அதிகாரியால் அறிக்கை செய்யப்பட்ட அத்தகைய தொகைக்கு தீர்ப்பாக்கப்படலாம்.

(2) உள்ளூர் பொதுசுகாதார அதிகாரி,முரணான காரணங்கள் ஒன்றும் இல்லையெனில், -

(எ) தீர்ப்பாக்கல் வாயிலாக தீர்மானிக்கப்பட்ட தொகை;

(பி) எந்த தேதியோ அல்லது அதற்கு முன்பாகவோ தொகை செலுத்தப்பட வேண்டியது.

(சி) எந்த தேதியோ அல்லது அதற்கு முன்பாக அந்த நபர் உள்ளூர் பொதுசுகாததார அதிகாரிக்கு உண்மை அறிக்கை செய்ய வேண்டியது போன்றவற்றை தெளிவுபடுத்திக்கொண்டு எழுத்துபூர்வமான ஆணையை பிறப்பிக்க வேண்டும்.

(3)அவ்வாறு அறிவிக்கப்பட்ட குற்றங்களை தீர்ப்பாக்கும் அதிகாரம் அத்தகைய பிற அதிகார நிறுவனங்களால் அல்லது நபரால் இவைக்காக அரசு ஏற்படுத்திய சட்டங்களால் பரிந்துரைக்கப்படும் வகையில் செயல்படுத்த வேண்டும்.

(4) அத்தகைய ஆணையின் ஒரு நகல் தொடர்புடைய நபருக்கு உள்ளூர் பொதுசுகாதார அதிகாரிக்கு அனுப்பி கொடுக்க வேண்டும்.

(5) இந்த அவசரச்சட்டத்தில் குறிப்பிட்டுள்ள ஏதேனும் குற்றம் தீர்ப்பாக்கப்பட்ட பிறகும் அவர் அதே குற்றத்தை மீண்டும் செய்தால் வழக்கு தொடரப்படும்.

78. அரசாங்கத்தால் அதிகாரப் பிரதிநிதித்துவம்.- அரசு அறிக்கை வாயிலாக அதில் குறிப்பிட்டுள்ள ஏதேனும் கட்டுப்பாடுகள் வரையறைகளுக்கு உட்பட்டு அதற்கு இந்த அவசரச்சட்டத்தின்படி ஒப்படைக்கப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

அதிகாரங்களை பயன்படுத்துவதற்கு எந்தவொரு நபருக்கும் அதிகாரம் அளிக்கப்படுவதும் அதே முறையிலேயே அத்தகைய அதிகாரத்தை திரும்பப்பெறவும் செய்யலாம்.

எனில் இந்த பிரிவில் அடங்கியுள்ள எதுவும் பிரிவு 79-ன் படி இந்த அவசரச்சட்டத்தின் கீழ் விதிகளை ஏற்படுத்துவதற்கான அரசின் அதிகாரத்திற்கு பொருந்துவதில்லை.

79. விதிகளை உருவாக்குவதற்கான அரசின் அதிகாரம்.- (1) அரசுக்கு அறிக்கையால் இந்த அவசரச்சட்டத்தின் கீழ் நோக்கங்களை செயல்படுத்துவதற்காக விதிகளை உருவாக்கலாம்.

(2) குறிப்பாக, துணைப்பிரிவு (1)-ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பொதுவான தன்மைக்கு பாதிப்பு ஏற்படாமல் அரசு, இந்த அவசரச்சட்டத்தால் வெளிப்படையாக தேவையானதோ, அனுமதிக்கப்பட்டதோ ஆன அனைத்து காரியங்களை குறித்து விதிகளை உருவாக்கலாம்.

(3) இந்த அவசரச்சட்டத்தின் படி ஏற்படுத்தப்படும் ஒவ்வொரு விதியும் அதை ஏற்படுத்தியப் பின் முடிந்த வரை விரைவில், சட்டப்பேரவை கூட்டத்தொடரில் இருக்கும்போது, சபை முன்பாக ஒரு கூட்டத்தொடரிலோ, தொடர்ந்து வரும் இரண்டு கூட்டத்தொடரிலோ உட்படும் மொத்தம் பதினைந்து நாட்களுக்கு வைக்க வேண்டியதும், அவ்வாறு அது எந்த கூட்டத்தொடரில் வைக்கப்படுகிறதோ அந்த கூட்டத்தொடரோ, அதை தொடர்ந்து வரும் கூட்டத்தொடரோ முடிவடைவதற்கு முன்பு சட்டப்பேரவை மேற்கூறிய விதியில் ஏதேனும் திருத்தம் ஏற்படுத்தவோ அந்த விதி ஏற்படுத்தப்பட வேண்டியதில்லை என்று தீர்மானிக்கவோ செய்யும் பட்சம், அந்த விதிக்கு அதற்குப் பிறகு, அதது காரியம்போல், அவ்வாறு திருத்தம் செய்யப்பட்ட வடிவில் மட்டும் அமலில் இருக்கவோ எந்த ஒரு அமலில் இல்லாமல் இருக்கவோ செய்வது ஆகும் எனினும் அத்தகைய ஏதேனும் திருத்தமோ, இரத்தாக்கலோ அந்த விதிமுறைப்படி முன்பு செய்த ஏதேனும் விஷயத்தில் செல்லுபடியாதலுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் இருக்க வேண்டும்.

80. ஒழுங்குமுறைகள் ஏற்படுத்துவதற்கான மாநில பொது ஆகாதார அதிகாரியின் அதிகாரம்.- (1) மாநில பொதுஆகாதார அதிகாரிக்கு அரசின் முன்அனுமதியுடன் இந்த அவசரச்சட்டத்தின் நோக்கங்களை செயல்படுத்துவதற்கும் இந்த அவசரச்சட்டத்திற்கும் அதன் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளுக்கும் ஏற்ப ஒழுங்குமுறைகளை ஏற்படுத்தலாம்.

(2) இந்த அவசரச்சட்டத்தின் கீழ் அவ்வாறு ஏற்படுத்தப்படும் ஒவ்வொரு ஒழுங்குமுறையும் அதை ஏற்படுத்திய பிறகு முடிந்தவரை விரைவில் சட்டப்பேரவை

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

கூட்டத்தொடரின்போது அதன் முன்பாக, அதை ஒரு கூட்டத்தொடரிலோ தொடர்ந்து வரும் இரண்டு கூட்டத்தொடரிலோ உட்படும் மொத்தம் பதினான்கு நாட்களுக்கு வைக்க வேண்டியதாகும்.

81. பரிசோதனையின் போது கவனிக்கவேண்டிய விஷயங்கள்.- இந்த அவசரச்சட்டத்தின் விதிமுறைகளுக்கு ஏற்ப பரிசோதனையின்போது அபராதம் விதிக்கும் முன் உள்ளூர் பொதுசுகாதார அதிகாரி, தற்போது அமலிலுள்ள பிற ஏதேனும் சட்டத்தின் கீழ் அதிகாரப்படுத்தப்பட்ட ஏதேனும் அதிகாரி, அந்த விஷயத்தில் நடவடிக்கை எடுக்கின்றாரா என்பதை கருத்தில் கொண்டு முரண்பாடான முடிவு எடுக்கப்படவில்லை என்பதை உறுதி செய்ய வேண்டும்.

82. இடர்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.- (1) இந்த அவசரச்சட்டத்தின் விதிமுறைகளை செயல்படுத்த ஏதேனும் இடர்பாடுகள் ஏற்படும் பட்சம், அரசு, ஆணை வாயிலாக அந்த இடர்பாடுகளை நீக்கம் செய்வதற்கு தேவையென்றும் உகந்ததென்று தோன்றுவதும் இந்த அவசரச்சட்டத்தின் விதிமுறைகளுக்கு முரண்பாடற்ற அத்தகைய விதிமுறைகளை இயற்றலாம்.

(2) எனில் இந்த அவசரச்சட்டம் அமலுக்கு வந்த தேதி முதல் இரண்டு வருடங்கள் முடிவடைந்த பிறகு துணைப்பிரிவு (1)-ன் படி எந்தவொரு ஆணையும் ஏற்படுத்தக்கூடாது.

(3) துணைப்பிரிவு (1)-ன் கீழ் அறிவிக்கப்படும் எந்த ஒரு ஆணையும் அதை உருவாக்கிய பிறகு முடிந்தவரை விரைவில் சட்டப்பேரவை கூட்டத்தொடரின் போது அதன் முன்பாக அவை ஒரு கூட்டத்தொடரிலோ தொடர்ச்சியான இரண்டு கூட்டத்தொடரிலோ உட்படும் மொத்தம் பதினான்கு நாட்களுக்கும் அவை கூட்டத்தொடரில் இல்லையெனில் அடுத்த கூட்டத்தொடரின் தொடக்கத்தில் வைக்க வேண்டும்.

83. செல்லுபடியாதல்.- 2022-ன் கேரள பொது சுகாதார அவசரச்சட்டம் (2022-ன் 12) (இதற்குப் பிறகு மேற்குறிப்பிட்ட அவசரச்சட்டமாக குறிப்பிடப்படும்) அமலில் இருந்து நின்று விட்ட போதிலும்;

(எ) மேற்குறிப்பிட்ட அவசரச்சட்டத்தின் கீழ் செய்ததோ செய்ததாக கருதப்படுவதோ ஆன ஏதேனும் விஷயமோ, எடுத்ததோ எடுத்ததாக கருதப்படுவதோ ஆன ஏதேனும் நடவடிக்கையோ இந்த அவசரச்சட்டத்தின் படி செய்ததாகவோ எடுத்ததாகவோ கருதப்பட வேண்டியதும்;

(பி) மேற்குறிப்பிட்ட அவசரச்சட்டம் அமலில் இருந்து நின்றுவிட்ட பிறகும் இந்த அவசரச்சட்டம் அரசிதழில் வெளியிடும் தேதிக்கு முன்பாக மேற்குறிப்பிட்ட

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

அவசரச்சட்டத்தின் கீழ் செய்த ஏதேனும் காரியமோ எடுத்த ஏதேனும் நடவடிக்கையோ அமலில் இருந்து நின்றுவிடாமல் இருந்திருந்தால், மேற்குறிப்பிட்ட அவசரச்சட்டத்தின் கீழ் செய்ததாகவோ எடுத்ததாகவோ கருதப்பட வேண்டியதும்;

ஆனால், மேற்குறிப்பிட்ட அவசரச்சட்டத்தின்படி அமலில் இருந்து நின்றுவிட்ட பிறகும் மற்றும் அரசிதழில் இந்த அவசரச்சட்டம் வெளியிடும் தேதிக்கு முன்னர், மேற்குறிப்பிட்ட அவசரச்சட்டத்தின் ஏதேனும் தண்டனை விதிகளின் கீழ் ஏதேனும் அதிகாரி, ஆணையம், நபர், அமைப்பு அல்லது நிறுவனம் செய்த அல்லது செய்யாத எந்தவொரு காரியத்திற்கும் எதிராக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது

ஆரிஃப் முகமது கான்,
ஆளுநர்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

கேரள அரசு

சட்ட (சட்டமியற்றல் -எச்) துறை

அறிக்கை

திருவனந்தபுரம், 2023 ஜனவரி 6

எண்:107/ச.இ.எச்.1/2022/சட்டம். 1198 தனு 22

1944 பௌஷம் 16

கேரள மாநில சட்டப்பேரவையின் பின்வரும் சட்டம் பொதுமக்களின் அறிவிற்காக இதனால் பிரசுரம் செய்யப்படுகிறது. சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட மசோதாவிற்கு 2023 ஜனவரி மாதம் 5-ஆம் தேதி ஆளுநரின் அனுமதி கிடைக்கப்பெற்றது.

ஆளுநரின் ஆணைப்படி

வி.ஹரிநாயர்.

சட்டச்செயலாளர்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

2023-ன் 9-வது சட்டம்

2022-ன் பிரவாசி இந்தியர்(கேரளீயர்) குழுமம் திருத்த சட்டம்

2015-ன் பிரவாசி இந்தியர் (கேரளீயர்) குழும சட்டம் மீண்டும் திருத்தம் செய்வதற்கான

ஒரு

சட்டம்

மூனனுரை.- 2015-ன் பிரவாசி இந்தியர் (கேரளீயர்) குழுமம் சடடம (2016-ன் 3-வது சட்டம்) இதற்கு பின்வரும் தேவைகளுக்காக மீண்டும் திருத்தம் செய்வது உகந்ததாக இருப்பதால்;-

இந்திய குடியரசின் எழுபத்து மூனறாம ஆண்டில் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுகிறது.-

1. கருக்கத்தலைப்பும் தொடக்கமும்.- (1) இந்தச் சட்டத்திற்கு பிரவாசி இந்தியர் (கேரளீயர்) குழுமம் திருத்த சட்டம் என அழைக்கப்படலாம்.

(2) இது உடன் அமலுக்கு வருவதாகும்.

2. பிரிவு 3-ல் திருத்தம்.- 2015-ன் பிரவாசி இந்தியர் (கேரளீயர்) குழுமம் சட்டம் (2016-ன் 3-வது சட்டம்) (இதன் பிறகு முதன்மைச்சட்டம் எனக் குறிப்பிடப்படும்) பிரிவு 3-ன் துணைப்பிரிவு (2)-ல் இனம் (v)-ல் "அறுபத்தைந்து" என்ற சொல்லுக்குப் பதிலாக "அறுபத்தெட்டு" என்ற சொல் சேர்க்கப்பட வேண்டும்.

3. பிரிவு 4-ல் திருத்தம்.- முதனமைச்சட்டத்தின் பிரிவு 4-ல் .-

(i)துணைப்பிரிவு (1)-ல் "மறுநியமனத்திற்கு" என்ற சொல்லுக்கு பதிலாக மறுபெயர் பரிந்துரைக்கு" என்ற சொல் சேர்க்கப்பட வெண்டும்.

(ii) துணைப்பிரிவு (2)-ன் காப்பு வாசகத்தில் "பரிந்துரைக்கப்பட்ட" என்ற சொல்லுக்கு பதிலாக "பெயர் பரிந்துரை செய்யப்பட்ட" என்ற சொல்லும் "நியமனம் செய்யப்படுவது" என்ற சொல்லுக்கு பதிலாக "பெயர் பரிந்துரை செய்யப்பட்டது" என்ற சொல்லும் சேர்க்கப்பட வேண்டும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

கேரள அரசு

சட்ட (சட்டமியற்றல் -எ) துறை

அறிக்கை

திருவனந்தபுரம், 2023 ஜனவரி 6

எண்.20680/ச.இ.பி2/2021/சட்டம். 1198 தனு 22

1944 பவுஷம் 16

கேரள மாநில சட்டப்பேரவையின் பின்வரும் சட்டம் பொதுமக்களின் அறிவிற்காக இதனால் பிரசுரம் செய்யப்படுகிறது. சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட மசோதாவிற்கு 2023 ஜனவரி மாதம 5-ஆம் தேதி ஆளுநரின் அனுமதி கிடைக்கப்பெற்றது.

ஆளுநரின் ஆணைப்படி

வி.ஹரிநாயர்,

சட்டச்செயலாளர்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

2023-ன் 5-வது சட்டம்

2021-ன் கேரள நிலச்சீர்திருத்த (திருத்த) சட்டம்

1963-ன் கேரள நிலச்சீர்திருத்த சட்டம் மீண்டும் திருத்தம் செய்வதற்கான

ஒரு

சடடம

முன்னுரை.- 1963-ன் கேரள நிலச்சீர்திருத்த சடடம இதற்கு பின்வரும் தேவைகளுக்காக மீண்டும் திருத்தம் செய்வது உகந்ததாக இருப்பதால்:-

இந்திய குடியரசின் எழுபதது மூன்றாம் ஆண்டில் பின்வருமாறு சடடம இயற்றப்படுகிறது.-

1. சுருக்கத்துலைப்பும் தொடக்தமும்.- (1) இந்தச் சட்டம் 2021-ன் கேரள நிலச்சீர்திருத்த (திருத்த) சட்டம் என அழைக்கப்படலாம்.

(2) இது உடன் அமலுக்கு வருவதாகும்.

2. பிரிவு 102-ந்தான திருத்தம்.- 1963-ன் கேரள நிலச்சீர்திருத்த சட்டத்தின் (1964-ன் 1) பிரிவு 102-ன் துணைப்பிரிவு (1)-ல் "பிரிவு 106 அல்லது 106ஏ என்ற பிரிவு" என்ற சொற்களுக்கும் எண்களுக்கும் எழுத்துக்கும் பதிலாக "பிரிவு 106 அல்லது பிரிவு 106ஏ என்ற பிரிவோ 106பி என்ற பிரிவோ" என்ற சொற்களும் எண்களும், எழுத்துக்களும் சேர்க்கப்பட வேண்டும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

கேரள அரசு

சட்டம் (சட்டமியற்றல் -எ) துறை

அறிக்கை

திருவனந்தபுரம், 2023 ஜனவரி 6

எண்:47/ச.இ.எ 2/2022/சட்டம். 1198 தனு 22

1944 பௌஷம் 16

கேரள மாநில சட்டப்பேரவையின் பின்வரும் சட்டம் பொதுமக்களின் அறிவிற்காக இதனால் பிரசுரம் செய்யப்படுகிறது. சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட மசோதாவிற்கு 2023-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5-ஆம் தேதி ஆளுநரின் அனுமதி கிடைக்கப்பெற்றது.

ஆளுநரின் ஆணைப்படி

வி.ஹரிநாயர்,

சட்ட செயலாளர்

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

2023-ன் 4-வது சட்டம்

2022-ன் கேரள ஆவண எழுத்தாளர்கள், நகல் எழுத்தாளர்கள் மற்றும் முத்திரை விற்பனையாளர்களின் நலநிதி (திருத்த) சட்டம்

2012-ன் கேரள ஆவண எழுத்தாளர்கள், நகல் எழுத்தாளர்கள் மற்றும் முத்திரை விற்பனையாளர்களின் நலநிதி சட்டத்தை திருத்தம் செய்வதற்கான

ஒரு

சட்டம்

முன்னுரை.- 2012-ன் கேரள ஆவண எழுத்தாளர்கள், நகல் எழுத்தாளர்கள் மற்றும் முத்திரை விற்பனையாளர்களின் நலநிதி சட்டம் பின்வரும் தேவைகளுக்காக திருத்தம் செய்வது உகந்ததாக இருப்பதால்;

இந்திய குடியரசின் எழுபத்து மூன்றாம் ஆண்டில் பின்வரும்படியான சட்டம் இயற்றப்படுகிறது.-

1. சுருக்கத்தலைப்பு மற்றும் தொடக்கம்.- (1) இந்த சட்டம் 2022-ன் கேரள ஆவண எழுத்தாளர்கள் நகல் எழுத்தானர்கள் மற்றும் முத்திரை விற்பனையாளர்களின் நலநிதி (திருத்த) சட்டம் என அழைக்கப்படலாம்.

(2) இது உடன் அமலுக்கு வருவதாகும்.

2. பிரிவு 7-இல் திருத்தம்.- 2012-ன் கேரள ஆவண எழுத்தாளர்கள், நகல் எழுத்தாளர்கள் மற்றும் முத்திரை விற்பனையானர்களின் நலநிதி சட்டம் (2013-ன் 7) (இதற்கு பிறகு முதன்மைச்சட்டம் என அழைக்கப்படும்) பிரிவு 7-இல் பின்வரும் காப்பு வாசகம் சேர்க்கப்பட வேண்டும், அதாவது:-

"ஆனால் ஓராண்டிற்கும் அதிகமான காலயளவிற்கு நிலுவை ஏற்படுத்தியுள்ள ஒரு உறுப்பினரின் உறுப்பினர் பதவி அரசு அனுமதி இல்லாமல் புதுப்பித்தல் கூடாது.".

3. 7 எ என்ற புதிய பிரிவை சேர்த்தல்.- முதன்மை சட்டத்தின் பிரிவு 7-க்கு பிறகு பின்வரும் பிரிவு சேர்க்கப்பட வேண்டும், அதாவது:-

7 எ. ஒரே தவணையில் தீர்வு திட்டம்.- பிரிவு 6-ன் துணைப்பிரிவு 2-ன் படி நிதிக்கான விகிதத்தை கட்டுவதில் வீழ்ச்சி ஏற்படுத்தி உறுப்பினர் பதவி இழுந்த நபர்களின் உறுப்பினர் பதவியை புதுப்பிப்பதற்காக அரசுக்கு, அறிக்கை வாயிலாக, ஒரே தவணை தீர்வு திட்டம் ஏற்படுத்தப்படலாம்.".

4. பிரிவு 9-ல் திருத்தம்.- முதன்மை சட்டத்தின் பிரிவு 9-ல் உட்பிரிவு (3)-ல்,-

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(i) உட்பிரிவு (எ)-ல் "அரசு செயலாளர், வரித்துறை" என்ற சொற்கள் மற்றும் குறியீடுகளுக்கு பதிலாக "பதிவுத் துறையின் பொறுப்பிலுள்ள அமைச்சர்" என்ற சொற்கள் சேர்க்கப்பட வேண்டும்.

(ii) உட்பிரிவு (பி)-ல் "பதிவுத் துறையின் இன்ஸ்பெக்டர் ஜெனரல்" என்ற சொற்களுக்கு பதிலாக "அரசு செயலாளர், வரித்துறை" என்ற சொற்கள் மற்றும் குறியீடுகள் சேர்க்கப்பட வேண்டும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

கேரள அரசு

சட்ட (சட்டமியற்றல் -எச்) துறை

அறிக்கை

எண்:168/ச.இ.எச் 1/2024/சட்டம். திருவனந்தபுரம், 2024 டிசம்பர் 20
1200 தனு 5
1946 அக்ரஹாயனம் 29

2024-ஆம் ஆண்டு டிசம்பர் 19-ஆம் தேதி கேரள ஆளுநரால் விளம்பர அறிக்கை செய்யப்பட்ட பின்வரும் அவசரச்சட்டம் பொதுமக்களின் அறிவிற்காக இதனால் பிரசுரம் செய்யப்படுகிறது.

ஆளுநரின் ஆணைப்படி,
கெ.ஜி. சனல் குமார்,
சட்ட செயலாளர்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

2024-ன் 3-வது அவசரச்சட்டம்

2024-ன் கேரள மாநில முதியோர் ஆணைய அவசரச்சட்டம்

இந்திய குடியரசின் எழுபத்து ஐந்தாம் ஆண்டில் கேரள ஆளுநரால் விளம்பர அறிக்கை செய்யப்பட்டது

முதியோர்களின் நலன் மற்றும் பாதுகாப்பு தொடர்பான வழிமுறைகள் வழங்குவதற்கும் முதியோர்களின் மறுவாழ்வை எளிதாக்குவதற்கும் அவர்களின் திறன்களும் அனுபவங்களும் பொதுமக்களுக்கு பயன்படுத்த தேவையான திட்டங்களும் செயல்பாடுகளும் ஏற்றெடுத்து செயல்படுத்துவதற்கும் உரிமை பாதுகாப்பை உறுதி செய்வதற்குமாக ஒரு முதியோர் ஆணையம் நிறுவுவதற்கும் அதனுடன் தொடர்புடையதோ அதற்கு ஏற்புடையதோ ஆன விஷயங்களுக்குமாக ஏற்பாடு செய்வதற்கான

ஒரு

அவசரச்சட்டம்

முன்னுரை- முதியோர்களின் நலன் மற்றும் பாதுகாப்பு தொடர்பான வழிமுறைகள் வழங்குவதற்கும் முதியோர்களின் மறுவாழ்வை எளிதாக்குவதற்கும் அவர்களின் திறன் பொதுமக்களுக்கு பயன்படுத்த தேவையான செயல்பாடுகள் ஏற்றெடுத்து நடத்துவதற்கும் உரிமை பாதுகாப்பை உறுதி செய்வதற்குமாக ஒரு முதியோர் ஆணையம் நிறுவுவதற்கும் அதனுடன் தொடர்புடையதோ அதற்கு ஏற்புடையதோ ஆன விஷயங்களுக்குமாக ஏற்பாடு செய்வது உகந்ததாக இருப்பதாலும்;

கேரள மாநில சட்டப்பேரவைக் கூட்டத்தொடரில் இல்லாததினாலும், தாம் துரித நடவடிக்கை எடுக்க வேண்டிய சூழ்நிலை நிலவுவதாக கேரள ஆளுநர் திருப்தியுறுவதாலும்;

தற்போது, அதனால், இந்திய அரசியலமைப்பின் 213-வது விதித்தொகுப்பின் உட்பிரிவு (1)-ன் படி வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி கேரள ஆளுநரால் பின்வரும் அவசரச்சட்டம் விளம்பர அறிக்கைச் செய்யப்படுகிறது.

அத்தியாயம் I

தொடக்கம்

1. சுருக்கத்தலைப்பும் தொடக்கமும்.- (1) இந்த அவசரச்சட்டம் 2024-ன் கேரள மாநில முதியோர் ஆணைய அவசரச்சட்டம்சட்டம் என அழைக்கப்படலாம்.

(2) இது உடன் அமலில் வருவதாகும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

2. விளக்கங்கள்.- இந்த அவசரச்சட்டத்தில், சந்தர்ப்பம் பிற வகையில் தேவைப்படாத பட்சம்,-

(எ) ''பாதுகாப்பு மையம்'' எனில் முதியோர்களை பாதுகாப்பதற்கான அரசு முதியோர் இல்லங்கள் அல்லது அனாதை இல்லம் கட்டுப்பாடு வாரியத்தின் அங்கீகாரமுள்ள முதியோர் இல்லங்கள் எனப்பொருள்படும்;

(பி) ''தலைவர்'' எனில் ஆணையத்தின் தலைவர் எனப்பொருள்படும்;

(சி) ''ஆணையம்'' எனில் பிரிவு 3-ன் படி உருவாக்கப்பட்ட கேரள மாநில முதியோர் ஆணையம் எனப் பொருள்படும்;

(டி) ''முதியோர்'' எனில் அறுபது வயதை கடந்த ஒருவர் எனப்பொருள்படும்;

(இ) ''அரசு'' எனில் கேரள அரசு எனப்பொருள்படும்;

(எஃப்) ''உறுப்பினர்'' எனில் ஆணையத்தின் ஒரு நபர் எனப் பொருள்படும்;

(ஜி) ''அறிக்கை'' எனில் அரசிதழில் வெளியிடப்பட்ட அறிக்கை எனப் பொருள்படும்;

(எச்)''முதியோர் இல்லம்'' எனில் முதியோர்களை தங்கவைக்குமிடமோ பாதுகாப்பதோ ஆன எந்தவொரு நிறுவனம் என்று பொருள்படும்;

(ஐ) ''பரிந்துரைக்கப்பட்ட'' எனில் இந்த அவசரச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளால் பரிந்துரைக்கப்பட்ட என்று பொருள்படும்;

அத்தியாயம் II

ஆணையத்தின் உருவாக்கம்

3. ஆணையத்தின் உருவாக்கம்.- (1) அரசு, இந்த அவசரச்சட்டத்தின் ஆரம்ப தேதிக்கு பிறகு கூடிய விரைவில், இந்த அவசரச்சட்டத்தின் கீழ் ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பயன்படுத்துவதற்கும் கொடுக்கப்பட்ட பொறுப்புகள் நிறைவேற்றுவதற்குமாக அறிக்கை மூலம், கேரள மாநில முதியோர் ஆணையம் என்ற பெயரில் ஒரு அமைப்பை உருவாக்க வேண்டியதாகும்.

(2) ஆணையத்தில் அரசு அறிக்கையின் மூலம், நியமிக்கப்படும் ஒரு தலைவரும் நான்கு உறுப்பினர்களுக்கு மிகாமல் உறுப்பினர்களும் இருக்க வேண்டியதாகும்.

(3) தலைவர் உட்பட ஆணையத்தில் நியமிக்கப்படும் அனைத்து உறுப்பினர்களும் முதியோர்களாகவும் முதியோர் நலத்துறையில் செயல்பாட்டு அனுபவம் பெற்றவர்களாகவும் அவர்களில் ஒருவர் அட்டவணை சமுதாயத்தில் அல்லது பழங்குடியினரை சார்ந்தவராகவும் வேறொருவர் மகளீராகவும் இருக்க வேண்டும்.

(4) அரசு கூடுதல் செயலாளர் பதவிக்கு குறையாத ஒருவரை ஆணையத்தின் செயலாளராகவும் அரசு சட்டத்துறையின் இணைச் செயலாளர் பதவிக்கு குறையாத

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

ஒருவரை ஆணையத்தின் பதிவாளராகவும் அரசு நிதித்துறையின் துணைச்செயலாளர் பதவிக்கு குறையாத ஒருவரை ஆணையத்தின் நிதி அதிகாரியாகவும் அரசு நியமிக்க வேண்டியதாகும்.

(5) துணைப்பிரிவு (4)-ன் படி நியமிக்கப்படும் அதிகாரிகளுக்கு பரிந்துரைக்கப்படக்கூடிய அதிகாரங்களும் கடமைகளும் இருப்பதாகும்.

(6) ஆணையத்தின் தலைமையகம் திருவனந்தபுரத்தில் இருக்க வேண்டும்.

4. தலைவரினுடையவும் உறுப்பினர்களினுடையவும் அலுவல் பதவிக்காலம் மற்றும் சேவை நிபந்தனைகள்:- (1) தலைவர் மற்றும் உறுப்பினர்களின் அலுவல் பதவிக்காலம் அவர்கள் மேற்குறிப்பிட்ட பதவியேற்ற நாள் முதல் மூன்று ஆண்டுகள் ஆகும்.

எனில் தலைவர், தனது பதவியில் பின்தொடர்ந்து வருபவர் பிரிவு 3-ன் துணைப்பிரிவு (2)-ன் படி நியமிக்கப்பட்டும் அவர் தனது அலுவல் பதவி ஏற்கும் வரை அல்லது ஆறு மாத காலத்திற்கோ எது முன்வருகிறதோ அதுவரை அலுவல் பதவியில் தொடரலாம்.

(2) தலைவரோ அல்லது உறுப்பினரோ அரசிடம் தெரிவித்து கொண்டு சொந்த கையெழுத்தில் எழுதப்பட்ட ஒரு ராஜினாமா கடிதத்தின் மூலம் தனது அலுவல் பதவியை ராஜினாமா செய்யலாம்.

(3) ராஜினாமா, இறப்பு, நீக்கம் செய்தல் அல்லது அதுபோன்று வேறு ஏதேனும் காரணங்களால் தலைவர் அல்லது உறுப்பினரின் பதவி தற்போது நிரப்பப்படாமல் இருந்தால் அரசு அவற்றை நிரப்ப நியமனத்தை மேற்கொள்ள வேண்டியதும் அவ்வாறு நியமிக்கப்படும் நபருக்கு, யாருடைய பதவிக்காக அவர் நியமிக்கப்படுவது அவரின் மீதமுள்ள அலுவல் பதவி காலத்திற்கு மட்டுமே பதவியில் இருக்க உரிமையுடையவராவார்.

(4) அரசிற்கு, உத்தரவின் மூலம் தலைவரையோ ஏதேனும் உறுப்பினரையோ, அவர்,-

(எ) தகுதியுடைய நீதிமன்றத்தால் திவாலானவர் என அறிவிக்கப்பட்டிருந்தால்;

(பி) அரசாங்கத்தின் கருத்துப்படி, ஒழுக்கக் கேடுகளை உள்ளடக்கிய ஒரு குற்றத்திற்காக குற்றவாளி என நிரூபிக்கப்பட்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டிருந்தால்;

(சி) மனநிலை சரியில்லாதவராகவும் தகுதியுடைய நீதிமன்றத்தால் அவ்வாறு அறிவிக்கப்பட்டிருந்தால்;

(டி) ஆணையத்தின் அனுமதியின்றி தொடர்ச்சியாக மூன்று கூட்டங்களில் கலந்து கொள்ளாமல் இருக்கவோ;

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(இ) மூதியோர் நலன்களுக்கோ பொதுநலனுக்கோ தீங்கு விளைவிக்கும் வகையில் தனது அலுவல் பதவியை துஷ்பிரயோகம் செய்ததாக அரசு உணரும்பட்சம்;

(எஃப்) செயல்பட மறுக்கவோ;

(ஜி) செயல்பட இயலாதவராக மாறினாலோ செய்வது மூலம் அலுவல் பதவியில் இருந்து நீக்கம் செய்யலாம்;

எனில் எந்த ஒருவரையும் அவருக்கு சொல்ல வேண்டியதை சொல்வதற்கு நியாயமான ஒரு வாய்ப்பு வழங்காமல் இந்த துணைப்பிரிவின் படி நீக்கம் செய்ய கூடாது.

(5) தலைவர், பதவியில் இருக்கும் வரை, ஊதியம் பெறும் வேறு வேலைகளிலோ ஊதியம் தரும் செயல்களிலோ ஈடுபடக்கூடாததுமாகும்.

(6) தலைவரோ, ஒரு உறுப்பினரோ இரண்டு முறைக்கு மேல் அலுவல் பதவியில் இருக்க தகுதியுடையவரல்ல.

எனில் துணைப்பிரிவு (3)-ன் விதிகள் படி நியமிக்கப்படுவதும் ஒரு வருடமோ அதற்கும் குறைவான காலத்திற்கு மட்டும் அலுவல் பதவியில் இருக்கும் ஒருவரின் விஷயத்தில், மேற்குறிப்பிட்ட காலம் துணைப்பிரிவு (1)-ன் படி பதவி காலமாக கணக்கிடப்படக் கூடாததுமாகும்.

(7) ஆணையத்தின் அன்றாட செயல்களில் பொதுவான மேற்பார்வை, வழிகாட்டுதல், ஆட்சி நிர்வாகம் போன்றவை தலைவரின் பொறுப்பிலிருப்பதும் மேற்குறிப்பிட்ட பொறுப்பை நிறைவேற்ற அவரை மற்ற உறுப்பினர்கள் உதவ வேண்டியதுமாகும்.

(8) தலைவர் அரசு செயலாளர் பதவியிலுள்ள ஒரு முழுநேர அதிகாரியாகவும் நிர்ணயிக்கப்படும் படியான ஊதியம் மற்றும் படி தொகைக்கு அவர் உரிமையுடையவராவார்.

(9) ஆணையம் உறுப்பினர்களுக்கு நிர்ணயிக்கப்படும் படியான கௌரவ ஊதியம், கூட்டங்களில் கலந்து கொள்வதற்கான படி தொகை அல்லது அமர்வு கட்டணங்களை பெற உரிமையுடையவராவர்.

5. ஆணையத்தின் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள்.- (1) ஆணையத்திற்கு, அதன் பொறுப்புகளை நிர்வகிக்க தேவையான அதிகாரிகளையும் ஊழியர்களையும் அரசு நியமிக்க வேண்டியதாகும்.

(2) துணைப்பிரிவு (1)-ன் படி நியமிக்கப்படும் அதிகாரிக்கும் ஊழியர்களுக்கும் வழங்க வேண்டிய ஊதியம், படி, தொகை, நியமன முறை, சேவை, தொடர்பான வேறு நிபந்தனைகள் போன்றவை தீர்மானிக்கப்படும்படி இருக்க வேண்டியதாகும்.

(6) ஊதியமும் படிகளும் ஆட்சி செலவுகளும் மானியங்களிலிருந்து வழங்கப்பட வேண்டுமென்று.- தலைவரின் ஊதியமும் படிகளும், உறுப்பினர்களுக்கு வழங்க

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

வேண்டிய கௌரவ ஊதியமும், படிகளும், அமர்வு கட்டணமும், பிரிவு 3-ன் துணைப்பிரிவு (4)-லும் பிரிவு 5-ன் துணைப்பிரிவு (1)-லும் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளினுடையவும் ஊழியர்களினுடையவும் ஊதியமும் படிகளும் ஓய்வூதியமும் உட்படவுள்ள ஆட்சி நிர்வாக செலவுகள் பிரிவு 12-ன் துணைப்பிரிவு (1)-ல் குறிப்பிடப்பட்டுள்ள மானியங்களிலிருந்து பயன்படுத்தப்பட வேண்டும்.

7. காலியிடங்கள் போன்றவை ஆணையத்தின் நடவடிக்கைகளை செல்லாததாக்காது.- ஆணையத்தின் எந்தவொரு செயல்பாடும் அல்லது நடவடிக்கையும் ஆணையத்தில் ஏதேனும் காலியிடம் உள்ளதென்றோ அல்லது அதன் அமைப்பில் ஏதேனும் குறைபாடு உள்ளதென்றோ ஆன காரணத்திற்காக மட்டும் செல்லாததாகாது.

8. ஆணையத்தின் கூட்டங்கள்.- (1) தலைவருக்கு உகந்ததென்று கருதுகின்ற அவ்வாறான இடத்திலும் அவ்வாறான நேரத்திலும் பரிந்துரைக்கப்பட்ட படியான நடைமுறைகள் பின்பற்றி ஆணையத்தின் கூட்டம் சேர வேண்டியதாகும்.

(2) ஆணையத்தின் அனைத்து உத்தரவுகளும் முடிவுகளும் தலைவரினுடையவோ அல்லது இதற்காக ஆணையம் அதிகாரப்படுத்தும் படியான பதிவாளரின் கையொப்பத்துடன் சான்றளிக்கப்பட வேண்டியதும் ஆணையத்தால் தயாரிக்கப்பட்ட பிற ஆவணங்கள் செயலாளர் அல்லது செயலாளராக செயல்படும் அதிகாரியின் கையொப்பத்துடன் சான்றளிக்கப்பட வேண்டியதுமாகும்.

(3) ஆணையம், அதன் முன் உள்ள ஏதேனும் காரியங்களின் நிர்வாகத்தின் தேவைக்காகவோ ஏதேனும் சிறப்பு விஷயம் பரிசீலிப்பதற்காகவோ மேற்குறிப்பிட்ட விஷயத்தில் சிறப்பு வாய்ந்த இரண்டில் கூடாத நபர்களை சிறப்பு அழைப்பாளர்களாக அழைத்தும் கூட்டங்களில் பங்கேற்க செய்தும் ஆனால் அவர்களுக்கு ஆணையத்தின் கூட்டங்களில் வாக்களிக்கும் உரிமை இல்லாததுமாகும்.

(4) துணைப்பிரிவு (3)-ன் படி அழைக்கப்படும் நபர்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட படியாள படிகளுக்கு உரிமையுடையவராவர்.

அத்தியாயம் III

ஆணையத்தின் கடமைகள், அதிகாரங்கள் போன்றவை

9. ஆணையத்தின் கடமைகள்.- (1) இந்த அவசரச்சட்டத்தின் விதிகளுக்கு உட்பட்டு, முதியோர்களின் நலனிற்கும் பாதுகாப்பிற்குமான வழிமுறைகள் வழங்குவதும் உதவுவதும் அவர்களுக்கு மறுவாழ்வு தேவைப்படும் இடங்களில் அரசுடன் இணைந்து அது கிடைக்கச்செய்யும் ஏதேனும் முறையிலான சட்ட உதவி தேவைப்படும் நேரத்தில் அதை வழங்குவதும் முதியோர்களின் திறன்களையும் அனுபவத்தையும் பொதுமக்களுக்கு பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு செயல்படுத்துவதும்

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

அரசு அவ்வப்போது ஆணையத்திற்கு வழங்கும் அவ்வாறான வேறு கடமைகளை நிர்வகிப்பதும் ஆணையத்தின் கடமையாகும்.

(2) ஆணையம் அதன் இலக்கை அடைவதற்காக பின்வரும் கடமைகளை நிர்வகிக்க வேண்டும், அதாவது,-

(எ) மூதியோர் நலனுக்காகவும், பாதுகாப்பிற்குமாக இந்திய அரசியலமைப்பிலோ அல்லது தற்போது நடைமுறையில் உள்ள வேறு ஏதேனும் சட்டத்திலோ உத்தரவிலோ உள்ள விதிகளை செயல்படுத்துவது குறித்து ஆய்வுகள் அல்லது விசாரணைகள் மேற்கொண்டு தேவையான தீர்வு நடவடிக்கைகளை பரிந்துரைத்தல்;

(பி) மூதியோர் நலன் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக அரசின் பல்வேறு துறைகளை ஒருங்கிணைக்கச் செய்தல்;

(சி) கைவிடப்பட்ட அல்லது அனாதையான மூதியவர்களை பாதுகாப்பு ணமயங்களில் கொண்டு சேர்க்க தேவையான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்;

(டி) மூதியோர் நலன் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக திட்டமிடப்பட்டு செயல்படுத்தக்கூடிய திட்டங்கள் குறித்து அரசிற்கு ஆலோசனை வழங்குதல்;

(இ) மூதியோர்களின் உரிமை, பாதுகாப்பு, நலன் போன்றவை தொடர்பான விதிகள் மறுக்கப்பட்டதாகவோ மீறப்பட்டதாகவோ மூதியோர்களுக்கெதிராக வன்முறைகள் ஏற்பட்டதாகவோ புகார் கிடைத்ததாகவோ கவனத்திற்கு வந்தால் அவ்வாறான விதிகளின் மீறல், மறுப்பு, வன்முறை குறித்து முதல் பார்வையிலேயே தெரிந்தால் ஒரு முதற்கட்ட விசாரணை நடத்தி எழுத்துபூர்வமான அறிக்கை தயாரித்து, விரைவில் சம்மந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்து தொடர் நடவடிக்கைகளுக்கு பரிந்துரை செய்தும் பொருத்தமான வழக்குகளில் தொடர்புடைய சட்ட உதவி குழுமங்களின் உதவியை வழங்க செய்தல்;

(எ.ஃப்) மூதியோர்களை சிறையில் வைக்கும் சிறைச்சாலைகள், லாக்கப்புகள், காவல் தொடர்பான பிற இடங்கள் போன்ற இடங்களிலிருந்து பெறப்படும் புகார்களின் மேல் விசாரணை நடத்தி தொடர்புடைய அதிகாரிகளுக்கு அறிக்கைகளை சமர்ப்பித்தல்;

(ஜி) மூதியோர்களின் ஸ்டாட்டஸ் ஸ்டேட்மென்ட் தயாரித்து வெளியிட வேண்டும்.

(எச்) அல்லப்போது ஆணையத்தின் பரிசீலனைக்காக பரிந்துரைக்கப்படும் பிற விஷயங்களில் அரசிற்கு ஆலோசனை வழங்குதல்;

10. ஆணையத்தின் அதிகாரங்கள்.- (1) ஆணையம், அதன் கடமைகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக,-

(எ) அரசு அனுமதியுடன் ஏதேனும் அரசாங்க அதிகாரியினுடையவோ; அல்லது

(பி) அரசிற்கு சொந்தமான மாநகராட்சிகள், வாரியங்கள், உள்ளாட்சி அதிகாரிகளின் அனுமதியுடனும் அரசின் ஒப்புதலுடனும் தொடர்புடைய

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

மாநகராட்சியினுடையவோ, வாரியத்தினுடையவோ உள்ளாட்சி அதிகாரிகளினுடையவோ, ஏதேனும் அதிகாரியினுடையவோ, சேவைகளை பயன்படுத்த அதிகாரம் இருப்பதாகும்.

(2) ஆணையத்திற்கு, பிரிவு 9-ன் கீழுள்ள அதன் கடமைகளை செய்யும்போது, பின்வரும் காரியங்கள் குறித்து 1908-ன் சிவில் நடைமுறை சட்டத்தின் (1908-ன் 5-ஆம் மத்திய சட்டம்) கீழ் ஒரு வழக்கு விசாரணை செய்யும் ஒரு சிவில் நீதிமன்றத்தின் அனைத்து அதிகாரங்களும் கொண்டிருக்கும், அதாவது:-

(எ) ஏதேனும் நபரை அழைக்கவும் ஹாஜர் உறுதி செய்வதற்கும் உண்மை அறிக்கையின் மேல் விசாரிப்பதற்கும்;

(பி) ஏதேனும் ஆவணங்களை கண்டடைவதற்கும் சமர்ப்பிக்கவும், தேவைப்படுவதற்கும்;

(சி) சத்தியவாக்கு மூலத்தின் மேல் ஆதாரம் பெறுவதற்கும்;

(டி) ஏதேனும் நீதிமன்றத்திலிருந்தோ அலுவலகத்திலிருந்தோ வேறு நிறுவனத்திலிருந்தோ ஏதேனும் பொது ஆவணமோ அதன் நகலோ தேவைப்படுதவதற்கும்;

(இ) சாட்சிகளை விசாரிப்பதற்கும் ஆவணங்களை பரிசோதிப்பதற்குமாக ஆணையங்களை நியமிக்கவும்; மேலும்

(எஃப்) பரிந்துரைக்கப்படக்கூடிய பிற ஏதேனும் விஷயம்;

(3) பிரிவு 9-ன் கீழில் ஆணையம் ஒரு விசாரணை நடத்தும்போது, சம்மந்தப்பட்ட தரப்பினருக்கு நேரிலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி மூலமாகவோ தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க நியாயமான ஒரு வாய்ப்பு வழங்க வேண்டும்.

(4) இந்த அவசரச்சட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட எந்தவொரு விசாரணையிலும் ஆணையத்தின் முடிவுகள் அதன் பரிந்துரையுடன் உரிய நடவடிக்கைகாகவோ அல்லது சர்ச்சையில் ஈடுபட்ட தரப்பினருக்கு தீர்வு காணவோ விசாரணை முடித்து ஒரு மாதத்திற்குள் அரசிடம் அனுப்ப வேண்டியதாகும்.

(5) விசாரணையின் பகுதியாக ஆணையத்தின் முன் ஒருவர் அவரை குறித்து வழங்கும் அறிக்கையோ மொழியோ, அத்தகைய அறிக்கையோ மொழியின் மூலம் தவறான சாட்சியமளித்ததற்காக வழக்கு தொடரும் நடவடிக்கைகளில் தவிர, ஏதேனும் சிவில் நீதிமன்றத்திலோ குற்றவியல் நீதிமன்றத்திலோ உள்ள நடவடிக்கைகளில் அத்தகைய நபருக்கு எதிராக பயன்படுத்தபடக்கூடாது.

11. ஆணையத்திற்கான பங்களிப்புகள், எண்டோவ்மெண்ட்கள் போன்றவை.- ஆணையம், அரசின் முன் ஒப்புதலுடனும் அரசு இந்த விஷயத்தில் பரிந்துரைக்கின்ற அத்தகைய விதிமுறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டும், பல்வேறு வகையான

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

இலக்கியமும் கலாச்சாரமும் விளையாட்டும் ஆன செயல்களில் முதியோர்களை ஊக்குவிப்பதற்காக என்டோவ்மென்ட்கள் உருவாக்கவும் பரிசுகள் அல்லது விருதுகளோ வழங்கவும் அதற்காக எந்தவொரு அமைப்பிடமிருந்தோ தனி நபரிடமிருந்தோ நன்கொடையாகவோ பங்களிப்பாகவோ அல்லது பிற ஏதேனும் பெயரிலோ பணத்தை பெறுவதற்கும் அதிகாரம் இருப்பதாகும்.

அத்தியாயம் IV

நிதி, கணக்குகள், தணிக்கை மற்றும் ஆண்டு அறிக்கையும்

12. அரசிடமிருந்துள்ள மானியங்கள்.- (1) அரசு, சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட சட்டம் மூலம் முறையே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட பிறகு, இந்த அவசரச்சட்டத்தின் தேவைகளுக்கு பயன்படுத்துவதற்காக உகந்ததென்று கருதக்கூடிய அத்தகைய தொகை மானியமாக ஆணையத்திற்கு வழங்க வேண்டும்.

(2) ஆணையத்திற்கு, இந்த அவசரச்சட்டத்தின் கீழுள்ள கடமைகளை செய்வதற்கு தேவையென்று கருதும் படியான தொகை, மானியத்திலிருந்து செலவிடப்பட வேண்டியதும் அத்தகைய தொகை துணைப்பிரிவு (1)-ல் குறிப்பிடப்பட்டுள்ள மானியத்திலிருந்து செலுத்த வேண்டிய செலவாக கருதப்பட வேண்டும்.

13. கணக்குகளும் தணிக்கையும்.- (1) ஆணையத்திற்கு முறையான கணக்குகளும் பிற முக்கிய ஆவணங்களை பராமரிக்க வேண்டியதும், அக்கவுண்டன்ட் ஜனரலுமாக கலந்தாலோசித்து பரிந்துரைக்கப்படும் படிவத்தில் கணக்குகளின் ஒரு ஆண்டு அறிக்கையை தயாரிக்க வேண்டியதுமாகும்.

(2) ஆணையத்தின் கணக்குகள், அக்கவுண்டன்ட் ஜனரல் ஒவ்வொரு நிதியாண்டிலும் தணிக்கை செய்ய வேண்டியதும் அத்தகைய தணிக்கை தொடர்பாக ஏற்படும் செலவுகள் அக்கவுண்டன்ட் ஜனரலுக்கு ஆணையம் வழங்க வேண்டியதுமாகும்.

(3) அக்கவுண்டன்ட் ஜனரலிற்கோ இந்த அவசரச்சட்டத்தின் கீழ் ஆணையத்தின் கணக்குகளின் தணிக்கை தொடர்பாக அவரால் நியமிக்கும் வேறு ஏதேனும் நபருக்கோ, சாதாரணமாக அக்கவுண்ட் ஜனரலுக்கு அரசு கணக்குகளின் தணிக்கை செய்யும் போதுள்ள அதே அதிகாரங்களும் சலுகைகளும் இருக்கும், குறிப்பாக புத்தகங்கள், கணக்குகள் மற்றும் தொடர்புடைய வவுச்சர்களும் பிற ஆவணங்களும் பேப்பர்களும் சமர்பிக்க கோரவும் ஆணையத்தின் எந்தவொரு அலுவலகமும் ஆய்வு செய்தவற்குமான அதிகாரம் இருப்பதுமாகும்.

(4) அக்கவுடன்ட் ஜெனரல் அல்லது அவர் இந்த தேவைகளுக்காக நியமிக்கப்பட்ட வேறு ஏதேனும் நபர் சான்றளிக்கப்பட்ட படியான ஆணையத்தின் கணக்குகள், அதன்

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

மீதான தணிக்கை அறிக்கையுடன் சேர்த்து, ஆணையம் ஒவ்வொரு நிதியாண்டும் அரசிற்கு அனுப்ப வேண்டியதும் அரசு அது பெறப்பட்ட நாளிலிருந்து ஆறு மாதங்களுக்குள் தணிக்கை அறிக்கையை சட்டமன்றத்தின் முன் வைக்க வேண்டியதுமாகும்.

14. ஆணையத்தின் ஆண்டு அறிக்கை.- (1) ஆணையம் ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிற்கு பிறகு மூன்று மாதங்களுக்குள், பரிந்துரைக்கப்பட்ட அத்தகையை படிவத்திலும் அத்தகைய முறையிலும் முந்தைய நிதியாண்டில் ஏற்றெடுத்த செயல்பாடுகளினுடையவும் நிகழ்ச்சிகளினுடையவும் முழு விவரங்களையும் காட்டும் ஒரு ஆண்டு அறிக்கை அரசிற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

(2) துணைப்பிரிவு (1)-ன் படியான அறிக்கையின் ஒரு நகல், அது கிடைத்த பிறகு ஆறு மாதங்களுக்குள் அரசு, சட்டமன்றத்தின் முன் வைக்க வேண்டியதாகும்.

அத்தியாயம் V

பலவகை

15. நன்னம்பிக்கையுடன் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு பாதுகாப்பு.- இந்த அவசரச்சட்டத்தின் கீழ் நன்னம்பிக்கையுடன் செய்ததோ செய்ய நினைத்ததோ ஆன ஏதேனும் விஷயம் குறித்து தலைவரோ வேறு எந்த ஒரு உறுப்பினருக்கோ செயலாளருக்கோ ஆணையத்தின் பரிந்துரையின் படி செயல்படும் ஆணையத்தின் வேறு அதிகாரிக்கோ ஊழியர்கோ எதிராக எந்தவித வழக்கு, தண்டனை நடவடிக்கை, சட்ட நடவடிக்கை நிலை நிற்பதில்லை.

16. தலைவர், உறுப்பினர், செயலாளர், பிற அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் பொது ஊழியர்களாக இருப்பார்களென்று.- தலைவர், உறுப்பினர், செயலாளர், பிற அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் 2023-ன் பாரதீய நியாய சம்ஹிதயின் (2023-ன் 45-வது மத்திய சட்டம்) பிரிவு 2-ன் உட்பிரிவு 28-ன் பொருளுக்குள் வரும் பொது ஊழியர்களாக கருத வேண்டியதாகும்.

17. பிற சட்டங்களின் பாதமாவதை தடைசெய்வதில்லையென்று.- இந்த அவசரச்சட்டத்தின் விதிகள் தற்போது நடைமுறையிலுள்ள பிற ஏதேனும் சட்டத்திற்கு கூடுதலாகவும் அதற்கு பாதிப்பு வராமலும் இருக்கும்.

18. சிரமங்களை நீக்கும் செய்வதற்கான அதிகாரம்.- (1) இந்த அவசரச்சட்டத்தின் விதிகளை நடைமுறைப்படுத்த ஏதேனும் சிரமம் ஏற்பட்டால், அரசிற்கு, அரசிதழில் வெளியிடப்பட்ட உத்தரவின் மூலம் அத்தகைய சிரமம் நீக்குவதற்கு அவசியமென்றோ உகந்ததென்றோ கருதுவதும் இந்த அவசரச்சட்டத்தின் விதிகளுக்கு முரணாக இல்லாததுமான விதிகளை இயற்றலாம்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

ஆனால் அவ்வாறான் எந்தவொரு உத்தரவும் இந்த அவசரச்சட்டம் நடைமுறையில் வந்த நாளிலிருந்து இரண்டு ஆண்டிற்கு பிறகு பிறப்பிக்கப்பட கூடாது.

(2) துணைப்பிரிவு (1)-ன் கீழ் இயற்றப்பட்ட எந்தவொரு உத்தரவும் அது இயற்றப்பட்ட பிறகு, முடிந்தளவு வேகமாக சட்டமன்றத்தின் முன் சமர்ப்பிக்க வேண்டும்.

19. விதிகளை உருவாக்குவதற்கான அதிகாரம்.- (1) அரசிற்கு, அரசிதழ் மூலம், இந்த அவசரச்சட்டத்தின் விதிகளை நடைமுறைப்படுத்துவதற்காக விதிகளை உருவாக்கலாம்

(2) குறிப்பாக, மேற்கூறிய அதிகாரத்தின் பொதுவான தன்மைக்கு பாதிப்பு வராமலும், அவ்வாறான விதிகளில் பின்வரும் அனைத்தும் அல்லது ஏதேனும் விஷயங்களுக்காக ஏற்பாடு செய்யலாம், அதாவது.-

(எ) தலைவருக்கு வழங்க வேண்டியதான ஊதியமும் படிகளும், சேவை தொடர்பான பிற நிபந்தனைகளும், ஏற்பாடுகளும், உறுப்பினர்களுக்கு வழங்க வேண்டியதான கௌரவ ஊதியமும் படிகளும் அல்லது அமர்வு கட்டணமும்.

(பி) பிரிவு 3-ன் துணைப்பிரிவு (4)-ன் படி நியமிக்கப்படும் செயலாளர், பதிவாளர், நிதி அதிகாரி போன்றோரின் அதிகாரங்களும், பொறுப்புகளும்;

(சி) பிரிவு 5-ன் படி ஆணையத்தில் நியமிக்கப்பட வேண்டிய அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் நியமன முறையும் ஊதியமும், படிகளும் சேவை நிபந்தனைகளும்;

(டி) பிரிவு 8-ன் துணைப்பிரிவு (1)-ன் படி ஆணையத்தின் கூடடததை சேர்க்க பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்;

(இ) பிரிவு 8-ன் துணைப்பிரிவு (3)-ன் படி சிறப்பு அழைப்பாளர்களுக்கு வழங்க வேண்டிய படிகளும்;

(எ.ஃப்) பிரிவு 10-ன் துணைப்பிரிவு (1)-ன் படி பொறுப்புகளை செய்யும் அதிகாரிகளுக்கு வழங்க வேண்டிய படிகளும் பிற சலுகைகளும்;

(ஜி) பிரிவு 13-ன் துணைப்பிரிவு (1)-ன் படியான ஆணையத்தின் வருடாந்திர அறிக்கையை தயாரிப்பதற்கான படிவம்;

(எச்) பிரிவு 14-ன் துணைப்பிரிவு (1)-ன் படி ஆணையம் தயாரிக்க வேண்டிய வருடாந்திர அறிக்கையின் படிவம் மற்றும் காலவரம்பு;

(ஐ) பரிந்துரைக்கப்பட வேண்டிய அல்லது பரிந்துரைக்கப்பட கூடிய பிற விஷயங்கள்;

(3) இந்த அவசரச்சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட எந்தவொரு விதியும், அது இயற்றப்பட்ட பிறகு மிகவும் விரைவில், சட்டமன்ற கூட்டத்தொடரில் இருக்கும்போது சட்டமன்றத்திற்கு முன், ஒரு கூட்டத்தொடரிலோ தொடர்ச்சியான இரண்டு கூட்டத்தொடரிலோ மொத்தம் பதினான்கு நாட்களுக்கு வைக்க வேண்டியதும், அவ்வாறு

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

அது எந்த கூட்டத்தொடரில் வைக்கப்படுகிறதோ அந்த கூட்டத்தொடரோ அடுத்த கூட்டத்தொடரோ முடிவதற்கு முன் சட்டமன்றம் மேற்குறிப்பிட்ட விதியில் ஏதேனும் திருத்தம் செய்வதோ அல்லது அந்த விதி உருவாக்க வேண்டாம் என்று முடிவு செய்தால், அந்த விதி அதன் பின்னர், அதது காரியம் போல, அவ்வாறு திருத்தம் செய்த வடிவத்தில் மட்டும் அதிகாரம் இருப்பதோ அல்லது எந்தவித அதிகாரமும் இல்லாமல் இருப்பதோ செய்வது ஆகும். எதுவாயினும் அவ்வாறான ஏதேனும் திருத்தமோ, இரத்து செய்தலோ அந்த விதியின் படி முன் செய்துள்ள ஏதேனும் காரியத்தின் தன்மைக்கு பாதிப்பு ஏற்படாத முறையிலிருக்க வேண்டும்.

ஆரிஃப் முகம்மது கான்,
ஆளுநர்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

கேரள அரசு

சட்ட (சட்டமியற்றல் -எ) துறை

அறிக்கை

எண்:108/ச.இ.எ 2/2024/சட்டம். திருவனந்தபுரம், 2024 செப்டம்பர் 27
1200 கன்னி 11
1946 அஷ்வினா 5

2024-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27-ஆம் தேதி கேரள ஆளுநரால் விளம்பரம் செய்யப்பட்ட பின்வரும் அவசரச்சட்டம் பொதுமக்களின் அறிவிற்காக பிரசுரம் செய்யப்படுகிறது.

ஆளுநரின் ஆணைப்படி,

சுஜித்ரா கெ.ஆர்.
சிறப்பு செயலாளர் (சட்டம்).

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

2024-ன் 2-வது எண் அவசரச்சட்டம்

2024-ன் கேரள வரிவிதிப்பு சட்டங்கள் (திருத்த) அவசரச்சட்டம்

இந்திய குடியரசின் எழுபத்து ஐந்தாவது ஆண்டில் கேரள ஆளுநரால் அறிக்கை செய்யப்பட்டது

2008-ன் கேரள நிதிச் சட்டம், 2017-ன் கேரள மாநில சரக்கு மற்றும் சேவை வரிச்சட்டம் மற்றும் 2024-ன் கேரள நிதிச்சட்டம் மீண்டும் திருத்தம் செய்வதற்குரிய

ஒரு

அவசரச்சட்டம்

முன்னுரை.- 2008-ன் கேரள நிதிச்சட்டம் (2008-ன் 21), 2017-ன் கேரள மாநில சரக்கு மற்றும் சேவை வரிச்சட்டம் (2017-ன் 20) மற்றும் 2024-ன் கேரள நிதிச் சட்டம் (2024-ன் 18), இதற்குப் பிறகு வரும் தேவைகளுக்காக மீண்டும் திருத்தம் செய்வது உகந்ததாக இருப்பதால்;

மேலும் கேரள மாநில சட்டப்பேரவை கூட்டத்தொடரில் இல்லாததாலும் தாம் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை நிலவுவதாக கேரள ஆளுநர் திருப்தியுறுவதாலும்;

தற்போது, அதனால், இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 213-வது விதித்தொகுப்பின் உட்பிரிவு (1)-ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி பின்வரும் அவசரச்சட்டம் கேரள ஆளுநரால் விளம்பர செய்யப்படுகிறது-

1. சுருக்கத்தலைப்பும் தொடக்கமும்.- (1) இந்தச் அவசரச்சட்டம் 2024-ன் கேரள வரி விதிப்பு சட்டங்கள் (திருத்த) அவசரச்சட்டம் என அழைக்கப்படலாம்.

(2) இந்த அவசரச்சட்டத்தில் வேறு வகையில் வழங்கப்பட்டுள்ளது தவிர,-

(எ) இந்த அவசரச்சட்டத்தின் பிரிவுகள் 3 மற்றும் 5 2024-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 1-ஆம் தேதி அமலுக்கு வந்ததாக கருதப்பட வேண்டியதாகும்;

(பி) இந்த அவசரச்சட்டத்தின் பிரிவு 4-ன் துணைப்பிரிவு (34) 2024-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ஆம் தேதி அமலுக்கு வருவதாகும்.

(சி) இந்த அவசரச்சட்டத்தின் பிரிவு 4-ன் துணைப்பிரிவுகள் (1) மற்றும் (8) 2025-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி அமலுக்கு வருவதாகும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(டி) இந்த அவசரச்சட்டத்தில் மீதமுள்ள விதிகள், அரக அரசிதழ் அறிக்கை வாயிலாக, நிச்சயித்துள்ள படியான தேதியில் அமலுக்கு வருவதாகும்;

ஆனால், இந்த அவசரச்சட்டத்தில் பல்வேறு வகையான விதிமுறைகளுக்கு வெவ்வேறு தேதிகளை அமைக்கலாம், இந்த அவசரச்சட்டத்தின் ஆரம்பம் குறித்து அத்தகைய ஏதேனும் விதிமுறையில் உள்ள ஏதேனும் குறிப்பு, மேற்கூறிய விதிமுறையின் அமலாக்கம் தொடர்பான ஒரு குறிப்பாக எடுத்துக் கொள்ள வேண்டியதாகும்.

2. 2008-ன் 21-வது சட்டம், 2017-ன் 20-வது சட்டம் மற்றும் 2024-ன் 18-வது சட்டம் தற்காலிகமாக திருத்தப்பட வேண்டும்.- இந்த அவசரச்சட்டம் அமலில் உள்ள காலத்தில் 2008-ன் கேரள நிதிச்சட்டம் (2008-ன் 21), 2017-ன் கேரள மாநில சரக்கு மற்றும் சேவை வரிச்சட்டம் (2017-ன் 20) மற்றும் 2024-ன் கேரள நிதிச்சட்டம் (2024-ன் 18) ஆகியவை முறையே பிரிவுகள் 3 முதல் 5 வரை குறிப்பிடப்பட்டுள்ள திருத்தங்களுக்கு உட்பட்டு அமலில் இருக்கும்.

3. 2008-ன் 21-வது சட்டத்திருத்தம்.- 2008-ன் கேரள நிதி சட்டத்தின் (2008-ன் 21) பிரிவு 6-ன் துணைப்பிரிவு (5)-க்கு பிறகு, பின்வரும் துணைப்பிரிவு சேர்க்கப்பட வேண்டியதாகும், அதாவது,-

''(6) இந்த பிரிவில் என்னதான் அடங்கியிருந்தாலும், குறிப்பிட்ட உத்தரவு தொடர்பாக நிலுவையை தீர்ப்பதற்காக , 2024-ன் கேரள நிதிச்சட்டம் (2024-ன் 18)-ன் அத்தியாயம் III-ன் கீழ் உள்ள தீர்வுச் சான்றிதழ் வழங்கியுள்ள சங்கதிகளில் அத்தகைய குறிப்பிட்ட உத்தரவு தொடர்பாக இத்துறை அடிப்படையிலான வரி நிலுவையில் செலுத்த வேண்டிய செஸ் 2024-ன் கேரள நிதிச் சட்டம் (2024-ன் 18)-ன் அத்தியாயம் III-ன் கீழ் தீர்க்கப்பட்டதாக கருதப்பட வேண்டியதும் அத்தகைய செஸ் செலுத்த வேண்டிய பொறுப்பில் இருந்து வியாபாரி விடுவிக்கப்படுவார்.

ஆனால், அத்தகைய செஸ் இதற்குள் செலுத்தியிருந்தால், அது திரும்ப வழங்கப்பட மாட்டாது.

விளக்கம்.- இப்பிரிவின் தேவைக்காக, ''வரி அல்லது கூடுதல் கட்டணத்தின் நிலுவை'', ''தீர்ப்புச் சான்றிதழ்'', ''குறிப்பிட்ட உத்தரவு'' ஆகிய சொற்றொடர்களுக்கு 2024-ன் கேரள நிதிச் சட்டம் (2024-ன் 18)-ல் அவற்றிற்கு வழங்கியுள்ள அதே பொருளை கொண்டிருக்கும்.

4. 2017-ன் 20-வது சட்டத்திருத்தம்.- 2017-ன் கேரள மாநில சரக்கு சேவை வரிச் சட்டத்தில் (2017-ன் 20),-

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(1) பிரிவு 2-ன் உட்பிரிவு (61)-க்கு பதிலாக, பின்வரும் உட்பிரிவு சேர்க்கப்பட வேண்டியதாகும், அதாவது:-

''(61) ''உள்ளீட்டு வள சேவை விநியோகஸ்தர்'' எனில் பிரிவு 25-ல் குறிப்பிட்டுள்ள தனிப்பட்ட நபர்கள் அல்லது அவர்களின் சார்பாக, பிரிவு 9-ன் துணைப்பிரிவு (3) அல்லது துணைப்பிரிவு (4)-ன் படி வரி விதிக்கக்கூடிய சேவைகளுக்கான விலைப்பட்டியல்கள் உட்பட, உள்ளீட்டு வள சேவைகளைப் பெறுவதற்கான வரி விலைப் பட்டியல்களைப் பெற்று பிரிவு 20-ல் வழங்கப்பட்டுள்ள முறையில் உள்ளீட்டு வரி வரவு தொடர்பான அத்தகைய விலை பட்டியல் விநியோகம் செய்வதற்கு பொறுப்புள்ளவருமான, சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இரண்டையும் விநியோகஸ்தரின் ஏதேனும் அலுவலகம் எனப்பொருள்படும்,'';

(2) பிரிவு 9-ன் துணைப்பிரிவு (1)-ல் ''மதுபானத்தின்'' என்ற சொல்லுக்கு பதிலாக ''மதுபானத்தின் மற்றும் கலப்படம் செய்யப்படாத கூடுதல் நடுநிலை ஆல்கஹாலினுடையவோ அல்லது மதுபானம் தயாரிக்க பயன்படுத்தப்படும் சுத்திகரிக்கப்பட்ட சாராயத்தினுடையவோ'' என்ற சொற்கள் சேர்க்கப்பட வேண்டியதாகும்;

(3) பிரிவு 10-ன் துணைப்பிரிவு (5)-ல் ''பிரிவு 73 அல்லது பிரிவு 74'' என்ற சொல், மற்றும் எண்ணுக்கு பிறகு ''அல்லது பிரிவு 74 ஏ'' என்ற சொல், எண் மற்றும் எழுத்து சேர்க்கப்பட வேண்டியதாகும்;

(4) பிரிவு 11-க்கு பிறகு பின்வரும் பிரிவு சேர்க்கப்பட வேண்டியதாகும், அதாவது:-

''11 ஏ. பொது நடைமுறையின் விளைவாக விதிக்கப்பட்டுள்ளதோ குறைவாக விதிக்கப்பட்டுள்ளதோ ஆன சரக்கு சேவை வரி வசூலிக்காமல் இருப்பதற்கான அதிகாரம்:- இந்த சட்டத்தில் என்னதான் உட்பட்டிருந்தாலும்

(எ) ஏதேனும் சரக்குகளின் அல்லது சேவைகளின் அல்லது இரண்டினுடைய விநியோகத்தில் மாநில வரி விதிப்பது தொடர்பாக (வரி விதிக்காதது உட்பட) பொதுவாக நடைமுறையில் இருந்ததோ இருப்பதோ ஆன ஒரு நடைமுறையும்;

(பி) அத்தகைய விநியோகத்திற்கு,-

(i) மாநில வரி, மேற்கூறிய நடைமுறைக்கு ஏற்ப, மாநில வரி விதிக்கப்படாததோ அல்லாததோ ஆன சங்கதிகளில்; அல்லது

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(ii) மேற்கூறிய நடைமுறைக்கு ஏற்ப, விதிக்கப்பட்டதோ விதிக்கப்படாததோ ஆன மாநில வரியை விட அதிக தொகை, பொறுப்பாக இருந்ததோ பொறுப்பிலிருப்பதாகவோ அரசு உணரும் பட்சம்;

அரசுக்கு, குழுமத்தின் பரிந்துரையின் பேரில், அதிகாரப்பூர்வ அரசிதழ் வாயிலாக, மேற்கூறிய நடைமுறைக்கு அத்தகைய விநியோகத்தில் செலுத்த வேண்டியதான முழுமையான மாநில வரி அல்லது அத்தகைய விநியோகத்தில் கூடுதலாக செலுத்த வேண்டிய மாநில வரி, அதது சங்கதி போல், மேற்கூறிய நடைமுறைக்கு ஏற்றவாறு மாநில வரி விதிக்கப்பட்டுள்ளதோ விதிக்கப்பட வேண்டியதோ அல்லது குறைவாக விதிக்கப்பட்டதோ விதிக்கப்பட வேண்டியதோ ஆன விநியோகங்கள் தொடர்பாக மாநில வரி செலுத்தப்பட வேண்டிய அவசியமில்லை என்று பரிந்துரைக்கலாம்.'';

(5) பிரிவு 13-ன் துணைப்பிரிவு (3)-ல்,-

(i) உட்பிரிவு (பி)-ல், ''விநியோகம் செய்கின்ற நபர்'' என்ற சொற்கள் மற்றும் சின்னங்களுக்கு பதிலாக விநியோகம் செய்கின்ற நபர், ''விநியோகம் செய்கின்ற நபரால் விலைப்பட்டியல் வழங்க வேண்டிய சங்கதிகளில் அல்லது'' என்ற சொற்களும் மற்றும் சின்னங்களும் சேர்க்கப்பட வேண்டும்.

(ii) உட்பிரிவு (பி)-க்கு பிறகு பின்வரும் துணைப்பிரிவு சேர்க்கப்பட வேண்டியதாகும்; அதாவது.-

''(சி) பெறுநரால் விலைப்பட்டியல் வழங்கப்பட வேண்டிய சந்தர்ப்பங்களில், பெறுநரால் விலைப்பட்டியல் வழங்கப்பட்ட தேதி;'';

(iii) முதல் காப்பு வாசகத்தில் ''அல்லது உட்பிரிவு (பி)'' என்ற சொற்கள் அடைப்பு குறிகள் மற்றும் எழுத்துக்கு பிறகு ''அல்லது உட்பிரிவு (சி) என்ற சொற்கள், அடைப்புக் குறிகள் மற்றும் எழுத்து சேர்க்கப்பட வேண்டியதாகும்;

(6) பிரிவு 16-ன், துணைப்பிரிவு (4)-க்கு பிறகு பின்வரும் துணைப்பிரிவு சேர்க்கப்பட வேண்டியதாகும், அதாவது.-

''(5) துணைப்பிரிவு (4)-ல் என்னதான் அடங்கியிருந்தாலும், 2017-18, 2018-19, 2019-20, 2020-21 ஆகிய நிதி ஆண்டுகள் தொடர்பான சரக்குகள் மற்றும் சேவைகள் அல்லது இரண்டினுடையவோ விநியோகத்திற்கான விலைப்பட்டியல் அல்லது பற்று குறிப்பு அல்லது இரண்டிலும், பதிவு செய்யப்பட்ட நபருக்கு 2021 நவம்பர் மாதம் 30-ஆம் தேதி வரை பிரிவு 39-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட எந்தவொரு வருமான வரி அறிக்கையிலும் உள்ளீட்டு வரி வருவாய் பெறும் அதிகாரம் உள்ளதாகும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(6) பிரிவு 29-ன் அடிப்படையில் பதிவு செய்த ஒரு நபரின் பதிவு இரத்து செய்யப்படவும் அது தொடர்ந்து பிரிவு 30-ன் கீழ் அல்லது மேல்முறையீட்டு ஆணையமோ மேல்முறையீட்டு தீர்ப்பாயமோ நீதிமன்றமோ பிறப்பித்த ஏதேனும் உத்தரவின்படியோ பதிவு இரத்து செய்யப்படும்போது, பதிவு இரத்து செய்த உத்தரவு தேதியில் ஒரு விலைப்பட்டியல் அல்லது பற்று குறிப்பு உள்ள உள்ளீட்டு வரி வருவாய் துணைப்பிரிவு (4)-ன் கீழ் கட்டுப்படுத்த முடியவில்லை எனில், பிரிவு 39-ன் கீழ் பொருட்களின் அல்லது சேவைகளின் அல்லது இரண்டினுடையவும் விநியோகத்திற்காக அத்தகைய ஒரு விலைப்பட்டியலின் அல்லது பற்று குறிப்பின் உள்ளீட்டு வரி வருவாய் பெறுவதற்கு அந்த நபர் தகுதியுடையவராவர்.

(i) அத்தகைய விலைப்பட்டியல் அல்லது பற்று குறிப்பு தொடர்பான நிதி ஆண்டின் தொடர்ந்துள்ள நவம்பர் 30-ம் தேதி வரையிலோ தொடர்புடைய வருடாந்திர வருமான வரி அறிக்கை தாக்கல் செய்யும் போதோ, எது முந்தையதோ; அல்லது

(ii) பதிவு ரத்து செய்யப்பட்ட தேதியிலிருந்து, அல்லது பதிவு இரத்து செய்து அமலுக்கு வந்த தேதி முதல், சூழ்நிலைக்கு ஏற்ப, பதிவு இரத்து செய்த உத்தரவை தள்ளுபடி செய்த உத்தரவு தேதி வரை, இரத்து செய்த உத்தரவு தள்ளுபடி செய்த உத்தரவு தேதி முதல் முப்பது நாட்களுக்குள் அத்தகைய வருமான வரி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டால்,

எது பிந்தையதோ அது வரை.'';

(7) பிரிவு 17-ல் துணைப்பிரிவு (5)-ன் உட்பிரிவு (i)-ல், ''74,129 மற்றும் 130'', ஆகிய பிரிவுகளில் உள்ள'' என்ற சொற்கள், எண்கள் மற்றும் சின்னங்களுக்கு பதிலாக ''2023-24'' நிதியாண்டு வரையிலான எந்தவொரு காலகட்டம் தொடர்பாக பிரிவு 74-ல்'' என்ற சொற்கள் சின்னம் மற்றும் எண்கள் சேர்க்கப்பட வேண்டியதாகும்.

(8) பிரிவு 20-க்கு பதிலாக பின்வரும் பிரிவு சேர்க்கப்பட வேண்டியதாகும், அதாவது.-

''20. <u>உள்ளீட்டு விநியோகஸ்தரால் கடன் விநியோசித்தும் முறை.-</u> (1) சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இரண்டினுடையவோ, பிரிவு 25-ல் குறிப்பிட்டுள்ள தனிப்பட்ட நபர்களுக்கோ அவர்களுக்காகவோ பிரிவு 9-ன் துணைப்பிரிவு (3)-ன் அல்லது துணைப்பிரிவு (4)-ன் படி வரி விதிக்கப்பட வேண்டிய சேவைகள் தொடர்பான விலைப்பட்டியல்கள் உட்பட உள்ளீட்டு சேவைகள் பெறுவதற்கான வரி விலைப்பட்டியல்களை பெறும் விநியோகஸ்தரின் ஏதேனும் அலுவலகம், பிரிவு 24-ன் உட்பிரிவு (viii)-ன் அடிப்படையில் உள்ளீட்டு சேவை

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

விநியோகஸ்தராக பதிவு செய்யப்பட வேண்டியதும் அத்தகைய விலைப்பட்டியல் தொடர்பான உள்ளீட்டு வரி வரவை விநியோகிக்க வேண்டியதுமாகும்.

(2) உள்ளீட்டு வள சேவை விநியோகஸ்தர், விலைப்பட்டியல்களில் வசூலிக்கப்படும் மாநில வரி அல்லது ஒருங்கிணைந்த வரியின் வரவை, மேற்கூறிய உள்ளீட்டு சேவை விநியோகஸ்தராக அதே மாநிலத்தில் பதிவு செய்யப்பட்ட ஒரு தனித்துவமான நபர், பிரிவு 9-ன் துணைப்பிரிவு (3) அல்லது துணைப்பிரிவு (4)-ன் கீழ் வரி விதிப்புக்கு உட்பட்டுள்ள சேவைகள் தொடர்பான மாநில வரி அல்லது ஒருங்கிணைந்த வரியின் வரவை செலுத்தியது உட்பட அவர் வசூலித்தது, நிர்ணயிக்கப்படும்படியான, அத்தகைய முறையிலும் அத்தகைய நேரத்திற்குள் மற்றும் அத்தகைய கட்டுப்பாடுகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு விநியோகம் செய்ய வேண்டியதாகும்.

(3) மாநில வரி வரவு, மாநில வரி அல்லது ஒருங்கிணைந்த வரியாகவும் ஒருங்கிணைந்த வரியாகவோ, உள்ளீட்டு வரி வரவு தொகை உட்படும் ஒரு ஆவணத்தை வழங்கி நிர்ணயிக்கப்படும்படியான அத்தகைய முறையில், விநியோசிக்கப்படும்.

(9) பிரிவு 21-ல், "பிரிவு 73 அல்லது பிரிவு 74" என்ற சொல் மற்றும் எண்ணுக்கு பிறகு "அல்லது பிரிவு 74ஏ" என்ற சொல், எண் மற்றும் எழுத்து சேர்க்கப்பட வேண்டியதாகும்;

(10) பிரிவு 30-ன் துணைப்பிரிவு (2)-ல், காப்பு வாசகத்திற்கு பிறகு பின்வரும் காப்பு வாசகம் சேர்க்கப்பட வேண்டும், அதாவது.-

"இருந்தாலும் பதிவு இரத்து செய்வதை இரத்து செய்வது, பரிந்துரைக்கப்படக்கூடிய நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டதாக இருக்கும்.";

(11) பிரிவு 31-ல்,-

(எ) துணைப்பிரிவு (3)-ன் உட்பிரிவு (எஃப்)-ல் பிரிவு (9)-ன், "என்ற சொற்கள் மற்றும் எண்ணுக்குப் பிறகு "பரிந்துரைக்கப்படக்கூடிய காலத்திற்குள்" என்ற சொற்கள் மற்றும் சின்னங்கள் சேர்க்க வேண்டும்.

(பி) உட்பிரிவு (ஜி)-க்கு பிறகு பின்வரும் விளக்கம் சேர்க்கப்பட வேண்டியதாகும், அதாவது.-

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

'' விளக்கம்:- உட்பிரிவு (எ)-ப்)-ன் நோக்கத்திற்காக ''பதிவு செய்யப்படாத விநியோகஸ்தர்'' என்ற சொற்றொடரில் பிரிவு 51-ன் கீழ் உள்ள வரி விலக்கு நோக்கத்திற்காக மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ள விநியோகஸ்தரை உள்ளடக்கும்.'',

(12) பிரிவு 35-ன் துணைப்பிரிவு (6)-ல் ''பிரிவு 73 அல்லது பிரிவு 74'' என்ற சொல், மற்றும் எண்ணுக்கு பிறகு ''அல்லது பிரிவு 74 ஏ'' என்ற சொல், எண் மற்றும் எழுத்து சேர்க்கப்பட வேண்டியதாகும்;

(13) பிரிவு 39-ல் துணைப்பிரிவு (3)-க்கு பதிலாக பின்வரும் துணைப்பிரிவு சேர்க்கப்பட வேண்டியதாகும், அதாவது:-

''(3) பிரிவு 51-ன் கீழ் மூலத்தில் வரியை கழிக்க வேண்டிய ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட நபரும், மாதத்தில் செய்யப்படும் கழிப்புகளின் வரவை ஒவ்வொரு காலண்டர் மாதமும் பரிந்துரைக்கப்பட்டுள்ள அத்தகைய படிவத்திலும் முறையிலும், பரிந்துரைக்கப்பட்ட நேரத்திற்குள் மின்னணு முறையில் சமர்ப்பிக்க வேண்டியதாகும்.

ஆனால் அவ்வாறு பதிவு செய்யப்பட்ட நபர், மேற்கூறிய மாதத்தில் ஏதேனும் கழிப்புகள் செய்யப்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும், ஒவ்வொரு காலண்டர் மாதத்திற்கும் வருமானத்தை சமர்ப்பிக்க வேண்டியதாகும்.'';

(14) பிரிவு 49-ல், துணைப்பிரிவு (8)-ன் உட்பிரிவு (சி)-ல் ''பிரிவு 73 அல்லது பிரிவு 74'' என்ற சொல், மற்றும் எண்ணுக்கு பிறகு ''அல்லது பிரிவு 74 ஏ'' என்ற சொல், எண் மற்றும் எழுத்து சேர்க்கப்பட வேண்டியதாகும்;

(15) பிரிவு 50-ல், துணைப்பிரிவு (1)-ன் காப்பு வாசகத்தில், ''பிரிவு 73 அல்லது பிரிவு 74'' என்ற சொல், மற்றும் எண்ணுக்கு பிறகு ''அல்லது பிரிவு 74 ஏ'' என்ற சொல், எண் மற்றும் எழுத்து சேர்க்கப்பட வேண்டியதாகும்;

(16) பிரிவு 51-ன் துணைப்பிரிவு (7)-ல் ''பிரிவு 73 அல்லது பிரிவு 74'' என்ற சொல், மற்றும் எண்ணுக்கு பிறகு ''அல்லது பிரிவு 74 ஏ'' என்ற சொல், எண் மற்றும் எழுத்து சேர்க்கப்பட வேண்டியதாகும்;

(17) பிரிவு 54-ல்,-

(எ) துணைப்பிரிவு (3)-ல் இரண்டாவது காப்பு வாசகம் தவிர்க்கப்பட வேண்டியதாகும்.

(பி) துணைப்பிரிவு (14)-க்கு பிறகும் விளக்கத்திற்கு முன்னராகவும் பின்வரும் துணைப்பிரிவு சேர்க்கப்பட வேண்டும், அதாவது:-

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

"(15) இந்த பிரிவில் என்னதான் அடங்கியிருந்தாலும், பூஜ்ஜிய மதிப்பீடு சரக்கு விநியோகத்தால் பயன்படுத்தப்படாத உள்ளீட்டு வரி வரவு அல்லது பூஜ்ஜிய மதிப்பீடு சரக்கு விநியோகத்திற்காக செலுத்தப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வரி அத்தகைய பூஜ்ஜிய மதிப்பீடு சரக்கு விநியோக ஏற்றுமதி வரிக்கு உட்பட்டிருக்க எவ்வகையில் திரும்ப வழங்க அனுமதிப்பதில்லை.";

(18) பிரிவு 61-ன் துணைப்பிரிவு (3)-ல், "பிரிவு 73 அல்லது பிரிவு 74" என்ற சொல், மற்றும் எண்ணுக்கு பிறகு "அல்லது பிரிவு 74 ஏ" என்ற சொல், எண் மற்றும் எழுத்து சேர்க்கப்பட வேண்டியதாகும்;

(19) பிரிவு 62-ன் துணைப்பிரிவு (1)-ல், "பிரிவு 73 அல்லது பிரிவு 74" என்ற சொல், மற்றும் எண்ணுக்கு பிறகு "அல்லது பிரிவு 74 ஏ" என்ற சொல், எண் மற்றும் எழுத்து சேர்க்கப்பட வேண்டியதாகும்;

(20) பிரிவு 63-ல், "பிரிவு 73 அல்லது பிரிவு 74" என்ற சொல், மற்றும் எண்ணுக்கு பிறகு "அல்லது பிரிவு 74 ஏ" என்ற சொல், எண் மற்றும் எழுத்து சேர்க்கப்பட வேண்டியதாகும்;

(21) பிரிவு 64-ன் துணைப்பிரிவு (2)-ல், "பிரிவு 73 அல்லது பிரிவு 74" என்ற சொல், மற்றும் எண்ணுக்கு பிறகு "அல்லது பிரிவு 74 ஏ" என்ற சொல், எண் மற்றும் எழுத்து சேர்க்கப்பட வேண்டியதாகும்;

(22) பிரிவு 65-ன் துணைப்பிரிவு (7)-ல், "பிரிவு 73 அல்லது பிரிவு 74" என்ற சொல், மற்றும் எண்ணுக்கு பிறகு "அல்லது பிரிவு 74 ஏ" என்ற சொல், எண் மற்றும் எழுத்து சேர்க்கப்பட வேண்டியதாகும்;

(23)பிரிவு 66-ன் துணைப்பிரிவு (6)-ல், "பிரிவு 73 அல்லது பிரிவு 74" என்ற சொல், மற்றும் எண்ணுக்கு பிறகு ."அல்லது பிரிவு 74 ஏ" என்ற சொல், எண் மற்றும் எழுத்து சேர்க்கப்பட வேண்டியதாகும்;

(24) பிரிவு 70-ல் துணைப்பிரிவு (1)-க்கு பிறகு பின்வரும் துணைப்பிரிவு சேர்க்கப்பட வேண்டியதாகும், அதாவது:-

"(1 ஏ) துணைப்பிரிவு (1)-ன் கீழ் அழைக்கப்பட்ட அனைத்து நபர்களும் அத்தகைய அலுவலர் பரிந்துரைத்துள்ளபடி நேரடியாகவோ அதிகாரப்படுத்தியுள்ள பிரதிநிதிகள் மூலமோ, கலந்து கொள்ள கடமைப்பட்டுள்ளவராக இருப்பதும் அவ்வாறு கலந்து கொள்ளும் நபர், விசாரணையின் போது உண்மையை உணர்த்த வேண்டும் அல்லது

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

அறிக்கை வெளியிட வேண்டும் அல்லது அத்தகைய ஆவணங்கள் மற்றும் பிறவற்றைத் தயாரிக்க வேண்டியதாகும்.".

(25) பிரிவு 73-ல், -

(i) ஓரத் தலைப்பில், "செலுத்தப்படாத வரியோ" என்ற சொற்களுக்கு பிறகு "2023-24 நிதி ஆண்டு வரையிலான காலகட்டம் தொடர்பான" என்ற எண்கள், சின்னம் மற்றும் சொற்கள் சேர்க்கப்பட வேண்டியதாகும்.

(ii) துணைப்பிரிவு (11)-க்கு பிறகு, பின்வரும் துணைப்பிரிவு சேர்க்கப்பட வேண்டியதாகும், அதாவது:-

"(12) இந்த பிரிவின் விதிகள் 2023-24 நிதியாண்டு வரையிலான காலகட்டம் தொடர்பான வரி நிர்ணயத்திற்கு பொருந்துவதாகும்.";

(26) பிரிவு 74-ல்,-

(i) ஓரத் தலைப்பில், "செலுத்தப்படாத வரியோ" என்ற சொற்களுக்கு பிறகு "2023-24 நிதியாண்டு வரையிலான காலகட்டம் தொடர்பான" என்ற எண்கள், சின்னம் மற்றும் சொற்கள் சேர்க்கப்பட வேண்டியதாகும்;

(ii) துணைப்பிரிவு (11)-க்கு பின்வரும் விளக்கம் 1-க்கு முன்னருமாக பின்வரும் துணைப்பிரிவு சேர்க்கப்பட வேண்டியதாகும், அதாவது:-

"(12) இந்த பிரிவின் விதிகள் 2023-24 நிதியாண்டு வரையிலான காலகட்டம் தொடர்பான வரி நிர்ணயத்திற்கு பொருந்துவதாகும்.";

(iii) விளக்கம் 2 தவிர்க்கப்பட வேண்டியதாகும்.

(27) பிரிவு 74-க்கு பிறகு, பின்வரும் பிரிவு சேர்க்கப்பட வேண்டியதாகும். அதாவது:-

"74 எ. 2024-25 நிதியாண்டு முதல் செலுத்தாததோ குறைவாக செலுத்தியதோ அல்லது தவறுதலாக திருப்பி செலுத்தப்பட்டதான வரி எந்தவொரு காரணத்திற்காகவும் உள்ளீட்டு வரி வரவு தவறாக பெறப்பட்ட அல்லது பயன்படுத்தப்பட்ட வரியை தீர்மானித்தல்.- (1) ஒரு தகுந்த அதிகாரிக்கு ஏதேனும் வரி செலுத்தப்படவில்லை என்றோ, குறைவாக செலுத்தப்பட்டதாகவோ, தவறாக திரும்ப பெறப்பட்டதாகவோ, தோன்றும் பட்சம் அல்லது உள்ளீட்டு வரி வரவு தவறாக பெறப்படவோ பயன்படுத்தவோ செய்யும் பட்சத்தில், அந்த அதிகாரிக்கு அவ்வாறு செலுத்தப்படாத வரி அல்லது குறைவாக செலுத்தப்பட்ட வரிக்கு வரி செலுத்த வேண்டிய

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

ஒரு நபருக்கு அல்லது தவறாக திரும்ப பெறப்பட்ட நபர் அல்லது உள்ளீட்டு வரி வரவை தவறாக பெறவோ பயன்படுத்தவோ செய்த நபருக்கு ஒரு அறிக்கை, மேற்குறிப்பிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ள தொகை மற்றும் பிரிவு 50-ன் கீழ் செலுத்த வேண்டிய வட்டி மற்றும் இந்த சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின் கீழ் உள்ள அபராதம் செலுத்தாததன் காரணத்தை காட்டுமாறு கோரப்பட்டு வழங்கலாம்.

ஆனால் ஒரு நிதியாண்டில் செலுத்தப்படாததோ குறைவாக செலுத்தியதோ தவறாக திரும்ப பெறப்பட்டதோ ஆன வரி அல்லது தவறாக பெறப்பட்ட அல்லது பயன்படுத்தியதான உள்ளீட்டு வரி வரவு ஆயிரம் ரூபாய்க்கு குறைவாக இருந்தால் எந்தவொரு அறிக்கையும் வழங்கக் கூடாததாகும்.

(2) தகுந்த அதிகாரி, துணைப்பிரிவு (1)-ன் கீழுள்ள அறிக்கை, வரி செலுத்தாததோ குறைவாக செலுத்தப்பட்டதோ தவறாக பெறப்பட்ட அல்லது உள்ளீட்டு வரி வரவு தவறாக பெறப்பட்ட அல்லது பயன்படுத்தப்பட்ட நிதியாண்டிற்கான வருடாந்திர வருவாயை சமர்பிக்க வேண்டிய தேதியிலிருந்து நாற்பத்து இரண்டு மாதங்களுக்கு உள்ளாகவோ தவறாக பணம் பெறப்பட்ட தேதி முதல் நாற்பத்து இரண்டு மாதங்களுக்கு உள்ளாகவோ வெளியிட வேண்டும்.

(3) துணைப்பிரிவு (1)-ன் கீழ் ஏதேனும் ஒரு காலத்திற்கு அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தால், உரிய அதிகாரி, துணைப்பிரிவு (1)-ன் கீழ் உள்ள காலகட்டங்களைத் தவிர, அத்தகைய காலகட்டத்தில் செலுத்தப்படாத அல்லது குறைவாக செலுத்தப்பட்ட அல்லது தவறாக திரும்ப பெறப்பட்டதோ ஆன வரி, தவறாக பெறப்பட்டதோ பயன்படுத்தியதோ ஆன உள்ளீட்டு வரி வரவு ஆகியவற்றின் விவரங்களைக் கொண்ட ஒரு அறிக்கை வரி விதிக்கப்பட வேண்டிய நபருக்கு வழங்க வேண்டியதாகும்.

(4)அத்தகைய ஒரு அறிக்கை துணைப்பிரிவு (1)-ல் உட்படும் காலகட்டங்களைத் தவிர உள்ள வரி காலகட்டத்திற்காக கருதப்படும் பொருட்கள் முந்தைய அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளதை போலவே இருக்கும் என்ற நிபந்தனைகளுக்கு உட்பட்டு, துணைப்பிரிவு (1)-ன் கீழ் அத்தகைய நபருக்கு வழங்கப்பட்ட அறிக்கையாக கருதப்பட வேண்டியதாகும்

(5) செலுத்தப்படாத அல்லது குறைவாக செலுத்தப்பட்ட அல்லது தவறாக திருப்பிச் செலுத்தப்பட்ட எந்தவொரு வரிக்கும் அல்லது உள்ளீட்டு வரி வரவு தவறாக பெறப்பட்ட அல்லது பயன்படுத்தியிருந்தால் அபராதம்,

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(i) வரியை தவிர்ப்பதற்காக மோசடி, வேண்டுமென்றே தவறான அறிக்கை, அல்லது வரியை தவிர்ப்பதற்கு உண்மைகளை மறைத்தல் தவிர உள்ள எந்தவொரு காரணத்திற்காகவும் அத்தகைய நபர் செலுத்த வேண்டிய வரியின் பத்து சதவீதத்திற்கு சமமான தொகையோ பத்தாயிரம் ரூபாயோ, எது அதிகமோ அது;

(ii) வரியை தவிர்ப்பதற்காக மோசடி அல்லது வேண்டுமென்றோ தவறான அறிக்கை அல்லது வரியை தவிர்ப்பதற்கு உண்மைகளை மறைத்தல் போன்ற காரணங்களுக்கு, அத்தகைய நபர் செலுத்த வேண்டிய வரிக்கு சமமாக இருக்கும்.

(6) தகுந்த அதிகாரி வரி செலுத்த வேண்டிய நபர் ஏதேனும் மனு சமர்ப்பித்திருந்தால் அதை பரிசீலனை செய்த பிறகு, அத்தகைய நபர் வழங்க வேண்டிய வரித்தொகை, வட்டி மற்றும் அபராதத்தை நிர்ணயித்து ஒரு உத்தரவு வழங்க வேண்டியதாகும்.

(7) தகுந்த அதிகாரி துணைப்பிரிவு (6)-ன் கீழுள்ள உத்தரவு, துணைப்பிரிவு (2)-ல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதி முதல் பன்னிரண்டு மாதங்களுக்குள் பிறப்பிக்க வேண்டியதாகும்.

ஆனால் தகுந்த அதிகாரி, குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் உத்தரவு பிறப்பிக்க முடியாத பட்சத்தில் மாநில வரி ஆணையர் அல்லது மாநில வரி ஆணையரால் பொறுப்பு ஒப்புவிக்கப்படும் மாநில வரி இணை ஆணையர் பதவிக்கு குறையாததும் தகுந்த அதிகாரியை விட பதவியில் மூத்தவராகவும் உள்ள ஒரு அதிகாரி அல்லது துணைப்பிரிவு (6)-ன் கீழ் உத்தரவு வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டதற்கான காரணங்களை எழுத்துமூலமாக பதிவு செய்து குறிப்பிட்ட காலாவதி முடிவடைவதற்குள்ளதாக அத்தகைய காலயளவை அதிகபட்சம் மேலும் ஆறு மாதத்திற்கு நீட்டிக்கலாம்.

(8) வரி செலுத்த வேண்டிய ஒரு நபர், வரி செலுத்துவதை தவிர்க்க வேண்டி மோசடி அல்லது வேண்டுமென்ற தவறான அறிக்கை அல்லது உண்மைகளை மறைத்தல் போன்ற காரணங்கள் தவிர ஏதேனும் வரி செலுத்தாமல் இருக்கவோ குறைவாக செலுத்தவோ தவறாக திரும்ப பெறவோ அல்லது ஏதேனும் உள்ளீட்டு வரி வரவை தவறாக பெறவோ பயன்படுத்தவோ செய்யும் பட்சத்தில்,-

(i) துணைப்பிரிவு (1)-ன் கீழ் அறிவிப்பு அனுப்புவதற்கு முன்னர் அத்தகைய வரி ஒருவர் தனது சொந்த உறுதிப்பாட்டின் அடிப்படையில் அல்லது முறையான அதிகாரியால் உறுதிப்படுத்தப்பட்ட வரியின் அடிப்படையில் பிரிவு 50-ன் கீழ் வட்டி உட்பட்ட வரித்தொகை செலுத்த வேண்டியதும், அவ்வாறு செலுத்தியது குறித்தான

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

விவரம் அதற்கான அதிகாரியை எழுத்து மூலம் அறிவிக்க வேண்டியதும் அத்தகைய அறிக்கை கிடைத்தால் அதற்கான அதிகாரி, அவ்வாறு செலுத்திய வரியையோ இந்த சட்டத்தில் உள்ள விதிகளின்படி அல்லது அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின்படி செலுத்த வேண்டியதான ஏதேனும் அபராதம் தொடர்பாகவோ துணைப்பிரிவு (1)-ன் கீழ் உள்ள அறிவிப்பு அல்லது துணைப்பிரிவு (3)-ன் கீழ் உள்ள அறிக்கை, அதது சங்கதி போல் நடத்த கூடாததாகும்;

(ii) அத்தகைய வரி, பிரிவு 50-ன் கீழ் செலுத்த வேண்டிய வட்டி உட்பட காரணம் காட்டும் அறிவிப்பு வழங்கப்பட்ட தேதி முதல் அறுபது நாட்களுக்குள், செலுத்த வேண்டியதும், அவ்வாறு செலுத்தும்பட்சம் எந்தவொரு அபராதமும் செலுத்த வேண்டியதில்லாததும் மேற்குறிப்பிட்ட அறிவிப்பு சம்மந்தமான அனைத்து நடவடிக்கைகளும் முடிவடைந்ததாகக் கருதப்பட வேண்டியதாகும்;

(9) வரி செலுத்த வேண்டி நபர், வரி செலுத்துவதை தவிர்க்க வேண்டி, மோசடி அல்லது வேண்டுமென்றே தவறான அறிக்கை அல்லது உண்மைகளை மறைத்த காரணத்தால் வரி செலுத்தாமலிருந்தாலோ அல்லது குறைவாக செலுத்தியிருந்தாலோ அல்லது உள்ளீட்டு வரி வரவு தவறாக பெறப்படவோ பயன்படுத்தியிருந்தாலோ;

(i) துணைப்பிரிவு (1)-ன் அறிவிப்பு அனுப்புவதற்கு முன்னர் அவர் தனது சொந்த உறுதிப்பாட்டின் அடிப்படையிலோ அதற்குரிய அதிகாரியின் உறுதிபாட்டிலோ ஆன அத்தகைய வரி, பிரிவு 50-ன் கீழ் உள்ள வட்டியுடன் அத்தகைய வரியின் பதினைந்து சதவீதத்திற்கு சமமான வட்டியும் செலுத்த வேண்டியதாகும், அத்தகைய கட்டணம் குறித்தான விவரம் உரிய அதிகாரியை எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டியதும் அத்தகைய தகவல் கிடைத்தவுடன் உரிய அதிகாரி, அவ்வாறு செலுத்தப்பட்ட வரி குறித்தோ இந்த சட்டத்தில் உள்ள விதிகளின் படி அல்லது அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின் கீழ் செலுத்த வேண்டிய எந்தவொரு அபராதம் தொடர்பாக துணைப்பிரிவு (1)-ன் கீழ் உள்ள அறிவிப்பை அனுப்பக்கூடாததாகும்;

(ii) மேற்குறிப்பிட்ட வரி, பிரிவு 50-ன் கீழ் வட்டி உட்பட அத்தகைய வரியின் இருபத்து ஐந்து சதவீதத்திற்கு சமமான அபராதம் அறிவிப்பு வழங்கப்பட்ட தேதி முதல் அறுபது நாட்களுக்குள் செலுத்த வேண்டியதும் அவ்வாறு செலுத்தும் பட்சம் மேற்கூறிய அறிவிப்பு தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் முடிவடைந்ததாக கருதப்பட வேண்டியதுமாகும்;

(iii) வரி மற்றும் பிரிவு 50-ன் படியான வட்டியுடன் அவ்வாறான வரியின் ஐம்பது சதவீதத்திற்கு சமமான அபராதம் உத்தரவு அனுப்பப்பட்ட அறுபது நாட்களுக்குள்

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

செலுத்த வேண்டியதும் அவ்வாறு செய்தால் மேற்கூறிய அறிக்கை தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் முடிவடைந்ததாக கருதப்பட வேண்டியதாகும்.

(10) உரிய அதிகாரியின் கருத்தில் துணைப்பிரிவு (8)-ன் உட்பிரிவு (i) -ன் கீழ் அல்லது துணைப்பிரிவு (9)-ன் உட்பிரிவு (1)-ன் கீழ் செலுத்தப்பட்ட தொகை உண்மையில் செலுத்த வேண்டிய வரியை விட குறைவாக இருந்தது என்று கருதும் பட்சத்தில் அவர் உண்மையாக கட்ட வேண்டிய தொகையில் இருந்து குறைவான அத்தகைய தொகையை குறித்து துணைப்பிரிவு (1)-ன் கீழ் அறிக்கை அனுப்புவதற்கான நடவடிக்கைகள் தொடர வேண்டியதாகும்.

(11) துணைப்பிரிவு (8)-ன் உட்பிரிவு (i) அல்லது உட்பிரிவு (ii)-ல் என்னதான் அடங்கியிருந்தாலும், சுய மதிப்பீட்டு வரி அல்லது வரியாக வசூலிக்கப்பட்ட எந்தவொரு தொகையும் அத்தகைய வரி செலுத்த வேண்டியதான தேதி முதல் மூப்பது நாட்களுக்குள் செலுத்தாதிருந்தால் துணைப்பிரிவு (5)-ன் உட்பிரிவு (1)-ன் கீழ் உள்ளபடியான அபராதம் செலுத்த வேண்டியதாகும்.

(12) இந்த பிரிவின் நிபந்தனைகள் 2024-25 நிதியாண்டு முதல் வரி நிர்ணயத்திற்கு பொருந்தும்.

விளக்கம் 1.- இந்த பிரிவின் நோக்கங்களுக்காக,-

(i) ''மேற்கூறிய அறிக்கை தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும்'' என்ற சொற்றொடரில் பிரிவு 132-ன் கீழ் நடவடிக்கைகள் உட்படாததாகும்;

(ii) வரி செலுத்த வேண்டிய முக்கிய நபருக்கும் வேறு சில நபர்களுக்கும் எதிராக ஒரே நடவடிக்கையில் அறிக்கை வழங்கப்பட்டுள்ளது முக்கிய நபருக்கு எதிராக இந்த பிரிவின் கீழுள்ள நடவடிக்கை முடிவுக்கு வந்ததாக கருதப்பட வேண்டியதாகும்.

விளக்கம் 2.- இந்த சட்டத்தின் நோக்கங்களுக்காக, ''மறைத்தல்'' என்ற சொற்றொடர், வரி செலுத்த வேண்டிய நபர் இந்த சட்டத்தினுடையவோ அதன் கீழ் உருவாக்கப்பட்ட சட்டங்களின் கீழ் சமர்ப்பிக்க வேண்டிய விவர அறிக்கை, விவரப்பட்டியல், அறிக்கை அல்லது வேறு எந்த ஆணவத்திலும் அறிவிக்க வேண்டிய உண்மைகள் அல்லது தகவல்களை அறிவிக்காமல் இருப்பது அல்லது உரிய அதிகாரி எழுத்து மூலம் கேட்டுக்கொண்டுள்ள ஏதேனும் தகவல் வழங்க தவறியதைக் குறிக்கும்.'';

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(28) பிரிவு 75-ல்,-

(எ) துணைப்பிரிவு (1)-ல், "பிரிவு 74" என்ற சொல் மற்றும் எண்ணிற்கு பிறகு "அல்லது பிரிவு 74 ஏ-ன்" துணைப்பிரிவுகள் (2) மற்றும் (7) என்ற சொற்கள், சின்னங்கள், அடைப்புகுறிகள், எண்கள் மற்றும் எழுத்து சேர்க்கப்பட வேண்டியதாகும்.

(பி) துணைப்பிரிவு (2)-க்கு பிறகு பின்வரும் துணைப்பிரிவு சேர்க்கப்பட வேண்டியதாகும், அதாவது:-

"(2 ஏ) எந்தவொரு மேல்முறையீட்டு அதிகாரியோ அல்லது மேல்முறையீட்டு தீர்ப்பாயமோ அறிவிப்பு வழங்கப்பட்ட நபர் வரி ஏய்ப்பு நடத்த வேண்டுமென்ற தவறான அறிக்கை வழங்கியதாகவோ உண்மைகளை மறைத்ததாகவோ உள்ள குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை என்ற காரணத்தால் பிரிவு 74 ஏ-ல் துணைப்பிரிவு (5)-ன் உட்பிரிவு (i)-ன் படியிலான அபராதம் செலுத்தப்பட வேண்டியதாகும்.";

(சி) துணைப்பிரிவு (10)-க்கு பதிலாக பின்வரும் துணைப்பிரிவு சேர்க்கப்பட வேண்டியதாகும், அதாவது:-

"(10) பிரிவு 73-ன் துணைப்பிரிவு (10)-ல் அல்லது பிரிவு 74-ன் துணைப்பிரிவு (10)-ல் பிரிவு 74 ஏ-ன் துணைப்பிரிவு (7)-ல் குறிப்பிட்டுள்ளபடியான காலவரம்பிற்குள் உத்தரவு பிறப்பிக்கப்படாவிட்டால், தீர்ப்பு நடவடிக்கைகள் முடிவடைந்ததாகக் கருதப்பட வேண்டியதாகும்.";

(டி) துணைப்பிரிவு (11)-ல் "பிரிவு 74" என்ற எண் மற்றும் சொல்லுக்கு பிறகு "அல்லது பிரிவு 74 ஏ-ன் அல்லது துணைப்பிரிவு (7)-ல்" என்ற எண்கள், சொற்கள், சின்னங்கள், அடைப்பு குறியீடுகள் மற்றும் எழுத்து சேர்க்கப்பட வேண்டியதாகும்;

(இ) துணைப்பிரிவு (12)-ல் "பிரிவு 73 அல்லது பிரிவு 74" என்ற சொல், மற்றும் எண்ணுக்கு பிறகு "அல்லது பிரிவு 74 ஏ" என்ற சொல், எண் மற்றும் எழுத்து சேர்க்கப்பட வேண்டியதாகும்;

(எஃப்) துணைப்பிரிவு (13)-ல் "'பிரிவு 73 அல்லது பிரிவு 74" என்ற சொல், மற்றும் எண்ணுக்கு பிறகு "அல்லது பிரிவு 74 ஏ" என்ற சொல், எண் மற்றும் எழுத்து சேர்க்கப்பட வேண்டியதாகும்;

(29) பிரிவு 104-ன் துணைப்பிரிவு (1)-ன் விளக்கத்தில் "பிரிவு 74-ன் துணைப்பிரிவுகள் (2) மற்றும் (10)" என்ற எண்கள் மற்றும் சொற்களுக்கு பிறகு அல்லது

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

பிரிவு 74 ஏ-ன் துணைப்பிரிவுகள் (2) மற்றும் (7)-ல்'' என்ற சொல், எண்கள், எழுத்து, அடைப்புக்குறியீடுகள் மற்றும் சின்னம் சேர்க்கப்பட வேண்டியதாகும்.

(30) பிரிவு 107-ல்,-

(எ) துணைப்பிரிவு (6)-ன் உட்பிரிவு (பி)-ல் ''இருபத்து ஐந்து கோடி ரூபாய்''என்ற சொற்களுக்கு பதிலாக ''இருபது கோடி ரூபாய்'' என்ற சொற்கள் சேர்க்கப்பட வேண்டியதாகும்;

(பி) துணைப்பிரிவு (11)-ன் இரண்டாம் காப்பு வாசகத்தில் ''பிரிவு 73 அல்லது பிரிவு 74'' என்ற சொல், மற்றும் எண்ணுக்கு பிறகு ''அல்லது பிரிவு 74 ஏ'' என்ற சொல், எண் மற்றும் எழுத்து சேர்க்கப்பட வேண்டியதாகும்;

(31) பிரிவு 109-ன் துணைப்பிரிவு (1)-ல் ''கேட்பதற்கான'' என்ற சொல்லுக்கு பதிலாக ''கேட்கவோ, பிரிவு 171-ன் துணைப்பிரிவு (2)-ன் கீழ் அறிக்கை வெளியிட்டுள்ளபடியால் மேற்கூறிய பிரிவின் கீழ் குறிப்பிட்டுள்ள வழக்குகளின் பரிசோதனை அல்லது தீர்ப்பு நடத்துவதற்கு ஏதுவான'' என்ற சொற்கள், எண்கள், சின்னங்கள் மற்றும் அடைப்புக் குறியீடுகள் சேர்க்கப்பட வேண்டியதாகும்;

(32) பிரிவு 112-ல்,-

(எ) துணைப்பிரிவு (1)-ல் ''மூன்று மாத காலத்திற்குள்'' என்ற சொற்களுக்கு பதிலாக ''மூன்று மாத காலத்திற்குள் அல்லது கவுன்சிலின் பரிந்துரையின் பேரில், இந்த சட்டத்தின் கீழ் மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் முன் மேல்முறையீடு செய்வதற்காக அரசு அறிக்கை வெளியிட்ட தேதியில் அல்லது எது கடைசியாக வருகிறது அந்த காலயளவில்'' என்ற சொற்கள் 2024-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 1-ஆம் தேதி முதல் அமலுக்கு வந்ததாக சேர்க்கப்பட வேண்டியதாகும்;

(பி) துணைப்பிரிவு (3)-ல் ''மேல்முறையீட்டு தீர்ப்பாயத்திற்கு'' என்ற சொற்களுக்கு முன்னர் ''ஆணை பிறப்பித்த தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் அல்லது கவுன்சிலின் பரிந்துரையை தொடர்ந்து, இந்த சட்டத்தின் கீழ் மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு செய்வதற்காக அரசு அறிக்கை வெளியிடும் தேதியில் எது பின்னர் வருகிறதோ அந்த தேதியில்'' என்ற சொற்கள் 2024-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 1-ஆம் தேதி முதல் அமலுக்கு வந்ததாக சேர்க்கப்பட வேண்டியதாகும்;

(சி) துணைப்பிரிவு (6)-ல் ''காலவரையறை முடிந்த மூன்று மாதத்திற்குள்'' என்ற சொற்களுக்கு பதிலாக ''காலவரையறை முடிந்த மூன்று மாதத்திற்குள் அல்லது

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

துணைப்பிரிவு (3)-ல் குறிப்பிட்டுள்ள காலம் முடிந்த பிறகு விண்ணப்பம் தாக்கல் செய்ய அனுமதித்துள்ள மூன்று மாதத்திற்குள்" என்ற சொற்கள் சேர்க்கப்பட வேண்டியதாகும்;

(டி) துணைப்பிரிவு (8)-ன் உட்பிரிவு (பி)-ல்,-

(i) "இருபது சதவீதத்திற்கு" என்ற சொற்களுக்கு பதிலாக "பத்து சதவீதத்திற்கு" என்ற சொற்கள் சேர்க்கப்பட வேண்டியதாகும்;

(ii) "ஐம்பது கோடி ரூபாய்" என்ற சொற்களுக்கு பதிலாக "இருபது கோடி ரூபாய்" என்ற சொற்கள் சேர்க்கப்பட வேண்டியதாகும்;

(33) பிரிவு 122-ன் துணைப்பிரிவு (1பி)-ல் "எந்தவொரு மின்னணு வர்த்தக பொறி இயக்குநர்" என்ற சொற்களுக்கு பதிலாக "பிரிவு 52-ன் கீழ் அடிப்படை வருவாயிலிருந்து வரி வசூலிக்கும் பொறுப்புடைய எந்தவொரு மின்னணு வர்த்தக பொறி இயக்குநர்" என்ற சொற்கள், எண் மற்றும் சின்னம் 2023-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ஆம் தேதி முதல் அமலுக்கு வந்ததாக சேர்க்கப்பட வேண்டியதாகும்;

(34) பிரிவு 122-க்கு பிறகு, பின்வரும் பிரிவு சேர்க்கப்பட வேண்டியதாகும், அதாவது:-

"122எ- பொருட்களின் உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் சில இயந்திரங்களை சிறப்பு நடைமுறைகளின் கீழ் பதிவு செய்ய தவறியதற்கான தண்டனை.- இந்த சட்டத்தில் என்னதான் அடங்கியிருந்தாலும் எந்தவொரு நபரும் பிரிவு 148-ன் கீழ் அறிக்கை விடுத்துள்ள ஏதேனும் சிறப்பு நடைமுறைகளின் அடிப்படையில் பதிவு செய்ய வேண்டிய இயந்திரங்களை பயன்படுத்தி பொருட்களை தயாரிப்பதில் ஈடுபட்டிருக்கும் பொருட்டு, மேற்கூறிய சிறப்பு நடைமுறைகளுக்கு எதிராக செயல்பட்டால், அவர் அத்தியாயம் XV அல்லது இந்த அத்தியாயத்தின் வேறு எந்த விதியின் கீழ் அவர் செலுத்திய அல்லது செலுத்த வேண்டிய அந்த அபராதம் மட்டுமல்லாமல் அவ்வாறு பதிவு செய்யப்படாத ஒவ்வொரு இயந்திரத்திற்கும் ஒரு இலட்சம் ரூபாய்க்கு சமமாகும் அபராதம் விதிக்கப்படுவார்.

(2) துணைப்பிரிவு (1)-ன் கீழ் அபராதம் மட்டுமல்லாமல், அவ்வாறு பதிவு செய்யப்படாத அனைத்து இயந்திரங்களையும் கைப்பற்றவும் பறிமுதல் செய்யப்படுவதற்கு உட்பட்டது.

ஆனால்,

(எ) அவ்வாறு விதிக்கப்பட்ட அபராதம் செலுத்தப்படும்;

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(பி) அபராதம் செலுத்துதவதற்கான உத்தரவு பெறப்பட்ட மூன்று நாட்களுக்குள், அத்தகைய இயந்திரத்தின் பதிவு சிறப்பு நடைமுறையின்படி செய்யப்படுகிறது; அத்தகைய இயந்திரம் பதிமுதல் செய்யப்படாது.'';

(35) பிரிவு 127-ல் ''பிரிவு 73 அல்லது பிரிவு 74'' என்ற சொல், மற்றும் எண்ணுக்கு பிறகு ''அல்லது பிரிவு 74ஏ'' என்ற சொல், எண் மற்றும் எழுத்து சேர்க்கப்பட வேண்டியதாகும்;

(36) பிரிவு 128-க்கு பிறகு பின்வரும் பிரிவு சேர்க்கப்பட வேண்டியதாகும்; அதாவது:-

''128ஏ.- பிரிவு 73-ன் அடிப்படையில் எழுப்பப்பட்டுள்ள கோரிக்கைகள் தொடர்பாக சில வரி காலயளவுகளின் அபராதம் அல்லது வட்டி அல்லது இரண்டிலிருந்தும் விலக்கு.- (1) இந்த சட்டத்தில் முரண்பாடாக என்னதான் அடங்கியிருந்தாலும், வரி செலுத்த வேண்டிய ஒரு நபர் ஏதேனும் வரித்தொகை,-

(எ) பிரிவு 73-ன் துணைப்பிரிவு (1)-ன் அடிப்படையில் ஒரு அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தால் அல்லது பிரிவு 73-ன் துணைப்பிரிவு (3)-ன் அடிப்படையில் ஒரு அறிக்கை வெளியிடப்பட்டும் ஆனால் பிரிவு 73-ன் துணைப்பிரிவு (9)-ன் கீழ் எந்தவொரு உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லையெனில்; அல்லது,

(பி) பிரிவு 73-ன் துணைப்பிரிவு அடிப்படையில் ஒரு உத்தரவு பிறப்பித்து பிரிவு 107-ன் துணைப்பிரிவு (11)-ன் அடிப்படையில் அல்லது பிரிவு 108-ன் துணைப்பிரிவு (1)-ன் அடிப்படையில் ஒரு உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லையெனில்; அல்லது

(சி) பிரிவு 107-ன் துணைப்பிரிவு (11)-ன் கீழ் அல்லது பிரிவு 108-ன் துணைப்பிரிவு (1)-ன் கீழ் ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதும் ஆனால் பிரிவு 113-ன் துணைப்பிரிவு (1) கீழ் எந்தவொரு உத்தரவும் பிறப்பிக்கப்படாதிடத்தும்;

2017-ஆம் ஆண்டு ஜீலை மாதம் 1-ஆம் தேதி முதல் 2020-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 வரையிலான காலயளவில் அல்லது அதன் பகுதி தொடர்பாக மேற்கூறிய நபர் உட்பிரிவு (எ), உட்பிரிவு (பி) அல்லது உட்பிரிவு (சி)-ல் குறிப்பிட்டுள்ள அறிவிப்பின்படி அல்லது அறிக்கைபடியோ அல்லது உத்தரவின் படியோ, அதது சங்கதிபோல், செலுத்த வேண்டிய முழு வரித்தொகையையும் கவுன்சவின் பரிந்துரையின் பெயரில் அரசு அறிக்கை வெளியிடும் தேதியில் அல்லது அதற்கு முன்னர் செலுத்தும் பொருட்டு பிரிவு 50-ன் அடிப்படையில் எந்தவொரு அபராதமும் செலுத்த வேண்டியதில்லை மேற்கூறிய

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

அறிவிப்பு, உத்தரவு அல்லது அறிக்கை தொடர்பான அனைத்து நடைமுறைகளும், அதது சங்கதிபோல், நிர்ணயிக்கப்பட்டுள்ள படியான அத்தகைய விதிகளுக்கு உட்பட்டு முடிக்கப்பட்டதாக கருதப்பட வேண்டியதாகும்.

ஆனால் பிரிவு 74-ன் துணைப்பிரிவு (1)-ன் அடிப்படையில் ஒரு அறிவிப்பு வெளியிடப்பட்டு, பிரிவு 75-ன் துணைப்பிரிவு (2)-ன் விதிகளுக்கு உட்பட்டு மேல்முறையீட்டு அதிகாரி அல்லது மேல்முறையீட்டு தீர்ப்பாயம் அல்லது நீதிமன்றத்தின் உத்தரவின்படி உரிய அதிகாரியால் ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டாலோ அல்லது பிறப்பிக்க வேண்டி இருந்தாலோ மேற்கூறிய அறிவிப்பு அல்லது உத்தரவு, அதது சங்கதிபோல் இந்த துணைப்பிரிவின் உட்பிரிவு (எ)-ல் அல்லது உட்பிரிவு (பி)-ல் குறிப்பிட்டுள்ள உத்தரவு அல்லது அறிவிப்பாக கருதப்பட வேண்டியதாகும்.

மேலும் இந்த துணைப்பிரிவின் நடவடிக்கைகளை முடித்தல் பிரிவு 107-ன் துணைப்பிரிவு (3)-ன் கீழ் அல்லது பிரிவு 112-ன் துணைப்பிரிவு (3)-ன் கீழ் ஒரு விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டிருந்தால் அல்லது பிரிவு 117-ன் துணைப்பிரிவு (1)-ன் கீழ் அல்லது பிரிவு 118-ன் துணைப்பிரிவு (1)-ன் கீழ் மாநில வரித்துறையின் அதிகாரியால் மேல்முறையீடு செய்யப்பட்டிருந்தால் அல்லது முதல் காப்புவாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் அல்லது மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் அல்லது மேல்முறையீட்டு அதிகாரியின் அல்லது நீதிமன்றத்தின் உத்தரவிற்கு எதிராகவோ அல்லது உட்பிரிவு(பி) அல்லது உட்பிரிவு (சி)-ன் உத்தரவிற்கு எதிராகவோ பிரிவு 108-ன் துணைப்பிரிவு (1)-ன் கீழ் ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ள சங்கதிகளில் அல்லது நீதிமன்றத்தின் அல்லது மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் அல்லது மேல்முறையீட்டு அதிகாரியின் அல்லது திருத்த ஆணையத்தின் அதது சங்கதி போல், உத்தரவிற்கு ஏற்றாற்போன்று மூன்று மாதத்திற்குள் சம்மந்தப்பட்ட நபர் கூடுதல் வரி ஏதேனும் உண்டு எனில் அது செலுத்தப்பட வேண்டியதாகும்.

எனினும் அவ்வாறு வட்டி மற்றும் அபராதம் ஏற்கனவே செலுத்தப்பட்டிருந்தால் அது திரும்ப வழங்கப்பட மாட்டாது.

(2) துணைப்பிரிவு (1)-ல் உள்ள எதுவும் தவறாக பணத்தை திரும்ப பெற்றதற்காக ஒருவர் செலுத்த வேண்டிய தொகைக்கு பொருந்தாது.

(3) துணைப்பிரிவு (1)-ல் அடங்கியுள்ள எதுவும் மேற்கூறிய நபரால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடு அல்லது ரிட் மனு, மேல்முறையீட்டு தீர்ப்பாயம் அல்லது மேல்முறையீட்டு அதிகாரி முன்னிலையிலோ நீதிமன்றத்திலோ, அதது சங்கதி போல், நிலுவையில் உள்ள வழக்குகளிலும் அது துணைப்பிரிவு (1)-ன் படி அறிக்கை

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

வெளியிடப்பட்ட தேதியில் அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட நபர் திரும்பப்பெறாத நிலையில் பொருந்தாது.

(4) இந்த சட்டத்தில் என்னத்தான் அடங்கியிருந்தாலும், துணைப்பிரிவு (1)-ல் குறிப்பிட்டுள்ளபடியான தொகை செலுத்தப்படவும் மேற்கூறிய துணைப்பிரிவு அடிப்படையிலான நடைமுறைகள் முடிந்ததாக கருதப்பட வேண்டியதாகும். துணைப்பிரிவு (1)-ன் உட்பிரிவு (பி)-ல் அல்லது உட்பிரிவு (சி)-ல் குறிப்பிட்டுள்ள படியான உத்தரவுகளுக்கு எதிராக, பிரிவு 107-ன் துணைப்பிரிவு (1)-ன் படி அல்லது பிரிவு 112-ன் துணைப்பிரிவு (1)-ன் படி அதது சங்கதிபோல், எந்தவொரு மேல்முறையீடும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.'';

(37) பிரிவு 171-ன் துணைப்பிரிவு (2)-ல் பின்வரும் காப்பு வாசகம் மற்றும் விளக்கம் சேர்க்கப்பட வேண்டியதாகும், அதாவது.-

''ஆனால் மத்திய அரசு கவுன்சிலின் பரிந்துரையின் பேரில், அறிவிப்பின் மூலம், ஏதேனும் பதிவு செய்யப்பட்ட நபர் அவர் பெற்ற உள்ளீட்டு வரி வரவு அல்லது வரி விகிதத்திலுள்ள குறைப்பு உண்மையில் அவர் விநியோகம் செய்த பொருட்கள் அல்லது சேவைகள் அல்லது இரண்டினுடைய விலையில் ஏற்பட்டுள்ள விகிதாசார குறைப்பின் காரணமாகவா என்பதை பரிசோதிக்க ஏதேனும் விண்ணப்பம் மேற்கூறிய அதிகாரப்பதவி எந்த தேதி முதல் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று கூறலாம்.

விளக்கம்1.- இந்த துணைப்பிரிவின் நோக்கங்களுக்காக, ''பரிசோதனைக்கான விண்ணப்பம்'' என்பது பதிவு செய்யப்பட்ட நபர், அவர் பெற்ற உள்ளீட்டு வரி வரவு அல்லது வரி விகிதத்தில் குறைப்பு உண்மையில் அவர் விநியோகம் செய்த பொருட்கள் அல்லது சேவைகளின் அல்லது இரண்டின் விலையில் ஏற்பட்டுள்ள விகிதாசார குறைப்பின் காரணமாகவா என்பதை பரிசோதிக்க விண்ணப்பதாரர் சமர்பித்துள்ள எழுத்து மூலமான விண்ணப்பம் எனப்பொருள்படும்.

விளக்கம் 2. இந்த துறையின் நோக்கத்திற்காக, ''ஆணையம்'' என்பதில் ''மேல்முறையீட்டு தீர்ப்பாயம்''உடன் சேர்ந்து வரும்.'';

(38) அட்டவணை III -ன் உட்பிரிவு 8-க்கு பிறகும் விளக்கம் 1-க்கு முன்னர் பின்வரும் உட்பிரிவுகள் சேர்க்கப்பட வேண்டியதாகும், அதாவது:-

''(9) இணை காப்பீட்டு ஒப்பந்தங்களின் கீழ் காப்பீடு செய்த நபருக்கு முன்னணி காப்பீட்டாளரும் இணைக்காப்பீட்டாளரும் ஒருங்கிணைந்து வழங்கும் காப்பீடு சேவைகளுக்காக முன்னணி காப்பீட்டாளர் இணை-காப்பீடு பிரிமீயம், முன்னணி

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

காப்பீட்டாளர், காப்பீடு செய்யப்பட்டவர் செலுத்தும் முழு பிரீமியம் தொகைக்கும் மத்திய வரி, மாநில வரி மற்றும் ஒருங்கிணைந்த வரியும் செலுத்த வேண்டுமென்ற விதிக்கு உட்பட்டு, பகிர்வதற்கான நிபந்தனைகள்.

10. காப்பீடு செய்யப்பட்ட ஒரு நபர் மறுகாப்பீடு செய்யப்பட்டவருக்கு செலுத்தும் மறு காப்பீடு பிரீமியத்திலிருந்து காப்பீட்டாளர் மறுகாப்பீடு கமிஷன் அல்லது மறுகாப்பீடு கமிஷன் அல்லது மறுகாப்பீடு கமிஷன் குறைக்கும் சந்தர்ப்பங்களில், காப்பீட்டாளர் செலுத்த வேண்டிய காப்பீட்டாளர்கள் கமிஷன் அல்லது மறு காப்பீட்டாளர் கமிஷன் உள்ளிட்டுள்ள முழு மறு காப்பீட்டாளர் பிரீமியத்திற்கு மத்திய வரி, மாநில வரி மற்றும் ஒருங்கிணைந்த வரி மறு காப்பீடு செய்த நபர் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு காப்பீட்டாளர் மறு காப்பீட்டாளருக்கு வழங்கும் சேவைகள்.'';

(39) செலுத்தப்பட்ட வரி அல்லது திரும்ப பெறப்பட்ட உள்ளீட்டு வரி வரவைத் திரும்பப் பெறுவது அனுமதிக்கப்பட மாட்டாது.- இந்த சட்டத்தின் பிரிவு 16-ன் துணைப்பிரிவுகள் (5) மற்றும் (6), திருத்தம் செய்யப்பட்ட அவசரச்சட்டத்தின் படி அனைத்து முக்கிய நேரங்களிலும் அமலில் இருப்பது போல், செலுத்தப்பட்ட அனைத்து வரி அல்லது உள்ளீட்டு வரி வரவு திரும்ப பெற்றதோ அல்வாறு செலுத்தப்படாததோ அல்லது மீட்கப்படாததோ போல் திரும்பப் பெறமாட்டாது.

5. 2024-ன் 18-வது சட்டத்திருத்தம்.- 2024-ன் கேரள நிதி சட்டம் (2024-ன் 18)-ன், பிரிவு 12-ல் காப்பு வாசகத்திற்கு பிறகு பின்வரும் காப்பு வாசகம் சேர்க்கப்பட வேண்டியதாகும், அதாவது.-

''மேலும் தொடர்புடைய சட்டத்தின் கீழ் ஒரு வருடமாக தொடர்புடைய அனைத்து வரி, வரிகள் அல்லது கூடுதல் கட்டணங்களுக்கான தீர்வு சான்றிதழ் வழங்கியுள்ள சந்தர்ப்பங்களில் அந்த ஆண்டிற்கான தொடர்புடைய சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ள அனைத்து சந்தர்ப்பங்களில் அந்த ஆண்டிற்கான தொடர்புடைய சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ள அனைத்து அபராதங்களுக்கும் பிரிவு 6-ன் துணைப்பிரிவு (i)-ன் உட்பிரிவில் உள்ள காப்பு வாசகத்தில் குறிப்பிட்டுள்ள அபராதம் தவிர்த்து, இந்த சட்டத்தின் கீழ் தீர்ப்பாக்கியுள்ளதாக கருதப்பட வேண்டியதாகும்.''.

ஆரிஃப் முகம்மது கான்,

ஆளுநர்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

கேரள அரசு

சட்ட (சட்டமியற்றல் -ஜி) துறை

அறிக்கை

எண்:118/ச.இ.ஜி 1/2025/சட்டம். திருவனந்தபுரம், 2026 பிப்ரவரி 9
1201 மகரம் 26
1947 மாகம் 20

கேரள மாநிலச் சட்டமன்றப்பேரவையின் பின்வரும் சடடம பொதுமக்களின் அறிவிற்காக இதனால் பிரசுரம் செய்யப்படுகிறது. சட்டமன்றப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட மசோதாவிற்கு 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 4 ஆம் தேதி ஆளுநரின் அனுமதி கிடைக்கப்பெற்றது.

ஆளுநரின் ஆணைப்படி
ஜி.எஸ்.ஆஷா ,
சிறப்பு செயலாளர்(சட்டம்).

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

2026-ன் 1-வது சட்டம்

2025-ன் கேரள வன (திருத்த) சட்டம்

1961-ன் கேரள வனச் சட்டத்தை மீண்டும் திருத்தம் செய்வதற்கான

ஒரு

சட்டம

மூன்னுமை,- 1961-ன் கேரள வனச் சட்டம் (1962-ன் 4) இதற்கு பின் தோன்றும் தேவைகளுக்காக மீண்டும் திருத்தம் செய்வது உகந்ததாக இருப்பதால்;

இந்திய குடியரசின் எழுபத்து ஆறாம் ஆண்டில் பின்வரும் படியாக சட்டம் இயற்றப்படுகிறது:-

1. குருக்கப்பெயர் மற்றும் தொடக்கம்.- (1) இந்தச் சட்டத்திற்கு 2025-ன் கேரள வன (திருத்த) சட்டம் என்று அழைக்கப்படலாம்.

(2) இது உடனடியாக அமலுக்கு வருவதாகும்.

2. பிரிவு 2-ற்கான திருத்தம்.- 1961-ன் கேரள வன சட்டத்தில் (1962-ன் 4) (இதற்குப் பின் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படும்), பிரிவு 2-ல் உட்பிரிவு (சி)-க்கு பதிலாக பின்வரும் உட்பிரிவு சேர்க்கப்பட வேண்டும், அதாவது:-

''(சி) ''வன அதிகாரி'' என்றால் ஒரு முதன்மை தலைமை வன பாதுகாவலர், கூடுதல் முதன்மை தலைமை வன பாதுகாவலர், தலைமை வன பாதுகாவலர், வன பாதுகாவலர், துணை வன பாதுகாவலர், உதவி வன பாதுகாவலர், கோட்ட வன அதிகாரி, வன விலங்கு காப்பாளர், உதவி வன விலங்கு காப்பாளர், வனசரக அதிகாரி,துணை வனசரக அதிகாரி, பிரிவு வன அதிகாரி, மரக்கிடங்கு அதிகாரி, பீட் வன அதிகாரி,வன பீட் உதவியாளர் (கைது செய்வதற்கான தேவையைத் தவிர) அல்லது இந்த சட்டம் மற்றும் அதன் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதியின் படியான ஒரு வன அதிகாரியின் ஏதேனும் பொறுப்பை நிறைவேற்றுவதற்காக பெயரை கூறி, அல்லது அரசின் உத்தரவுகள் படி அல்லது அதற்குக் கீழ் ஒரு வேலையை வகிப்பதற்காக நியமிக்கப்படுகின்ற ஏதேனும் நபர் எனப் பொருள்படும்;''

3. 47 பி பிரிவிற்கான திருத்தம்.- முதன்மை சட்டத்தின் பிரிவு 47 பி துணைப்பிரிவு (2)-ல்,-

(எ) ''தமது சொந்தப் பயன்பாட்டிற்காக ஒரு கட்டிடத்தை கட்டுவதற்காக அருகில பகுதியை சுதந்தம செய்வதற்காக இயன்ற வகையில் மரத்தை வெட்டுவதற்காகவோ'' ஆகிய சொற்களுக்குப் பிறகு ''அல்லது வனத்துறை மூலம விற்பனை செய்வதற்காகவோ அல்லது இந்த சட்டத்திலோ அதன கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளிலும் விதிமுறைகளுக்கு உட்பட்டு, மரத்தின் வயதை கருத்தில் கொள்ளாமல் பிற ஏதேனும் நல்ல நோக்கத்துடனான பயன்பாட்டிற்காகவோ,'' போன்ற சொற்களும் சின்னங்களும் சேர்க்கப்பட வேண்டும்;

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(பி) தற்போதுள்ள சுபபு வாசகத்திற்கு பதிலாக பின்வரும் காப்புவாசகம் சேர்க்கப்பட வேண்டும், அதாவது:-

''ஆனால், துணைப்பிரிவு (2)-ன் படியான விற்பனைக்கும் நல்ல நோக்கத்துடனான பயன்பாட்டிற்கான விதிமுறை, நிலத்தை பதிவு செய்து வழங்கும் நேரத்தில் அரசு ஒதுக்கி வைத்துள்ள சந்தனமரங்கள் ஏதேனும் இருந்தால் அவற்றிற்கோ 1986-ன் கேரள வன பாதுகாப்பு சட்டத்தின் (1986-ன் 35) பிரிவு 5-ன் கீழில் அறிக்கை செய்யப்பட்டுள்ள ஏதேனும் நிலத்தில் நிற்கின்ற சந்தன மரங்களுக்கோ, 2003-ன் கேரள வன (சூழலியல் ரீதியாக பலவீனமான நிலங்களை உரிமையாக்குதல் மற்றும் மேலாண்மை செய்தல்) சட்டம் (2005-ன் 21) கீழில் பாதுகாவலர் அறிக்கை செய்த பகுதிகளுக்கோ பொருந்தாது.''

4. பிரிவு 47 இ-ற்கான திருத்தம்:- முதன்மை சட்டத்தில் 47 இ பிரிவில்,-

(எ)ஒரத் தலைப்பில், ''அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி'', என்ற சொற்களுக்கு பதிலாக ''வனத்துறை'' என்ற சொற்கள் சேர்க்கப்பட வேண்டும்;

(பி) ''அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி'' என்ற சொற்களுக்கு பதிலாக ''வனத்துறை'' என்ற சொற்கள் சேர்க்கப்பட வேண்டும்.

5. பிரிவு 53-ற்கான திருத்தம்:- முதன்மை சட்டத்தில் பிரிவு 53-ல், ''வன சரகரின்'' என்ற சொல்லுக்கு பதிலாக ''சரக வன அதிகாரியின்'' என்ற சொற்கள் சேர்க்கப்பட வேண்டும்.

6. பிரிவு 64-ற்கான திருத்தம்:- முதன்மை சட்டத்தின் பிரிவு 64-ல், ''சரகரின்'' என்ற சொல்லுக்கு பதிலாக ''சரக வன அதிகாரியின்'' என்ற சொற்கள் சேர்க்கப்பட வேண்டும்

7. பிரிவு 68-ற்கான திருத்தம்:- முதன்மை சட்டத்தின் பிரிவு 68-ல் துணைப்பிரிவு (1)-க்கு பதிலாக பின்வரும் துணைப்பிரிவு சேர்க்கப்பட வேண்டும், அதாவது:-

''(1) உதவி வன பாதுகாவலரின் பதவிக்கும் குறையாத எந்தவொரு வன அதிகாரியும்,-

(எ) பிரிவு 47 ஜி அல்லது பிரிவு 62 அல்லது பிரிவு 65-ன் படி தண்டனை பெறக்கூடிய ஒரு குற்றம் தவிரவுள்ள வன சம்மந்தமான ஏதேனும் குற்றம் புரிந்ததாக நியாயமான காரணங்களால் சந்தேகிக்கப்படும் எந்தவொரு நபரிடமிருந்தும், சட்டத்தின் படியோ அதன கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளின் படியோ குற்றத்திற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள அதிகபட்ச அபராதத் தொகைக்கு சமமான ஒரு தொகை, அவர் செய்திருக்கக்கூடிய குற்றத்திற்கான இழப்பீடாக ஏற்றுக்கொள்ள வேண்டியதும், பறிமுதலுக்கு உட்பட்ட ஏதேனும் சொத்தை பறிமுதல் செய்துள்ள பட்சம் அத்தகைய அதிகாரி அதற்கு மதிப்பிடப்பட்ட விலை கிடைக்கும் பட்சம் அதை விடுவிக்கவோ அல்லது அத்தகைய சொத்தை அரசு பறிமுதலோ செய்யலாம்;

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(பி) சட்டப்படி வழக்கு தொடர்வு நடவடிக்கை தொடங்கிய பிறகு, குறறம சுமத்தப்பட்ட நபரின் விண்ணப்பத்தின் அடிப்படையில், அத்தகைய நபருக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்ட பிரிவு 47 ஐ அல்லது பிரிவு 62 அல்லது பிரிவு 65-ன் படி தண்டனைக்குரிய குற்றம் தவிரவுள்ள எந்தவொரு குற்றமும், உட்பிரிவு (எ)-ல் குறிப்பிட்டுள்ள வகையில் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்தின் விலையையும் மதிப்பையும் ஏற்றுக்கொண்டு, நீதிமன்றத்தின் ஒப்புதலுடன் சமரசப்படுத்தலாம்;

ஆனால், இந்தத் துணைப்பிரிவின் படி ஒரு குறறம சமரசம் செய்யப்பட்டாலும், இரண்டாவதோ தொடர்ந்து உள்ளதோவான குற்றம் செய்யப்பட்டுள்ளதா என்பதை தீர்மானிக்கும் தேவைக்காக அதே குற்றம் முன்னர் செய்துள்ளதாகக் கருதப்பட வேண்டியதும், இரண்டாவதோ தொடர்ந்து உள்ளதோவான அத்தகைய எந்தவொரு குற்றமும் இந்த உட்பிரிவின்படி சமரசம் செய்தல் கூடாததாகும்.''.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

கேரள அரசு

சட்ட (சட்டமியற்றல் -சி) துறை

அறிக்கை

எண்:58/ச.இ.தி3/2024/சட்டம். திருவனந்தபுரம், 2024 நவம்பர் 1
1200 துலாம் 16
1946 கார்த்திகம் 10

கேரள மாநில சட்டப்பேரவையில் பின்வரும் சட்டம் பொதுமக்களின் அறிவிற்காக இதனால் பிரகரம் செய்யப்படுகிறது. சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட மசோதாவிற்கு 2024-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ஆம் தேதி ஆளுநரின் அனுமதி கிடைக்கப்பெற்றது.

ஆளுநரின் ஆணைப்படி,
கெ.ஜி.சனல் குமார்,
சட்டச்செயலாளர்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

2024-ன் **25**-வது சட்டம்

2024-ன் கேரள தொழில் சார் ஒற்றை சாளர அனுமதி வாரியங்கள் மற்றும் தொழில் சார் நகர்ப்புற மேம்பாட்டு **(திருத்த)** சட்டம்

1999-ன் கேரள தொழில் சார் ஒற்றை சாளர அனுமதி வாரியங்கள் மற்றும் தொழில் சார் நகர்ப்புற மேம்பாட்டு சட்டத்தை மீண்டும் திருத்தல் செய்வதற்கான

ஒரு

சட்டம்

மூன்னுரை.- 1999-ன் கேரள தொழில் சார் ஒற்றை சாளர அனுமதி வாரியங்கள் மற்றும் தொழில் சார் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் (2000-ன் 5) இதற்கு பிறகு காணப்படும் தேவைகளுக்காக மீண்டும் திருத்தம் செய்வது உகந்ததாயிருப்பதாலும்;

இந்திய குடியரசின் எழுபத்து ஐந்தாம் ஆண்டில் பின்வரும் படியான சட்டம் இயற்றப்படுகிறது.-

1. சுருக்கத் தலைப்பும் தொடக்கமும்.- (1) இந்த சட்டம் 2024-ன் கேரள தொழில் சார் ஒற்றை சாளர அனுமதி வாரியங்கள் மற்றும் தொழில் சார் நகர்ப்புற மேம்பாட்டு (திருத்த) சட்டம் என அழைக்கடலாம்.

(2) இது உடன் அமலுக்கு வருவதாக கருதப்பட வேண்டும்.

2. சில சொற்றொடர்களுக்கு பதிலாக வேறு சில சொற்றொடர்களை சேர்த்தல்.- 1999-ன் கேரள தொழில் துறை ஒற்றை சாளர வாரியங்கள் மற்றும் தொழில் சார் நகர்ப்புற சட்டம் (2000-ன் 5) (இதற்குப் பிறகு முதன்மை சட்டம் என அழைக்கப்படும்).-

(i) ''துணை விதி'' என்ற சொல் எங்கெல்லாம் வருகிறதோ அதற்கு பதிலாக அங்கெல்லாம் ''பை லா'' என்ற சொல் அதன்படி சேர்க்கப்பட வேண்டியதாகும்;

(ii) ''தொழில் முனைவு'' என்ற சொற்கள் எங்கெல்லாம் வருகிறதோ அங்கெல்லாம் ''தொழில் நிறுவனம்'' என்ற சொல் அதற்கு பதிலாக அதன்படி சேர்க்கப்பட வேண்டியதாகும்;

3. பிரிவு 2-ல் திருத்தம்.- முதன்மை சட்டத்தின் பிரிவு 2-ன் , உட்பிரிவு (எ)-ல் ''தொழில் நிறுவனங்கள்'' என்ற சொல்லுக்கு பதிலாக ''தொழில் நிறுவனம்'' என்ற சொல் சேர்க்கப்பட வேண்டியதும் உட்பிரிவு (எம்) தவிர்க்கப்பட வேண்டியதுமாகும்.

4. பிரிவு 4-ல் திருத்தம்.- முதன்மை சட்டத்தின் பிரிவு 4-ன் உட்பிரிவு (1)-ல் ''இரண்டு இலட்சம் ரூபாய்க்கு மேல் மூலதன முதலீட்டில் சிறுரக தொழில் நிறுவனங்களை

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

தொடங்குவதற்காக'' என்ற சொற்களுக்கு பதிலாக ''பதினைந்து கோடி ரூபாய் வரையிலான மூலதன மூதலீட்டுள்ள தொழில் நிறுவனங்களை நிறுவவும் செயல்படுத்தவும், விரிவுபடுத்தவும் பன்முகப்படுத்தவும், நவீனமயப்படுத்தவும்'' எனற சொற்கள் சேர்க்கப்பட வேண்டியதுமாகும்.

5. பிரிவு 5-ல் திருத்தம்.- முதன்மை சட்டத்தின் பிரிவு 5-ல்,-

(i) துணைப்பிரிவு (1)-ல், ''தொடங்கவும் செயல்படுத்தவும்'' என்ற சொற்களுக்கு பதிலாக ''நிறுவவும் செயல்படுத்தவும் விரிவுபடுத்தவும் பன்முகப்படுத்தவும் நவீனமயமாக்கவும்'' என்ற சொற்கள் சேர்க்கப்பட வேண்டியதாகும்;

(ii) துணைப்பிரிவு (2)-ல் ''எந்த மாவட்டத்திற்காக அது உருவாக்கப்படுகிறது அந்த மாவட்டத்தின்'' என்ற சொற்களுக்கு பதிலாக ''எந்த தொழில் துறை பகுதியின் தேவைக்காக உருவாக்கப்படுகிறதோ அந்த தொழில் துறையினர்'' என்ற சொற்கள் சேர்க்கப்பட வேண்டியதாகும்;

(iii) துணைப்பிரிவு (6)-க்கு பிறகு பின்வரும் காபபு வாசகம சேர்க்கப்பட வேண்டியதாகும், அதாவது,-

ஆனால், தொழில்துறை பகுதியாக விளம்பரபடுத்தியுள்ள தனியார் பூங்காவின் காரியத்தில் அது சம்மந்தமான தனியார் பூங்காவின் தலைமை நிர்வாக அதிகாரி ஒரு சிறப்பு அழைப்பாளராக இருப்பார்.''.

6. பிரிவு 7-ன் திருத்தம்.- முதன்மை சட்டத்தின் பிரிவு 7-ன் துணைப்பிரிவு (1)-ல்,-

(i) ''தொடங்குவதற்கு'' என்ற சொல்லுக்கு பதிலாக ''நிறுவுவதற்கோ, செயல்படுத்துவதற்கோ விரிவுபடுத்துவதற்கோ பன்முகப்படுத்தவோ நவீனமயமாக்கவோ'' என்ற சொற்கள் சேர்க்கப்பட வேண்டியதாகும்.

(ii) ''உரிமங்களை புதுப்பித்தல்'' என்ற சொல்லுக்கு பதிலாக ''அவற்றின் புதுப்பித்தல்'' என்ற சொற்கள் சேர்க்கப்பட வேண்டியதாகும்.

7. பிரிவு 8-ன் திருத்தம்.- முதன்மை சட்டத்தின் பிரிவு 8-ல்,-

(i) துணைப்பிரிவு (1)-ல்,-

(எ) ''நிறுவ எண்ணியுள்ள'' எனற சொற்களுக்குப் பதிலாக ''நிறுவுவதற்கோ செயல்படுத்துவதற்கோ விரிவுபடுத்துவதற்கோ பன்முகப்படுததுவதற்கோ நவீனமயப்படுத்தவோ எண்ணியுள்ள'' என்ற சொற்கள் சேர்க்கப்பட வேண்டியதாகும்;

(பி) ''சான்றிதழ்களோ'' என்ற சொல்லுக்கு பிறகு ''அல்லது அவற்றின் புதுப்பித்தல்'' என்ற சொற்கள் சேர்க்கப்பட வேண்டியதாகும்;

(ii) துணைப்பிரிவு (4)-ல் ''நிறுவுவதற்கு அல்லது செயல்படுத்த'' என்ற சொற்களுக்கு பதிலாக ''நிறுவுவதற்கோ செயல்படுத்தவோ விரிவுபடுத்தவோ

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

பன்முகப்படுத்தவோ நவீனமயமாக்கவோ'' என்ற சொற்கள் சேர்க்கப்பட வேண்டியதாகும்.

8. பிரிவு 9-ன் திருத்தம்.- முதன்மை சட்டத்தின் பிரிவு 9-ன் துணைப்பிரிவு (1)-ல் ''நிறுவ எண்ணியுள்ள'' என்ற சொற்களுக்கு பதிலாக ''நிறுவவோ செயல்படுத்தவோ விரிவுபடுத்தவோ பன்முகப்படுத்தவோ நவீனமயப்படுத்தவோ நோக்கமிட்டுள்ள'' என்ற சொற்கள் சேர்க்கப்பட வேண்டியதாகும்.

9. பிரிவு 11-ன் திருத்தம்.- முதன்மை சட்டத்தின் பிரிவு 11-ன் துணைப்பிரிவு (1)-ல், ''அவ்வாறு நிபந்தனைகளுக்கு உட்பட்டு சலுகை வழங்கப்பட்டது'' என்ற சொற்களுக்கு பதிலாக ''அவ்வாறு பலனை மறுத்து கொண்டுள்ள உத்தரவு அவ்வாறு நிபந்தனைகளுக்கு உட்பட்டு வழங்கப்பட்ட உத்தரவோ'' என்ற சொற்கள் சேர்க்கப்பட வேண்டியதாகும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

கேரள அரசு

சட்ட (சட்டமியற்றல் -எ) துறை

அறிக்கை

எண்:16/ச.இ.எ 2/2025/சட்டம். தேதியிட்ட, திருவனந்தபுரம், 2025 மார்ச் 28
1200 மீனம் 14
1947 சைத்ரா 7

கேரள மாநிலச் சட்டப்பேரவையின் பின்வரும் சட்டம் பொதுமக்களின் அறிவிற்காக இதனால் பிரசுரம் செய்யப்படுகிறது சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட மசோதாவிற்கு 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28-ஆம் தேதி ஆளுநரின் அனுமதி கிடைக்கப்பெற்றது.

ஆளுநரின் ஆணைப்படி

கெ.ஜி. சனல் குமார்,
சட்ட செயலாளர்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

2025-ன் 3-வது சட்டம்

2025 கேரள நிதிச் சட்டம்

2025-26-ன் நிதி ஆண்டிற்கான கேரள அரசின் சில நிதிப் பரிந்துரைகளை அமலுக்கு கொண்டு வருவதற்கான

ஒரு

சட்டம்

முன்னுரை:- 2025-2026-ன் நிதி ஆண்டிற்கான கேரள அரசின் சில நிதிப் பரிந்துரைகளை அமலுக்குக் கொண்டு வருவது உகந்ததாக இருப்பதாலும்;

இந்தியக் குடியரசின் எழுபத்து ஆறாம் ஆண்டில் பின்வரும் படியாகச் சட்டம் இயற்றப்படுகிறது:-

அத்தியாயம் I

தொடக்கம்

1 சுருக்கத்தலைப்பு மற்றும் தொடக்கமும்:- (1) இந்தச் சட்டம் 2025-ன் கேரள நிதிச்சட்டம் என அழைக்கப்படலாம்.

(2) இந்தச் சட்டத்தில் பிற வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள படி தவிர,-

(எ) பிரிவு 4-ன் துணைப்பிரிவு (1)-ல் உட்பிரிவு (எ)-ல் 2017-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1-ஆம் தேதி அமலுக்கு வந்ததாகக் கருதப்பட வேண்டும்;

(பி) பிரிவு 6-ல் அரசு, அரசிதழ் அறிக்கை வாயிலாக தீர்மானிக்கும் அத்தகைய தேதியில் அமலுக்கு வருவதாகும்;

ஆனால், இந்தப் பிரிவின் வெவ்வேறு விதிமுறைகளுக்கு வெவ்வேறு தேதிகள் தீர்மானிக்கப்படலாம் மற்றும் சட்டத்திற்கான அத்தகைய எந்தவொரு விதிமுறையிலும் உள்ள எந்தவொரு குறிப்பும் அந்த விதிமுறை நடைமுறைக்கு வருவதற்கான குறிப்பாகக் கருதப்படும்;

(சி) பிரிவு 7 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1-ஆம் தேதி அமலுக்கு வந்ததாகக் கருதப்பட வேண்டும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(ங) இந்தச் சட்டத்தின் மீதமுள்ள விதிமுறைகள் 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி அமலுக்கு வந்ததாகக் கருதப்பட வேண்டும்.

அத்தியாயம்-II

வரி திருத்தம்

2. 1960-ன் சட்டம் 10-ற்கான திருத்தம்.- 1959-ன் கேரள நீதிமன்ற கட்டணங்கள் மற்றும் வழக்குகள் மதிப்பீட்டுச் சட்டம் (1960-ன் 10)ஆம் சட்டம்,-

(1) பிரிவு 7 துணைப்பிரிவு (2)-ல், ''38'', என்ற எண்ணிற்கும் சின்னத்திற்கும் பின் ''40(1 எ)'', என்ற எண்களும் அடைப்புக் குறிகளும் எழுத்தும் சின்னமும் சேர்க்கப்பட வேண்டும்'';

(2) பிரிவு 25-ல் ''ஆயிரம் ரூபாய்'' என்ற சொற்கள் எவ்விடங்களில் எல்லாம் வருகிறதோ அதற்கு பதிலாக ''ஐயாயிரம் ரூபாய்'' என்ற சொற்கள் சேர்க்கப்பட வேண்டும்;

(3) பிரிவு 27-ல், ''ஐநூறு ரூபாய்'' என்ற சொற்கள் எவ்விடங்களிலெல்லாம் வருகிறதோ அதற்கு பதிலாக ''இரண்டாயிரத்து ஐநூறு'' ரூபாய் என்ற சொற்கள் சேர்க்கப்பட வேண்டும்'';

(4) பிரிவு 28-ல்,-

(i) ''இருநூறு ரூபாய்'' என்ற சொற்களுக்கு பதிலாக ''ஐயாயிரம் ரூபாய்'' என்ற சொற்களும் ''ஆயிரம் ரூபாய்'' என்ற சொற்களுக்குப் பதிலாக ''பத்தாயிரம் ரூபாய்'' என்ற சொற்கள் சேர்க்கப்பட வேண்டும்;

(ii) விளக்கத்தில், ''தொண்டு நிறுவனம்'' என்ற சொற்களுக்குப் பிறகு ''அல்லது 1955-ன் திருவிதாங்கூர் - கொச்சி இலக்கியம், அறிவியல், தொண்டு சங்கங்கள் பதிவு செய்வதற்கான சட்டத்திலும் (1955-ன் XII) 1860-ன் சங்கங்கள் பதிவு சட்டத்திலும் (1860-ன் 21-வது மத்திய சட்டம்) பதிவு செய்யப்பட்ட ஏதேனும் நிறுவனத்திலோ'' என்ற சொற்களும் சின்னங்களும் அடைப்புக்குறிகளும் எண்களும் சேர்க்கப்பட வேண்டும்'',

(5) பிரிவு 29-க்கு பதிலாக பின்வரும் பிரிவு சேர்க்கப்பட வேண்டும், அதாவது:-

''29. 1963-ன் சிறப்பு நிவாரண சட்டத்தின் படி கைவசம் வைப்பதற்கான வழக்குகள்.- 1963-ன் சிறப்பு நிவாரண சட்டத்தில் (1963-ன் 47-வது மத்தியச் சட்டம்) பிரிவு 6-ன் படி, அசையாச் சொத்தைக் கைவசம் வைப்பதற்கான ஒரு வழக்கில், கட்டணம்,

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

சொத்தின் சந்தை மதிப்பின் மூன்றில் ஒரு பங்கோ பத்தாயிரம் ரூபாயோ இவற்றில் எது கூடுதலோ அதன் அடிப்படையில் கணக்கிடப்பட வேண்டும்.'';

(6) பிரிவு 30-ல் ''ஆயிரம் ரூபாய்'' என்ற சொற்களுக்குப் பதிலாக ''இருபதாயிரம் ரூபாய்'' என்ற சொற்கள் சேர்க்கப்பட வேண்டும்;

(7) பிரிவு 31-ல் ''ஆயிரம் ரூபாய்'' என்ற சொற்களுக்குப் பதிலாக ''ஐயாயிரம் ரூபாய்'' என்ற சொற்கள் சேர்க்கப்பட வேண்டும்;

(8) பிரிவு 35-ல் துணைப்பிரிவு (1)-ல் ''ஆயிரம் ரூபாய் என்ற சொற்களுக்கு பதிலாக ''ஐயாயிரம் ரூபாய்'' என்ற சொற்கள் சேர்க்கப்பட வேண்டும்;

(9) பிரிவு 37-ல், துணைப்பிரிவு (2)-ல்,-

(i) இனம் (i)-ல், ''ஐம்பது ரூபாய்'' என்ற சொற்களுக்குப் பதிலாக ''ஐநூறு ரூபாய்'' என்ற சொற்கள் சேர்க்கப்பட வேண்டும்;

(ii) இனம் (ii)-ல், ''முந்நூறு ரூபாய்'' என்ற சொற்களுக்குப் பதிலாக ''இரண்டாயிரம் ரூபாய்'' என்ற சொற்கள் சேர்க்கப்பட வேண்டும்;

(10) பிரிவு 40-ல், துணைப்பிரிவு (1)-க்கு பிறகு, பின்வரும் துணைப்பிரிவு சேர்க்கப்பட வேண்டும், அதாவது:-

''(1எ) துணைப்பிரிவு (1)-ல் என்னதான் அடங்கியிருந்தாலும் தீர்வு செய்பவர், வழங்குபவர் அல்லது அவருக்கு கீழில் தற்போதோ எதிர்காலத்திலோ உரிமைக்கோரக்கூடிய ஏதேனும் நபர் தான் பத்திரம், தீர்வுப் பத்திரம், விடுதலைப் பத்திரம் ஆகியவற்றை இரத்து செய்வதற்காக விண்ணப்பிக்கும் பட்சம், சொத்தின் சந்தை மதிப்பை அடிப்படையாக்கிக் கொண்டு கட்டணம் கணக்கிடப்பட வேண்டும்.'';

(11) பிரிவு 45-ல்,-

(i) ''1923-ன் மெட்ராஸ் நில அளவை மற்றும் எல்லைகள் சட்டம் பிரிவு 14-ன் படியோ, 1094-ன் திருவிதாங்கூர் நில அளவை எல்லைகள் சட்டம் பிரிவு 13-ன் படியோ, 1074-ன் 2-வது கொச்சி நில அளவைச் சட்டம் பிரிவு 14-ன் படியோ'' என்ற சொற்களுக்கும் எண்களுக்கும் சின்னத்திற்கும் பதிலாக ''1961-ன் கேரள நில அளவை எல்லைகள் சட்டத்தின் (1961-ன் 37) பிரிவு 13-ன் படி'' என்ற சொற்களும் எண்களும் சின்னங்களும் அடைப்புக் குறியும் சேர்க்கப்பட வேண்டும்;

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(ii) "ஆயிரம் ரூபாய்" என்ற சொற்களுக்குப் பதிலாக "ஐயாயிரம் ரூபாய்" என்ற சொற்கள் சேர்க்கப்பட வேண்டும்;

(12) பிரிவு 46-ல் "பதினைந்து ரூபாய்" என்ற சொற்களுக்குப் பதிலாக "எழுபத்து ஐந்து ரூபாய்" என்ற சொற்கள் சேர்க்கப்பட வேண்டும்;

(13) பிரிவு 47-ல் "செலுத்த வேண்டியக் கட்டணம் பத்து ரூபாயாக இருப்பதாகும்" என்ற சொற்களுக்கும் சின்னத்திற்கும் பதிலாக பின்வருபவை சேர்க்கப்பட வேண்டும், அதாவது:-

"செலுத்த வேண்டிய கட்டணம் பின்வரும் விகிதங்களில் இருக்கும்,-

(i) ஒரு முன்சிப் நீதிமன்றத்தில் - ஐநூறு ரூபாய்

(ii) ஒரு சார் நீதிமன்றத்தில் அல்லது

ஒரு மாவட்ட நீதிமன்றத்தில் - ஆயிரம் ரூபாய்.";

(14) பிரிவு 50-ல், "இருபத்து ஐந்து ரூபாய்", "ஐம்பது ரூபாய்", "இருநூறு ரூபாய்", "நானூறு ரூபாய்" என்ற சொற்களுக்குப் பதிலாக "நூற்றி இருபத்து ஐந்து ரூபாய்", "இருநூற்று ஐம்பது ரூபாய்", "ஆயிரம் ரூபாய்", மற்றும் "இரண்டாயிரம் ரூபாய்" என்ற சொற்கள் முறையே சேர்க்கப்பட வேண்டும்.

(15) பிரிவு 52 ஏ-ல் அட்டவணை II-ன் விதித்தொகுப்பு 3-ல் இனம் (iii)-ன் (சி) மற்றும் (டி) என்ற துணை இனங்களில்" என்ற சொற்களுக்கும் எண்களுக்கும் அடைப்புக் குறிக்களுக்கும் எழுத்துக்களுக்கும் பதிலாக, "அட்டவணை II-ன் விதித்தொகுப்பு 1-ன் இனம் (ii)-ன் (சி) மற்றும் (டி)யும் துணை இனத்தில் " என்ற சொற்களும் எண்களும் அடைப்புக் குறிகளும் எழுத்துக்களும் சேர்க்கப்பட வேண்டும்;

(16) பிரிவு 68-ல், "அட்டவணை II-ன் விதித்தொகுப்பு II (ஜி) மற்றும் (டி)ல் "என்ற சொற்களுக்கும் அடைப்புக் குறிகளுக்கும் எழுத்துக்களுக்கும் எண்ணிற்கும் பதிலாக "அட்டவணை II-ன் விதித்தொகுப்பு 9-ல் இனம் (ஜி) மற்றும் (எஸ்)-ன் படி" என்ற சொற்களும் அடைப்புக்குறிகளும் எழுத்துக்களும் எண்களும் சேர்க்கப்பட வேண்டும்;

(17) பிரிவு 74-ல், துணைப்பிரிவு (1)-ல், இனம் (ii)-ல் "பன்னிரெண்டாயிரம் ரூபாய்" என்ற சொற்களுக்குப் பதிலாக "மூன்று இலட்சம் ரூபாய்" மற்றும் "பதினைந்தாயிரம் ரூபாய்" என்ற சொற்களுக்குப் பதிலாக "பத்து இலட்சம் ரூபாய்" எனவும் சேர்க்கப்பட வேண்டும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(18) பிரிவு 74 எ-ல் துணைப்பிரிவு (1)-ல், இனம் (பி)-ல் "நூறு ரூபாய்" என்ற சொற்களுக்குப் பதிலாக "இருபத்தைந்தாயிரம் ரூபாய்" எனவும் "ஆயிரம் ரூபாய்" என்ற சொற்களுக்குப் பதிலாக "பத்து இலட்சம் ரூபாய் எனவும் சேர்க்கப்பட வேண்டும்;

(19) பிரிவு 76-ல், -

(i) துணைப்பிரிவு (1)-ல், "சர்ச்சையில் சம்மந்தப்பட்ட தொகை" என்ற சொற்களுக்குப் பிறகு , "1996-ன் நடுவர் மன்றம் மற்றும் சமரசச்சட்டத்தின் (1996-ன் 26-வது மத்தியச் சட்டம்) பிரிவு 34-ன் கீழ் உற்ற மனுக்களில் உயர்நீதிமன்றம் முன்பாக தாக்கல் செய்யப்பட்ட அசல் மனுக்களுக்கான தொகை வழங்கலின் 0.5 சதவீதமும் 2002-ன் விதி பொருளாதார சொத்துக்களின் பத்திரமயமாக்கல், மறுகட்டமைப்பு மற்றும் பத்திர வட்டி அமலாக்கச் சட்டம் (2002-ன் 54-வது மத்திய சட்டம்) கீழ் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்திற்கு ஒரு விண்ணப்பத்திற்கு நூறு ரூபாய் என்ற விகிதத்தில்", என்ற சொற்களும் எண்களும் சின்னங்களும் அடைப்புக் குறிகளும் சேர்க்கப்பட வேண்டும்;

(ii) துணைப்பிரிவு (2)-ல், இனம் (ii)-ல் "அட்டவணை II-ல் விதித்தொகுப்பு 16-ல்" என்ற சொற்களுக்கும் எண்களுக்கும் சின்னங்களுக்கும் பதிலாக "அட்டவணை II-ன் விதித்தொகுப்பு 12" என்ற சொற்களும் எண்களும் சின்னங்களும் சேர்க்கப்பட வேண்டும்;

(20) அட்டவணையில், -

(எ) அட்டவணை I-ல் 1 ஆம் விதித் தொகுப்பிற்கும் அதற்கு நேரான நேர்வரிசைகள் (2) மற்றும் (3) ஆகியவற்றின் உள்ளீடுகளுக்குப் பிறகு பின்வரும் விதித்தொகுப்பும் உள்ளீடுகளும் முறையே சேர்க்கப்பட வேண்டும்; அதாவது:-

"1 எ	ஏதேனும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு வழக்கு அல்லது எழுத்துப்பூர்வ அறிக்கை, ஒரு ஒத்திவைப்பு அல்லது எதிர் கோரிக்கை அல்லது மேல்முறையீட்டு குறிப்பாணையைக் கோருதல்-	
	எந்தவொரு குற்றச்செயல் காரணமாக ஏற்படுகின்ற உடல் காயம் அல்லது மரணத்திற்கான இழப்பீடு, கடுமையானக் காயம், தீங்கிழைக்கும் வழக்கு தொடராமலும், இகழுரை - அவதூறு அல்லது பழித்துரை ஆகியவற்றிற்கான இழப்பீடு	இழப்பீட்டுத் தொகையில் ஒரு சதவீதம்";

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(பி) அட்டவணை (II)-க்குப் பதிலாக பின்வரும் அட்டவணை சேர்க்கப்பட வேண்டும், அதாவது:-

அட்டவணை II

விதித்தொகுப்பு	விவரங்கள்	சரியானக் கட்டணம்
(1)	(2)	(3)
1.	1908-ன் உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் (1908-ன் 5-வது மத்தியச்சட்டம்) பிரிவு 47-ன் படியோ பிரிவு 144-ன் படியோ ஏதேனும் விஷயத்தை தீர்மானிப்பதற்கான ஒரு உத்தரவை உள்ளடக்கிய ஒரு உத்தரவில் உள்ளதும் பிற வகையில் ஏற்பாடு செய்யப்படாததுமான மேல் முறையீட்டு மனு-	
	(i) உயர்நீதிமன்றம் அல்லாமல் உள்ள ஏதேனும் நீதிமன்றம் அல்லது நில வருவாய் ஆணையர் அல்லது தலைமை நிர்வாக அதிகாரி அல்லது ஏதேனும் நிர்வாக அதிகாரிஆகியோர் திருப்தியுறும் போது	ஐம்பது ரூபாய்
	(ii) உயர்நீதிமன்றத்திடம் சமர்ப்பிக்கும்போது	
	(ஏ) 2006-ன் கேரள விவசாயிகள் கடன் நிவாரணக் குழுச் சட்டம் (2007-ன் 1) கீழ் உள்ள உத்தரவைத் தவிர வேறு ஒரு உத்தரவிலிருந்து	
	(1) உத்தரவைப் பிறப்பித்தது ஒரு கீழ் நீதிமன்றம் அல்லது பிற அதிகாரப் பதவி ஆக இருக்கும் பட்சம்-	
	(எ) உத்தரவு, ஆயிரம் ரூபாய்க்கும் மிகாத வழக்கு அல்லது நடவடிக்கையை சார்ந்ததாக இருந்தால்	நூற்றி இருபத்தைந்து ரூபாய்
	(பி) பிற ஏதேனும் விஷயத்தில்	ஐம்பது ரூபாய்
	(2) மேல் முறையீடு, 1958-ன் உயர்நீதிமன்றச் சட்டம் (1959-ன் 5) பிரிவு 5-ன் படி இருக்கும் பட்சம்	

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(எ) மேல்முறையீட்டு அதிகார வரம்பைப் பயன்படுத்தி அமலாக்கப்பட்ட உத்தரவிலிருந்து	நூற்றி இருபத்தைந்து ரூபாய்
(பி) 1908-ன் சிவில் நடைமுறைச்சட்டம்	
(1908-ன் மத்திய சட்டம் 5) படி மேல்முறையீடு செய்யத்தக்க, அசல் அதிகார வரம்பை பயன்படுத்தி நிறைவேற்றப்பட்ட ஒரு உத்தரவிலிருந்து, அதை ஒரு கீழ் நீதிமன்றம் நிறைவேற்றியிருந்தால்	நூற்றி இருபத்தைந்து ரூபாய்
(சி) பிற ஏதேனும் சங்கதிகளில்	ஒவ்வொரு மேல்முறையீட்டாளருக்கும் ஆயிரம் ரூபாய்
(3) மேல்முறையீடு, 1949-ன் வங்கியில் ஒழுங்குமுறைச் சட்டம் (1949-ன் 10-வது மத்திய சட்டம்) பிரிவு 45 பி-ன் கீழ் இருக்கும் பட்சம்	ஆயிரத்து இருநூற்று ஐம்பது ரூபாய்
(4) மேல்முறையீடு, 2023-ன் பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்கிதா (2023-ன் 46-வது மத்திய சட்டம்) பிரிவு 415-ன் கீழ் இருக்கும் பட்சம்	ஐம்பது ரூபாய்
(பி) 2006-ன் கேரள விவசாய கடன் நிவாரணக் குழுச் சட்டம் (2007-ன் 1) கீழ் ஒரு உத்தரவிலிருந்து	இருபத்து ஐந்து ரூபாய்
(சி) 1961-ன் வருமான வரிச்சட்டம் (1961-ன் 43-வது மத்தியச் சட்டம்) கீழ் மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் ஒரு உத்தரவிலிருந்துள்ள,-	
(எ) மேல்முறையீடு தொடர்பான வழக்கில், மதிப்பீட்டு அதிகாரியால் கணக்காக்கப்பட்ட படியாக மதிப்பீடு செய்பவரின் மொத்த சொத்தில் ஒரு இலட்சம் ரூபாய் அல்லது அதற்கும் குறைவாகும் பொருட்டு	இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய்
(பி) அத்தகைய வருவாய் ஒரு இலட்சம் ரூபாய்க்கு மிகுந்தும் ஆனால் இரண்டு இலட்சம் ரூபாய்க்கும் மிகாமல் இருக்கும் பட்சம்	ஏழாயிரத்து ஐந்நூறு ரூபாய்
(சி) அத்தகைய வருவாய் இரண்டு இலட்சம் ரூபாய்க்கும் மிகும் பட்சம்,-	
(i) மத்திய அரசு சமர்ப்பிக்கின்ற மேல்முறையீட்டின் சங்கதியில்	அதிகபட்சம் ஒரு இலட்ச ரூபாய்க்கு உட்பட்டு கோரப்படும்

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

	நிவாரணத்தின் இரண்டு சதவீதம்
(ii) பிற அனைத்து சங்கதிகளில்	அதிகபட்சம் பத்து இலட்சம் ரூபாய்க்கு உட்பட்டு கோரப்படும் நிவாரணத்தின் ஐந்து சதவீதம்
(டி) ஒரு மேல்முறையீட்டின் பொருள் மேற்குறிப்பிட்ட துணை உட்பிரிவுகள் (எ) முதல் (சி) வரை குறிப்பிடப்பட்டுள்ளவை தவிரவுள்ள வேறு ஏதேனும் விஷயத்துடன் தொடர்புடையதாகும் பட்சம்	குறைந்தபட்சம் இரண்டாயிரத்து ஐநூறு ரூபாய்க்கு உட்பட்டு கோரப்படும் நிவாரணத்தின் பத்து சதவீதம்
(டி) 1957-ன் சொத்து வரிச்சட்டத்தின் (1957-ன் 27-வது மத்தியச் சட்டம்) கீழுள்ள மேல்முறையீட்டு ஆணையத்தின் ஒரு உத்தரவிலிருந்து-	
(எ) மேல்முறையீடு தொடர்பான வழக்கில், மதிப்பீட்டு அதிகாரியால் கணக்கிடப்பட்ட படியான மதிப்பீடு செய்பவரின் மொத்த சொத்து ஒரு இலட்சம் ரூபாயோ அதற்கும் குறைவாகவோ ஆகும் பட்சம்	இரண்டாயிரத்து ஐநூறு ரூபாய்
(பி) அத்தகைய மொத்த சொத்து வருவாய் ஒரு இலட்சம் ரூபாய்க்கு மிகுந்தும் ஆனால் இரண்டு இலட்சம் ரூபாய்க்கும் மிகாமலும் இருக்கும் பட்சம்	ஏழாயிரத்து ஐநூறு ரூபாய்
(சி) அத்தகைய வருவாய் இரண்டு இலட்சம் ரூபாய்க்கும் மிகும் பட்சம்,-	கோரப்பட்ட நிவாரணத்திலிருந்து ஐந்து சதவீதம்
(டி) ஒரு மேல்முறையீட்டின் விவாதத்திற்குரிய பொருள் மேற்குறிப்பிட்ட துணை உட்பிரிவுகள் (எ) முதல் (சி) வரை குறிப்பிடப்பட்டுள்ளவைத் தவிரவுள்ள வேறு ஏதேனும் விஷயத்துடன் தொடர்புடையதாகும் பட்சம்	குறைந்த பட்சம் இரண்டாயிரத்து ஐநூறு ரூபாய்க்கு உட்பட்டு கோரப்படும் நிவாரணத்தின் பத்து சதவீதம்

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

	(iii) மேல்முறையீடு செய்வதற்கு பிற எந்தவொரு சட்டத்தின்படி எந்தவொரு நீதிமன்ற கட்டணமும் கமத்தப்படக்கூடாதபோது, சட்ட உரிமையின் படி அரசிடம் உணர்த்துவதற்கு	நூற்றி இருபத்து ஐந்து ரூபாய்
2.	1996-ன் நடுவர் மற்றும் சமரச சட்டம் (1996-வது 2 வது மத்தியச் சட்டம்) கீழுள்ள மேல்முறையீட்டு மனு-	
	(i) 1996-ன் நடுவர் மற்றும் சமரச சட்டம் (1996-ன் 26-வது மத்தியச் சட்டம்) பிரிவு 34-ன் கீழ் ஒரு உத்தரவுக்கு எதிரான மேல்முறையீட்டு மனு தீர்ப்பை ஒதுக்கி வைப்பது அல்லது ஒதுக்க மறுத்தல் ஆகியவற்றிற்கு	தீர்ப்புத்தொகையின் ஒரு சதவீதம்
	(ii) 1996-ன் நடுவர் மற்றும் சமரச சட்டம் (1996-ன் 26-வது மத்திய சட்டம்)இன் பிரிவு 37 (1) (எ), (பி), பிரிவு 37(2) (எ), (பி) ஆகியவையில் உன்னடக்கப்பட்ட 8, 9, 16(2), 16(3) மற்றும் 17 ஆகிய பிரிவுகளின் கீழ் அமலாக்கப்பட்ட உத்தரவுகளுக்கு எதிரான மேல் முறையீடுகளில் பின்வருமாறு கட்டணம் வசூலிக்கப்படும்:-	
	(எ) உரிமைக்கோரலின் மதிப்பு பத்து இலட்சம் ரூபாய் வரை இருந்தால்	ஐநூறு ரூபாய்
	(பி) உரிமைக் கோரலின் மதிப்பு பத்து இலட்சம் ரூபாய்க்கும்மேல் மற்றும் ஐம்பது இலட்சம் ரூபாய் வரை இருந்தால்	இரண்டாயிரம் ரூபாய்
	(சி) உரிமைக்கோரலின் மதிப்பு ஐம்பது இலட்சம் ரூபாய்க்கும் மேல் இருந்தால்	ஐயாயிரம் ரூபாய்
3.	உயர்நீதி மன்றம் அல்லாமல் ஏதேனும் சிவில் நீதிமன்றமோ அல்லது ஏதேனும் வருவாய் நீதிமன்றமோ, அதிகாரியோ தலைமை அதிகாரியோ அல்லது பிற ஏதேனும் நீதிமன்றமோ, நீதித்துறை அல்லது நிர்வாக அதிகாரியோ பிறப்பிக்கும் ஒரு தீர்ப்பாணையின் அமலாக்கம் இல்லாத ஒரு தீர்ப்பு அல்லது உத்தரவின் நகல் அல்லது மொழிபெயர்ப்பு	இருபத்து ஐந்து ரூபாய்
4.	குற்றவியல் நீதிமன்றத்தின் ஒரு தீர்ப்பு அல்லது உத்தரவின் நகல் அல்லது மொழிபெயர்ப்பு	இருபத்து ஐந்து ரூபாய்
5.	உயர்நீதிமன்றம் அல்லது பிற ஏதேனும் நீதிமன்றம் பிறப்பித்த ஒரு தீர்ப்பாணையின் அமலாக்கம் ஒரு தீர்ப்பாணை அல்லது உத்தரவின் நகல்.	இருபத்து ஐந்து ரூபாய்

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

6.	1959-ன் கேரள முத்திரைத்தாள் சட்டம் (1959-ன் 17) கீழ் முத்திரை வரி செலுத்த வேண்டிய ஏதேனும் ஆவணத்தின் நகல் வழக்கு அல்லது நடவடிக்கையில் ஏதேனும் கட்சிக்காரர் திரும்பப் பெறப்பட்ட அசல் ஆவணத்திற்கு பதிலாக வைக்கும்போது-	
	(எ) அசல் ஆவணத்தின் மேல் சுமத்த வேண்டிய முத்திரை வரி இரண்டு ரூபாய் ஐம்பது பைசாவிற்கும் மிகாமல் இருந்தால்	அசல் ஆவணத்தின் மேல் சுமத்த வேண்டிய முத்திரை வரி
	(பி) பிற ஏதேனும் சங்கதியில்	பத்து ரூபாய்
7.	இந்தச் சட்டத்தால் வேறுவிதமாக ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் வருவாய் நடவடிக்கையோ, நீதித்துறை நடவடிக்கையோ, அல்லது உத்தரவின் நகலோ, அல்லது ஏதேனும் நீதிமன்றத்திலிருந்தோ அரசு அதிகாரியின் அலுவலகத்திருந்து வெளியே கொண்டு சென்ற அத்தகைய ஏதேனும் கணக்கு ஆண்டு அறிக்கையின் அல்லது அறிக்கையின் பிற நகலோ-	
	ஒவ்வொரு ஆவணத்திற்கும்	பத்து ரூபாய்
8.	(எ) அரசுடனான நேரடியான உடன்படிக்கையின் படி தற்காலிகமாக நீர்ப்பாக்கப்பட்ட நிலத்தை கைவசம் வைத்துள்ள ஏதேனும் ஒரு நபர் ஏதேனும் நில வருவாய் அதிகாரியிடம் சமர்ப்பிக்கின்ற விண்ணப்பம் அல்லது மனு அந்த விண்ணப்பம் அல்லது மனுவின் வாதத்திற்குரிய பொருள் அவ்வாறான உடன்படிக்கைக்கு மட்டுமே சம்மந்தப்பட்டிருக்கும்போது	பத்து ரூபாய்
	(பி) தற்காஸ்டின் அல்லது ஒத்துக்கீட்டின் அடிப்படையில் நிலத்தை வழங்க அல்லது நிர்ணயம் செய்வது தொடர்பாக ஏதேனும் நில வரி அதிகாரிக்கு சமர்ப்பிக்கின்ற விண்ணப்பம் அல்லது மனு	பத்து ரூபாய்
	(சி) வேளாண் தேவைக்கு அல்லது வேளாண்மைக்கு அல்லாமல் உள்ள தேவைக்காக நிலத்தைக் குத்தகைக்கு கொடுப்பதற்காக ஆட்சியருக்கு சமர்ப்பிக்கின்ற விண்ணப்பம்	இருபத்து ஐந்து ரூபாய்
	(டி) ஏதேனும் நிலத்தின் பாதுகாப்பு அல்லது திருத்தத்திற்கு தற்போது நடைமுறையிலுள்ள ஏதேனும் சட்டத்தின்படி ஏதேனும் நிர்வாக அதிகாரியிடம் சமர்ப்பிக்கின்ற விண்ணப்பம் அல்லது மனு அந்த விண்ணப்பம் அல்லது மனுவின் அவ்வாறான பாதுகாப்பு அல்லது திருத்தத்திற்கு	இருபத்து ஐந்து ரூபாய்

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

மட்டுமே சம்மந்தப்பட்டிருக்கும்போது

(இ) ஏதேனும் வாரியம் அல்லது நிர்வாக அதிகாரியால் அமலாக்கப்பட்ட ஏதேனும் உத்தரவின், அல்லது அத்தகைய அலுவலகத்தில் பாதுகாக்கப்பட்டுள்ள பிற ஏதேனும் விண்ணப்பத்தின் ஒரு நகல் அல்லது மொழி பெயர்ப்பிற்காக அவ்வாறான வாரியம் அல்லது நிர்வாக அதிகாரியிடம் சமர்ப்பிக்கின்ற விண்ணப்பம் அல்லது மனு	இருபத்து ஐந்து ரூபாய்
(எஃப்) குத்தகைக்கான காலாவதியை நீட்டிப்பு செய்வதற்காக ஒரு வன ஒப்பந்ததாரர் ஒரு வன அதிகாரியிடம் சமர்ப்பிக்கின்ற விண்ணப்பம்-	
(i) குத்தகைக்கு உட்பட்ட விவாதத்திற்குரிய பொருளின் மதிப்பு ஒரு இலட்சத்து இருபத்தி ஐயாயிரம் ரூபாய் அல்லது அதற்கும் குறைவாக இருந்தால்	ஐநூறு ரூபாய்
(ii) அத்தகைய விலை ஒரு இலட்சத்து இருபத்து ஐயாயிரம் ரூபாய்க்கும் மிகுந்தால், ஒரு இலட்சத்து இருபத்து ஐயாயிரம் ரூபாய்க்கும் மிகும் ஒவ்வொரு ஐயாயிரம் ரூபாய் அல்லது அதன் ஒரு பகுதிக்கு	நூறு ரூபாய்
(ஜி) இந்தியாவிற்கு வெளியே பயன்படுத்தும் நோக்கத்திற்காக உள்ள தனியார் ஆவணங்களை சான்றளிப்பதற்கான விண்ணப்பம்-	
(i) ஆவணத்தின் உண்மைத்தன்மைக்கான சரிபார்ப்பு உட்படும்போது	ஐநூறு ரூபாய்
(ii) நோட்டரியின் (சான்றுறுதி வழங்கும வழக்குரைஞர்) சான்றளிப்பதற்குப் பின் மேற்கையொப்பம் தேவைப்படுபவைக்கு	இருநூற்று ஐம்பது ரூபாய்
(எச்) அரசிடம் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம் அல்லது மனு பிற வகையில் அதற்கு ஏற்பாடு செய்யப்படவில்லை என்றால்-	
(i) சட்டம் அல்லது சட்ட அமலாக்கமுள்ள விதி மூலம் வழங்கப்பட்ட அதிகாரத்தை பயன்படுத்தவோ பயன்படுத்தாமல் இருக்கவோ செய்வது அதில் உட்படும்போது	பத்து ரூபாய்
(ii) பிற சங்கதிகளில்	ஐந்து ரூபாய்
(i) நில வருவாய் ஆணையத் தலைமை நிர்வாக அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம்	

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

	அல்லது மனு பிற வகையில் அதற்கு ஏற்பாடு செய்யப்படவில்லை என்றால்-	
	(i) சட்டம் அல்லது சட்ட அமலாக்கமுள்ள விதி மூலம் வழங்கப்பட்ட அதிகாரத்தை பயன்படுத்தவோ பயன்படுத்தாமல் இருக்கவோ செய்வது அதில் உட்படும்போது	ஐம்பது ரூபாய்
	(ii) பிற சங்கதிகளில்	இருபது ரூபாய்
	(ஜெ) (i) 1971-ன் தனியார் வனங்கள் (உரிமைப் பெறுதல் மற்றும் ஒதுக்கீடு) சட்டத்தின் (1971-ன் 26) பிரிவு 8(1)-ன் கீழ் அமைக்கப்பட்டுள்ள தீர்ப்பாணையத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம்	நூற்றி இருபத்து ஐந்து ரூபாய்
	(ii) ஒரு இடைக்கால உத்தரவிற்காக அத்தகைய தீர்ப்பாணையத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம்	மூப்பது ரூபாய்
	(கெ) (எச்) அல்லது (ஜ) என்ற உட்பிரிவில் உட்படாததும் ஒரு அரசு அதிகாரி அல்லது ஒரு அரசு அலுவலகத்தில் சமர்ப்பிப்பதுமான விண்ணப்பம் அல்லது மனு பிற வகையில் அதற்கு ஏற்பாடு செய்யப்படவில்லை என்றால்	இருபத்து ஐந்து ரூபாய்
9.	(எ) ஏதேனும் நீதிமன்றம் அமலாக்கம் செய்த ஏதேனும் தீர்ப்பு, தீர்ப்பாணை, அல்லது ஏதேனும் நடவடிக்கை ஆணை அல்லது உத்தரவு அல்லது அத்தகைய நீதிமன்றத்தின் பதிவில் உள்ள பிற ஏதேனும் ஆவணத்தின் ஒரு நகலை மொழிபெயர்ப்பிற்காக அந்த நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம் அல்லது மனு	இருபத்து ஐந்து ரூபாய்
	(பி) விவாதத்திற்குரிய பொருளின் மதிப்பு 250 ரூபாய்க்கும் குறைவாகவுள்ள சட்ட நடவடிக்கை அல்லது வழக்கு தொடர்பாக முதல் விசாரணை அதிகாரமுள்ள ஒரு தலைமை சிவில் நீதிமன்றம் தவிரவுள்ள பிற ஏதேனும் சிவில் நீதிமன்றத்தில் அல்லது 1957-ன் கேரள சிறுவழக்கு நீதிமன்ற சட்டம் (1957-ன் 8) கும் ஏற்ப நிறுவப்பட்ட ஏதேனும் சிறுவழக்கு நீதிமன்றம் அல்லது ஒரு ஆட்சியர் அல்லது பிற வருவாய் அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம் அல்லது மனு.	இருபத்து ஐந்து ரூபாய்
	(சி) வேறு நீதிமன்றத்திலிருந்து ஆவணங்களை வரவழைக்க கோரும் ஏதேனும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கின்ற விண்ணப்பத்தை அந்த நீதிமன்றம் அனுமதித்து அத்தகைய ஆவணங்களை	விண்ணப் பத்தின் மேல் விதிக்கப்படும் கட்டணத்துடன்

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

அனுப்புவது தபால் பயன்பாட்டை உள்ளடக்கிறது எனக்கருதும் பட்சம்	கூடுதலாக இருபத்து ஐந்து ரூபாய்
(டி) வரி அல்லது வாடகை ஆட்சியரின் அலுவலகம் அல்லது நீதிமன்றத்தில் முதலீடு செய்வதற்கு அனுமதிக்கான விண்ணப்பம்	இருபத்து ஐந்து ரூபாய்
(இ) ஒரு வீட்டு உரிமையாளர் தன்னிடம் குடியிருப்பவரிடம் கொடுக்க வேண்டிய இழப்பீட்டுத் தொகையை நிர்ணயிப்பதற்காக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம் அல்லது மனு	இருபத்து ஐந்து ரூபாய்
(எஃப்) 2023-ன் பாரதீய நாகரிகக் சுரக்ஷா சன்ஹிதா (2023-ன் 46-வது மத்தியச் சட்டம்) இன் கீழ் ஒரு காவல் துறை அதிகாரி கைது ஆணை இல்லாமல் கைது செய்யக்கூடிய குற்றம் தவிரவேறு ஏதும் குற்றத்திற்கான எழுத்துபூர்வ புகார் அல்லது குற்றச்சாட்டு மற்றும் எந்தவொரு குற்றவியல் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, 2003-ன் பாரதீய சுரக்ஷா சன்ஹிதா (2023-ன் 46-வது மத்தியச் சட்டம்) கீழ் எழுதி தயாராக்கப்பட்ட அத்தகைய குற்றத்திற்கான வாய்மொழிப்புகார்	ஐம்பது ரூபாய்
(ஜி) (i) சார்பு நீதிமன்றம் அல்லது மாவட்ட நீதிமன்றம் தவிரவுள்ள பிற ஏதேனும் நீதிமன்றம் அல்லது குற்றவியல் நடுவருக்கு செயல் நிர்வாகி என்ற நிலையில் சமர்ப்பிக்கப்படுவதும் இந்த சட்டத்தில் பிற வகையில் ஏற்பாடு செய்யப்படாததுமான விண்ணப்பம் அல்லது மனு	ஒவ்வொரு மனுதாருக்கும் இருபத்து ஐந்து ரூபாய
(ii) சார்பு நீதிமன்றம் அல்லது மாவட்ட நீதிமன்றத்தில் சமர்ப்பித்த விண்ணப்பம் அல்லது மனு	ஒவ்வொரு மனுதாருக்கும் மூப்பது ரூபாய்
(எச்) 2002-ன் நிதி சொத்துக்களின் பத்திரமயமாக்கல் மற்றும் மறுகட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு வட்டி அமல்படுத்துதல் சட்டத்தின் (2002-ன் 54-வது சட்டம்) பிரிவு 14-ன் படி அடமானம் வைக்கப்பட்ட சொத்து கைவசப்படுத்துவதற்கான மனு	ஒவ்வொரு மனுவிற்கும் ஆயிரம் ரூபாய்
(ஐ) தீர்ப்புக்கு முன் கைது செய்வதற்கு, அல்லது பறி முதல் செய்வதற்கு அல்லது இடைக்கால தடை உத்தரவிற்கான விண்ணப்பம்-	
(i) ஏதேனும் வழக்கு அல்லது சட்ட நடவடிக்கை தொடர்பாக உயர் நீதிமன்றம் தவிரவுள்ள ஒரு சிவில் நீதிமன்றம் அல்லது வருவாய் நீதிமன்றத்தில்	

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

சமர்ப்பிக்கப்படும்போது

(எ) விவாதத்திற்குரிய பொருளின் விலை 250 ரூபாய்க்கும் குறைவாக இருந்தால்	ஐம்பது ரூபாய்
(பி) விலை 250 ரூபாய் அல்லது அதற்கு மேல் இருந்தால்	நூற்று இருபத்து ஐந்து ரூபாய்
(ii) உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் போது	இருநூற்று ஐம்பது ரூபாய்
(ஜெ) 1908-ன் சிவில் நடைமுறை சட்டத்தின் (1906-ன் 5-வது மத்திய சட்டம்) பிரிவு 47 ன் வரிசை XXI விதிகள் 58 மற்றும் 90 மற்றும் வரிசை XXXVIII விதி 8 கீழ் உள்ள விண்ணப்பம் அல்லது மனு-	
(i) ஒரு வருவாய் நீதிமன்றம் அல்லது முன்சிஃப் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும்போது;	ஐம்பது ரூபாய்
(ii) ஒரு சார்பு நீதிமன்றம் அல்லது ஒரு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும்போது	நூற்று இருபத்து ஐந்து ரூபாய்
(iii) உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும்போது	இருநூற்று ஐம்பது ரூபாய்
(கெ) 1882-ன் இந்திய அறக்கட்டளைகள் சட்டம் (1882-ன் மத்தியச்சட்டம் 2) பிரிவுகள் 34,72,73,74-ன் கீழ் உள்ள விண்ணப்பம் அல்லது மனு	இருநூற்று ஐம்பது ரூபாய்
(எல்) (i) இந்தியா முழுவதும் அமலில் வருவதற்கு தகுதிக்கான அல்லது நிர்வாகக்கடிதங்களுக்கான விண்ணப்பம்	இருநூற்று ஐம்பது ரூபாய்
(ii) உட்பிரிவு (i)-இன் கீழ் வராத தகுதிக்காண் அல்லது நிர்வாகக் கடிதங்களுக்கான விண்ணப்பம்-	
(எ) சொத்தின் மதிப்பு 1000 ரூபாய்க்கும் மிகாவிட்டால்	ஐந்து ரூபாய்
(பி) மதிப்பு 1000 ரூபாய்க்கும் மிகுந்தால்	இருபத்து ஐந்து ரூபாய்

ஆனால் ஒரு முன்னெச்சரிக்கை மனுவை பெற்று விண்ணப்பத்தை ஒரு வழக்காக பதிவு செய்தால், எஸ்டேட்டின் சந்தை மதிப்பை பொறுத்தவரை அட்டவணை I-ன் பிரிவு 1-ல் பரிந்துரைக்கப்பட்ட

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

கட்டணத்தின் அளவின் பாதியிலிருந்த விண்ணப்பத்தின் அடிப்படையில் முன்னர் செலுத்தியுள்ள கட்டணத்தை கழித்த தொகையை சமத்த வேண்டியதாகும்.	
(எம்) பிறவகையில் ஏற்பாடு செய்யப்படாத அசல் மனுக்களை சமர்ப்பிக்கும்போது-	
(i) ஒரு முன்சீஃப் நீதிமன்றமாக இருந்தால்-	
(எ) 1957-ன் கேரள சிறு வழக்குகள் நீதிமன்றங்கள் சட்டம் (1957-ன் 8) படி இருக்கும் பட்சம்	ஐம்பது ரூபாய்
(பி) பிற சந்தர்ப்பங்களில்	நூற்று இருபத்து ஐந்து ரூபாய்
(ii) ஒரு சார்பு நீதிமன்றம் அல்லது ஒரு மாவட்ட நீதிமன்றமாக இருந்தால்	இருநூற்று ஐம்பது ரூபாய்
(iii) ஒரு உயர்நீதிமன்றமாக இருந்தால்	ஒவ்வொரு மனுதாரருக்கும் ஐநூறு ரூபாய்
(iv) உயர் நீதிமன்றத்தின் நீதிமன்ற அவமதிப்பு வழக்குகளில்	ஐநூறு ரூபாய்
(v) உயர்நீதிமன்றம் முன்பாக உள்ள நடுவர் மன்ற விண்ணப்பம்	ஆயிரம் ரூபாய்
ஆனால் உயர்நீதிமன்றத்தின் முன்பாக பொது நல வழக்குகளாகக் கருதப்படும் தேபியன் கோர்பஸ் ரிட் மனுக்களாக தாக்கல் செய்யப்பட்டுள்ளவையில் உயர்நீதிமன்றம் பொதுநல மனுவாக பரிசீலிக்கப்பட்டதும் தீர்ப்பாக்கவும் செய்யப்பட்டுள்ளவையில் எந்த கட்டணமும் வசூலிக்கப்படாது.	
(என்) 1996-ன் நடுவர் தீர்ப்பு மற்றும் சமரச சட்டம் (1996-ன் 26-வது மத்திய சட்டம்) படியான ஒரு அவார்டு தீர்ப்பை இரத்து செய்வதற்கான விண்ணப்பம்-	
1996-ன் நடுவர் தீர்ப்பு மற்றும் சமரச சட்டம் (1996-ன் 26-வது மத்திய சட்டம்) பிரிவு 34-ன் படி தீர்ப்பின் அசல் தொகை	அவார்டின் அசல் தொகையின் ஒரு சதவீதம்
(ஒ) வெளிநாட்டு அவார்டுகளை	

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

செயல்படுத்துவதற்கான விண்ணப்பம்,-

(i) அவார்டின் விவாதத்திற்குரிய பொருளின் மதிப்பு ரூ.1,00,000/- மிகா விட்டால்	விவாதத்திற் குரிய பொருளின் ஒரு சதவீதம்
(ii) அத்தகைய மதிப்பு ஒரு இலட்சம் ரூபாய்க்கும் (ரூ.1,00,000) மிகுந்தால் ஒரு இலட்சம் ரூபாயில் மிகுகின்ற ஒவ்வொரு நூறு ரூபாய்க்கும் அதன் பகுதிக்கும் 10 இலட்சம் ரூபாய் வரை.	விவாதத்திற்குரிய பொருளின் 0.75 சதவீதம்
(iii) அத்தகைய மதிப்பு 10 இலட்சம் ரூபாய்க்கும் (ரூ.10,00,000- மிகுகின்ற ஒவ்வொரு நூறு ரூபாய்க்கும் அதன் பகுதிக்கும் 1 கோடி ரூபாய் வரை(1,00,00,000)	விவாதத்திற் குரிய பொருளின் 0.50 சதவீதம்
(iv) அத்தகைய மதிப்பு 1 கோடி ரூபாய்க்கும் (1,00,00,000) மிகுந்தால் 1 கோடி ரூபாய்க்கும் மிகும் ஒவ்வொரு நூறு ரூபாய்க்கும் அதன் பகுதிக்கும்	விவாதத்திற்குரிய பொருளின் 0.25 சதவீதம் (அதிக பட்சம் ஐம்பதாயிரம் ரூபாய் வரை)
(பி) 1908-ன் சிவில் நடைமுறை சட்டத்தின் (1908-ன் 5-வது மத்திய சட்டம்) பிரிவு 15-ன் படி அல்லது 1957-ன் கேரள சிறுவழக்குகள் நீதிமன்றங்கள் சட்டம் (1957-ன் 8) பிரிவு 22-ன் படி அல்லது ஒரு வழக்கு அல்லது சட்ட நடவடிக்கைகளிலிருந்து எழும் வேறு எந்த சட்ட விதிமுறைகளின் கீழ் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட திருத்த மனு -	
(i) திருத்தம் செய்ய எண்ணும் உத்தரவு தொடர்பான வழக்குகள் அல்லது சட்ட நடவடிக்கைகளின் மதிப்பு ரூ.1000-க்கும் மிகா விட்டால்;	நூற்றி இருபத்து ஐந்து ரூபாய்
(ii) அத்தகைய மதிப்பு ரூ.1000-க்கும் மிகுந்தால்	இருநூற்று ஐம்பது ரூபாய்
(சி) ஒரு நிறுவனத்தின் செயல்பாட்டை கலைப்பது தொடர்பாக 2013-ன் கம்பனி சட்டத்தின் (2013-ன் 18-வது மத்திய சட்டம்) பிரிவுகள் 230 மற்றும்272-ன் படியான மனு	ஆயிரத்து இருநூற்று ஐம்பது ரூபாய்
(டி) 1963-ன் சிறப்பு நிவாரண சட்டம் (1963 -ன் மத்தியச் சட்டம் 47) பிரிவு 39-ன் படியான விண்ணப்பம்	ஆயிரம் ரூபாய்

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(எஸ்) உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கின்ற விண்ணப்பம் அல்லது மனு, குறிப்பாக பிற வகையில் ஏற்பாடு செய்யப்படாதது	ஐம்பது ரூபாய்
(டி) ஒரு நபரின் தேர்தலை எதிர்த்து தாக்கல் செய்யப்படும் தேர்தல் மனு-	
(i) ஒரு பஞ்சாயத்து உறுப்பினர் பதவி தொடர்பானதாக இருந்தால்	இருநூற்று ஐம்பது ரூபாய்
(ii) ஒரு பஞ்சாயத்தின் தலைவர் அல்லது துணைத்தலைவர் பதவி தொடர்பானதாக இருந்தால்	ஐநூறு ரூபாய்
(iii) ஒரு ப்ளாக் பஞ்சாயத்து உறுப்பினர் பதவி தொடர்பானதாக இருந்தால்	ஆயிரம் ரூபாய்
(iv) ஒரு ப்ளாக் பஞ்சாயத்தின் தலைவர் அல்லது துணைத்தலைவர் பதவி தொடர்பானதாக இருந்தால்	இரண்டாயிரம் ரூபாய்
(v) ஒரு மாவட்ட பஞ்சாயத்து உறுப்பினர் பதவி தொடர்பானதாக இருந்தால்	ஆயிரத்து ஐநூறு ரூபாய்
(vi) ஒரு மாவட்ட பஞ்சாயத்து தலைவர் அல்லது துணைத்தலைவர் பதவி தொடர்பானதாக இருந்தால்	இரண்டாயிரத்து ஐநூறு ரூபாய்
(vii) ஒரு நகராட்சி மன்றம் அல்லது மாநகராட்சி உறுப்பினரின் பதவி தொடர்பானதாக இருந்தால்	ஆயிரத்து ஐநூறு ரூபாய்
(viii) மாநகராட்சி மேயர் அல்லது துணை மேயர் அல்லது ஒரு நகராட்சி மன்றத்தின் தலைவர் அல்லது துணைத்தலைவரின் பதவி தொடர்பானதாக இருந்தால்	மூவாயிரம் ரூபாய்
(ix) ஒரு சட்டப்பேரவை உறுப்பினரைப் பொருத்தவரை 1951-ன் மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் (1951-ன் 43-வது மத்திய சட்டம்) பிரிவு 80 ஏ-ன் படி உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் தேர்தல் மனு	ஆயிரத்து இருநூற்று ஐம்பது ரூபாய்
(x) ஒரு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினரைப் பொறுத்தவரை 1951-ன் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் (1951-ன் 43-வது மத்திய சட்டம்) பிரிவு 80 ஏ-ன் படி உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் தேர்தல் மனு	ஆயிரத்து இருநூற்று ஐம்பது ரூபாய்
(யு) நிலம் கையப்படுத்தும் அதிகாரி/தகுதி வாய்ந்த அதிகாரி மற்றும் குறிப்பு நீதிமன்றம் ஒதுக்கீடு செய்த தொகையில் வேறுபாடு இருந்தால்,	

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

அதிகரிக்கப்பட்ட தொகை.-

(i) இருபத்து ஐயாயிரம் ரூபாய்க்கும் மிகாமல் இருக்கும் பட்சம்	இல்லை
(ii) இருபத்து ஐயாயிரம் ரூபாய்க்கு மிகுந்தும் ஆனால் ஒரு இலட்சம் ரூபாய்க்கும் மிகாமல் இருந்தால்	ஐநூறு ரூபாய்
(iii) ஒரு இலட்சம் ரூபாய்க்கு மிகாமலும் ஐந்து இலட்சம் ரூபாய் வரை, ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் உள்ள ஒவ்வொரு நூறு ரூபாய்க்கும் அல்லது அதன் பகுதிக்கும்	நான்கு ரூபாய்
(iv) ஐந்து இலட்சம் ரூபாய்க்கு மேல் பத்து இலட்சம் ரூபாய் வரை, ஐந்து இலட்சம் ரூபாய்க்கு மேல் உள்ள ஒவ்வொரு நூறு ரூபாய்க்கு அல்லது அதன் பகுதிக்கும்	ஒரு ரூபாய்
(v) பத்து இலட்சம் ரூபாய்க்கு மேல் இருபது இலட்சம் ரூபாய் வரை, பத்து இலட்சம் ரூபாய்க்கு மேல் உள்ள ஒவ்வொரு நூறு ரூபாய்க்கும் அல்லது அதன் பகுதிக்கும	0.75 ரூபாய்
(vi) இருபது இலட்சம் ரூபாய்க்கு மேல் ஐம்பது இலட்சம் ரூபாய் வரை, இருபது இலட்சம் ரூபாய்க்கு மேல் உள்ள ஒவ்வொரு நூறு ரூபாய்க்கும் அல்லது அதன் பகுதிக்கும்	0.50 ரூபாய்
(vii) ஐம்பது இலட்சம் ரூபாய்க்கு மேல் எழுபத்து ஐந்து இலட்சம் ரூபாய் வரை, ஐம்பது இலட்சம் ரூபாய்க்கும் மேல் உள்ள ஒவ்வொரு நூறு ரூபாய்க்கும் அல்லது அதன் பகுதிக்கும்	0.25 ரூபாய்
(viii) எழுபத்து ஐந்து ரூபாய்க்கும் மேல் ஒரு கோடி ரூபாய் வரை எழுபத்து ஐந்து இலட்சம் ரூபாய்க்கும் மேல் உள்ள ஒவ்வொரு நூறு ரூபாய்க்கும் அல்லது அதன் பகுதிக்கும்	0.10 ரூபாய்
(ix) ஒரு கோடி ரூபாய்க்கும் மேல், ஒரு கோடி ரூபாய்க்கும் மேல் உள்ள ஒவ்வொரு நூறு ரூபாய்க்கும் அல்லது அதன் பகுதிக்கும்	0.01 ரூபாய்
(vii) 2023-ன் தொலைத்தொடர்புச் சட்டம் (2023-ன் 44-வது மத்திய சட்டம்) 1962-ன் பெட்ரோலியம் மற்றும் கனிமக் குழாய்கள் (நிலத்தில் பயனர் உரிமையைப் பெறுதல்) சட்டம் (1962-ன் 50-வது மத்தியச் சட்டம்), 2003-ன் மின்சார சட்டம் (2003-ன் 36-வது மத்தியச் சட்டம்) படி இழப்பீடு	கூடுதல் இழப்பீடு அலாட்டின் இரண்டு சதவீதம்

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

	கோருவதற்கு முன்னுரிமை அளிக்கும் அசல் மனு சமர்ப்பிக்கும்போது-	
	(டபிள்யூ) 1908-ன் சிவில் நடைமுறைச்சட்டத்தின் (1908-ன் 5-வது மத்தியச் சட்டம்) வரிசை XXI விதி 97-ன் படியான ஒரு விண்ணப்பம்.-	
	(i) (எ) முன்சீஃப் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க	ஐநூறு ரூபாய்
	(பி) ஒரு சார்பு நீதிமன்றம் அல்லது ஒரு மாவட்ட நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க	ஆயிரம் ரூபாய்
	(ii) மேல்முறையீடு/மறு ஆய்வு	ஆயிரம் ரூபாய்
10	(i) ஜாமீன் பத்திரம் அல்லது பிற ஏதேனும் கடன் பத்திரம் கிராம நீதிமன்றங்களில் தாக்கல் செய்யும்போது	பத்து ரூபாய்
	(ii) 2023-ன் பாரதீய நாகரிக் சுரக்ஷா சங்கித (2023-ன் 46-வது மத்தியச் சட்டம்) அல்லது 1908-ன் சிவில் நடவடிக்கை சட்டம் (1908-ன் 5-வது மத்தியச் சட்டம்) ஏதேனும் பிரிவின்படி ஒரு நீதிமன்றம் அல்லது குற்றவியல் நடுவர் பிறப்பித்த ஒரு உத்தரவிற்கு ஏற்ப வழங்கவும் இந்த சட்டத்தில் பிறவகையில் ஏற்பாடு செய்யப்படாதுமான ஜாமீன் பத்திரம் அல்லது பிற ஏதேனும் கடன்பத்திரம்	இருபத்து ஐந்து ரூபாய்
11.	எந்தவொரு வழக்கு அல்லது சட்ட நடவடிக்கையிலோ தாக்கல் செய்யப்படும் போது பவர் ஒஃப் அற்றோர்னி அதிகாரத்தின் ஒவ்வொரு நகலும்	ஐம்பது ரூபாய்
12.	ஒரு கட்சிதாரர் சார்பாக தான் வாதிட இருப்பவர் என்பதைக் குறிப்பிடவோ அறிவிக்கவோ செய்த ஒரு வழக்கறிஞர் கையொப்பமிட்ட முக்தர்நாமா அல்லது வக்காலத்நாமா அல்லது ஏதேனும் ஆவணமோ சமர்ப்பிக்கும்போது.-	
	(i) உயர்நீதிமன்றம் அல்லாத ஏதெனும் நீதிமன்றம், ஏதேனும் ஆட்சியர், குற்றவியல் நடுவர், அல்லது பிற நிர்வாக அதிகாரி சமர்ப்பிக்கும்போது	இருபத்து ஐந்து ரூபாய்
	(ii) நில வருவாய் ஆணையர் அல்லது ஒரு தலைமை நிர்வாக ஆணையத்திடம் சமர்ப்பிக்கும் போது	இருபத்து ஐந்து ரூபாய்
	(iii) உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்போது	ஐம்பது ரூபாய்
	(iv) அரசிடம் சமர்ப்பிக்கும்போது	ஐம்பது ரூபாய்

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

13.	1908-ன் சிவில் நடைமுறைச்சட்டம் (1908-ன் 5-வது மத்தியச் சட்டம்) படி ஒரு நீதிமன்றத்தின் கருத்தைக் கேட்க எழுத்து பூர்வ ஒப்பந்தம்-	
	(i) ஒரு முன்சீப் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்போதோ அல்லது விவாதத்திற்குரிய பொருளின் சல 5,000 ரூபாய்க்கும் மிகாத வழக்கில் சமர்ப்பிக்கும்போதோ	ஐநூறு ரூபாய்
	(ii) பிற ஏதேனும் சங்கதியில்	ஆயிரம் ரூபாய்
14	முன்னெச்சரிக்கை மனு	இருநூற்று ஐம்பது ரூபாய்
15.	1982-ன் சிட்டி பண்ட் சட்டத்தின் (1982-ன் 40-வது மத்தியச் சட்டம்) படி தகராறு தீர்ப்பதற்காக நீதித்துறை நடுவரிடம் சமர்ப்பிக்கும் விண்ணப்பம்	நீதித்துறை நடுவர் தொகையின் ஐந்து சதவீதம்
16.	(எ) 1984-ன் குடும்ப நீதிமன்றச் சட்டத்தின் (1984-ன் 66-வது மத்தியச் சட்டம்) பிரிவு 7-ன் துணைப்பிரிவு (1)-ல் விளக்கம் (சி)-ன் படி குடும்ப நீதிமன்றம் முன்பு சமர்ப்பித்கின்ற மனு அல்லது எதிர்கோரிக்கை-	
	மனுக்களின்/எதிர்கோரிக்கையில் மொத்த உரிமைகோரல் தொகையின் மதிப்பை கருத்தில்கொண்டு குடியிருக்கும் வீட்டிற்கு கணக்காக்கப்பட்ட தொகையை தள்ளுபடி செய்து,-	
	(i) ஐந்து இலட்சம் ரூபாய் வரை	இருநூறு ரூபாய்
	(ii) ஐந்து இலட்சம் ரூபாய்க்கு மேல் மற்றும் இருபது இலட்சம் வரை	ஐநூறு ரூபாய்
	(iii) இருபது இலட்சம் ரூபாய்க்கும் மேல் மற்றும் ஐம்பது இலட்சம் ரூபாய் வரை	ஆயிரம் ரூபாய்
	(iv) ஐம்பது இலட்சம் ரூபாய்க்கு மேல் மற்றும் ஒரு கோடி ரூபாய் வரை	இரண்டாயிரம் ரூபாய்
	(v) ஒரு கோடி ரூபாய்க்கும் மேல்	ஐயாயிரம் ரூபாய்
	(பி) 1984-ன் குடும்ப நீதிமன்றங்கள் சட்டத்தின் (1984-ன் 64-வது மத்தியச்சட்டம்) பிரிவு 19-ன் படி உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டில்,-	
	மனுக்களில்/எதிர்கோரிக்கையில் மொத்த உரிமைக்கோரல் தொகையின் மதிப்பைக் கருத்தில்	

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

	கொண்டு குடியிருக்கும் வீட்டிற்கு கணக்காக்கப்பட்ட தொகையை தள்ளுபடி செய்து,-	
	(i) ஐந்து இலட்சம் ரூபாய் வரை	நூறு ரூபாய்
	(ii) ஐந்து இலட்சம் ரூபாய்க்கு மேல் மற்றும் இருபது இலட்சம் வரை	இருநூற்று ஐம்பது ரூபாய்
	(iii) இருபது இலட்சம் ரூபாய்க்கும் மேல் மற்றும் ஐம்பது இலட்சம் ரூபாய் வரை	ஐநூறு ரூபாய்
	(iv) ஐம்பது இலட்சம் ரூபாய்க்கு மேல் மற்றும் ஒரு கோடி ரூபாய் வரை	ஆயிரம் ரூபாய்
	(v) ஒரு கோடி ரூபாய்க்கு மேல்	இரண்டாயிரத்து ஐநூறு ரூபாய்
17.	(எ) 1881-ன் மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் (1881-ன் 26-வது மத்தியச் சட்டம்) பிரிவு 138-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள புகார்களில்,-	
	புகாரில் உள்ளடங்கியுள்ள மதிப்பிழந்த காசோலையின் தொகை,-	
	(i) ஐம்பதாயிரம் ரூபாய் வரை	இருநூற்று ஐம்பது ரூபாய்
	(ii) ஐம்பதாயிரம் ரூபாய்க்கும் மேல் மற்றும் இரண்டு இலட்சம் ரூபாய் வரை	ஐநூறு ரூபாய்
	(iii) இரண்டு இலட்சம் ரூபாய்க்கும் மேல் மற்றும் ஐந்து இலட்சம் ரூபாய் வரை	எழுநூற்று ஐம்பது ரூபாய்
	(iv) ஐந்து இலட்சம் ரூபாய்க்கும் மேல் மற்றும் பத்து இலட்சம் ரூபாய் வரை	ஆயிரம் ரூபாய்
	(v) பத்து இலட்சம் ரூபாய்க்கும் மேல் மற்றும் இருபது இலட்சம் ரூபாய் வரை	இரண்டாயிரம் ரூபாய்
	(vi) இருபது இலட்சம் ரூபாய்க்கும் மேல் மற்றும் ஐம்பது இலட்சம் ரூபாய் வரை	ஐயாயிரம் ரூபாய்
	(vii) ஐம்பது இலட்சம் ரூபாய்க்கு மேல்	பத்தாயிரம் ரூபாய்
	(பி) 1881-ன் மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் (1881-ன் 26-வது மத்தியச் சட்டம்) பிரிவு 138-ல் தீர்ப்புக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மேல் முறையீட்டில்,-	

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(i) 2023-ன் பாரதிய நாகரிக் சுரக்ஷா சங்கிதா (2023-ன் 46-வது மத்தியச் சட்டம்) பிரிவு 419-ன் துணைப்பிரிவு (2)-ன் உட்பிரிவு (பி)-ன் படி அனுமதிக் கிடைத்த உயர்நீதிமன்றம் முன்பாக குற்ற விடுதலை தீர்ப்புக்கு எதிராக புகார்தாரர் மேல்முறையீட்டை தாக்கல் செய்யும் சங்கதியில்	இரண்டு இலட்சம் ரூபாய் வரையிலான காசோலைக்கு ஐநூறு ரூபாய் மற்றும் இரண்டு இலட்சம் ரூபாய்க்கு மேலுள்ள காசோலைக்கு ஆயிரம் ரூபாய்
(ii) அமர்வு நீதிமன்றம் முன்பாக குற்றம் சாட்டப்பட்டவரின் தண்டனைக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படும்போது	இரண்டு இலட்சம் ரூபாய் வரையிலான காசோலைக்கு ஐநூறு ரூபாய் மற்றும் இரண்டு இலட்சம் ரூபாய்க்கு மேலுள்ள காசோலைக்கு ஆயிரம் ரூபாய்
(சி) 1881-ன் மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் (1881-ன் 26-வது மத்தியச் சட்டம்) பிரிவு 138-ன் தீர்ப்புக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மறுஆய்வில்,-	
(i) உயர்நீதிமன்றத்தில் முன்பாக போதுமான தண்டனை இல்லாமையை எதிர்த்து புகார்தாரர் மனுதாக்கல் செய்கின்ற சங்கதியில்	இரண்டு இலட்சம் ரூபாய் வரையிலான காசோலைக்கு ஐநூறு ரூபாய் மற்றும் இரண்டு இலட்சம் ரூபாய்க்கு மேல் உள்ள காசோலைக்கு ஆயிரம் ரூபாய்
(ii) அமர்வு நீதிமன்றம் முன்பாக தண்டனைக்கு எதிராக குற்றச்சாட்டப்பட்டவர் மனு தாக்கல் செய்யும் சங்கதியில்	இரண்டு இலட்சம் ரூபாய் வரையிலான காசோலைக்கு ஐநூறு ரூபாய் மற்றும் இரண்டு இலட்சம் ரூபாய்க்கு மேல் உள்ள காசோலைக்கு

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

		ஆயிரம் ரூபாய்
18.	(எ) 2023-ன் பாரதிய நாகரிக் சுரக்ஷா சம்கித (2023-ன் 46-வது மத்தியச் சட்டம்) பிரிவு 482-ன் படியான முன்ஜாமீன் மனு.-	
	(i) உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் முன்ஜாமீன் மனு	ஒவ்வொரு மனுதாரருக்கும் ஐநூறு ரூபாய் மற்றும் தொடர்ந்துள்ள ஒவ்வொரு அடுத்தடுத்த மனுக்களுக்கு அதன் பாதி
	(ii) அமர்வு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் முன் ஜாமீன் மனு	ஒவ்வொரு மனுதாரருக்கு இருநூற்று ஐம்பது ரூபாய் மற்றும் தொடர்ந்துள்ள ஒவ்வொரு அடுத்தடுத்த மனுக்களுக்கு அதன் பாதி
	(பி) 2023-ன் பாரதிய நாகரிக் சுரக்ஷா சம்ஹித (2023-ன் 46-வது மத்தியச் சட்டம்) பிரிவு 483-ன் படியான முன் ஜாமீன் மனு.-	
	(i) காவலில் இல்லாமல் இருக்கும்போது உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் ஜாமீன் மனு.	ஒவ்வொரு மனுதாரருக்கும் இருநூறுரூபாய் அதிகபட்சம் ஆயிரம் ரூபாய்
	(ii) காவலில் இல்லாமல் இருக்கும்போது அமர்வு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் ஜாமீன் மனு	ஒவ்வொரு மனுதாரருக்கும் ஐநூறு ரூபாய் அதிகபட்சம் ஐநூறு ரூபாய்
	(சி) 2023-ன் பாரதிய நாகரிக் சுரக்ஷா சம்ஹித (2023-ன் மத்தியச் சட்டம் 46) பிரிவு 480-ன் படி உயர்நீதிமன்றம் அல்லது அமர்வு நீதிமன்றம் தவிரவுள்ள நீதிமன்றத்தில் ஆஜராகி ஜாமீன் மனு தாக்கல் செய்யப்பட்டால்	ஒவ்வொரு மனுதாரருக்கும் ஐம்பது ரூபாய் அதிகபட்சம் இருநூற்று ஐம்பது

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

ரூபாய்

3. 1961-ன் சட்டம் 13-ன்கான திருத்தம்.-1961-ன் கேரள நிலவரிச் சட்டத்தில் (1961-ன் 13) பிரிவு 6 துணைப்பிரிவு (1)-ன் அட்டவணைக்கு பதிலாக பின்வரும் அட்டவணை சேர்க்கப்பட வேண்டும், அதாவது:-

"அட்டவணை

வரிசை எண்	பரப்பளவு	அளவு	விலை
1.	பஞ்சாயத்து பரப்பளவு	8.1 ஆர் வரை	ஒரு ஆர்-க்கு வருடத்திற்கு 7.50 ரூபாய்
		8.1 ஆர்-க்கு மேல்	ஒரு ஆர்-க்கு வருடத்திற்கு 12 ரூபாய்
2.	நகராட்சி மன்ற பரப்பளவு	2.43 ஆர் வரை	ஒரு ஆர்-க்கு வருடத்திற்கு 15 ரூபாய்
		2.43 ஆர்க்கு மேல்	ஒரு ஆர்-க்கு வருடத்திற்கு 22.50 ரூபாய்
3.	மாநகராட்சி பரப்பளவு	1.62 ஆர் வரை	ஒரு ஆர்-க்கு வருடத்திற்கு 30 ரூபாய்
		1.62 ஆர்-க்கு மேல்	ஒரு ஆர்-க்கு வருடத்திற்கு 45 ரூபாய்

4. 1963-ன் சட்டம் 15-ன்கான திருத்தம்.- 1963-ன் கேரள பொது விற்பனை வரி சட்டம் (1963-ன் 15)-ல்,-

(1) பிரிவு 2-ல்,-

(எ) உட்பிரிவு (xii) -க்கு பதில் பின்வரும் உட்பிரிவு 2017 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1-ஆம் தேதி முதல் அமலாக்கத்தில் சேர்க்கப்பட்டதாக கருதப்பட வேண்டும், அதாவது:-

"(xii) "சரக்குகள்" என்றால்

(i) பெட்ரோலியம் க்ரூடு;

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(ii) அதி-வேக டீசல்;

(iii) மோட்டார் ஸ்பிரிட் (பொதுவாக பெட்ரோல் என அழைக்கப்படும்);

(iv) ஏவியேஷன் டர்பைன் எரிபொருள், மற்றும்

(v) மனித பயன்பாட்டிற்கான மது

எனப்பொருள்படும்;

(பி) உட்பிரிவு (xv பி) மற்றும் உட்பிரிவு (xxii பி) ஆகியவை தவிர்க்கப்பட வேண்டும்.

(2) பிரிவு 14-ல், துணைப்பிரிவு (5) தவிர்க்கப்பட வேண்டும்.

(3) பிரிவு 17 டி-ன் துணைப்பிரிவு (2) உட்பிரிவு (இ) துணை உட்பிரிவு (i) -ல் "அல்லது பிரிவு 29 ஏ" என்ற சொற்களும் எண்ணும் எழுத்தும் தவிர்க்கப்பட வேண்டும்;

(4) பிரிவு 23 பி-க்கு பதிலாக பின்வரும் பிரிவு சேர்க்கப்பட வேண்டும், அதாவது:-

"23 பி. சில வழக்குகளில் நிலுவைத் தொகைகளை குறைத்தல் - (1) இந்த சட்டமோ அல்லது அதன் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளோ அல்லது ஏதேனும் நீதிமன்றத்தின் தீர்ப்பாயத்தின் மேல் முறையீட்டு ஆணையத்தின் ஏதேனும் தீர்ப்பு, தீர்ப்பாணை அல்லது உத்தரவில் என்னதான் அடங்கியிருந்தாலும், 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி முதல் 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31-ஆம் தேதி வரையுள்ள காலகட்டத்துடன் தொடர்புடைய விண்ணப்ப தேதியில், நிலுவையாக உள்ள மூக்கிய வரித்தொகையும் ஐம்பது சதவீதம் வட்டியும் செலுத்திக்கொண்டு இந்த சட்டத்தின் பிரிவு 5 துணைப்பிரிவு (1)-ம் துணைப்பிரிவு (2)-ம் பிரிவு 7-ன் விதிமுறைகளின் படியும் செலுத்த வேண்டிய வரி அல்லது வட்டி அல்லது அபராதத்தின் நிலுவையை தீர்ப்பாக்க வரி செலுத்துபவர் தேர்வு செய்யலாம் அவ்வாறு செலுத்துவதன் மூலம் அபராதமும் வட்டியின் ஐம்பது சதவீதமும் தள்ளுபடி செய்யப்படும்.

ஆனால் அபராதம் சுமத்தப்பட்டது தொடர்பான ஆதாரம், விவரங்கள், ஆவணங்கள் ஆகியவை இந்த சட்டத்தின் படியான ஏதேனும் சிறந்த தீர்ப்பு மதிப்பீட்டிற்கு பயன்படுத்தவோ பயன்படுத்துவதற்கான அவசியம் இல்லாத சங்கதியில், அத்தகைய அபராதத் தொகையுடன் தொடர்பாக பொருந்தக்கூடிய வரி விண்ணப்ப தேதியில்

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

அத்தகைய வரிக்கு பொருந்தக்கூடிய வட்டியின் ஐம்பது சதவீதம் செலுத்துவதன் மூலம், இந்தச் சட்டத்தின் படியான அபராதத் தொகையுடன் தொடர்புடைய கோரிக்கையை தீர்ப்பாக்கலாம்.

அதுமட்டுமல்லாமல், மேற்குறிப்பிட்ட காலகட்டத்துடன் தொடர்புடைய நிலுவையை தீர்ப்பாக்கும் போது, பிற எந்தவொரு விற்பனை வரி அல்லது விற்று முதல் வரி தீர்ப்பாக்க எதுவும் இல்லை என்றால் ஒன்றாம் காப்பு வாசகத்தில் குறிப்பிட்டுள்ள அபராத் தொகையை தவிர மேற்குறிப்பிட்ட காலகட்டத்துடன் தொடர்புடைய அனைத்து அபராதங்களும் துணைப்பிரிவு (1)-ன் கீழ் தீர்ப்பாக்கப்பட்டதாக கருதப்பட வேண்டும்.

(2) துணைப்பிரிவு (1)-ன் படி நிலுவைத் தொகையை தீர்ப்பாக்க தேர்வு செய்ய உத்தேசிக்கும் எந்தவொரு வரி செலுத்துபவரும், பரிந்துரைக்கப்படக்கூடிய அத்தகைய வடிவத்தில் அத்தகைய முறையில் 2025 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30-ஆம் தேதி அல்லது அதற்கு முன்பாக துணைப்பிரிவு (1)-ன் படியான கட்டணத்தை இ-ட்ரெஷரி போர்ட்டல் மூலம் செலுத்தியதற்கான சான்று உட்பட வரி மதிப்பீட்டு அதிகாரி முன்பாக விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

(3) ஒவ்வொரு வரி மதிப்பீட்டு உத்தரவு தொடர்பான நிலுவைத்தொகையைத் தீர்ப்பதற்கு தனித்தனி விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

(4) துணைப்பிரிவு (1)-ன் நிலுவைத் தொகையை தீர்க்க தேர்வு செய்வதற்காக வரி செலுத்துபவர், இந்த சட்டத்தின் கீழ் உள்ள ஏதேனும் மேல்முறையீடு அல்லது திருத்த ஆணையம் அல்லது தீர்ப்பாயம் முன்பாக அல்லது நீதிமன்றங்களின் முன்பாக நிலுவையில் உள்ள அனைத்து வழக்குகளையும் திரும்பப் பெற வேண்டியதும் அது சங்கதிபோல், அதிகாரப் பதவி அல்லது தீர்ப்பாயம் அல்லது நீதிமன்றம் வழக்கை திரும்பப் பெறுவதற்கு அளித்துள்ள அனுமதியின் நகலுடன் விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

ஆனால் இந்த சட்டத்தின் கீழுள்ள எந்தவொரு அதிகாரப்பதவி அல்லது தீர்ப்பாயம் அல்லது ஏதேனும் நீதிமன்றங்களின் முன்பாக அரசு தாக்கல் செய்துள்ள ஏதேனும் மேல்முறையீடு தீர்ப்பாக்கப்படாத சங்கதிகளில், விண்ணப்ப தேதியில் பொருந்தக்கூடிய வட்டியின் ஐம்பது சதவீதத்துடன் அசல் வரி மதிப்பீட்டு உத்தரவின் படி கோரிக்கை செய்யப்பட்ட வரியை செலுத்துவதன் மூலம் இந்த துணைப்பிரிவின் கீழ் தீர்ப்பாக்கலாம். அத்தகைய விண்ணப்பம் கிடைத்தால் வரி மதிப்பீட்டு அதிகாரி, இந்த சட்டத்தின் கீழ் உள்ள மேல்முறையீட்டு அதிகாரி அல்லது தீர்ப்பாயம் அல்லது திருத்த ஆணையம்

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

அல்லது நீதிமன்றத்திடம் அத்தகைய வழக்குகள் தீர்ப்பாக்கப்பட்டது தொடர்பான விவரங்கள் கிடைப்பதுவரை வழக்குகளை ஒத்தி வைப்பதற்கு விண்ணப்பிக்க வேண்டியதும் அசல் உத்தரவின் கோரிக்கையின் படி வரி செலுத்துபவர் அத்தகைய வழக்குகளை தீர்ப்பாக்கினால் அரக அத்தகைய மேல்முறையீடுகளை உடனடியாக திரும்பப் பெற வேண்டும்.

(5) வரி மதிப்பீட்டு அதிகாரி, பணம் செலுத்தியதன் சான்று உட்படவுள்ள விண்ணப்பத்தை கைப்பற்றினால் விண்ணப்பத்தின் கட்டணம் செலுத்தியதன் சரியான தன்மையை பரிசோதனை செய்ய வேண்டியதும் ஏதேனும் முரண்பாடுகள் இருந்தால் ஒரு மாதத்திற்குள் பரிந்துரைக்கப்படக்கூடிய அத்தகைய வடிவத்திலும் அத்தகைய முறையிலும் வரி செலுத்துபவரிடம் தெரிவித்திட வேண்டும்.

(6) துணைப்பிரிவு (5)-ன் படியான முரண்பாடுகளின் அறிவிப்பைக் கைப்பற்றி ஒரு மாதத்திற்குள், வரி செலுத்துபவர், பரிந்துரைக்கப்படக்கூடிய அத்தகைய முறையில் திருத்தம் செய்யப்பட வேண்டும்:

ஆனால் திருத்தம் செய்வதற்கான வாய்ப்பு ஒரு முறைக்கு மேல் அனுமதிக்கப்படாது.

(7) துணைப்பிரிவு (1)-ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளதும் செலுத்துகின்ற தேதி வரை நிலுவையில் உள்ளதுமான தொகையை தீர்ப்பாக்கும்போது வரி மதிப்பீட்டு அதிகாரி ஒரு மாதத்திற்குள் பரிந்துரைக்கக்கூடிய அத்தகைய முறையில் தீர்ப்பாக்குதல் உத்தரவை வழங்கிட வேண்டும்.

(8) பிரிவு 55 தி-ன் விதிமுறைகளுக்கு உட்பட்டு, துணைப்பிரிவு (1)-ன் படி நிலுவை தொகையை தீர்ப்பாக்க தேர்வு செய்யும் ஒவ்வொரு வரி செலுத்துபவரும், கோரிக்கை அறிவிப்பு கிடைத்த பிறகு நிலுவையுடன் தொடர்புடைய ஏதேனும் தொகையை செலுத்தவோ முதலீடோ செய்துள்ள பட்சம், அத்தகைய தொகை வரிக்கும் வட்டிக்கும் வரவு வைத்திட வேண்டும் மற்றும் வரி செலுத்துபவர் இது தொடர்பாக பணம் செலுத்தியதன் சான்றை சமர்ப்பித்திட வேண்டும்.

(9) 1968-ன் கேரள வருவாய் மீட்புச் சட்டத்தில் (1968-ன் 15) என்னதான் அடங்கியிருந்தாலும் துணைப்பிரிவு (1)-ன் படி நிலுவைத் தொகையை குறைத்தல், வரி வசூலித்தல் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ள சங்கதியில் பொருந்தக்கூடியதும் வரி மதிப்பீட்டு அதிகாரிகளுக்கு அத்தகைய தொகை துணைப்பிரிவு (1)-ன் படியான தீர்ப்பாக்கல் படி வசூலிக்கும் அதிகாரம் இருப்பதும் துணைப்பிரிவு (1)-ன் படி

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

தொகையை தீர்ப்பாக்கும்போது அவ்வாறான வரி செலுத்துபவர்களுக்கு எதிரான வரி வசூலித்தல் நடவடிக்கை முறைகள் 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி திரும்பப் பெற்றதாக கருதப்பட வேண்டியதும் அது வருவாய் அதிகாரிகளுக்கும் பொருந்தும் என்பதும் அவ்வாறான வரி செலுத்துபவர் வருவாய் அதிகாரி சுமத்தும் ஏதேனும் வசூல் கட்டணங்களை செலுத்தும் பொறுப்புடையவர் அல்லர்.

(10) இந்தப் பிரிவின் படி மூந்தைய ஆண்டுகளில் அவர்களின் நிலுவைத் தொகையின் தீர்ப்பாக்கல் தேர்வு செய்தவர்கள் ஆனால் கட்டணம் செலுத்த தவறியவர்களுமான வரி செலுத்துபவர்களுக்கும் இந்தப் பிரிவின் படி அவர்களின் வழக்கு தீர்ப்பாக்குதலை தேர்வு செய்ய வேண்டியதும், முன்பு ஏதேனும் தொகை செலுத்தியுள்ள பட்சம் 55 கி துறையின் விதிமுறைகளுக்கு உட்பட்டு வரிக்கும் வட்டிக்கும் வரவு வைக்க வேண்டியதும் அது தொடர்பாக கட்டணம் செலுத்தியதற்கான சான்று வரி செலுத்துபவர் சமர்ப்பித்திட வேண்டும்.

(11) இந்த சட்டத்திலோ அல்லது ஏதேனும் நீதிமன்றத்தின் தீர்ப்பாயத்தின் மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் ஏதேனும் தீர்ப்பு, தீர்ப்பாணை அல்லது உத்தரவில் என்னதான் அடங்கியிருந்தாலும் இந்தப் பிரிவின் படி தீர்ப்பாக்கப்பட்ட தொகை எந்தவொரு சூழ்நிலையிலும் பின்னர் திரும்ப தரவோ அல்லது எந்த சரிசெய்தலோ இருக்காது.

(5) 23 பிஇ பிரிவுக்கு பின் பின்வரும் பிரிவுகள் சேர்க்கப்பட வேண்டும், அதாவது:-

"23 பிபி 2025-ன் டிஸ்டில்லரி நிலுவை தீர்ப்பாக்குதல் திட்டம் -

(1) இந்த சட்டத்திலோ அல்லது ஏதேனும் நீதிமன்றத்தின் தீர்ப்பாயத்தின் மேல்முறையீட்டு ஆணையத்தின் ஏதேனும் ஆணை, தீர்ப்பாணை அல்லது உத்தரவில் என்னதான் அடங்கியிருந்தாலும், 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 1-ஆம் தேதி முதல் 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30-ஆம் தேதி வரையிலான வரி காலகட்டம் தொடர்பாக இந்த சட்டத்தின் பிரிவு 5 துணைப்பிரிவு (2)-ன் உட்பிரிவு (i) -க்கு துணை உட்பிரிவு (பி)-ன் படி செலுத்த வேண்டியதான விற்றுமுதல் வரி நிலுவைத்தொகை உள்ள ஒரு வரி செலுத்துபவர் செலுத்த வேண்டிய விற்றுமுதல் வரி செலுத்துவதற்காக 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதியில் நிலுவையில் உள்ள நிலுவைத் தொகை தீர்ப்பாக்கல் தேர்வு செய்ய வேண்டியதும் அவ்வாறு செலுத்துவதன் மூலம் வட்டியும் அபராதத் தொகையும் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

ஆனால் மேற்குறிப்பிட்ட காலகட்டத்தில் அபராதம் சுமத்தியது தொடர்பான ஆதாரம், விவரங்கள், ஆவணங்கள் ஆகியவை இந்த சட்டத்தின் படியான ஏதேனும் சிறந்த

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

தீர்ப்பு மதிப்பீட்டிற்கு பயன்படுத்தவோ பயன்படுத்துவதற்கான அவசியம் இல்லாத சங்கதியில், வரி மதிப்பீட்டு அதிகாரி தீர்மானித்த படியான அத்தகைய அபராதத் தொகை தொடர்பாக பொருந்தக்கூடிய விற்றுமுதல் வரி செலுத்துவதன் மூலம், இந்த பிரிவின் படியான அபராதத்துடன் தொடர்புடைய கோரிக்கையை தீர்ப்பாக்கலாம்.

அதுமட்டுமல்லாமல், மேற்குறிப்பிட்ட காலகட்டத்துடன் தொடர்புடைய நிலுவைத்தொகையைத் தீர்ப்பாக்கும் போது, பிற எந்தவொரு விற்பனை வரி அல்லது விற்றுமுதல் வரி தீர்ப்பாக்க எதும் இல்லை என்றால் ஒன்றாம் காப்பு வாசகத்தில் குறிப்பிட்டுள்ள அபராதத்தொகையைத் தவிர மேற்குறிப்பிட்ட காலகட்டத்துடன் தொடர்புடைய அனைத்து அபராதத் தொகைகளும் இந்தத் திட்டத்தின் கீழ் தீர்ப்பாக்கப்பட்டதாகக் கருதப்பட வேண்டும்.

(2) இந்தத் திட்டத்தின் படி நிலுவைத்தொகையை தீர்ப்பாக்க தேர்வு செய்ய எண்ணும் எந்தவொரு வரி செலுத்துபவரும், 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதியில் நிலுவையாக உள்ள கட்டணம் எலக்ட்ரானிக்காக இ-ட்ரேஷரி போர்ட்டல் மூலம் செலுத்த வேண்டியதும் 2025 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30-ஆம் தேதிக்குள் அவ்வாறு செலுத்தியதற்கான சான்றை வரி மதிப்பீட்டாளர் முன்பாக சமர்ப்பித்திட வேண்டும்.

(3) வரி மதிப்பீட்டு அதிகாரி, தொகை செலுத்தியதன் சான்றை கைப்பற்றும்போது, தொகை செலுத்தியதன் சரியானத் தன்மையை பரிசோதனை செய்ய வேண்டியதும் செலுத்திய வரித்தொகையில் ஏதேனும் குறைவு இருந்தால் தொகை செலுத்திய சான்றை கைப்பற்றிய ஒரு மாதத்திற்குள் வரி செலுத்துபவரிடம் தெரிவித்திட வேண்டும்.

(4) துணைப்பிரிவு (3)-ன் படியான செலுத்த வேண்டிய வரி தொகையில் ஏதேனும் குறைவு இருந்தால் அறிவிப்பு பெறப்பட்ட 15 நாட்களுக்குள் வரி செலுத்துபவர் செலுத்திட வேண்டும்.

ஆனால் குறைவு வரித்தொகையை செலுத்துவதற்கு ஒன்றிற்கும் மேற்பட்ட வாய்ப்பு வழங்கப்பட மாட்டாது.

(5) துணைப்பிரிவுகள் (3),(4)-ன் படி தொகை செலுத்தியதன் சான்றை கைப்பற்றினால் வரி மதிப்பீட்டு அதிகாரி செலுத்தியதன் சரியானத் தன்மையை பரிசோதனைச் செய்ய வேண்டியதும் இந்தத் திட்டத்தின் விதிமுறைகளின்படி செலுத்துதல் நிறைவடையும் போது அத்தகைய தொகையை கைப்பற்றிய ஒரு மாதத்திற்குள் ஒரு நிலுவை தீர்ப்பாக்குதல் உத்தரவு எழுத்துபூர்வமாக வழங்கப்பட வேண்டும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(6) இந்தத் திட்டத்தின் கீழ் நிலுவைத் தொகையை தீர்ப்பாக்க வரி செலுத்துபவர், ஏதேனும் மேல்முறையீடு அல்லது திருத்த ஆணையத்தின் முன்பாக தீர்ப்பாயம் அல்லது நீதிமன்றங்கள் முன்பாக நிலுவையில் உள்ள அனைத்து வழக்குகளையும் திரும்பப் பெற வேண்டியதும் அத்தகைய மேல்முறையீடு அல்லது திருத்த ஆணைடம் அல்லது தீர்ப்பாயம் அல்லது நீதிமன்றம் முன்பாக, அதது சங்கதிபோல வழங்கப்பட்ட திரும்பப் பெறுதல் உத்தரவை வரி மதிப்பீட்டு அதிகாரி முன்பாக கட்டணம் செலுத்தியதன் சான்றுடன் சமர்ப்பித்திட வேண்டும்.

ஆனால் இந்தச் சட்டத்தின் கீழுள்ள ஏதேனும் அதிகாரப் பதவி அல்லது தீர்ப்பாயம் அல்லது ஏதேனும் நீதிமன்றங்களின் முன்பாக அரச தாக்கல் செய்துள்ள ஏதேனும் மேல்முறையீடு தீர்க்கப்படாமல் உள்ள சங்கதியில், அசல் வரி மதிப்பீட்டு உத்தரவின் படி கோரிக்கை செய்யப்பட்டுள்ள வரி செலுத்துவதன் மூலம் இந்தத் தீர்ப்பாக்கல் திட்டத்தின் கீழ் தீர்ப்பாக்கலாம். துணைப்பிரிவு (2)-ன் படியான அத்தகைய தொகையை கைப்பற்றும் போது வரி மதிப்பீட்டு அதிகாரி இந்த சட்டத்தின் கீழுள்ள மேல் முறையீட்டு அதிகாரி அல்லது மேல்முறையீட்டு ஆணையம் அல்லது ஏதேனும் நீதிமன்றங்களிடம் அத்தகைய வழக்குகள் தீர்ப்பாக்கப்பட்டது தொடர்பான விவரங்கள் கிடைப்பதுவரை வழக்குகளை ஒத்தி வைப்பதற்கு விண்ணப்பிக்க வேண்டியதும் அசல் உத்தரவின் கோரிக்கையின் படி வரி செலுத்துபவர் அவ்வாறான வழக்குகள் தீர்ப்பாக்கப்பட்டால் அத்தகைய மேல்முறையீடுகளை அரசு உடனடியாக திரும்பப் பெற வேண்டும்.

(7) பிரிவு 55 கி-ல் என்னதான் அடங்கி இருந்தாலும் துணைப்பிரிவு (1)-ன் படி நிலுவைத் தொகையைத் தீர்ப்பாக்க தேர்வு செய்யும் ஒரு வரி செலுத்துபவர், கோரிக்கை அறிவிப்பு கிடைத்த பிறகு இந்த சட்டத்தின் படியான நிலுவைத் தொகையுடன் தொடர்புடைய ஏதேனும் தொகையை செலுத்தவோ முதலீடோ செய்துள்ள பட்சம், அத்தகைய தொகை வரிக்கு வரவு வைக்க வேண்டியதும் வரி செலுத்துபவர் இது தொடர்பாக தொகை செலுத்தியதன் சான்றை சமர்ப்பித்திட வேண்டும்.

(8) 1968-ன் கேரள வருவாய் மீட்பு சட்டத்தில் (1968-ன் 15) என்னதான் அடங்கி இருந்தாலும் துணைப்பிரிவு (1)-ன் படி நிலுவைத்தொகையை குறைத்தல், வரி மீட்பு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ள சங்கதியில் கட்டுப்பட்ட வரி மதிப்பீட்டு அதிகாரிகளுக்கு அத்தகைய தொகை துணைப்பிரிவு (1)-ன் படியான தீர்ப்பாக்குதல் படி வசூலிக்கும் அதிகாரம் இருப்பதும் துணைப்பிரிவு (1)-ன் படி தொகை தீர்ப்பாக்கப்படும் பட்சம் அத்தகைய வரி செலுத்துபவருக்கு எதிரான வரி மீட்பு நடவடிக்கை முறைகள்2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி திரும்பப் பெற்றதாகக் கருதப்பட வேண்டியதும் அது வருவாய் அதிகாரிகளுக்கு பொருந்துவதும் அத்தகைய வரி செலுத்துபவர் வருவாய்

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

அதிகாரி சுமத்தும் ஏதேனும் வகுல் கட்டணங்களை செலுத்தும் பொறுப்புடையவர் அல்லராவர்.

(9) இந்த சட்டம் அல்லது ஏதேனும் நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயம் அல்லது மேல் முறையீட்டு அதிகாரியின் ஏதேனும் ஆணை, தீர்ப்பாணை அல்லது உத்தரவில் என்னதான் அடங்கி இருந்தாலும் இந்தத் திட்டத்தின்படி தீர்ப்பாக்கப்பட்ட தொகை, எத்தவொரு சூழ்நிலையிலும் பின்னர் திரும்பத் தரவோ சரி செய்யவோ செய்யப்பட மாட்டாது.

23 பிசி. இடர்பாடுகளை அகற்றுவதற்கான அதிகாரம்.- (1) பிரிவு 23 பி மற்றும் பிரிவு 23 பிபி-யின் ஏதேனும் விதிமுறைகளுக்கு அமலாக்கம் வழங்குவதில் ஏதேனும் இடர்பாடு ஏற்படும் பட்சம் மாநில வரி ஆணையருக்கு மேற்குறிப்பிட்ட பிரிவு அல்லது பிரிவுகளின் விதிமுறைகளுக்கு ஊறு ஏற்படாத வகையில் உத்தரவு மூலம், அத்தகைய சிரமத்தை நீக்கம் செய்யலாம்:

ஆனால் மேற்குறிப்பிட்ட பிரிவுகள் அமலாக்கத்தில் வந்து ஒரு ஆண்டுக்குப் பிறகு அத்தகைய உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படக் கூடாது.

(2) துணைப்பிரிவு (1)-ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட ஒவ்வொரு உத்தரவும் அரசு சட்டப்பேரவை முன்பாக சமர்ப்பித்திட வேண்டும்.";

(6) பிரிவு 29-ல்,-

(எ) ஒரத் தலைப்பில், "மற்றும் போக்குவரத்தில் உள்ள பொருட்களின் ஆய்வு" என்ற சொற்கள் நவிர்க்கப்பட வேண்டும்;

(பி) துணைப்பிரிவுகள் (2),(2 ஏ),(3),(4),(5) மற்றும் (6) ஆகியவைத் தவிர்க்கப்பட வேண்டும்;

(7) பிரிவு 29 ஏ க்கு பதிலாக பின்வரும் பிரிவு சேர்க்கப்பட வேண்டும், அதாவது:-

"29 ஏ. போக்குவரத்து அல்லது கேமிப்பில் உள்ள சரக்குகளை சோதனை செய்தல்.- (1) ஏதேனும் ஒரு சரக்கை கொண்டு செல்கின்ற ஒரு போக்குவரத்தின் அல்லது சரக்கை கொண்டு செல்வதன் ஒரு பகுதியாக அதை பாதுகாப்பதற்கு அல்லது பிற பொறுப்புள்ள ஏதேனும் நபர் பரிந்துரைக்கப்பட்ட அத்தகைய ஆவணங்களை கைவசம் வைத்திருக்க வேண்டும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(2) சரக்கை கொண்டு செல்வதற்கு அல்லது கொண்டு செல்லும்போது சரக்குகளை பாதுகாப்பதற்கு அல்லது மற்றவற்றிற்கு உள்ள கூடுதல் நிபந்தனைகளும் அத்தகைய சரக்குகளுடன் இருக்க வேண்டிய ஆவணங்கள் தொடர்பாகவும் அறிக்கை வாயிலாக, குறிப்பிட்ட மாநில வரி ஆணையருக்கு அதிகாரம் இருப்பதுமாகும்.

(3) ஏதேனும் நபர் சரக்குகளைக் கொண்டு செல்லும்போது அல்லது கொண்டு செல்வதன் ஒரு பகுதியாக பாதுகாக்க அல்லது பிறவற்றை செய்யும்போது, உதவி நிதி அதிகாரி பதவிக்கும் குறையாத ஒரு அதிகாரி அத்தகைய சரக்குகளை இடைமறிப்பு அல்லது பரிசோதனை செய்ய வேண்டியதும் பொறுப்புள்ள நபரிடம் துணைப்பிரிவுகள் (1) அல்லது (2)-ன் கீழ் பரிந்துரைக்கப்பட்ட ஆவணங்களை சமர்ப்பிக்க கோரலாம். பொறுப்புள்ள நபர், ஆவணங்களை சமர்ப்பிக்கவும் சரக்குகளை சோதனைச் செய்வதற்கு அனுமதிக்கவும் பொறுப்புடையவராவர்.'';

(8) பிரிவு 30இ-க்கு பிறகு பின்வரும் பிரிவு சேர்க்கப்பட வேண்டும், அதாவது:-

''30இ சரக்குகளை பறிமுதல், போக்குவரத்து அல்லது இரண்டும் செய்தல்.- (1) இந்தச் சட்டத்தில் என்னதான் அடங்கி இருந்தாலும், பிரிவு 29ஏ துணைப்பிரிவு (1) அல்லது துணைப்பிரிவு (2)ன் விதிமுறைகளை மீறி ஏதேனும் நபர் ஏதேனும் சரக்குகளின் பொறுப்பை உடையவராக கண்டடையும் பட்சம், அத்தகைய அனைத்து சரக்குகளும் அவ்வாறான சரக்குகளை கொண்டு செல்வதற்கு பயன்படுத்தியுள்ள போக்குவரத்து ஏதேனும் இருந்தால் அதுவும், அதனுடன் தொடர்புடைய ஆவணங்களையும் மாநில வரி உதவி அதிகாரியின் பதவிக்கும் குறையாத ஒரு அதிகாரி பரிசோதனைக்காக தடுத்து வைப்பதற்கும் பறிமுதல் செய்வதற்கும் தகுதியுடையவராவார்.

(2) மேற்குறிப்பிட்ட படி தடுத்து வைத்தது அல்லது பறிமுதல் செய்ததோவான சரக்குகளின் பரிசோதனையில், அவற்றின் உரிமையாளர் அல்லது பொறுப்பு வகிக்கும் நபர் பிரிவு 29ஏ-ன் துணைப்பிரிவு (1) அல்லது துணைப்பிரிவு (2)-ஐ மீறியுள்ளதாக அதிகாரி சந்தேகமடைந்தால், அவ்வாறு தடுத்து வைத்தது அல்லது பறிமுதல் செய்த போக்குவரத்தின் பொறுப்பை உடைய நபர், அதது சங்கதிபோல, இரண்டு நாட்களுக்குள் அறிவிப்பு வழங்க வேண்டியதும் பரிந்துரைக்கப்படும் அத்தகைய முறையில் பறிமுதல் செய்ததன் தடுத்து வைத்ததன் காரணத்தை அவரிடம் தெரிவிக்க வேண்டியதும் அவரது கருத்தைக் கேட்பதற்கான வாய்ப்பை வழங்கவும் வேண்டும்.

(3) மேற்குறிப்பிட்ட சரக்குகளின் உரிமையாளர் அல்லது பொறுப்பு உள்ள நபர் பறிமுதல் மற்றும் தடுத்து வைத்தல் நடைபெற்றது முதல் மூன்று நாட்களுக்குள்,

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

சரக்குகளின் போக்குவரத்து அல்லது சேமிப்பின் சரியானத்தன்மையை நிரூபித்தால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி சரக்குகளும் போக்குவரத்தும் இருந்தால் அதை விடுவித்தல் செய்திட வேண்டும்.

(4) துணைப்பிரிவு (3)-ன் படி சரக்குகளின் உரிமையாளர் அல்லது பொறுப்பு உள்ள நபர் சரக்குகளின் போக்குவரத்து அல்லது சேமிப்பின் நேர்மையை நிரூபிக்கத் தவறும் பட்சம், மேற்குறிப்பிட்ட அதிகாரி, அத்தனகைய சரக்குகள் அல்லது போக்குவரத்து அல்லது இரண்டையும், அதது சங்கதி போல, பறிமுதல் செய்ய வேண்டியதும் சரக்குகளின் அல்லது போக்குவரத்து அல்லது இரண்டின் உரிமையாளர் அல்லது பொறுப்பு உள்ள நபர் அதது சங்கதி போல, உரிய வரி மற்றும் செஸ் தொகையின் இருமடங்கிற்கு சமமான தொகையை அபராதமாக செலுத்தும் பொறுப்புடையவராவர்.

(5) ஏதேனும் சரக்குகளின் போக்குவரத்தின் அல்லது இரண்டின், அதது சங்கதிபோல, பறிமுதல் செய்வதற்கு இந்தச் சட்டம் அங்கீகரிக்கப்படும் போது, பறிமுதல் செய்வதற்கு பதிலாக சரக்குகளின் உரிமையாளருக்கு மேற்குறிப்பிட்ட அதிகாரி உகந்ததெனக் கருதுகின்ற அவ்வாறான அபராதத்தை செலுத்த ஒரு வாய்ப்பை வழங்கிட வேண்டும்.

ஆனால் அவ்வாறு சுமத்தக்கூடிய அபராதம் பறிமுதல் செய்யப்பட்ட சரக்குகளின் சந்தை மதிப்பையும் விட அதிகரிக்கக் கூடாது.

அதுமட்டுமல்லாமல் அவ்வாறு சுமத்தக்கூடிய மொத்த அபராதம் மற்றும் பெனால்டி பறிமுதல் செய்யப்பட்ட சரக்குகளின் சந்தை மதிப்பை விட மூன்றில் ஒரு பங்குக்கும் குறையக்கூடாது.

விளக்கம்.- இந்தப் பிரிவின் தேவைக்காக, ''சந்தை மதிப்பு'' என்ற பதம் மாநிலத்திற்கு உள்ளே அத்தகைய பொருட்களின் சில்லறை விற்பனை நிலையத்திலிருந்து அத்தகைய பொருட்களை வாங்குவதற்கு எந்தவொரு நபரும் செலுத்த வேண்டிய முழுத்தொகையாக இருக்கும்.

(6) தடுத்து வைக்கப்பட்டுள்ள போக்குவரத்து ஏதேனும், சரக்கு கொண்டு செல்வதற்காக வாடகைக்கு எடுத்ததாக இருந்தால் போக்குவரத்தின் உரிமையாளர் அல்லது பொறுப்பில் உள்ள நபர், பறிமுதல் செய்வதற்கு பதிலாக கொண்டு செல்லப்பட்ட போக்குவரத்திற்கு பொருந்தக்கூடிய வரி மற்றும் செஸ் தொகையின் இரண்டு மடங்கிற்கு சமமான தொகை அல்லது ஐம்பதாயிரம் ரூபாய் எது கூடுதலோ அதை செலுத்த வாய்ப்பு அளிக்கப்படும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

ஆனால் உரிமையாளர் அல்லது போக்குவரத்தின் பொறுப்பில் உள்ள நபர் கொண்டு சென்ற சரக்கு பாதுகாப்பாக சேமிப்பதற்கான ஒழுங்குமுறையும் அல்வாறு பாதுகாப்பதற்கான செலவையும் சேர்த்து பொறுப்பேற்று கொள்வதாக உட்பட்டு அத்தகைய அபராதத் தொகையை செலுத்தும்போது போக்குவரத்தை விட்டு கொடுத்தல் வேண்டும்.

(7) சரக்குகளின் அல்லது போக்குவரத்தின் அல்லது இரண்டின், அந்து சங்கதிபோல், உரிமையாளர் அல்லது பொறுப்பில் உள்ள நபர் சரக்கு கொண்டு சென்றதன் தேர்மையை நிரூபிப்பதில் தவறும் பட்சம், அதிகாரி, சரக்கின் அல்லது போக்குவரத்தின் அல்லது இரண்டையும் உரிமையாளர் அல்லது பொறுப்பில் உள்ள நபர், துணைப்பிரிவு (2)-ன் படியான தடுத்து வைத்தல் அல்லது பறிமுதல் செய்தல் முதல் ஐந்து நாட்களுக்குள், பரிந்துரைக்கப்பட்ட அத்தகைய வடிவத்திலும் அத்தகைய முறையிலும், பறிமுதல் செய்ததற்கான காரணத்தை சுட்டிக்காட்டும் அறிவிப்பை வழங்கிட வேண்டும்.

(8) துணைப்பிரிவு (7)-ல் குறிப்பிட்டுள்ள அறிவிப்பைக் கைப்பற்றிய பதினைந்து நாட்களுக்குள் சரக்குகளின் அல்லது போக்குவரத்தின் உரிமையாளர் அல்லது பொறுப்பில் உள்ள நபர் துணைப்பிரிவு (5)-ல் குறிப்பிட்டுள்ள அத்தகைய அபராதத் தொகை பறிமுதல் செய்தலுக்கு பதிலாக செலுத்தலாம்.

(9) துணைப்பிரிவு (5)-ன் படியான அபராதத் தொகையைச் செலுத்துவதற்கு சரக்குகளின் அல்லது போக்குவரத்தின் உரிமையாளர் மேலும் கால அவகாசம் கோரும் பட்சம் பொறுப்பிலுள்ள அதிகாரி ஏழு நாட்களுக்கும் மிகாமல் கூடுதல் கால அவகாசத்திற்கு அனுமதி வழங்கலாம்.

(10) துணைப்பிரிவு (4)-ல் குறிப்பிட்டுள்ள பெனால்டியும் துணைப்பிரிவு (5)-ல் குறிப்பிட்டுள்ள அபராதத் தொகையும் துணைப்பிரிவு (8) அல்லது (9)-ல் குறிப்பிட்டுள்ள கால அவகாசத்திற்குள் செலுத்தும் பட்சம், அந்து சங்கதி போல, துணைப்பிரிவு (7)-ல் குறிப்பிட்டுள்ள அறிவிப்புடன் தொடர்புடைய அனைத்து நடவடிக்கை முறைகளும் முடிவடைந்ததாகக் கருதப்பட வேண்டும்.

(11) துணைப்பிரிவு (4)-ல் குறிப்பிட்டுள்ள பெனால்டியும் துணைப்பிரிவு (5)-ல் குறிப்பிட்டுள்ள அபராதத் தொகையும் துணைப்பிரிவு (8) அல்லது (9)-ல் குறிப்பிட்டுள்ள கால அவகாசத்திற்குள் செலுத்த தவறும் பட்சம், துணைப்பிரிவு (7)-ல் குறிப்பிட்டுள்ள அறிவிப்பை வழங்கிய நாற்பத்து ஐந்து நாட்களுக்குள் சரக்குகளின் அல்லது போக்குவரத்தின் அல்லது இரண்டையும், அந்து சங்கதிபோல, அத்தகைய

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

வடிவத்திலும் முறையிலும் பறிமுதல் செய்தலை இறுதி செய்து கொண்டு அதிகாரி ஒரு உத்தரவை வழங்கிட வேண்டும்.

(12) அதிகாரி, பறிமுதல் செய்த சொத்துக்களை பொறுப்பேற்கவும் கைவசம் வைக்க வேண்டியதும் அத்தகைய பொறுப்புடைய அதிகாரியின் வேண்டுகோளின்பேரில் ஒவ்வொரு காவல்துறை அதிகாரியும் அத்தகைய பொறுப்பேற்றலுக்கும் கைவசம் வைப்பதற்கும் அவருக்கு உதவிட வேண்டும்.

(13) ஏதேனும் சரக்குகளின் அல்லது போக்குவரத்தின் அல்லது இரண்டையும் சம்மந்தப்படுத்தி இந்த பிரிவின் கீழுள்ள பறிமுதல் செய்தலின் ஒரு உத்தரவு இறுதியாகும்போது, துணைப்பிரிவு (4)-ன் படி செலுத்த வேண்டிய அபராதத் தொகையை வசூலிப்பதற்காக, பரிந்துரைக்கப்படும் அத்தகைய முறையில், அவ்வாறு பறிமுதல் செய்யப்பட்டுள்ள சரக்குகள் போக்குவரத்து அல்லது இரண்டையும், அதது சங்கதிபோல, விற்கவோ அல்லது பிறவகையில் அகற்றவோ செய்யலாம்.

(14) இந்தச் சட்டத்திலோ அதன் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளிலோ என்னதான் அடங்கியிருந்தாலும், பறிமுதல் செய்யப்பட்ட சரக்குகள் அழுகக்கூடியவை, ஆபத்தானவை அல்லது வெடிக்கும் தன்மை கொண்டவை என்றால் அதிகாரி பறிமுதல் செய்வதை இறுதியாக்குவதற்கான குறுகிய கால அவகாசத்திற்குள் அத்தகைய சரக்குகளை அகற்றவோ செய்யலாம்.

விளக்கம் - இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக, ''போக்குவரத்து'' என்பதில் ஒரு வாகனம் அல்லது ஒரு கப்பல் உள்ளடக்கியது'';

(9) பிரிவு 30 ஷீப்- தவிர்க்கப்பட வேண்டும்.

(10) பிரிவு 31 தவிர்க்கப்பட வேண்டும்.

(11) பிரிவு 34-ன் துணைப்பிரிவு (1)-ல்,-

(i) ''பிரிவு 29'' என்ற சொல், சின்னம் மற்றும் எண்ணும் தவிர்க்கப்பட வேண்டும்;

(ii) ''அல்லது பிரிவு 30 எ'' என்ற சொற்கள், சின்னம் எழுத்து மற்றும் எண்ணிற்கு பிறகு ''அல்லது பிரிவு 30 இ'' என்ற சொற்கள், சின்னங்கள் எழுத்து மற்றும் எண் சேர்க்கப்பட வேண்டும்;

(12) பிரிவு 45 பி தவிர்க்கப்பட வேண்டும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(13) பிரிவு 57-க்கு பிறகு பின்வரும் பிரிவு சேர்க்கப்பட வேண்டும், அதாவது:-

"57 எ மாநில வரி ஆணையர் உத்தரவுகளை வெளியிடுவதற்கான அதிகாரம்.- இந்த சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு மாநில வரி ஆணையர் சட்டத்தை ஒருங்கிணைந்த முறையில் செயல்படுத்துவதற்கு அவர் உகந்ததென கருதுகின்ற உத்தரவுகளையும் வழிமுறைகளையும், அவ்வப்போது வழங்கலாம்.".

5. 1976-ன் சட்டம் 19-ன்கான திருத்தம் - 1976-ன் கேரள மோட்டார் வாகன வரி விதிப்புச் சட்டத்தின் (1976-ன் 19),-

(1) அட்டவணையில்,-

(எ) வரிசை எண் 1-ல் நேர்வரிசை (3)-இல், "45.00" என்ற எண்களுக்கும் சின்னத்திற்கும் பதிலாக "68.00" என்ற எண்களும் சின்னமும் சேர்க்கப்பட வேண்டும்;

(பி) வரிசை எண் 2-ல் நேர்வரிசை (3)-ல், "45.00", என்ற எண்களுக்கும் சின்னத்திற்கும் பதிலாக "68.00" என்ற எண்களும் சின்னமும் சேர்க்கப்பட வேண்டும்;

(சி) வரிசை எண் 7-இல்,-

(i) இனம் (i)-ல்,-

(i எ) துணை இனம் (டி)-க்கும் அதற்கு எதிரான நெடுவரிசை (2) மற்றும் (3) ஆகியவற்றின் உள்ளீடுகளுக்கு பதிலாக பின்வரும் துணை இனங்கள் மற்றும் உள்ளீடுகள் முறையாக சேர்க்கப்பட வேண்டும், அதாவது:-

"(டி) மாநிலத்திற்குள் இயக்க அனுமதி வழங்கப்பட்ட வாகனங்கள்

(i) ஒப்பந்த வண்டிகளில் 6 பயணிகளுக்கு மேல் ஏற்றிச் செல்ல அனுமதிக்கப்படுகிறது, ஆனால் 12 பயணிகளுக்கு மேல் இல்லை-ஒவ்வொரு பயணிகள் இருக்கைக்கும்	350.00
(ii) ஒப்பந்த வண்டிகளில் 12 பயணிகளுக்கு மேல் ஏற்றிச் செல்ல அனுமதிக்கப்படுகிறது, ஆனால் 20 பயணிகளுக்கு மேல் இல்லை - ஒவ்வொரு பயணிகள் இருக்கைக்கும்	600.00

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(iii) ஒப்பந்த வண்டிகளில் 20 பயணிகளுக்கு மேல் ஏற்றிச்செல்ல அனுமதிக்கப்படுகிறது.- ஒவ்வொரு பயணிகள் இருக்கைக்கும்	900.00
(iv) 1988-ன் மோட்டார் வாகன சட்டத்தின் (1988-ன் மத்தியச் சட்டம் 59) பிரிவு 2-இன் துணைப்பிரிவு (17)-ன் படி கனரக பயணிகள் வாகனங்களின் பிரிவில் உட்படும் ஸ்லீப்பர் பெர்த்துடன் உள்ள ஒப்பந்த வண்டி-ஒவ்வொரு பெர்த்திற்கும்	1500.00

(i பி) துணை இனம் (எ.ஃப்)-ல்,-

(எ) உட்பிரிவுகள் (i), (ii)-க்கும் அதற்கு எதிராக உள்ள நெடுவரிசை (2), (3) ஆகியவற்றின் உள்ளீடுகளுக்கு பதிலாக பின்வரும் உட்பிரிவும் உள்ளீடுகளும் முறையே சேர்க்கப்பட வேண்டும், அதாவது:-

"(i) சாதாரண அல்லது தள்ளு இருக்கைகள் கொண்ட 6 பயணிகளுக்கு மேல் பயணிகளைச் சுமந்து செல்ல அனுமதிக்கப்பட்டுள்ள ஒப்பந்த வண்டி - ஒவ்வொரு பயணிகள் இருக்கைக்கும்	2500.00",

(பி) தற்போதுள்ள உட்பிரிவு (iii) உட்பிரிவு (ii)-ஆக மறு எண்ணிடப்பட வேண்டும்.

(ii) இனம் (iii)-ல் துணை இனங்கள் (எ), (பி),(சி),(டி) ஆகியவையில் நெடுவரிசை (3)-ல் அதற்கு எதிராக உள்ள உள்ளீட்டில் "540.00", "620.00", "190.00" "140.00", ஆகிய எண்கள் மற்றும் சின்னங்களுக்கு பதிலாக "490.00", "560.00", "170.00", "130.00" ஆகிய எண்களும் சின்னங்களும் முறையே சேர்க்கப்பட வேண்டும்;

(iii) இனம் (iv)-ல் துணை இனங்கள் (எ), (பி), (சி), (டி) ஆகியவையில் நெடுவரிசை (3)-ல் அதற்கு எதிராக உள்ள உள்ளீட்டில் "1050", "890", "1140" ஆகிய எண்கள் மற்றும் சின்னங்களுக்குப் பதிலாக "950", "800", "1030" ஆகிய எண்கள் மற்றும் சின்னங்கள் முறையே சேர்க்கப்பட வேண்டும்;

(டி)வரிசை எண் 11-ல் உட்பிரிவு (i)-ல், துணை உட்பிரிவுகள் (எ), (பி) (சி)-ல் மற்றும் நெடுவரிசை (3)-ல் அதற்கு எதிராக உள்ள உள்ளீட்டில் "320.00",

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

"430.00", "530.00" ஆகிய எண்களுக்கும் சின்னங்களுக்கும் பதிலாக "480.00", "645.00", "795.00" ஆகிய எண்கள் மற்றும் சின்னங்கள் முறையே சேர்க்கப்பட வேண்டும்;

(2) இணைப்பு (2)-ல்,-

(எ) இணைப்பு -I-இல் வரிசை எண் 7 பி மற்றும் அதற்கு எதிரே உள்ள நெடுவரிசை (2) மற்றும் (3) ஆகியவற்றின் உள்ளீடுகளுக்கு பதிலாக பின்வரும் வரிசை எண்கள் மற்றும் உள்ளீடுகள் முறையாகச் சேர்க்கப்பட வேண்டும், அதாவது:-

"7 பி	தனிநபர் தேவைக்காக பயன்படுத்தப்படும் எலக்ட்ரிக் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் எலக்ட்ரிக் மூன்று சக்கர வாகனங்கள்	வாகனத்தின் கொள்முதல் மதிப்பின் 5% சதவீதம்
7 சி	பதினைந்து இலட்சம் வரை கொள்முதல் மதிப்புள்ள தனிப்பட்ட பயன்பாட்டிற்கான எலக்ட்ரிக் மோட்டர் கார்கள் மற்றும் எலக்ட்ரிக் தனியார் சேவை வாகனங்கள்	வாகனத்தின் கொள்முதல் மதிப்பின் 5% சதவீதம்
7 டி	பதினைந்து இலட்சத்திற்கு மேல் மற்றும் இருபது இலட்சம் ரூபாய் வரையிலான கொள்முதல் மதிப்புள்ள தனிப்பட்ட பயன்பாட்டிற்கான எலக்ட்ரிக் மோட்டார் கார்கள் மற்றும் தனியார் எலக்ட்ரிக் சேவை வாகனங்கள்	வாகனத்தின் கொள்முதல் மதிப்பின் 8% சதவீதம்
7 இ	இருபது இலட்சம் மேல் கொள்முதல் மதிப்புள்ள எலக்ட்ரிக் மோட்டார் கார்கள் மற்றும் தனிப்பட்ட பயன்பாட்டிற்கான எலக்ட்ரிக் தனியார் சேவை வாகனங்கள்	வாகனத்தின் கொள்முதல் மதிப்பில் 10% சதவீதம்
7 எஃப்	பேட்டரி வாடகை/குத்தகை வசதியுடன் எலக்ட்ரிக் கார்கள் மற்றும் தனிப்பட்ட பயன்பாட்டிற்கான எலக்ட்ரிக் தனியார் சேவை வாகனங்கள்	வாகனத்தின் கொள்முதல் மதிப்பில் 10% சதவீதம்."

விளக்கம்- பேட்டரிகள் வாடகை/குத்தகை வசதி என்றால், பேட்டரியின் விலையைத் தவிர்த்து வாகனத்தை வாங்குதல் மற்றும் கிலோமீட்டருக்கு கட்டணம் செலுத்துதல் அல்லது வேறு ஏதேனும் முறை மூலம் பேட்டரிக்கு பணம் செலுத்துதல் என்பதாகும்.

(பி) இணைப்பு-II-ல், வரிசை எண்கள் ஏ, பி, எஃப், ஜி மற்றும் ஜெ மற்றும் அதற்கு எதிரே உள்ள நெடுவரிசை (3)-ல் "900", "900", "6400", "8600", "10600",

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

ஆகிய எண்களுக்கு பதிலாக "1350", "1350", "9600", "12900", "15900" ஆகிய எண்கள் முறையாகச் சேர்க்கப்பட வேண்டும்.

6. 2017-ன் சட்டம் 20-ற்கான திருத்தம்.- 2017-ன் கேரள சரக்கு சேவை வரிச் சட்டத்தில் (2017-ன் 20),-

(1) பிரிவு 2-ல்,-

(i) உட்பிரிவு (61)-ல் "பிரிவு 9"-ன் என்ற சொல் மற்றும் எண்ணிற்குப் பிறகு, "இந்தச் சட்டத்தின் அல்லது 2017-ன் ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரிச் சட்டம், பிரிவு 5-இன் துணைப்பிரிவு (3) அல்லது துணைப்பிரிவு (4)இன் கீழ்" என்ற சொற்கள், அடைப்புகுறிகள் மற்றும் எண்கள் 2025-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி முதல் அமலுக்கு வரும் வகையில் சேர்க்கப்பட வேண்டும்;

(ii) உட்பிரிவு (69)-ல்,-

(எ) துணைஉட்பிரிவு (சி)-ல், "ஒரு நகராட்சியின் மேலாண்மை" என்ற சொற்களுக்குப் பிறகு, " நிதி" என்ற சொல் சேர்க்கப்பட வேண்டும்;

(பி) துணை உட்பிரிவு (சி)-க்கு பிறகு, பின்வரும் விளக்கம் சேர்க்கப்பட வேண்டும், அதாவது:-

"விளக்கம்.- இந்தத் துணை உட்பிரிவின் தேவைக்காக,-

(எ) "உள்ளாட்சி நிதி" என்றால் ஒரு ஊராட்சிப் பகுதி தொடர்பான குடிமைப் பணிகளைச் செயல்படுத்துவதற்கு ஒரு உள்ளாட்சி அதிகாரப் பதவியின் கட்டுப்பாட்டுடன் அல்லது நிர்வாகத்தின் கீழ் சட்டப்படி ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்துடன் ஏதேனும் வரி, தீர்வை, சுங்கவரி, செஸ் அல்லது கட்டணம், அவை எந்தப் பெயரில் அழைக்கப்பட்டாலும், அவற்றை சுமத்த, வசூலிக்க மற்றும் பயன்படுத்துவதற்கு அதிகாரமுடைய நிதி எனப்பொருள்படும்.";

(பி) "நகராட்சி நிதி" என்றால் ஒரு நகரப் பகுதி அல்லது பெருநகரப் பகுதி தொடர்பான குடிமைப் பணிகளைச் செயல்படுத்துவதற்கு ஒரு உள்ளாட்சி அதிகாரப் பதவியின் கட்டுப்பாட்டுடன் அல்லது நிர்வாகத்தின் கீழ் சட்டப்படி ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்துடன் ஏதேனும் வரி, தீர்வை, சுங்கவரி, செஸ் அல்லது கட்டணம், அவை எந்த பெயரில் அழைக்கப்பட்டாலும், அவற்றை சுமத்த, வசூலிக்க மற்றும் பயன்படுத்துவதற்கு அதிகாரமுடைய நிதி எனப்பொருள்படும்.";

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(iii) உட்பிரிவு 116-க்கு பிறகு பின்வரும் உட்பிரிவு சேர்க்கப்பட வேண்டும், அதாவது:-

"(116 ஏ) "தனித்துவ அடையாளக் குறியீடு" என்றால் பிரிவு 148 ஏ-ன் துணைப்பிரிவு (2)-ன் உட்பிரிவு (பி)-இல் குறிப்பிட்டுள்ள தனித்துவ அடையாளக் குறியீடு எனப்பொருள்படும். அதில் டிஜிட்டல் முத்திரை அல்லது டிஜிட்டல் மதிப்பெண் அல்லது அதற்கு சமானமான தனிச்சிறப்பு மற்றும் பாதுகாப்பை நீக்க இயலாததான பிற ஏதேனும் குறியீடு உள்ளடக்கியதாகும்;":

(2) பிரிவு 12-ன் துணைப்பிரிவு (4) தவிர்க்கப்பட வேண்டும்;

(3) பிரிவு 13-ன் துணைப்பிரிவு (4) தவிர்க்கப்பட வேண்டும்;

(4) பிரிவு 17-ன் துணைப்பிரிவு (5)-இன் உட்பிரிவு (2)-ல்,

(i) ஆலை அல்லது இயந்திர முறைகள்" என்ற சொற்களுக்கும் அடைப்புக் குறிகளுக்கும் பதிலாக "ஆலை மற்றும் இயந்திர முறைகள்" என்ற சொற்களும் அடைப்புக் குறிகளும் 2017 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1-ஆம் தேதி அமலில் சேர்க்கப்பட்டதாகக் கருதப்பட வேண்டும்.

(ii) தற்போதுள்ள விளக்கத்தின் விளக்கம் 1 ஆக எண்ணிடப்பட்டு அவ்வாறு எண்ணிடப்பட்ட விளக்கம் 1-க்கு பிறகு பின்வரும் விளக்கம் சேர்க்கப்பட வேண்டும், அதாவது:-

"விளக்கம் 2.- உட்பிரிவு (டி)-இன் நோக்கங்களுக்காக, ஏதேனும் நீதிமன்றம், தீர்ப்பாயம், அல்லது பிற ஏதேனும் ஆணையத்தின் ஏதேனும் தீர்ப்பு, தீர்ப்பாணை அல்லது உத்தரவிற்கு எதிராக என்னதான் அடங்கி இருந்தாலும் ஆலை அல்லது இயந்திர முறைகள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆலை மற்றும் இயந்திரங்களின் அமைப்பு என்ற குறிப்பாக எப்பொழுதும் விளக்கப்பட்டுள்ளபடி கருதப்பட வேண்டும்.".

5. பிரிவு 20-ல், 2025-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி அமலாக்கத்தில்,-

(i) துணைப்பிரிவு (1)-ல் "பிரிவு 9-ன்" என்ற சொல் மற்றும் எண்ணிற்கு பிறகு இந்த சட்டம் அல்லது துணைப்பிரிவு அல்லது 2017-ன் ஒருங்கிணைந்த சரக்கு சேவை வரி சட்டத்தின் பிரிவு 5-ன் துணைப்பிரிவு (3) அல்லது துணைப்பிரிவு (4)" என்ற சொற்கள் அடைப்புக்குறிகள் மற்றும் எண்கள் சேர்க்கப்பட வேண்டும்;

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(ii) துணைப்பிரிவு (2)-ல் "பிரிவு 9" என்ற சொல் மற்றும் எண்ணிற்கு பிறகு "இந்தச் சட்டம் அல்லது 2017-ன் ஒருங்கிணைந்த சரக்கு சேவை வரி சட்டத்தின் பிரிவு 5-ன் துணைப்பிரிவு (3) அல்லது துணைப்பிரிவு (4) என்ற சொற்கள், அடைப்புக்குறிகள் மற்றும் எண்கள் சேர்க்கப்பட வேண்டும்;

(6) பிரிவு 22-ன் துணைப்பிரிவு (4)-ல், " உயர்நீதிமன்றத்தின் அத்தகைய உத்தரவு" என்ற சொற்களுக்குப் பிறகு, "அல்லது தீர்ப்பாயம்" என்ற சொற்கள் 2017 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1-ஆம் தேதி முதல் அமலுக்கு வரும் வகையில் சேர்க்கப்பட வேண்டும்;

(7) பிரிவு 34-ன் துணைப்பிரிவு (2)-ல், "இந்த காப்பு வாசகத்திற்கு பதிலாக, பின்வரும் காப்பு வாசகம் சேர்க்கப்பட வேண்டும், அதாவது:-

"வழங்குநர் வெளியீட்டு வரி பொறுப்பில் எந்த குறைப்பும் அனுமதிக்கப்படாது, ஆனால்

(i) அத்தகைய வரவு குறிப்பின் படியான உள்ளீட்டு வரி வரவிற்கான தள்ளுபடிக்கு தகுதியானதும் பயன்படுத்தப்பட்டதும் பெறுநர் ஒரு பதிவு செய்யப்பட்ட நபராக இருந்தால் பெறுநரால் மாற்றம் ஏற்படுத்தாததும்;அல்லது

(ii) பிற சங்கதிகளில் அத்தகைய வரி விதிப்புக் கடன்கள் பிற ஏதேனும் நபருக்கு கைமாறப்பட்டிருந்தால்";

(8) பிரிவு 38-ல்,-

(i) துணைப்பிரிவு (1)-இல் "தானாக உருவாக்கப்பட்ட அறிக்கை" என்ற சொற்களுக்குப் பதிலாக, "ஒரு அறிக்கை" என்ற சொற்கள் சேர்க்கப்பட வேண்டும்;

(ii) துணைப்பிரிவு (2)-இல், -

(எ) "தானாக உருவாக்கப்பட்ட அறிக்கை" என்ற சொற்களுக்குப் பதிலாக, "குறிப்பிடப்பட்ட அறிக்கை" என்ற சொற்கள் சேர்க்கப்பட வேண்டும்;

(பி) உட்பிரிவு (எ)-இல் "மற்றும்" என்ற சொல் தவிர்க்கப்பட வேண்டும்;

(சி) உட்பிரிவு (பி)-இல், -

(i) "பெறுநரால்" என்ற சொல்லுக்கு பிறகு, "உட்பட" என்ற சொல் சேர்க்கப்பட வேண்டும்;

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(ii) இனம் (vi)-இல் "பரிந்துரைக்கப்பட்டது;" என்ற சொல்லுக்கும் சின்னத்திற்கும் பதிலாக "பரிந்துரைக்கப்பட்டது; மற்றும்" என்ற சொற்களும் சின்னமும் சேர்க்கப்பட வேண்டும்;

(டி) உட்பிரிவு (பி)-க்கு பிறகு, பின்வரும் உட்பிரிவு சேர்க்கப்பட வேண்டும், அதாவது:-

"(சி) பரிந்துரைக்கப்படக்கூடிய பிற விவரங்கள்.";

(9) பிரிவு 39-ன், துணைப்பிரிவு (1)-ல், "மற்றும் அத்தகைய நேரத்திற்குள்", என்ற சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய நேரத்திற்குள் மற்றும் அத்தகைய நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு" என்ற சொற்கள் சேர்க்கப்பட வேண்டும்;

(10) பிரிவு 107-ன், துணைப்பிரிவு (6)-ல், காப்பு வாசகத்திற்கு பதிலாக பின்வரும் காப்பு வாசகம் சேர்க்கப்பட வேண்டும், அதாவது:-

"ஆனால் எந்தவொரு வரியையும் கோராமல் எந்தவொரு அபராதம் கோரும் உத்தரவின் சங்கதியில், மேற்கூறிய அபராத்தின் பத்து சதவீதத்திற்கு சமமான தொகையை மேல் முறையீட்டாளர் செலுத்தாத பட்சம், அத்தகைய உத்தரவுக்கு எதிராக எந்த மேல்முறையீடும் தாக்கல் செய்தல் கூடாது.";

(11) பிரிவு 112-ல், துணைப்பிரிவு (8)-ல், பின்வரும் காப்பு வாசகம் சேர்க்கப்பட வேண்டும், அதாவது:-

"எந்தவொரு வரியையும் கோராமல் எந்தவொரு அபராதம் கோரும் உத்தரவின் சங்கதியில், பிரிவு 107-ன் துணைப்பிரிவு (6)-ன் காப்பு வாசகத்தின் கீழ் செலுத்த வேண்டிய தொகைக்கு கூடுதலாக, மேற்கூறிய அபராதத்தின் பத்து சதவீதத்திற்கு சமமான தொகையை மேல் முறையீட்டாளர் செலுத்தாதபட்சம், அத்தகைய உத்தரவிற்கு எதிராக எந்தவொரு மேல்முறையீடும் செய்தல் கூடாது.";

(12) பிரிவு 122 ஏ-க்கு பிறகு, பின்வரும் பிரிவு சேர்க்கப்பட வேண்டும், அதாவது:-

"122 பி ட்ராக் அண்ட் ட்ரேஸ் அமைப்பை கையாளுவதில் தவறும் பட்சம் உள்ள அபராதம் - இந்தச் சட்டத்தில் என்னதான் அடங்கி இருந்தாலும் பிரிவு 148 எ துணைப்பிரிவு (1) உட்பிரிவு (பி)-இல் குறிப்பிடும் படியான எந்தவொரு நபரும் மேற்குறிப்பிட்ட பிரிவின் விதிமுறைகளுக்கு முரணாகச் செயல்படும் பட்சம் அந்த நபர்

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

இந்த அத்தியாயம் அல்லது அத்தியாயம் XV-ல் ஏதேனும் தண்டனைக்கு மட்டுமல்லாமல் அத்தகைய சரக்குகளுக்கு செலுத்த வேண்டிய வரியின் பத்து சதவீதம் அல்லது ஒரு இலட்சம் ரூபாய்க்கு சமமான தொகை எதுவோ கூடுதல் அதை அபராதமாக செலுத்தும் பொறுப்புடையவராவர்.'';

(13) பிரிவு 148-க்கு பிறகு பின்வரும் பிரிவு சேர்க்கப்பட வேண்டும், அதாவது:-

''148 எ <u>சில சரக்குகளுக்கு ட்ராக் அண்ட் டிரேஸ் அமைப்பு</u>:- (1) அரசு குழுவின் பரிந்துரையின் படி அறிக்கை வாயிலாக, இந்தப் பிரிவின் விதிமுறைகளுக்கு உட்படும்,-

(எ) சரக்குகள்;

(பி) அத்தகைய சரக்குகளை கைவசம் வைத்திருப்பவர் அல்லது கையாளும் நபர்கள் அல்லது நபர்களின் குழுவைக் குறிப்பிடலாம்;

(2) பிரிவு (1) உட்பிரிவு (எ)-ல் குறிப்பிடப்பட்டுள்ள சரக்குகள் தொடர்பாக அரசு,-

(எ) தனித்துவமான அடையாளக் குறியிடலை இணைப்பதற்கும், அதில் உள்ள தகவல்களை மின்னணு முறையில் சேமித்து அணுகுவதற்கும், பரிந்துரைக்கப்பட்ட நபர்கள் மூலம் ஒரு அமைப்பை ஏற்படுத்துதல்; மேலும்

(பி) அத்தகைய சரக்குகளுக்கான தனித்துவமான அடையாளக் குறியிடலை, அதில் பதிவு செய்யப்பட வேண்டிய தகவல்கள் உட்பட பரிந்துரைக்கவும்

(3) துணைப்பிரிவு (1)-ல் குறிப்பிட்டுள்ள நபர்கள்,-

(எ) அத்தகைய சரக்குகளில் அல்லது அவற்றின் பேக்கேஜ்களில் அத்தகைய தகவல்களை கொண்டிருத்தல் அல்லது அத்தகைய முறையில் ஒரு தனித்துவமான அடையாள குறியிடலை ஒட்டுதல்;

(பி) அத்தகைய விவரங்கள் மற்றும் தகவல்கள் அத்தகைய நேரத்திற்குள் வழங்கவும் அத்தகைய வடிவத்திலும் முறையிலும் அத்தகைய பதிவுகள் அல்லது ஆவணங்களை பராமரிக்கவும்;

(சி) அத்தகைய சரக்குகளின் உற்பத்தி நடைபெறும் இடத்தில் நிறுவியுள்ள இயந்திரங்களின் விவரங்கள், அடையாளம், செயல்பாட்டுத் திறன்,

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

செல்பாட்டு காலம் பிற அத்தகைய விவரங்கள் மற்றும் தகவல்கள் உட்பட அத்தகைய நேரத்திற்குள் அத்தகைய வடிவத்திலும் முறையிலும் வழங்க வேண்டியதும்;

(டி) துணைப்பிரிவு (2)-இல் குறிப்பிட்டுள்ள அமைப்பு தொடர்பாக அத்தகைய தொகையை பரிந்துரைக்கும்படி வழங்க வேண்டியதுமாகும்.";

(14) அட்டவணை III-ல், -

(i) பத்தி 8-ல் உட்பிரிவு (எ)-க்கு பிறகு பின்வரும் உட்பிரிவு சேர்க்க வேண்டியதும் மற்றும் 2017 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1-ஆம் தேதி அமலாக்கத்தில் சேர்க்கப்பட்டதாக கருதப்பட வேண்டும், அதாவது:-

"(எஎ) சிறப்பு பொருளதார மண்டலத்தில் அல்லது தடையற்ற வர்த்தக கிடங்கு மண்டலத்திலிருந்து ஏற்றுமதிக்கான அனுமதிக்காக ஏதேனும் நபர்களுக்கு அல்லது உள்நாட்டு வரி மண்டலத்திற்கு விநியோகம் செய்யப்படும் சரக்குகள்;";

(ii) விளக்கம் 2-ல் "நோக்கங்களுக்காக" என்ற சொற்களுக்குப் பிறகு, "உட்பிரிவு (எ)" என்ற சொற்கள், அடைப்புக்குறிகள் மற்றும் எழுத்து சேர்க்கப்பட வேண்டும். மேலும் அவை 2017 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1-ஆம் தேதி அமலாக்கத்தில் சேர்க்கப்பட்டதாகக் கருதப்பட வேண்டும்;

(iii) விளக்கம் 2-க்கு பிறகு, பின்வரும் விளக்கம் சேர்க்கப்பட வேண்டும் மேலும் அவை 2017 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1-ஆம் தேதி அமலாக்கத்தில் சேர்க்கப்பட்டதாக கருதப்பட வேண்டும், அதாவது:-

"விளக்கம் 3.- பத்தி 8-ன் உட்பிரிவு (எஎ)-ன் நோக்கங்களுக்காக "சிறப்பு பொருளாதார மண்டலம்", "தடையற்ற வர்த்தக கிடங்கு மண்டலம்", உள்நாட்டு வரி மண்டலம்" ஆகிய சொற்றொடர்களுக்கு 2005-ன் ஸ்பெஷல் எக்னாமிக் சோன் மண்டலச் சட்டத்தின் (2005-ன் 28-வது மத்தியச் சட்டம்) பிரிவு 2-ல் அவற்றிற்கு முறையே வழங்கிய அதே பொருள்களைக் கொண்டிருக்கும்.

(15) வசூலிக்கப்பட்ட வரிளயத் திரும்பப் பெற முடியாது.- பிரிவு 6-ன் துணைப்பிரிவு 14-ன் அனைத்து முக்கிய நேரங்களில் அமலாக்கத்தில் இருப்பது போல, வசூலிக்கப்பட்டது ஆனால் அவ்வாறு வசூலிக்கப்படாத அனைத்து வரிகளுக்கும் பணத்தை திரும்பப் பெற முடியாது.

7. 2024-ன் 18-வது சட்டத்திற்கான திருத்தம்.- 2024-ன் கேரள நிதிச் சட்டம் (2024-ன் 18), -

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(1) பிரிவு 11-ன் துணைப்பிரிவு (2)-ன் காப்பு வாசகத்திற்கு பிறகு பின்வரும் காப்பு வாசகங்கள் சேர்க்கப்பட வேண்டும், அதாவது:-

"அது மட்டுமல்லாமல், ஒரு வரி செலுத்துபவர், 1976-ன் கேரள ஆடம்பர பொருட்கள் மீதான வரி சட்டம் (1976-ன் சட்டம் 32)-ன் படி செலுத்த வேண்டிய வரி நிலுவை அல்லது பிற ஏதேனும் தொகை 2019-ன் கேரள நிதிச்சட்டம் (2019-ன் 5) பிரிவு 12-ன் படி தீர்ப்பாக்குவதற்காக முந்தைய வருடங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும் 2019-ன் கேரள நிதிச்சட்டம் (2019-ன் 5) பிரிவு 12 துணைப்பிரிவு (7)-ன் படி பரிந்துரைக்கப்பட்டுள்ள கால வரையறைக்குள் நிலுவைத்தொகையை தீர்ப்பாக்கத் தவறும்பட்சம் குறிப்பிட்ட உத்தரவை பிறப்பித்த பிறகு மேற்குறிப்பிட்ட பிரிவின் படி ஏதேனும் தொகை செலுத்தியுள்ள பட்சம் அதை செலுத்த வேண்டிய தொகையிலிருந்து குறைப்பு செய்யலாம். இது தொடர்பாக பணம் செலுத்தியவர் பணம் செலுத்தியதற்கான சான்றுகளை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்திட வேண்டும்.

எவ்வாறாயினும், ஒரு வரி செலுத்துபவர், 1956-ன் மத்திய விற்பனை வரி சட்டம் (1956-ன் 74-வது மத்தியச் சட்டம்) அல்லது 2003-ன் கேரள மதிப்பு கூட்டப்பட்ட வரிச்சட்டம் (2004-ன் 30)-ன் படி செலுத்த வேண்டிய வரி நிலுவை அல்லது பிற ஏதேனும் தொகை 2020-ன் கேரள நிதிச் சட்டத்தின் (2020-ன் 7) பிரிவு 10-ன் படி முந்தைய ஆண்டுகளில் தீர்ப்பாக்குவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும் 2020-ன் கேரள நிதிச்சட்டத்தின் (2020-ன் 7) பிரிவு 10 துணைப்பிரிவு (7)-ன் படி குறிப்பிட்டுள்ள கால வரையறைக்குள் நிலுவையைத் தீர்ப்பாக்க தவறும்பட்சம் குறிப்பிட்ட உத்தரவு பிறப்பித்த பிறகு மேற்குறிப்பிட்ட பிரிவின் படி ஏதேனும் தொகை செலுத்தியுள்ள பட்சம் அதை செலுத்த வேண்டிய தொகையில் இருந்து குறைப்பு செய்யப்படும். இது தொடர்பாக வரி செலுத்துபவர் பணம் செலுத்தியதன் ஆதாரங்களை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்திட வேண்டும்.

எவ்வாறாயினும், ஒரு வரி செலுத்துபவர், 2003-ன் கேரள மதிப்பு கூட்டப்பட்ட வரி சட்டம்(2004-ன் 30) படி செலுத்த வேண்டிய வரி நிலுவை அல்லது பிற ஏதேனும் தொகை 2020-ன் கேரள நிதிச்சட்டத்தின் (2020-ன் 7) பிரிவு 11-ன் படி முந்தைய ஆண்டுகளில் தீர்ப்பாக்குவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும் 2020-ன் கேரள நிதிச்சட்டத்தின் (2020-ன் 7) பிரிவு 11 துணைப்பிரிவு (5)-ன் படி குறிப்பிட்டுள்ள காலவரையறைக்குள் நிலுவையைத் தீர்ப்பாக்க தவறும் பட்சம் குறிப்பிட்ட உத்தரவு பிறப்பித்த பிறகு மேற்குறிப்பிட்ட பிரிவின்படி ஏதேனும் தொகை செலுத்தியுள்ள பட்சம் அதை செலுத்த வேண்டிய தொகையில் இருந்து குறைப்பு செய்யப்படும். இது தொடர்பாக

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

வரி செலுத்துபவர் பணம் செலுத்தியதன் ஆதாரங்களை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்திட வேண்டும்.'';

(2) பிரிவு 12-ல், இரண்டாவது காப்பு வாசகத்தில், ''தொடர்புடைய சட்டத்தின் கீழ் ஒரு வருடத்துடன் தொடர்புடையது'' என்ற சொற்களுக்கு பிறகு, ''அல்லது ஒரு வருடத்திற்குள் தீர்க்கப்பட வேண்டிய மீதமுள்ள வரி அல்லது வரிகள்/கூடுதல் கட்டணம் இல்லை'' என்ற சொற்களும் சின்னங்களும் சேர்க்கப்பட வேண்டும்.

அத்தியாயம் III

பொது ஆம்னெஸ்டி திட்டம், 2025

8. வரையறைகள்.- (1) இந்த அத்தியாயத்தில் சந்தர்ப்பம் பிற வகையில் தேவைப்படாத பட்சம்,-

(எ) ''அனுமதிக்கப்பட்ட வரி'' என்றால் தொடர்புடைய சட்டத்தின் கீழுள்ள ரிட்டேன்கள், கணக்கு புத்தகங்களின் வரி அல்லது கூடுதல் கட்டணத்தின் அடிப்படையில் மதிப்பீட்டு அதிகாரியால் மதிப்பிடப்பட்டபடி செலுத்த வேண்டிய வரி அல்லது கூடுதல் கட்டணத்தின் நிலுவை எனப்பொருள்படும் ஆனால் சர்ச்சைக்குரிய வரி அல்லது சர்ச்சைக்குரிய கூடுதல் கட்டணம் உட்படுவதில்லை.

ஆனால், தொடர்புடைய சட்டத்தின் கீழ் கமத்தப்பட்டுள்ள அபராதம் தொடர்பான ஆதாரம், விவரங்கள் மற்றும் ஆவணங்களை பயன்படுத்தப்படாத அல்லது தொடர்புடைய சட்டத்தின் கீழ் சிறந்த தீர்ப்பு மதிப்பீட்டிற்காக பயன்படுத்த வாய்ப்பில்லாத சங்கதியில் அத்தகைய அபராதத்துடன் தொடர்புடைய வரி அல்லது கூடுதல் கட்டண கோரிக்கை வரி, அனுமதிக்கப்பட்ட வரியாக கருதப்பட வேண்டியதும், ஆனால் சர்ச்சைக்குரிய வரி அல்லது சர்ச்சைக்குரிய கூடுதல் கட்டணம் உட்படுவதும் இல்லை;

(பி) ''செலுத்த வேண்டிய தொகை'' என்றால் திட்டத்தின் விதிமுறைகளின்படி வரி, கூடுதல் கட்டணம் வட்டி அல்லது அபராதத்தின் நிலுவையைத் தீர்ப்பாக்குவதற்கு ஒரு விண்ணப்பதாரர் செலுத்த வேண்டிய தொகை எனப்பொருள்படும்.

(சி) ''தள்ளுபடி செய்யப்பட்ட தொகை'' என்றால் இந்தத் திட்டத்தின் விதிமுறைகளின் படி வரி, கூடுதல் கட்டணம், வட்டி அல்லது அபராதத்தின் நிலுவையைத் தீர்ப்பாக்குவதன் ஒரு பகுதியாக ஒரு விண்ணப்பதாரரால் செலுத்த வேண்டிய அவசியமில்லாத தொகை மேலும் இந்தத் விதிமுறைகளின் படி அரசு தள்ளுபடி செய்துள்ள வரி, கூடுதல் கட்டணம், வட்டி அல்லது அபராதத்தின் வரி நிலுவை எனப் பொருள்படும்;

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(டி) "விண்ணப்பதாரர்" என்றால் தொடர்புடையச் சட்டத்தின் கீழ் வரி, கூடுதல் கட்டணம், வட்டி அல்லது அபராதத்தை செலுத்தும் பொறுப்புடைய ஏதேனும் நபர் அல்லது வியாபாரி எனப்பெருள்படும்;

(இ) (i) "வரி அல்லது கூடுதல் கட்டணத்தின் நிலுவை" என்றால் 2017-2018 வரையிலான மதிப்பீட்டு ஆண்டுகளைப் பொறுத்தவரை தொடர்புடைய சட்டத்தின் கீழுள்ள ஒரு குறிப்பிட்ட உத்தரவில் ஒரு விண்ணப்பதாரர் செலுத்த வேண்டிய வரி அல்லது கூடுதல் கட்டணம், அதனுடன் தொடர்புடைய சட்டத்தின் கீழ் மதிப்பீடு அல்லது மறுமதிப்பீடு செய்யப்பட்டதும் திட்டத்தின் கீழ் விண்ணப்பம் சமர்ப்பிக்கின்ற தேதியில் வசூலிக்க மீதமுள்ளதுமான தொகை எனப்பொருள்படும்;

(ii) "வட்டி நிலுவைத் தொகை" என்றால் 2017-2018 வரையிலான மதிப்பீட்டு ஆண்டுகளைப் பொறுத்தவரை தொடர்புடைய சட்டத்தின் கீழ் உள்ள ஒரு குறிப்பிட்ட உத்தரவில் ஒரு விண்ணப்பதாரர் செலுத்த வேண்டிய வட்டி, அதனுடன் தொடர்புடைய சட்டத்தின் கீழ் மதிப்பீடு அல்லது மறுமதிப்பீடு செய்யப்பட்டதும் திட்டத்தின் கீழ் விண்ணப்பம் சமர்ப்பிக்கின்ற தேதியில் வசூலிக்க மீதமுள்ளதுமான தொகை எனப்பொருள்படும்;

(iii) "அபராத நிலுவைத் தொகை" என்றால் 2017-2018 வரையிலான மதிப்பீட்டு ஆண்டுகளைப் பொறுத்தவரை தொடர்புடைய சட்டத்தின் கீழ் உள்ள ஒரு குறிப்பிட்ட உத்தரவில் ஒரு விண்ணப்பதாரர் செலுத்த வேண்டிய அபராதம், அதனுடன் தொடர்புடைய சட்டத்தின் கீழ் மதிப்பீடு அல்லது மறுமதிப்பீடு செய்யப்பட்டதும் திட்டத்தின் கீழ் விண்ணப்பம் சமர்ப்பிக்கின்ற தேதியில் வசூலிக்க மீதமுள்ளதுமான தொகை எனப்பொருள்படும்;

ஆனால், தொடர்புடைய சட்டத்தின் கீழ் சுமத்தப்பட்டுள்ள அபராதம் தொடர்பான ஆதாரங்கள், விவரங்கள் மற்றும் ஆவணங்கள் பயன்படுத்தப்படாவிட்டால் அல்லது தொடர்புடைய சட்டத்தின் கீழ் சிறந்த தீர்ப்பை மதிப்பீடு செய்ய பயன்படுத்த சாத்தியமற்ற சங்கதியில் அத்தகைய அபராதத்துடன் தொடர்புடைய வரி அல்லது கூடுதல் கட்டணம் கோரிக்கை வரி அல்லது கூடுதல் கட்டணத்தின் நிலுவையாக கருதப்பட வேண்டியதும் அதற்கு இணங்க செலுத்த வேண்டிய தொகை கருதப்பட வேண்டும்;

எவ்வாறாயினும், திட்டத்தின் அமலாக்கத் தேதியில் ஏதேனும் அதிகாரப் பதவி, நீதிமன்றம், தீர்ப்பாயம் ஏதேனும் தொகையின் மேல் தடை அனுமதிக்கப்பட்டுள்ள பட்சம் அதையும் வசூலிக்க மீதம் உள்ள தொகையாகக் கருதப்பட வேண்டும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

விளக்கம் I.- திட்டத்தின் தேவைக்காக ''மறுமதிப்பீடு'' என்ற சொல்லில் தொடர்புடைய சட்டத்தின் கீழுள்ள ரிமாண்ட் (காவல் வைப்பு) செய்யப்பட்ட வழக்குகளின் புதிய மதிப்பீடு மதிப்பீட்டு உத்தரவின் மாற்றம் மற்றும் மதிப்பீட்டு உத்தரவின் திருத்தமும் உட்படுவதுமாகும்.

விளக்கம் II.- கோரிக்கை அறிக்கையின் படியான வரி, கூடுதல் கட்டணம், வட்டி, அபராதத் தொகை ஆகியவற்றுக்கு கோரிக்கை அறிக்கை அளித்தப் பிறகு ஏதேனும் தொகையை விண்ணப்பதாரர் ஏதேனும் ஒரு பகுதி செலுத்தவோ முதலீடோ செய்திருந்தாலும் வசூலிக்க உள்ள மீதித் தொகையாகக் கருதப்பட வேண்டும்.

எடுத்துக்காட்டு I:

- விண்ணப்பதாரருக்கு ரூ.1000 வரி/கூடுதல் கட்டணம் மற்றும் ரூ.100 அபராதத் தொகைக்குமானது ஒரு காரணம் காட்டும் அறிவிப்பு
- ரூ.1000 வரி/கூடுதல் கட்டணத் தொகை மற்றும் ரூ.100 அபராதத் தொகைக்குமானது உத்தரவு
- இந்த உத்தரவை எதிர்த்து விண்ணப்பதாரர் மேல்முறையீடு செய்கிறார்
- இந்த வழக்கின் வரி அல்லது கூடுதல் கட்டண நிலுவை ரூ.1000 ஆகும்.

எடுத்துக்காட்டு II:

- விண்ணப்பதாரருக்கு ரூ.1000 வரி/கூடுதல் கட்டணம் மற்றும் ரூ.100 அபராதத் தொகைக்குமானது ஒரு காரணம் காட்டும் அறிவிப்பு.
- ரூ.900-ல் வரி/கூடுதல் கட்டணத்தொகை மற்றும் ரூ.90 அபராத் தொகைக்குமானது உத்தரவு.
- இந்த உத்தரவை எதிர்த்து விண்ணப்பதாரர் மேல்முறையீடு செய்கிறார்.
- இந்த வழக்கின் வரி அல்லது கூடுதல் கட்டண நிலுவை ரூ.900 ஆகும்.

எடுத்துக்காட்டு-III

- விண்ணப்பதாரருக்கு ரூ.1000 வரி/கூடுதல் கட்டணம் மற்றும் ரூ.500 அபராதத் தொகைக்குமானது ஒரு காரணம் காட்டும் அறிவிப்பு.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

- ரூ1000 வரி/கூடுதல் கட்டணத்தொகை மற்றும் ரூ.500 அபராதத் தொகைக்குமானது உத்தரவு.
- மறு மதிப்பீட்டிற்கு பிறகு வரி/கூடுதல் கட்டணம் ரூ.800 ஆகவும் அபராதத் தொகை ரூ.300 ஆகவும் மாறும். மறுமதிப்பீட்டிற்குப் பிறகு வரி/கூடுதல் கட்டணம் ரூ.500 மற்றும் அபராதம் ரூ.200 தொகைக்கான கட்டணம் செலுத்தப்பட்டது
- இந்த வழக்கில் வரி அல்லது கூடுதல் கட்டணம் ரூ.800 மற்றும் அபராத நிலுவைத் தொகை ரூ.300 ஆகும்

(எஃப்) "தீர்வு சான்றிதழ்" என்றால் தொடர்புடைய சட்டத்தின் கீழ் குறிப்பிட்ட உத்தரவின் படியான வரி, கூடுதல் கட்டணம், வட்டி அல்லது அபராதம் திட்டத்தின் கீழ் தீர்ப்பாக்கிய பிறகு வழங்கப்பட்டுள்ள ஒரு சான்றிதழ் எனப் பொருள்படும்;

(ஜி) "மாநில வரி ஆணையர்" என்றால் 2017-ன் கேரள மாநில சரக்கு சேவை வரிச்சட்டத்தின் படியான மாநில வரி ஆணையர் எனப்பொருள்படும்;

(எச்) "நியமிக்கப்பட்ட அதிகாரசபை" என்றால் இந்தச் சட்டத்தின் பிரிவு 9-ன் படி நியமிக்கப்பட்டுள்ள அதிகார சபை எனப்பொருள்படும்;

(ஐ) "சர்ச்சைக்குரிய வரி" என்றால் திட்டத்தின் அமலாக்கத் தேதியில் எந்தவொரு அதிகார சபை, தீர்ப்பாயம் அல்லது நீதிமன்றத்தின் முன் மேல்முறையீடு, திருத்தம் அல்லது மறுஆய்வுக்காக நிலுவையில் உள்ள எந்தவொரு வரி அல்லது கூடுதல் கட்டண நிலுவைத் தொகையையும் குறிக்கிறது.

ஆனால் தொடர்புடைய சட்டத்தின் கீழ் சுமத்தப்பட்டுள்ள அபராதம் தொடர்பான ஆதாரங்கள் விவரங்கள் மற்றும் ஆவணங்கள் பயன்படுத்தப்படாத அல்லது தொடர்புடைய சட்டத்தின் கீழ் சிறந்த தீர்ப்பு மதிப்பீட்டிற்காக பயன்படுத்த வாய்ப்பில்லாத சங்கதியில் திட்டத்தின் அமலாக்கத் தேதியில் அத்தகைய அபராதம் சுமத்தப்பட்டதற்கு எதிராக ஏதேனும் அதிகார சபை, தீர்ப்பாயம் அல்லது நீதிமன்றம் முன்பாக ஒரு மேல்முறையீடு, திருத்தம் அல்லது மறுஆய்வு தீர்ப்பாகாமல் உள்ளவையும், வரி அல்லது கூடுதல் கட்டண கோரிக்கையுடன் தொடர்புடைய அத்தகைய அபராதத்தை, சர்ச்சைக்குரிய வரி அல்லது சர்ச்சைக்குரிய கூடுதல் கட்டணமாகக் கருதப்பட வேண்டும்;

(ஜெ) "அரசு" என்றால் கேரள அரசு எனப்பொருள்படும்;

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(கெ) ''பணம் செலுத்தும் நேரத்தில் திரட்டப்பட்ட வட்டி'' என்றால் உத்தரவில் குறிப்பிடாததும் ஆனால் உத்தரவு தேதிக்கும் நிலுவைத் தொகையின் இறுதித் தீர்வு தேதிக்கும் இடையிலான இடைப்பட்ட காலத்தில் திரட்டப்பட்ட வட்டித்தொகை எனப்பொருள்படும்;

(எல்) ''அறிக்கை'' என்றால் அதிகாரப் பூர்வ அரசிதழில் வெளியிடப்பட்ட அறிக்கை எனப்பொருள்படும்;

(எம்) ''பரிந்துரைக்கப்பட்ட'' என்றால் இந்தச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளால் பரிந்துரைக்கப்பட்டது எனப்பொருள்படும்;

(என்) ''தொடர்புடைய சட்டம்'' என்றால்,-

(i) 1957-ன் கேரள வரிகளின் மீதான கூடுதல் கட்டணச் சட்டம் (1957-ன் 11),

(ii)1963-ன் கேரள பொது விற்பனை வரிச்சட்டம் (1963-ன் 15),

(iii) 1976-ன் இரத்து செய்யப்பட்ட கேரள ஆடம்பர பொருட்களின் மீதான வரிச்சட்டம் (1976-ன் 32),

(iv) 1991-ன் இரத்து செய்யப்பட்ட கேரள வேளாண் வருவாய் வரிச்சட்டம் (1991-ன் 15),

(v) 2004-ன் இரத்து செய்யப்பட்ட கேரள மதிப்பு கூட்டப்பட்ட வரிச்சட்டம் (2004-ன் 30),

(vi) 1956-ன் மத்திய விற்பனை வரிச்சட்டம் (1956-ன் 14-வது மத்தியச் சட்டம்);

(ஒ) ''திட்டம் அல்லது பொது மன்னிப்புத் திட்டம், 2025''என்றால் இந்த அத்தியாயத்தின் கீழுள்ள திட்டம் எனப்பொருள்படும்;

(பி) ''குறிப்பிட்ட உத்தரவு'' என்றால் தொடர்புடைய சட்டத்தின் கீழ் செலுத்த கோரப்பட்டுள்ள வரி, கூடுதல் கட்டணம், வட்டி அல்லது அபராதம் தொடர்பான ஏதேனும் உத்தரவு எனப்பொருள்படும்;

(2) இந்த அத்தியாயத்தில் குறிப்பிடப்படாததும் ஆனால் தொடர்புடைய சட்டத்தில் குறிப்பிட்டுள்ளதுமான சொற்கள் மற்றும் சொற்றொடர்களுக்கு அந்த சட்டத்தில் அவைக்கு வழங்கப்பட்டுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

9.நியமிக்கப்பட்ட அதிகாரி.- இந்த திட்டத்தை செயல்படுத்துவதன் நோக்கங்களுக்காக, மாநில வரி ஆணையர் ஒரு உத்தரவின் வாயிலாக, 2017-ன் கேரள மாநில சரக்கு சேவை வரி சட்டத்தின் (2017-ன் 20) பிரிவு 3-ல் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அதிகாரிகள் அல்லது அதிகாரிகளின் ஒரு குழு நியமிக்கப்பட்ட அதிகாரியாக நியமிக்கலாம், மேலும் அத்தகைய அதிகாரி மாநில வரி ஆணையர் குறிப்பிடுகின்ற அத்தகைய பகுதி அல்லது பகுதிகளில் அதிகார வரம்பைப் பயன்படுத்திட வேண்டும்:

ஆனால், நியமிக்கப்பட்ட அதிகார சபையின் உறுப்பினர்களுக்கு இடையே எந்தவொரு முடிவு அல்லது உத்தரவு தொடர்பாகவும் கருத்து வேறுபாடு ஏற்பட்டால், பொரும்பான்மையினரின் கருத்து மேலோங்கி இருக்கும்.

10. தீர்வுக்கான தகுதி.- (1) இந்தத் திட்டத்தின் பிற விதிமுறைகளுக்கு உட்பட்டு 2017-2018 வரையிலான மதிப்பீட்டு வருடங்களில் வரி, கூடுதல் கட்டணம், வட்டி அபராதம் அல்லது நிலுவைத் தொகையைத் தீர்ப்பதற்காக அதற்கு எதிராக தொடர்புடைய சட்டங்களின் கீழ் ஏதேனும் அதிகாரப் பகுதி, தீர்ப்பாயம் அல்லது ஏதேனும் நீதிமன்றத்தின் முன்பாக விண்ணப்பம் சமர்ப்பிக்கின்ற தேதியில் மேல்முறையீடு, திருத்தம் அல்லது மறுஆய்வு இல்லாத பட்சம், விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கு விண்ணப்பதாரர் தகுதியுடையவராவர்.

ஆனால், திட்டத்தின் அமலாக்கத் தேதியில் தொடர்புடைய சட்டத்தின் கீழுள்ள ஏதேனும் அதிகாரப்பதவி, தீர்ப்பாயம் அல்லது ஏதேனும் நீதிமன்றத்தின் முன்பாக ஏதேனும் மேல்முறையீடு, திருத்தம் அல்லது மறுஆய்வு தீர்ப்பாகாத சங்கதியில், நிலுவைத் தொகையைத் தீர்ப்பாக்குவதற்கான விண்ணப்பம், அதது சங்கதிபோல, அதிகாரப் பதவி, தீர்ப்பாயம் அல்லது நீதிமன்றம் வழக்கைத் திரும்பப் பெறுவதற்கு வழங்கப்பட்டுள்ள அனுமதியின் நகலுடன் சமர்ப்பித்திட வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், இந்தத் திட்டத்தின் அமலாக்கத் தேதியில், தொடர்புடைய சட்டத்தின் கீழுள்ள ஏதேனும் அதிகாரப் பதவி தீர்ப்பாயம் அல்லது நீதிமன்றம் முன்பாக அரச தாக்கல் செய்துள்ள ஏதேனும் மேல்முறையீடு தீர்ப்பாகாமல் உள்ள சந்தர்ப்பங்களில், குறிப்பிட்ட அசல் உத்தரவில் உள்ள தொகையை வரி, கூடுதல் கட்டணம், வட்டி அல்லது அபராதம் ஆகியவற்றின் நிலுவைத் தொகையாகக் கருதப்பட வேண்டும்.

(2) இந்தத் திட்டத்தில் என்னதான் அடங்கி இருந்தாலும், 1963-ன் கேரள பொது விற்பனை வரிச்சட்டத்தின் (1963-ன் 15) துணைப்பிரிவு (1)-ன் உட்பிரிவு (பி) மற்றும் பிரிவு 5 அல்லது பிரிவு 7-ன் துணைப்பிரிவு (2)-ன் விதிமுறைகளின்படி ஒரு

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

வியாபாரி செலுத்த வேண்டிய ஏதேனும் வரி வட்டி அல்லது அபராதத்தின் நிலுவைத் தொகைகள் திட்டத்தின் விதிமுறைகளுக்கு பொருந்தாது.

11. தீர்வுக்கான விண்ணப்பம்.- (1) பிரிவு 10-ன் நோக்கத்திற்காக ஒரு விண்ணப்பம் 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி முதல் மூன்று மாதங்களுக்குள், பரிந்துரைக்கப்பட்ட அத்தகைய வடிவத்திலும் அத்தகைய முறையிலும் பிரிவு 13-ல் குறிப்பிட்டுள்ள விகிதத்திலுள்ள தொகையை செலுத்தியதற்கான ஆதாரத்துடன், நியமிக்கப்பட்ட அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(2) ஒரு தொகையும் செலுத்தாமல் உத்தரவுகள் மாற்றியமைப்பதற்காக காத்திருக்கும் எந்தவொரு நபருக்கும் துணைப்பிரிவு (1)-ன் படி விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் தகுதி உடையவராவார் அவ்வாறான வழக்குகளில் அத்தகைய மாற்றியமைக்கப்பட்ட உத்தரவுகள் கிடைக்கப்பெற்ற 30 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும்.

(3)ஒவ்வொரு குறிப்பிட்ட உத்தரவுக்கும் தனித்தனி விண்ணப்பம் செய்யப்பட வேண்டும்.

12 விண்ணப்பதாரர் செலுத்த வேண்டிய தொகையைத் தீர்மானித்தல் - (1)பிரிவு 11-ன் படியான விண்ணப்பதுடன் வழங்கப்பட்ட விவரங்களின் சரியானத்தன்மையை நியமிக்கப்பட்ட விவரங்களின் சரியானத்தன்மையை நியமிக்கப்பட்ட அதிகாரி தொடர்புடைய அனைத்து பதிவுகளின் அடிப்படையில் பரிசோதனை செய்ய வேண்டியதும், பிரிவு 11-வுடன் படிக்கப்படும் பிரிவு 13-ல் குறிப்பிடப்பட்டுள்ள விகிதங்களிலும் அத்தகைய முறையிலும் செலுத்த வேண்டிய தொகையை தீர்மானித்திட வேண்டும்.

(2) நியமிக்கப்பட்ட அதிகாரி, பிரிவு 11-ன் துணைப்பிரிவுகள் (1),(2) மற்றும் (3)-ல் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரரிடம் குறைக்கப்பட்ட தொகையை பரிந்துரைக்கப்பட்ட படிவத்திலும் முறையிலும் கோர வேண்டும்.

(3) துணைப்பிரிவு (2)-ல் குறிப்பிட்டுள்ள படிவத்தை கைப்பற்றிய முப்பது நாட்களுக்குள் துணைப்பிரிவு (2)-ன் படி கோரப்படும் தொகையை விண்ணப்பதாரர் செலுத்திட வேண்டும்.

(4) இந்தப் பிரிவின் விதிமுறைகளின் படி தீர்மானிக்கப்பட்ட தொகை, அதன் அருகிலுள்ள ரூபாய்க்கு முழுமையாக்கப்பட வேண்டும். மேலும் இந்த நோக்கத்திற்காக, அத்தகைய தொகை ஒரு ரூபாயின் ஒரு பகுதியைக் கொண்டிருக்கும் பட்சத்தில்,

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

அத்தகைய பகுதி ஐம்பது பைசா அல்லது அதற்கு மேல் இருந்தால், அது அருகிலுள்ள ரூபாய்க்கு முழுமையாக்கப்பட வேண்டும், மேலும் அத்தகையப் பகுதி ஐம்பது பைசாவிற்கு குறைவாக இருந்தால், அது புறக்கணிக்கப்படும்.

13. செலுத்த வேண்டிய தொகையை நிர்ணயிப்பதில் பொருந்தக்கூடிய விதிகள்.- (1) விண்ணப்பதாரர் செலுத்த வேண்டிய தொகை மற்றும் தள்ளுபடி செய்யப்பட்ட தொகை பின்வருமாறு தீர்மானிக்கப்படும்:-

(எ) பிரிவு 11-ன் துணைப்பிரிவு 1-ன் படியான விண்ணப்பம் தேதியில் குறிப்பிட்ட உத்தரவில் வரி அல்லது கூடுதல் கட்டணத்தின் நிலுவை ஐம்பதாயிரம் ரூபாய்க்கு மேல் மற்றும் பத்து இலட்சம் ரூபாய் வரை இருந்தால், செலுத்த வேண்டிய தொகை அத்தகைய வரி அல்லது கூடுதல் கட்டணத்தில் மூப்பது சதவீதமாக இருக்கும், மேலும் விண்ணப்பதார் செலுத்த வேண்டிய தொகையை செலுத்தும்போது, அந்த குறிப்பிட்ட உத்தரவின் கீழ் செலுத்த வேண்டிய மீதமுள்ள வரி, கூடுதல் கட்டணம், வட்டி அல்லது அபராதம் ஆகியவை தள்ளுபடி செய்யப்பட்ட தொகையாக இருக்கும்;

(பி) இந்தத் திட்டத்தின் கீழ் தீர்ப்பாக்குவதற்கு விண்ணப்பித்த தேதியில் குறிப்பிட்ட உத்தரவில் வரி அல்லது கூடுதல் கட்டணத்தின் நிலுவைத் தொகை பத்து இலட்சம் ரூபாய்க்கு மேல் மற்றும் ஒரு கோடி ரூபாய் வரை இருந்தால்,-

(i) அனுமதிக்கப்பட்ட வரியை தீர்ப்பாக்குவதற்காக விண்ணப்பதாரர் செலுத்த வேண்டிய தொகை, வரி அல்லது கூடுதல் கட்டணத்தின் நிலுவையில் ஐம்பது சதவீதமாக இருக்க வேண்டியதும், அத்தகைய தொகையைச் செலுத்தும்போது தொடர்புடைய சட்டத்தின் கீழ் செலுத்த வேண்டிய வரி கூடுதல் கட்டணம் வட்டி அல்லது அபராதத்தின் மீதமுள்ள நிலுவைத் தொகை தள்ளுபடி செய்யப்பட்ட தொகையாக இருக்கும்;

(ii) சர்சைக்குரிய வரியைத் தீர்ப்பாக்குவதற்கு விண்ணப்பதாரர் செலுத்த வேண்டிய தொகை, வரி அல்லது கூடுதல் கட்டணத்தின் நிலுவையில் நாற்பது சதவீதமாக இருக்க வேண்டியதும், அத்தகைய தொகையைச் செலுத்தும்போது தொடர்புடைய சட்டத்தின் கீழ் செலுத்த வேண்டிய வரி, கூடுதல் கட்டணம், வட்டி அல்லது அபராதத்தின் மீதமுள்ள நிலுவைத் தொகை தள்ளுபடி செய்யப்பட்ட தொகையாக இருக்கும்;

(சி) இந்தத் திட்டத்தின் கீழ் விண்ணப்பித்த தேதியில் குறிப்பிட்ட உத்தரவின் படி வரி அல்லது கூடுதல் கட்டண நிலுவையில் ஒரு கோடி ரூபாய்க்கும் மேல் இருந்தால்,-

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(i) அனுமதிக்கப்பட்ட வரியைத் தீர்ப்பாக்குவதற்கு விண்ணப்பதாரர் செலுத்த வேண்டிய தொகை, வரி அல்லது கூடுதல் கட்டணத்தின் நிலுவையில் அறுபது சதவீதமாக இருக்க வேண்டியதும் அத்தகைய தொகையைச் செலுத்தும்போது தொடர்புடைய சட்டத்தின் கீழ் செலுத்த வேண்டிய வரி கூடுதல் கட்டணம், வட்டி அல்லது அபராதத்தின் மீதமுள்ள தொகை தள்ளுபடி செய்யப்பட்ட தொகையாக இருக்கும்;

(ii) சர்ச்சைக்குரிய வரியைத் தீர்ப்பாக்குவதற்கு விண்ணப்பதார் செலுத்த வேண்டிய தொகை, வரி அல்லது கூடுதல் கட்டணத்தின் நிலுவையில் ஐம்பது சதவீதமாக இருக்க வேண்டியதும் அத்தகையத் தொகையைச் செலுத்தும் போது தொடர்புடைய சட்டத்தின் கீழ் செலுத்த வேண்டிய வரி, கூடுதல் கட்டணம், வட்டி அல்லது அபராதத்தின் மீதமுள்ள தொகை தள்ளுபடு செய்யப்பட்ட தொகையாக இருக்கும்;

ஆனால் தொடர்புடைய சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ள அபராதம் தொடர்பான ஆதாரம், விவரங்கள் மற்றும் ஆவணங்களை பயன்படுத்தாத அல்லது சிறந்த தீர்ப்பு மதிப்பீட்டிற்காக பயன்படுத்த வாய்ப்பில்லாத சங்கதியில் அத்தகைய அபராதத்துடன் தொடர்புடைய வரி அல்லது கூடுதல் கட்டணத்தின் கோரிக்கையை வரியாக கருதப்பட வேண்டும், மேலும் செலுத்த வேண்டிய தொகை அதற்கேற்ப கணக்கிடப்படும்.

(2) இந்தத் திட்டத்தில் என்னதான் அடங்கி இருந்தாலும், குறிப்பிட்ட உத்திரவின் கோரிக்கைக்கு விண்ணப்பதாரர் ஏதேனும் தொகை செலுத்துதல் அல்லது முதலீடு செய்திருந்தால், அல்லது குறிப்பிட்ட உத்தரவின் கோரிக்கைக்கு ஏதேனும் தொகை அல்லது அதற்கு சமமான வரி நிலுவையின் ஒரு பகுதியாக வசூலாக்கப்பட்டிருந்தால், அரசு பெற்ற அத்தகைய தொகை செலுத்த வேண்டிய தொகையிலிருந்து குறைப்பு செய்ய வேண்டியதும், மேலும் இந்த முறையில் பணம் செலுத்தியதற்கான ஆதாரம் விண்ணப்பதாரர் விண்ணப்பத்துடன் சமர்த்திட வேண்டும்:

ஆனால், அபராதம் அல்லது வட்டிக்கு செலுத்தியுள்ள ஏதேனும் தொகை செலுத்த வேண்டிய தொகைக்கு வரவு வைத்திட வேண்டும்:

அதுமட்டுமல்லாமல், ஒரு வரி செலுத்துபவர், 1976-ன் கேரள ஆடம்பர பொருட்களின் மீதான வரிச்சட்டம் (1976-ன் 32) படி செலுத்த வேண்டிய வரி நிலுவை அல்லது பிற ஏதேனும் தொகை 2019-ன் கேரள நிதிச்சட்டத்தின் (2019-ன் 5) பிரிவு 12-ன் படி தீர்ப்பாக்குவதற்காக முந்தைய ஆண்டுகளில் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும் 2019-ன் கேரள நிதிச் சட்டத்தின் (2019-ன் 5) பிரிவு 12 துணைப்பிரிவு (7)-ன் படி குறிப்பிட்டுள்ள காலவரையறைக்குள் நிலுவையை தீர்ப்பாக்க தவறும் பட்சம் குறிப்பிட்ட உத்தரவு

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

வழங்கிய பிறகு மேற்குறிப்பிட்ட பிரிவின் படி ஏதேனும் தொகை செலுத்தியுள்ள பட்சம் அதை செலுத்த வேண்டிய தொகையிலிருந்து குறைப்பு செய்யலாம். இது தொடர்பாக விண்ணப்பதாரர் பணம் செலுத்தியதன் ஆதாரத்தையும் சேர்த்து விண்ணப்பத்துடன் சமர்ப்பித்திட வேண்டும்;

எவ்வாறாயினும், ஒரு வரி செலுத்துபவர், 1956-ன் கேரள விற்பனை வரிச்சட்டம் (1956-ன் 74-வது மத்தியச் சட்டம்) அல்லது 2003-ன் கேரள மதிப்பு கூட்டப்பட்ட வரிச்சட்டம் (2004-ன் 30) படி செலுத்த வேண்டிய வரி நிலுவை அல்லது பிற ஏதேனும் தொகை 2020-ன் கேரள நிதிச் சட்டத்தின் (2020-ன் 7) பிரிவு 10-ன் படி முந்தைய ஆண்டுகளில் தீர்ப்பாக்குவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும் 2020-ன் கேரள நிதிச்சட்டத்தின் (2020-ன் 7) பிரிவுகள் 10-ன் துணைப்பிரிவு (7)-ன் படி குறிப்பிடப்பட்டுள்ள கால வரையறைக்குள் நிலுவையைத் தீர்ப்பாக்க தவறும்பட்சம் குறிப்பிட்ட உத்தரவு வழங்கிய பிறகு மேற்குறிப்பிட்ட பிரிவின் படி ஏதேனும் தொகையை செலுத்தியுள்ள பட்சம் அதை வழங்க வேண்டிய தொகையிலிருந்து குறைப்பு செய்யப்பட வேண்டும். இது தொடர்பாக விண்ணப்பதாரர் பணம் செலுத்தியதன் ஆதாரத்தை சமர்ப்பித்திட வேண்டும்.

எவ்வாறாயினும், ஒரு வரி செலுத்துபவர், 2003-ன் கேரள மதிப்பு கூட்டப்பட்ட சட்டம் (2004-ன் 30) படி செலுத்த வேண்டிய வரி நிலுவைகள் அல்லது பிற ஏதேனும் தொகை 2020-ன் கேரள நிதிச்சட்டம் (2020-ன் 7) பிரிவு 11-ன் படி முந்தைய ஆண்டுகளில் தீர்ப்பாக்குவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும் 2020-ன் கேரள நிதிச்சட்டம் (2020-ன் 7)-ன் படி குறிப்பிடப்பட்டுள்ள காலவரையறைக்குள் நிலுவையைத் தீர்ப்பாக்க தவறும் பட்சம் குறிப்பிட்ட உத்தரவு வழங்கிய பிறகு மேற்குறிப்பிட்ட பிரிவின் படி ஏதேனும் தொகையைச் செலுத்தியுள்ள பட்சம் அதை வழங்க வேண்டிய தொகையிலிருந்து குறைப்பு செய்யப்பட வேண்டும். இதுத்தொடர்பாக விண்ணப்பதார் பணம் செலுத்தியதன் ஆதாரத்தை சமர்த்திட வேண்டும்.

(3) தொடர்புடைய சட்டத்தில் என்னதான் அடங்கியிருந்தாலும் திட்டத்தின் கீழ் செலுத்த வேண்டிய நேரத்தில் செலுத்த வேண்டிய தொகையில் திரட்டப்பட்ட வட்டியையும் சேர்த்து தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

14. <u>சிலத்தொகைகளின் மொத்த தள்ளுபடி :-</u> தொடர்புடைய சட்டம் அல்லது இந்தத் திட்டத்தில் என்னதான் அடங்கியிருந்தாலும், தொடர்புடைய சட்டத்தின் படியான அத்தகைய அபராதத்துடன் தொடர்புடைய வரி அல்லது வரி/கூடுதல் கட்டணம் சார்ந்த தீர்வு சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தால் அல்லது ஒரு வருடத்திற்கான அனைத்து வரி

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

அல்லது வரி/கூடுதல் கட்டணம் மீதம் இல்லையென்றால், பிரிவு 8 துணைப்பிரிவு (1)-ன் உட்பிரிவு (எ)-ன் காப்பு வாசகத்தில் குறிப்பிட்டுள்ள அபராதம் தவிர, அந்த வருடத்திற்கான தொடர்புடைய சட்டத்தின்படி சுமத்தப்பட்ட அனைத்து அபராதங்களும் இந்தத் திட்டத்தின்படி தீர்ப்பாக்கப்பட்டதாக கருதப்பட வேண்டும்.

15.கட்டுப்பாடுகள் - தொடர்புடைய சட்டத்தில் என்னதான் அடங்கி இருந்தாலும், திட்டத்தின் கீழ் செலுத்த வேண்டிய வரி, கூடுதல் கட்டணம், வட்டி அல்லது அபராதத்தில் எந்தவொரு நிலுவையும் எந்தவொரு சூழ்நிலையிலும்,-

(எ) எந்தவொரு சட்டத்தின் கீழ் கிடைக்கும் உள்ளீட்டு வரி வரவு மூலம் செலுத்தவோ;

(பி) ஏதேனும் கூடுதல் தொகைக்கு முறைப்படுத்தவோ; அல்லது

(சி) எந்த சூழ்நிலைகளின் கீழும் திரும்பத் தரவோ கூடாததாகும்.

எடுத்துக்காட்டு: ஒரு வியாபாரிக்கு ஒரு வருடத்திற்கு இரண்டு இலட்சம் ரூபாய்க்கான எக்ஸ் வரி நிலுவை உள்ளதும், மற்றொரு வருடத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய்க்கான வை வரி நிலுவை உள்ளதுமாகும். அவர் நிலுவை எக்ஸ்-க்கு ரூ 1.5 இலட்சம் ஏற்கனவே செலுத்தியுள்ளார். ஆனால் நிலுவைத்தொகை வை-க்கு எந்த தொகையும் செலுத்தவில்லை திட்டத்தின் கீழ் நிலுவைத் தொகை எக்ஸ்-ஐத் தீர்க்க செலுத்த வேண்டிய தொகை ரூ.60,000 ஆகும். இந்தத் திட்டத்தின் கீழ் வியாபாரி தீர்வுக்கு விண்ணப்பித்தால், நிலுவைத் தொகை எக்ஸ் தீர்க்கப்படும். ஆனால் வியாபாரி ரூ.60,000-க்கும் கூடுதலாக ஏற்கனவோ செலுத்தப்பட்ட தொகை, அதாவது ரூ.90,000, நிலுவை வை-ஐ தீர்க்க பரிசீலிக்கப்பட தகுதியில்லாததுமாகும்.

16. நிலுவைத் தீர்ப்பாக்கல் மற்றும் சான்றிதழ் வழங்கல் - (1) பிரிவு 12-ன் படி தீர்மானிக்கப்பட்ட தொகை செலுத்தப்பட்டதாக நியமிக்கப்பட்ட அதிகாரி திருப்தியடையும் பட்சம் வரி, கூடுதல் கட்டணம், வட்டி, அபராதத்தின் நிலுவை உத்தரவினால் தீர்ப்பாக்க வேண்டியதும் பரிந்துரைக்கப்பட்டபடியான அத்தகைய படிவத்திலும் முறையிலும் தீர்வுச் சான்றிதழ் வழங்க வேண்டியதும் அதற்கு பிறகு வரி விண்ணப்பதாரரை அத்தகைய அவரின் வரி, கூடுதல் கட்டணம், வட்டி அல்லது அபராதத்தின் நிலுவையை செலுத்துவதற்கான பொறுப்புகளிலிருந்து விடுவிக்கப்படுவார். ஒவ்வொரு விண்ணப்பத்தைப் பொறுத்தவரை தனித்தனி தீர்வு சான்றிதழ் மற்றும் உத்தரவு வழங்கப்படும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

ஆனால், தீர்வுச் சான்றிதழ் வழங்கப்பட்டு, அரசு தாக்கல் செய்துள்ள மேல்முறையீடு ஏதேனும் அதிகாரப் பதவி, தீர்ப்பாயம் அல்லது நீதிமன்றத்தின் முன் நிலுவையில் உள்ள சந்தர்ப்பங்களில், அரசு மேல்முறையீட்டை உடனடியாக திரும்பப் பெற வேண்டியதாகும்.

(2) நியமிக்கப்பட்ட அதிகாரப் பதவி துணைப்பிரிவு (1)-ன் கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ள சான்றிதழ் மற்றும் உத்தரவையும் அது பிறப்பிக்கப்பட்ட தேதி முதல் 90 நாட்களுக்குள் எந்த நேரத்திலும் அதன் பதிவில் வெளிப்படையாக தெரியும் எந்தவொரு பிழையையும் திருத்தம் செய்வதன் மூலம் சான்றிதழை மாற்றியமைக்கலாம்.

ஆனால் அவ்வாறான திருத்தங்கள் ஏதேனும் ஒரு விண்ணப்பதாரரை எதிர்மறையாக பாதிக்கும் என்றால் அத்தகைய திருத்தங்களுக்கு எதிராக விண்ணப்பதாரருக்கு காரணத்தைக் காட்ட ஒரு நியாயமான வாய்ப்பை வழங்காமல் அத்தகைய எந்தவொரு திருத்தம் செய்யப்படக்கூடாது.

(3) இந்தத் திட்டத்தின் கீழ் செலுத்த வேண்டிய தொகையை செலுத்தப்படாமல் மற்றும் செலுத்திய தொகை குறைத்ததால் சான்றிதழ் வழங்கப்படாவிட்டால், இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக விண்ணப்பதாரர் செலுத்தும் எந்தவொரு தொகையும், தொடர்புடைய சட்டத்தின் விதிமுறைகளின்படி குறிப்பிட்ட உத்தரவின் நிலுவைத் தொகைக்கு செலுத்தப்பட்டதாகக் கருதப்படும்.

17. நிலுவைத் தொகையைத் தீர்க்க மறுத்தல்.- நியமிக்கப்பட்ட அதிகாரி, பிரிவு 11-ல் குறிப்பிட்டுள்ள விண்ணப்பத்தை பெற்றவுடன் திட்டத்தின் கீழ் வழங்க வேண்டிய தொகையில் குறைவான தொகை செலுத்தப்பட்டது என்பது தவிரவுள்ள காரணத்தால் பரிந்துரைக்கப்பட்ட படியான அத்தகைய வடிவத்திலும் முறையிலும் வரி, கூடுதல் கட்டணம், வட்டி அல்லது அபராத நிலுவையை தீர்ப்பாக்குவதை மறுக்கலாம்.

ஆனால் இந்தப் பிரிவின் கீழுள்ள எந்தவொரு உத்தரவும் விண்ணப்பதாரர் அவ்வாறான மறுப்புக்கு எதிராக காரணம் காட்டுவதற்கு வாய்ப்பு வழங்காமல் பிறப்பிக்கப்படக்கூடாது.

18. மேல்முறையீடு.- பிரிவு 12 அல்லது பிரிவு 16-ன் துணைப்பிரிவு (2) அல்லது பிரிவு 17-ன் கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ள ஒரு உத்தரவினால் துயரம் அனுபவிக்கும் எந்தவொரு நபரும் ஆணையர் இதற்காக அறிக்கை வாயிலாக குறிப்பிடும் மாநில வரி பிரிவின் இணை ஆணையர் பதவிக்கும் கீழ் அல்லாத அதிகாரியின் முன்பாக மேல்முறையீட்டை சமர்ப்பிக்கலாம். மேற்குறிப்பிட்ட அதிகாரி,-

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(i) நியமிக்கப்பட்ட அதிகாரியின் உத்தரவை உறுதிப்படுத்தல்,அல்லது

(ii) விண்ணப்பதாரரின் மேல்முறையீட்டை அனுமதித்தல், அல்லது

(iii) நியமிக்கப்பட்ட அதிகாரியின் உத்தரவை மாற்றியமைத்தல், அல்லது

(iv) நியமிக்கப்பட்ட அதிகாரியின் உத்தரவை இரத்து செய்து, தொடர்ந்துள்ள விசாரணைக்கு பிறகு புதிய தீர்வு உத்தரவைப் பிறப்பிக்க நியமிக்கப்பட்ட அதிகாரிக்கு உத்தரவை வழங்கிக் கொண்டு மேல்முறையீட்டை தீர்த்து வைப்பார்.

ஆனால், இந்தப் பிரிவின் கீழ் விண்ணப்பதாரரின் மேல்முறையீட்டை அனுமதிக்கும் சங்கதியில் அல்லது நியமிக்கப்பட்ட அதிகாரியின் உத்தரவை மேல்முறையீட்டு அதிகாரி திருத்தம் ஏற்படுத்தும்போது செலுத்த வேண்டிய தொகை செலுத்துவதாக உட்பட்டு நியமிக்கப்பட்ட அதிகாரி தீர்வு சான்றிதழ் மற்றும் உத்தரவை வழங்கிட வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், மேல்முறையீட்டு அதிகாரியின் அத்தகைய உத்தரவைத் தொடர்ந்து தொகை செலுத்துவதற்கான கால வரையறை என்பது பிரிவு 12 துணைப்பிரிவு (3)-ன் படி கோரிக்கையை செலுத்துவதற்கு பொருந்தும் காலவரையறையாக இருப்பதும், அதது சங்கதி போல, மேல்முறையீட்டு உத்தரவு அல்லது திருத்தம் ஏற்படுத்திய உத்தரவு பிரிவு 12 துணைப்பிரிவு (2)-ன் கீழ் உள்ள ஒரு உத்தரவு போன்று இருக்கும்.

19. திருத்தம்.- (1) மாநில வரி ஆணையர் தாமாகவோ அல்லது அவருக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையில் அல்லது எழுத்துபூர்வமாக பதிவு செய்யப்பட்ட காரணங்களால் உத்தரவு தேதி முதல் இரண்டு வருடங்களுக்குள் எந்த நேரத்திலும் பிரிவு 16-ன் படி அல்லது பிரிவு 18-ன் படி அமலாக்கப்பட்ட உத்தரவுகளை அழைப்பு விடுத்து பரிசோதிக்கப்படலாம் அத்தகைய ஏதேனும் உத்தரவுகளில் எடுத்த முடிவுகளின் சரியானத் தன்மை, சட்டப்பூர்வதன்மை அல்லது உரிமை குறித்து தன்னை திருப்திப்படுத்திக் கொள்ளக்கூடியதும் ஏதேனும் சங்கதியில் இத்தகைய உத்தரவு அல்லது முடிவை மாற்றியமைக்க வேண்டும், இரத்து செய்ய வேண்டும், மாற்ற வேண்டும் அல்லது மறுபரிசீலனைக்காக திருப்பி அனுப்ப வேண்டும் என்று மாநில வரி ஆணையருக்குத் தோன்றினால்,அவர் அதன் படி உத்தரவுகளை பிறப்பிக்கலாம்.

(2) துணைப்பிரிவு (1)-ன் படி ஏதேனும் நபருக்கு எதிராக ஒரு உத்தரவை பிறப்பிக்கும்போது அவருக்கு தமது கருத்தை நிருபிக்க ஒரு வாய்ப்பை வழங்காமல் அதைப் பிறப்பிக்கக் கூடாததாகும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

20. வருவாய் மீட்பு நடவடிக்கைகளுக்குத் தடை.- 1968-ன் கேரள வருவாய் மீட்பு சட்டத்தில் (1968-ன் 15) -ல் என்னதான் அடங்கியிருந்தாலும் திட்டத்தின் பிரிவு 13 மற்றும் பிரிவு 14-ன் படி நிலுவைகள் தள்ளுபடி செய்யப்படும் சங்கதிகளில் வருவாய் மீட்பு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ள வழக்குகளுக்கு பொருந்துவதும் நியமிக்கப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்க வேண்டிய தொகைகள் அத்தகைய தொகைகளை வசூலிப்பதற்கான அதிகாரமுள்ள நியமிக்கப்பட்ட அதிகாரி பிரிவு 16-ன் படி ஒரு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ள சங்கதிகளில் பிரிவு 14-ன் படி வரி, கூடுதல் கட்டணம், வட்டி அல்லது அபராதத்திற்கான நிலுவைகள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் அல்லது நியமிக்கப்பட்ட அதிகாரி மேற்குறிப்பிட்ட விண்ணப்பதாரர்களுக்கு எதிரான வருவாய் மீட்பு நடவடிக்கைகள் 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி திரும்பப் பெறப்பட்டதாக கருதப்பட வேண்டியதும் அது வருவாய் அதிகாரிகளுக்கு பொருந்துவதும் அத்தகைய விண்ணப்பதாரர்களுக்கு எந்தவொரு வசூல் கட்டணங்களையும் சுமத்தக் கூடாததாகும்.

21. தீர்க்கப்பட்ட வழக்குகளை மீண்டும் திறப்பதற்கான தடை.- பிரிவு 16-ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட ஒரு தீர்வு சான்றிதழ் அதனுடன் தொடர்புடைய நிலுவைத் தொகையை தீர்ப்பாக்குவது குறித்து முடிவானதாக இருப்பதும் மேற்குறிப்பிட்ட சான்றிதழில் உட்பட்டுள்ள எந்தவொரு விஷயமும் தொடர்புடைய சட்டத்தின் கீழுள்ள ஏதேனும் மேல்முறையீடு, திருத்தம் மறு ஆய்வு அல்லது பிற ஏதேனும் நடவடிக்கை முறைகளால் மீண்டும் திறத்தல் கூடாததாகும்.

22. சான்றிதழை இரத்து செய்தல்.- (1) பிரிவு 21-ல் என்னதான் அடங்கி இருந்தாலும் விண்ணப்பதாரர் பிரிவு 16-ன் துணைப்பிரிவு (1)-ன் படி தீர்வு சான்றிதழைப் பெற்றது ஏதேனும் தொடர்புடைய உண்மைகள் அல்லது விவரங்களை மறைத்து வைத்துக்கொண்டு அல்லது தவறானது அல்லது போலியானதோவான விவரங்கள் அல்லது உண்மைகளை சமர்ப்பித்துக்கொண்டு என்பதை உணரும்பட்சம் நியமிக்கப்பட்ட அதிகாரி சான்றிதழ் பிறப்பிக்கப்பட்டு இரண்டு வருடங்களுக்குள் எழுத்துப்பூர்வமாக பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காகவும், விண்ணப்பதாரருக்கு காரணத்தை தெரியப்படுத்துவதற்கு நியாயமான ஒரு வாய்ப்பை வழங்கியப் பிறகு சான்றிதழையும் உத்தரவையும் இரத்து செய்யலாம்.

(2) துணைப்பிரிவு (1)-ன் படி சான்றிதழ் மற்றும் உத்தரவை இரத்து செய்கின்ற சங்கதியில் பிரிவு 11-ன் கீழுள்ள விண்ணப்பத்துடன் விண்ணப்பதாரர் செலுத்திய தொகை தொடர்புடைய சட்டத்தின் கீழ் தொடர்புடைய மதிப்பீட்டு ஆண்டிற்கான நிலுவைத் தொகைகளுக்கு செலுத்தியுள்ளதாகக் கருதப்பட வேண்டும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

23. தொடர்புடைய சட்டத்தின் கீழ் அதிகாரிகளுக்கு அனுப்ப வேண்டிய தகவல் - நியமிக்கப்பட்ட அதிகாரி,-

(எ)பிரிவு 11-ன் கீழ் விண்ணப்பதாரர் விண்ணப்பம் செய்ததன் உண்மை;

(பி) பிரிவு 13-ன் கீழ் நியமிக்கப்பட்ட அதிகாரி பிறப்பித்துள்ள ஏதேனும் உத்தரவின் உண்மை;

(சி) பிரிவு 16-ன் துணைப்பிரிவு (2)-ன் கீழுள்ள ஏதேனும் சான்றிதழில் வெளிப்படையாக உள்ள ஏதேனும் பிழைகளின் திருத்தங்கள் தொடர்பான உண்மை;

(டி) பிரிவு 19-ன் கீழுள்ள ஏதேனும் உத்தரவின் திருத்தம் தொடர்பான உண்மை;

(இ) பிரிவு 22-ன் கீழுள்ள ஏதேனும் சான்றிதழை இரத்து செய்தல் தொடர்பான உண்மை;

(எஃப்) பரிந்துரைக்கப்பட்ட படிவத்திலும், அத்தகைய முறையிலும் மற்றும் அத்தகைய நேரத்திற்குள் அது வழங்க வேண்டிய தேவைக்காக கருதப்படும் பிற விஷயங்கள்.

24. மாநில வரி ஆணையரின் அதிகாரம்.- இந்தத் திட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு, இந்தத் திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு மாநில வரி ஆணையர் அவ்வப்போது அவருக்கு உகந்தது என்றும் தோன்றும் அறிவுறுத்தல்கள் மற்றும் வழிமுறைகளை பிறப்பிக்கலாம்.

25. நியமிக்கப்பட்ட அதிகாரிகளுக்கு முன் சமர்ப்பிக்கப்படும் விவரங்களை வெளியிடுவதைத் தடை செய்தல்.- இந்தத் திட்டத்தின் விதிமுறைகளின் கீழ் விண்ணப்பம், வழங்கப்பட்ட அறிக்கை, பதிவுகள் அல்லது சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் இந்தத் திட்டத்தின் கீழ் ஏதேனும் நடவடிக்கைக்கு இடையே கொடுக்கப்பட்ட எந்தவொரு சான்று அல்லது உறுதிமொழி ஆவணம் அல்லது வைப்புத்தொகையில் உள்ள அனைத்து விவரங்களும் இரகசியமாகக் கருதப்படும் மற்றும் வெளியிடப்படாது.

(2) துணைப்பிரிவு (1)-ல் உள்ள எதுவும்,-

(எ) 2023-ன் பாரதிய நியாய சம்ஹிதையில் (2023-ன் 45-வது மத்தியச் சட்டம்) தற்போது அமலில் உள்ள பிற ஏதேனும் விதியில் அல்லது இந்தத் திட்டத்தின் கீழ் ஒரு குற்றத்தை விசாரிக்கும் அல்லது வழக்குத் தொடரும் நோக்கத்திற்காக; அல்லது

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(பி) இந்தத் திட்டத்தின் விதிமுறைகளை செயல்படுத்துகின்ற ஏதேனும் நபருக்கு திட்டத்தின் தேவைக்காக வெளிப்படுத்தும் தேவையாக வரும்போது அவருக்கு வழங்கிய; அல்லது

(சி) இந்தத் திட்டத்தின் கீழ் கோரப்பட்ட ஏதேனும் தொகையை மீட்பதற்கான எந்தவொரு செயல்முறையும் சட்ட பூர்வமாக பொறுப்பேற்றுக் கொள்வதன் மூலம்; அல்லது

(டி) அரசு ஒரு கட்சியாக இருக்கும் எந்தவொரு வழக்கிலும், இந்தத் திட்டத்தின் கீழ் எந்தவொரு நடவடிக்கையிலிந்தும், எழும் எந்தவொரு விஷயத்துடனும் தொடர்புடைய எந்தவொரு வழக்கிலும் ஒரு சிவில் நீதிமன்றத்திற்கு; அல்லது

(இ) 1959-ன் கேரள முத்திரைச்சட்டம் (1959-ன் 17) கீழுள்ள சட்ட பூர்வமான தனது அதிகாரங்களைப் பயன்படுத்தி, போதுமான முத்திரை இல்லாத ஆவணத்தை ஒரு அரச ஊழியர் பறிமுதல் செய்தல், அல்லது

(எஃப்) (i) இந்திய அரசின்; அல்லது

(ii) ஏதேனும் மாநிலம் அல்லது மத்திய ஆட்சிப் பகுதிகளின் அரசுகள் பரஸ்பர அடிப்படையில் நடவடிக்கை முறைகளை வெளிப்படுத்துவதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள

ஒரு அதிகாரி; அல்லது

(ஜி) மாநில வரி ஆணையரின் அனுமதி பெற்ற பிறகு, கேரள மாநில சரக்கு சேவை வரித்துறை தவிரவுள்ள ஏதேனும் அரசுத் துறையின் ஒரு அதிகாரி

அத்தகைய ஏதேனும் விவரங்களை வெளிப்படுத்துவதற்கு பொறுப்புடையவரல்லர்.

ஆனால் இந்தத் துணைப்பிரிவின் கீழ் அத்தகைய விவரங்கள் விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் மட்டுமே வழங்கப்பட வேண்டும் அத்தகைய விவரங்களைப் பெறும் எந்தவொரு அதிகாரியும் அவற்றை இரகசியமாக வைத்திருக்க வேண்டும் மற்றும் எந்தவொரு சட்டத்தாலும் அல்லது அதன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைச் சட்டப்பூர்வமாகப் பயன்படுத்துவதில் மட்டுமே அவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

(3) இதில் உள்ள எதுவும், தீர்வுச் சான்றிதழை வெளியிடுவதையோ அல்லது தீர்வு மறுப்பு உத்தரவை பரிந்துரைக்கப்பட்ட முறையில் வெளியிடுவதையோ தடுக்காது.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

26. நன்நம்பிக்கையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கான பாதுகாப்பு.- (1) இந்தத் திட்டத்தின்படியான நடவடிக்கைகளுக்கு ஏற்ப நன்நம்பிக்கையில் செய்ததோ செய்ய நோக்கமிட்டதோ ஆன எந்தவொரு விஷயத்தையும் பொறுத்தவரை அரசின் ஏதேனும் அதிகாரி அல்லது ஊழியருக்கு எதிராக அரசின் முன்அனுமதி இல்லாமல் எந்தவொரு வழக்கு, வழக்குத் தொடுப்பு அல்லது பிற சட்ட நடவடிக்கைகள் இருக்காது.

(2) இந்தத் திட்டத்தின்படி அல்லது அதன் கீழ் விதிக்கப்பட்ட கடமைகளை செயல்படுத்தும் போது அல்லது பொறுப்புகளை நிறைவேற்றும் போது நன்னம்பிக்கையுடன் செயல் செய்யப்பட்டிருந்தால், எந்தவொரு சிவில் அல்லது குற்றவியல் நடவடிக்கையிலும் எந்தவொரு அரசாங்க அதிகாரி அல்லது ஊழியரும் அத்தகைய செயலுக்குப் பொறுப்பேற்க மாட்டார்கள்.

27.சிரமங்களை நீக்கும் அதிகாரம்.- (1) இந்தத் திட்டத்தின் ஏதேனும் விதிகளை செயல்படுத்துவதில் ஏதேனும் சிரமம் ஏற்பட்டால், மாநில வரி ஆணையர், இந்தத் திட்டத்தின் விதிமுறைகளுக்கு ஊறு ஏற்படாத வகையில் உத்தரவின் மூலம் அத்தகைய சிரமங்களை நீக்கம் செய்யலாம்.

ஆனால் திட்டம் அமலுக்கு வந்த ஒரு வருடத்திற்கு பிறகு அத்தகைய எந்தவொரு உத்தரவும் பிறப்பிக்கப்படக்கூடாது.

(2) துணைப்பிரிவு (1)-ன் படி பிறப்பிக்கப்பட்ட ஒவ்வொரு உத்தரவும் அரசால் சட்டமன்ற பேரவையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

28. விதிகளை உருவாக்குவதற்கான அதிகாரம்.- (1) அரசு இந்த சட்டத்தின் நோக்கங்களைச் செயல்படுத்துவதற்காக முற்கால அமலாக்கத்துடன் அல்லது பிற்கால அமலாக்கத்துடன் விதிகளை உருவாக்கலாம்.

(2) இந்த சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு விதியும், அது ஏற்படுத்தப்பட்ட பிறகு, இயன்றளவு விரைவாக, சட்டமன்ற பேரவையின் கூட்டத்தொடரில் போது அல்லது அதற்கு முன், ஒரு கூட்டத்தொடரில் அல்லது தொடர்ந்து வரும் இரண்டு கூட்டத்தொடர்களில் உட்படும் மொத்தம் பதினான்கு நாட்களுக்கு வைக்க வேண்டியதும் அவ்வாறு அது எந்தக் கூட்டத்தொடரில் வைக்கப்படுகிறதோ, அந்த கூட்டத்தொடரோ அல்லது தொடர்ந்து வரும் கூட்டத்தொடர் நிறைவடையும் முன்பு, சட்டமன்ற பேரவையின் விதியில் ஏதேனும் திருத்தம் ஏற்படுத்தவோ அந்த விதி ஏற்படுத்த வேண்டியதில்லை என்பதை முடிவு செய்யும் பட்சம், அந்த விதி அதற்குப் பிறகு, அதது

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

சங்கதி போல, அவ்வாறு திருத்தம் ஏற்படுத்தப்பட்ட வடிவத்தில் மட்டுமே அமலாக்கத்தில் இருக்கவோ அல்லது எந்தவொரு விளைவையும் ஏற்படுத்தாது:

எவ்வாறாயினும், அவ்வாறான ஏதேனும் வடிவத்தில் திருத்தம் அல்லது இரத்து செய்தல் அந்த விதியின் படி முன்பு செய்துள்ள ஏதேனும் சங்கதியின் செல்லுபடியாதலுக்கு ஊறு ஏற்படுத்தாத வகையில் இருந்திட வேண்டும்.

அத்தியாயம் IV

2025-ன் வெள்ள நிவாரண செஸ்ஸிற்கான ஆம்னெஸ்டி

29. 2025-ன் வெள்ள செஸ் ஆம்னெஸ்டி .- (1) 2019-ன் கேரள நிதிச்சட்டத்தின் (2019-ன் 5) பிரிவு 14-ன் கீழ் 2019-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1-ஆம் தேதி முதல் 2021-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31-ஆம் தேதி வரையிலான காலயளவில் கேரள வெள்ள நிவாரண செஸ் ஆக வழங்க வேண்டிய ஏதேனும் தொகை நிலுவையாக உள்ள எந்தவொரு வரி செலுத்துபவரும், செலுத்த வேண்டிய வெள்ள செஸ்ஸில் செலுத்த வேண்டிய தொகையை முழுவதையும் செலுத்திக் கொண்டு நிலுவையைத் தீர்ப்பாக்க தேர்வு செய்யலாம்.

(2) இந்தத் திட்டத்தின் படி நிலுவை தொகையை தீர்ப்பாக்க விரும்பும் வரி செலுத்துபவர், 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதிக்கு நிலுவையுள்ள தொகை இ-ட்ரெஷரி போர்ட்டல் மூலம் எலக்ட்ரானிக் முறையில் 2015-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் தேதி அல்லது அதற்கு முன்னர் செலுத்திட வேண்டும்.

விளக்கம்.- 2017-ன் மத்திய சரக்கு சேவை வரிச் சட்டம்/2017-ன் கேரள மாநில சரக்கு சேவை வரிச்சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட ஒரு காரணம் காட்டுதல் அறிக்கையில், மேற்குறிப்பிட்ட சட்டங்களின் படியான பிற கோரிக்கைகளுடன் வெள்ள நிவாரண செஸ்ஸின் கோரிக்கையையும் சேர்த்து உட்படுத்தியும் அறிக்கை/உத்தரவின் படி செலுத்த வேண்டிய வெள்ள நிவாரண செஸ்-ஐ தீர்ப்பாக்குவதற்காக துணைப்பிரிவு (1)-ன் படி செலுத்தப்பட்டிருந்தால் வெள்ள நிவாரண செஸ்-ஐ சார்ந்த கோரிக்கை மட்டுமே தீர்ப்பாக்கப்படுவதாகும்.

3. 2019-ன் கேரள நிதிச்சட்டத்தின் (2019-ன் 5) பிரிவு 14-ன் படி ஏதேனும் மேல்முறையீட்டு அல்லது திருத்த ஆணையரின் முன் அல்லது ஏதேனும் நீதிமன்றத்தின் முன் அரச சமர்ப்பித்த ஒரு மேல்முறையீடு தீர்ப்பாக்கப்படாத சங்கதியில் வரி செலுத்துபவர் அசல் கோரிக்கை உத்தரவு படியான தொகையை செலுத்தி பொதுமன்னிப்பு திட்டத்தின் கீழுள்ள நிலுவைகள் தீர்ப்பாக்கப்பட்டிருந்தால்,-

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(i) 2019-ன் கேரள நிதிச் சட்டம் (2019-ன் 5) படியான மேல்முறையீடு அல்லது திருத்த ஆணையம் அல்லது ஏதேனும் நீதிமன்றத்திடம்; மேலும்

(ii) அதிகார வரம்பிற்குட்பட்ட முறையான அதிகாரியிடம் வரி செலுத்துபவர் அத்தகைய தீர்ப்பாக்கனை தெரிவித்திட வேண்டும்.

(4) அசல் உத்தரவின் கோரிக்கையின் படி வெள்ள நிவாரண செஸ்ஸில் செலுத்த வேண்டிய முழு தொகையையும் வரி செலுத்துபவர் செலுத்தி நிலுவைத் தொகை தீர்ப்பாக்கப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்த பின்னர் அதைத் தொடர்புடைய முறையான அதிகாரி 2019-ன் கேரள நிதிச் சட்டம் (2019-ன் 5) படியாக மேல்முறையீடு அல்லது திருத்த ஆணையத்திடம் அல்லது நீதிமன்றத்திடம் தெரிவிக்க வேண்டியதும் இந்தச் சட்டத்தின் படியான மேல்முறையீடு அல்லது திருத்த ஆணையம் அல்லது நீதிமன்றம் அதற்கேற்ப முடிவுகளை எடுக்கலாம்.

(5) 1968-ன் கேரள வரி மீட்புச் சட்டத்தில் (1968-ன் 15) என்னதான் அடங்கியிருந்தாலும் துணைப்பிரிவு (1)-ன் படி நிலுவைத் தொகையை குறைப்பு செய்தல், வரி மீட்பு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ள சங்கதியில் பொருந்துவதும் வரி மதிப்பீட்டு அதிகாரிகளுக்கு அத்தகைய தொகை துணைப்பிரிவு (1)-ன் படியான தீர்ப்பாக்கலின் படி வசூலிக்கும் அதிகாரம் இருப்பதும் துணைப்பிரிவு (1)-ன் படி தொகை தீர்ப்பாக்கும் பட்சம் அத்தகைய வரி செலுத்துபவருக்கு எதிராக வரி மீட்பு நடவடிக்கைகள் 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி திரும்பப் பெற்றதாக கருதப்பட வேண்டியதும் அது வருவாய் அதிகாரிகளுக்கு பொருந்துவதும் அத்தகைய வரி செலுத்துபவர் வருவாய் அதிகாரி சுமத்துகின்ற ஏதேனும் வசூல் கட்டணங்களை செலுத்த பொறுப்புடையவரல்லர்.

(6) இந்தச் சட்டத்தில் அல்லது ஏதேனும் நீதிமன்றத்தின் தீர்ப்பாயத்தில் மேல்முறையீட்டு ஆணையத்தின் ஏதேனும் ஆணை, தீர்ப்பாணை அல்லது உத்தரவில் என்னதான் அடங்கி இருந்தாலும் இந்தத் திட்டத்தின் படி தீர்ப்பாக்கப்பட்ட தொகை, எந்தவொரு சூழ்நிலையிலும் பின்னர் திரும்பப் பெறுதல் அல்லது எந்த வரிசெய்தலும் இருக்காது.

30. மாநில வரி ஆணையரின் அதிகாரம்.- திட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு மாநில வரி ஆணையர் திட்டத்தின் நோக்கங்களை செயல்படுத்துவதற்காக அவருக்கு உகந்ததென தோன்றும் பரிந்துரைகளையும் வழிமுறைகளையும் அவ்வப்போது பிறப்பிக்கலாம்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

31. இடையூறுகளை நீக்குவதற்கான அதிகாரம்.- (1) இந்தத் திட்டத்தின் ஏதேனும் விதிமுறைகளுக்கு அமலாக்கம் வழங்குவதில் ஏதேனும் இடையூறு ஏற்படும் பட்சம் வருமான வரி அதிகாரி, திட்டத்தின் விதிமுறைகளுக்கு ஊறு ஏற்படாத வகையில் உத்தரவு மூலம், அத்தகைய இடையூறுகளை நீக்கலாம்.

ஆனால் திட்டம் அமலாக்கத்திற்கு வந்து ஒரு வருட காலம் காலாவதியான பிறகு அத்தகைய எந்தவொரு உத்தரவையும் பிறப்பிக்கப்படக்கூடாது.

(2) துணைப்பிரிவு (1)-ன் படி பிறப்பிக்கப்பட்ட ஒவ்வொரு உத்தரவும் அரசால் சட்டமன்ற பேரவையின் முன் சமர்ப்பித்திட வேண்டும்.

PUBLISHED BY THE SUPERINTENDENT OF GOVERNMENT PRESSES
AT THE GOVERNMENT CENTRAL PRESS, THIRUVANANTHAPURAM, 2026

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

Digitally signed by V JAYAKUMAR
Date:2026.08.04 06:58:24 +05:30